
# இந்திய தத்துவ வரலாற்றில்

# வேதாத்திரி மகரிசி




அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

# இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி

அருள்நிதி
மன்னார்குடி பானுகுமார்

ராஜம் பதிப்பகம்
Ebook publisher

# பொருளடக்கம்.


1. தத்துவம் என்றால் என்ன?
2. தத்துவம் - வரலாற்றுப் பார்வை
3. தத்துவம் நமக்குத் தேவையா?
4. பழங்காலத் தத்துவம் இன்றைக்குத் தேவையா?
5. இந்திய தத்துவ வரலாற்றின் சுருக்கம்
6. இந்திய தத்துவங்களின் பெருமை
7. தத்துவார்த்த இலக்கியங்கள்.
8. தத்தவஞானி வேதாத்திரி மகரிசி
9. வேதங்கள்
10. வேதாத்திரி மகரிசி பார்வையில் வேதங்கள்.
11. வேதவாக்கியங்களும் வேதாத்திரி மகரிசியும்.
12. வேத சாசனமும் வேதாத்திரிசய சாசனமும்.
13. கடவுள் தத்துவத்தில் . வேதமும் வேதாத்திரியமும்
14. ஆன்மா - வேதமும் வேதாத்திரியமும்
15. உலக உற்பத்தி - வேதமும் வேதாத்திரியமும்
16. ஆதிசங்கரர்
17. உபநிடதங்கள்
18. மனுதர்ம சாஸ்திரம்
19. பிரம்ம சூத்திரம்
20. மாயை
21. மகாபாரதம் கூறும் தத்துவம்
22. சதிக்குச் சதி செய்த வேதாத்திரியம்

23. கருத்து முதல் வாதமும் பொருள் முதல் வாதமும்.
24. ஆறுவகை சமயங்கள்.
25. பகவத்கீதை

26. உலகாயுதம்.
27. சமணம் தந்த மகாவீரர்
28. பௌத்தம் தந்த புத்தர்
29. தரிசனங்கள்
30. சாங்கியம்
31. யோகம்
32. வைசேடிய தத்துவம்
33. நியாயம்
34. மீமாசை
35. வேதாந்தம்
36. சைவசித்தாந்தம்
37. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி..

# என்னுரை.

தத்துவவாதிகளுக்கும், சிந்தனையாளர்களுக்கும், ஆன்மீக குருமார்களுக்கும் பஞ்சமில்லாத நாடு நமது பாரதம்.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருள். தத்துவ விளக்கமும், அந்த விளக்கத்தின்படி வாழும் ஒழுக்கமும் இணைந்த உடல், உள்ளச் சிறப்பியக்கமே ஞானம் எனப்படும்.

இந்திய தேசத்தவராகிய அதிலும் கீழைச் தேசத்தவராகிய நமக்குத் தத்துவ ஞானம் பரம்பரைச் சொத்து.

இந்த பரம்பரை செல்வமாகிய நமக்குரிய ஒரே சொத்தைப் பற்றி, அதனது இயல்புகளைப் பற்றி ஓரளவாவது அறிந்து வைத்திருப்பது அவசியமாகும்.

இன்று இந்தியா தனது தத்துவத்தை அதன் மரபுகளிலிருந்து வளர்க்க வேண்டியுள்ளது.

இந்தியாவில் வர்க்கப் போராட்டக்களம் தொடர்ந்து நடைபெறும் போது, பொருள் முதல் வாதம் மற்றும் கருத்து முதல் வாதம் இரண்டிற்கும் இடையேயான போராட்டமும் நடைபெறும்.

கருத்து முதல் வாதிகள் வேதாந்தத்தை மறுவிமர்சனம் செய்வதன் மூலம் திருப்தியடைவார்கள்.

பொருள் முதல் வாதிகள் இந்திய இயக்க இயல் பொருள் முதல் வாதத்தை வளர்ப்பார்கள்.

வர்க்கப் போராட்டத்தில் வெற்றி பெற இது தேவை. இது குறித்து ஜெர்மனியைச் சேர்ந்த இந்திய வரலாற்று மரபு ஆய்வாளர் வால்டர் ரூபன் 1962 ல் தனது விருப்பத்தை வெளியிட்டார்.

- இந்தியர் - இந்தியரல்லாத தத்துவ வரலாற்றாசிரியர்கள் ஒத்துழைப்பை ஏற்படுத்தி இந்திய மற்றும் இந்தியரல்லாத பொதுவானதொரு தத்துவ வரலாற்றை தோற்றுவிக்க விரைவிலே முன் வரவேண்டும்.

தத்துவ வரலாற்றை முறையாக தொகுக்க, அனைத்து தத்துவங்களையும் உள்வாங்கி தேவையானதை எடுத்துக் கொண்டு, ஒரு தத்துவ வரலாற்றுக்கு முன்னோடியாக வந்தவர்தான், தமிழகத்தில் தோன்றிய விடிவெள்ளி தத்துவஞானி வேதாத்திரி மகரிசி.

இந்த மண்ணில் பிறந்த மரபார்ந்த தத்துவஞானிகளில் ஒருவரல்ல, வேதாத்திரி மகரிசி.

இந்திய தத்துவ மரபில் எந்தப் பிரிவுக்குள்ளும் வகைப்படுத்தபட முடியாதவர்.

வேதாத்திரி மகரிசி, மடாதிபதியோ முனிவரோ அல்ல. 20-ஆம் நூற்றாண்டின் முக்கியமான தத்துவ ஞானிகளில் ஒருவராக உலகம் முழுவதும் அவர் மதிக்கப்படுகிறார்.




கவித்துமான சொற்களில் தன் எண்ணங்களை இயல்பாக வெளிப்படுத்தியவர். உண்மையைத் தேடும் யாத்திரையை ஒவ்வொருவருக்குள்ளும் சாத்தியப்படுத்தும் வழிமுறை அவருடையது.

அவர் உயிரோடு இருந்த போது சாமானிய மனிதர்களிலிருந்து அறிவுஜீவிகள், அறிவியலாளர்கள் வரை பலரும் அவரோடு தொடர்ந்து உரையாடி வந்தார்.

முக்கியமான அறிவியலாளர்களும் தத்துவச் சிந்தனை கொண்டோரும் படைப்பாளிகளும் அவரை மதிக்கிறார்கள்.

அவர் மறைந்த பின்பும் அவரது உரையாடல்களின், உரைகளின் பதிவுகளை ஆழ்ந்த அக்கறையோடு கேட்கவும் படிக்கவும்

பிரபஞ்ச இரகசியம்



படுகின்றன.

இந்திய தத்துவச் சிந்தனைகள் ஆக்கப்பூர்வமானவை. வாழ்க்கையில் கொள்கின்ற உண்மைகளை ஒட்டியே தத்துவமும், வாழ்க்கை நெறிகளும் அமையப் பெற்றுள்ளன. எனவே இது ஒரு வாழ்க்கை முறையாகும்.

இந்திய தத்துவ வரலாற்றை சுருக்கமாகச் சொல்லி---- அதில் வேதாத்திரி மகரிசியின் எளிமையான தத்துவங்களை இங்கு பதிவு செய்துள்ளேன்.

வேதம் முதல் சைவசிந்தாந்தம் வரை இந்திய தத்துவ தரசிசனங்களை அனைத்தையும் வேதாத்திரிய தத்துவத்தோடு ஒப்பிட்டு இயன்றவரை இங்கே ஆராய்ந்துள்ளேன்.



வேதங்கள், உபநிடதங்கள், தரிசனங்கள், வேதாந்தங்கள், சமணம், பௌத்தம், சைவ சித்தாந்தம், உலகாயுதம் ஆகியவற்றில் தேவையானவற்றை மட்டுமே எடுத்துள்ளேன்.

பலவற்றில் மூல நூல்களைப் பற்றி நான் அதிகமாக ஆராயவில்லை. எது தேவை எனக் கருதினேனோ அதனை மட்டும் பதிவு செய்யுள்ளேன்.



ஒவ்வொரு தத்துவத்திற்கு இறுதியிலும், ஆங்காங்கேயும் வேதாத்திரியத் தத்துவம் எவ்வாறு எளிமைப் படுத்தப்பட்டுள்ளது என்பதையும், வேதாத்திரியத் தத்துவம் பொதுவானதொரு தத்துவமாக தொகுக்கப்பட்டுள்ளது என்பதையும் பதிவு செய்துள்ளேன்.

தத்துவஞானம் ஓரளவு தெரிந்தவர்களுக்கு மட்டுமின்றிச் சிறிதளவுகூடத் தெரியாதவர்களுக்கும் வேதாத்திரியம் பயிலுபவர்களுக்கும் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்துடனே இந்நூலை பதிவு செய்துள்ளேன்.

அலங்கரிப்பதற்குகந்த ஆளுமையோ அன்றி விமர்சிப்பதற்குரிய வித்துவமோ ஏதுவமின்றி, இந்நூலின் ஆழம் அறிந்தும் காலை விட்டிருக்கிறேன். அளக்கலாம் என்ற “ஆசைப் பற்றி அரையலுற்றேன்.”

எந்தன் எழுதுகோலும், முடிந்த அளவு உரைத்துப் பார்க்க முயல்கிறது.

இந்த என் முயற்சிக்கு பலவகையிலும் ஊக்கமும் ஆலோசைனைகளை வழங்கியும் ஒத்துழைப்பு நல்கிய மறைந்து புலவர் தியாகராஜன் அய்யாவுக்கும் -வாழ்க்கைத் துணைவியார் அருள்நிதி பானுமதிகுமாருக்கும் என் இல்லத்து ஞானச் செல்வங்கள் பிரம்மஞானிகள் நிவேதிதா சீனிவாசன் - நரேந்திரன், ஆகான்ஸா, மதுமிதா, அமைரா மற்றும் அக்ஷத் என்கிற தாயுமானவன் ஆகியவர்களுக்கும், நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலை வாசிக்கும் நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் உடல் நலம், நீளாயுள் , நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என்று இறைநிலையோடு இணைத்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

இந்நூலைப் படிக்கும் வாசகர்களில் யாராவது அல்லது மனவளக்கலைப் பயிலும் மாணவர்களில் யாராவது இந்த தலைப்பில் இதைவிடச் சிறந்ததொரு வரலாற்றை பதிவு செய்வார்களேயானால் அதுவே இந்த நூலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

வழக்கமான வணக்கங்களுடனும் வாழ்த்துக்களுடனும்

மன்னார்குடி பானுகுமார்.

Email. banukumar.v@gmail.com

செங்கற்பட்டு,

14.8.2019

# 1. தத்துவம் என்றால் என்ன?

**தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருள். தத்துவ ஞானம் என்பது உண்மையை அறிவது எனப் பொருள்படும்**

உண்மை என்றால், உள்ளது. அதாவது, என்றும் உள்ளது என்று பொருளாகும்.

மனிதன் மனிதனாக வாழ தத்துவஞானம் அவசியம் என்பதை வேதாத்திரி மகரிசி எளிமையாக சொல்கிறார்.

பிரபஞ்சம் முழுமைக்கும் அடிப்படையாக விளங்குவது எது, பிரபஞ்சத்தின் இரகசியங்களையும், இயற்கையின் சக்திகளையும் மனிதனால் புரிந்து கொள்ள முடியுமா?

முடியுமெனில் அவற்றை மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த மனித அறிவால் முடியுமா?

பிரபஞ்சமும், மனித சமூகமும், மனிதனுடைய சிந்தனையும் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு முன்னேறிச் செல்கிறதா?

ஆம் எனில் அவ்விதிமுறைகள் யாவை, சமூகத்தில் மனிதன் வகிக்கும் இடம் யாது, அவனுடைய இயல்பு யாது என்பது போன்ற பொதுவான கேள்விகளுக்கு விடைகாண வழிகாட்டுவதே தத்துவம் என்றும் சொல்லலாம்.

**மெய்யியல்**, இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின், வளர்ச்சியின் மீது ஆட்சி செய்யும் மிகப்பொதுவான விதிகளைக் குறித்த விஞ்ஞானமே மெய்யியல்.

இயற்கை விஞ்ஞானம் மிக வேகமாய் முன்னேறிச் செல்கிறது. எல்லாத் துறைகளிலும் அவ்வளவு ஆழ்ந்த புரட்சிக் கொந்தளிப்புக்கு உள்ளாகி வருகிறது.


அது தத்துவவியல் (Philosophy) அனுமானங்களின்றி இருக்கலாமென நினைக்க முடியவே முடியாது.

மெய் என்ற உடலில் உணர்வு என்ற உண்மையை புத்தியால் தேட அறிவு என்ற ஆற்றல் வெளிப்படும் பொழுது தத்துவம் என்ற உண்மை உணர்வை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்துக்களின் விளக்கத்தை உணர்வு பூர்வமாக அறியவைப்பது மெய்யறிவு.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

என்பது திருவள்ளுர் வாக்காம். “ஆராயப்படாத வாழ்வு வாழ்வதற்குப் பெறுமதியற்றது.” இது கிரேக்க மெய்யியலாளர் சாக்ரட்டீசின் விளக்கமாகும்.



www.alamy.com - B917HH

**மெய்யியல்** அல்லது **மெய்க்கோட்பாட்டு இயல்** அல்லது **தத்துவம்** என்னும் அறிவுத்துறையானது எது உண்மை, எது சரி, எது அறிவு, எது கலை, எது அறம், எது அழகு, கடவுள் என்று ஏதும் உண்டா, என்பது போன்ற அடிப்படையான கேள்விகளைப் பற்றி ஆழ ஆராயும் துறை ஆகும்.

தத்துவம் என்றால் உண்மை, உள்ளதை உள்ளவாறே அறிவதைப் பற்றிய கொள்கை, இயல் என்று பொருள். மெய்யியல் துறையில் கருத்துக்கள் எவ்வாறு ஏற்கப்படுகின்றன என்பதும், காரணம், ஏரணம், விவாதம் (தருக்கம்) முதலியன யாவை என்றும் கூர்ந்து நோக்கி ஆராயப்படும்.

தற்காலத்தில் அறிவியல் என்று அறியப்படும் துறை சிறப்புற்று வளரும் முன்னர், மெய்யியல் துறைதான் முன்னணியில் இருந்த அறிவுத்துறை ஆகும்.

2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இந்தியர்களும், சீனர்களும், ஜெர்மானியர்களும், கிரேக்கர்களும் பிற உலக மாந்தர் இனங்களும் பலவாறாக, அடிப்படையாக சிந்தித்து தொகுத்து வைத்த கருத்துக்கள்தாம் மெய்யியலின் தொடக்கம்.

மெய்யியல் என்பது ஆங்கிலத்தில் Philosophy (பிலாசபி) என்று கூறப்படுவது. இச்சொல் கிரேக்கச் சொல்லாகிய Φιλοσοφία (philo-sophia) என்பதில் இருந்து பெற்றது. இசொல்லின் பொருள் அறிவின் பால் காதல் (அறிவால் ஈர்க்கபடும் துறை) என்பதாகும்.

**மெய்யியல்** என்ற துறை சார்ந்த ஆய்வு ஜெர்மானியர் தொடக்கம் மேற்குலகிலேயே தொடங்கியது. ஐரோப்பியர்கள் ஆசியாவை காலனித்துவ ஆட்சி செய்த போது அவர்கள் சீன இந்திய சிந்தனைகளில் பலவற்றை மெய்யியல் சிந்தனைகளாக அடையாளப்படுத்தினார்கள்.

இவ்வாறே பின்னர் ஆப்பிரிக்க, அமெரிக்க முதற்குடிமக்கள் சிந்தனைகளில் இருந்தும் மெய்யியல் கூறுகள் அடையாளம் காணப்பட்டன. பின்னர் காலனித்துவத்துக்கு உட்பட்டவர்களும் தமது சிந்தனைகளை இவ்வாறு அடையாளப்படுத்தியும், இத் துறை சார்ந்தும் செயற்படத் தொடங்கினர்.

“பிரபஞ்சம் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருக்கிறது. அவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கும்மாறு இயக்கிக் கொண்டிருக்கும் ஆற்றல்யார்-எது?

அந்த ஆற்றலை அறியக்கூடிய அறிவு நானாகயிருக்கிறது!

அந்த “நான்-யார்?” இவ்விரண்டு கேள்விகளையும் ஒரே நேரத்தில் எழுப்பிக் கொண்டு, இவற்றுக்குக் கிடைத்த விடைகளைத் தொகுத்து மகான்களால் வழங்கப்பட்ட கருத்துக்களே தத்துவம் எனப்படும்” என்கிறார் வேதாத்திரி மகரிசி.



“எந்த ஒரு உண்மையையும் கண்ணால் பாராமலே யுகித்தாலும், மீண்டும் அதை மற்ற் இயக்கங்களுடன் பொருந்திப் பார்க்கும் பொழுது, முரண்படாது இருக்கமானால் அது தான் தத்துவம்.

ஏன் எனில் கண்ணால் பார்ப்பது, புலன்களால் உணர்வது, கருவிகளால் உணர்வது. காலம், தூரம், பருமன், வேகம் என்ற அளவைகளால் அறிவது எல்லாம் விஞ்ஞானம்.

விண் என்பது சுழல் இயக்கம் உடையது. அந்தச் சுழற்சிக்கு ஒரு பருமன் இருக்கிறது. ஒரு வேகம் இருக்கிறது. அதற்கு ஒரு இயக்கத்திற்கும் மற்றொரு இயக்கத்திற்கும் இடையே ஒரு தூரம் இருக்கிறது.

ஆகவே இந்தக் காலம், தூரம், பருமன், வேகம் என்ற நான்கையும் வைத்துக் கொண்டு பொருட்களைக் கணிப்பது விஞ்ஞானம்.

ஆனால் இந்த நான்கும் தோன்றுவதற்கு முன்னதாக எது இருந்ததோ அதை அறிந்து கொள்வது தத்துவ ஞானம். அந்த அறிவை அறிந்தால் தான் மனிதன் மனிதனாக வாழ முடியும்.”

# 2. தத்துவம் - வரலாறுப் பார்வை

மானுட இன வரலாற்றில் ஏறத்தாழ 6,000-7,000 ஆண்டுகளாகத்தான் சற்று விரிவாக அறியத்தக்க நாகரிகங்கள் அறியப்பட்டுள்ளன.

சுமேரியர்கள், எகிப்தியர்கள், எலாமைட், அக்காடியர்கள், அசிரீயர்கள் போன்று நடுகிழக்கு நாடுகளில் வாந்த மக்களின் கருத்துக்களும் கோட்பாடுகளும் மெய்யியல் கூறுகள் கொண்டவை.

## பண்டைய சீனர்கள்

***சீன மெய்யியல்*** சீன நாகரிகத்தில் தோன்றிய எடுத்தாளப்பட்ட **மெய்யியல்** சிந்தனைகளைக் குறிக்கின்றது.

3000 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான சீன மொழியில் எழுதப்பட்ட சிந்தனைகளைச் சீன மெய்யியல் கொண்டிருக்கின்றது.

சீன மெய்யியல் இந்திய, இசுலாமிய, மேற்குலக, ஆபிரிக்க மெய்யியல்களில் இருந்து பல முக்கிய வழிகளில் வேறுபடுகிறது.

சீன மெய்யியல் இயற்கையை சார்ந்தது, காரியத்தையும் நிர்வாகத்தையும் முக்கியப்படுத்துவது.

இந்திய மெய்யியல் போலன்றி அது சமயத்தை அல்லது கடவுள்களை முதன்மைப்படுத்தவில்லை. வாழ்க்கை சுழற்சியில் இருந்து விடுதலை பெறுவதை விடுத்து ஒத்துளைவுள்ள வளம்மிக்க சமுதாயத்தை இவ்வுலகில் உருவாக்குவத்தே சீன மெய்யியலின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று.

திறமான நிர்வாகம் மூலம் ஒழுக்கத்தையும் ஒத்துளைவுள்ள வளம்மிக்க சமுதாயத்தையும் உருவாக்க சீன மெய்யியல் விளைகிறது. அரசின் நிர்வாகத்தில் போரும் ஒரு நிகழ்வாக இருந்ததால், போரியலும் சீன மெய்யிலின் ஒரு முக்கிய அங்கம்.

**மெய்யியல் இருவகைப் படுகின்றது. அவையாவன, கிழக்கத்திய மெய்யியல் மற்றும் மேற்கத்திய மெய்யியல் என்பனவாகும்.**

**கருத்தளவிலும் விளக்கமுறையிலும் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் இவ்வாறு வகைப்படுத்தல் நிகழ்கின்றது.**

## கிழக்கத்திய மெய்யியல்

**கிழக்கத்திய மெய்யியல்** (*Eastern philosophy*) என்பது ஆசியா கண்டத்தில் தோன்றி வளர்ந்த சீன மெய்யியல், ஈரானிய/பாரசீக மெய்யியல், சப்பானிய மெய்யியல், இந்திய மெய்யியல், கொரிய மெய்யியல் ஆகியவற்றைக் குறிக்கும் பொதுப்பெயர் ஆகும்.

இச்சொல் பாபிலோனிய மெய்யியல் மற்றும் இசுலாமிய மெய்யியலையும் உள்ளடக்குவதாகக் கொள்ளப்படும். ஆயினும் இவை "மேற்கத்திய மெய்யியலாக" கருதப்படுவதும் உண்டு.

கிழக்கத்திய மெய்யியலுக்குள் அரபி மெய்யியல் மற்றும் யூத மெய்யியலையும் சேர்த்துக் கருதுவது உண்டு. இக்கருத்து புவியியல் அடிப்படையை மட்டும் கொண்டிருப்பதில்லை.

மாறாக, கருத்தளவிலும் விளக்கமுறையிலும் மேற்கத்திய மரபுக்கும் கிழக்கத்திய மரபுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன என்னும் அடிப்படையிலும் இவ்வாறு வகைப்படுத்தல் நிகழ்கிறது.

## மேற்கத்திய மெய்யியல்

**மேற்குலக மெய்யியல்** என்பது மேற்குலகத்தின் **மெய்யியல்** சிந்தனையையும் முறைமையும் குறிக்கும்.

மேற்குலக மெய்யியலை இந்திய, சீன, முதற்குடிமக்கள், இசுலாமிய மெய்யியல்களில் இருந்து ஒப்பிட்டு வேறுபடுத்தலாம்.

மெய்யியல் என்ற துறை அவ்வாறு அடையாளப்படுத்தப்பட்டு வளர்ச்சி பெற்றது மேற்குலகிலேயே ஆகும்.

இன்று உலகில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு சட்ட, அரசியல், சமூகக் கோட்பாடுகள் மேற்குலக மெய்யியல் இருந்தே தோற்றம்பெற்றன.

மேற்குலக மெய்யியல் பண்டைக் கிரேக்கத்தில் உருவான கிரேக்க மெய்யியலுடன் தொடங்குகிறது. பின்னர் இது உலகின் பரந்த பகுதிகளையும் தழுவி வளர்ச்சி அடைந்துள்ளது.

மேற்கு நாட்டுத் தத்துவ ஆராய்ச்சி ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஒருவரால் தொடங்கப்பட்டது.

மேலைநாட்டுத் தத்துவம் புற உலகைப் பற்றிய ஆராய்ச்சியில்ஈடுபம்டதது. தத்துவ ஆராய்ச்சி பொழுதுபோக்காக தொடங்கப்பட்டது.

அதன் காரணமாக அவர்கள் அந்த ஆராய்ச்சியில் அதிக காலம் கழித்தனர். மேற்கு நாட்டுத் தத்துவங்களில் இறைநிலை பற்றிய ஆராய்ச்சி ஆரம்பக் காலத்தில் இல்லை.

அனைத்திற்கும் மூலமாக உள்ள மெய்ப்பொருள் எங்கு, எப்படி இருக்கிறது? எவ்வாறு செயல்படுகிறது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காணாமல் நின்றுவிட்டது.

பல கடவுள் வழிபாட்டு முறையை மேலை நாட்டுத் தத்துவமும் ஏற்றுக் கொள்வதில்லை. இந்தியத் தத்துவத்திலுள்ள பண்பாட்டை ஒட்டிய சில உண்மைகளிலிருந்து மேலை நாட்டுத் தத்துவம் விலகி உள்ளது.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகிய இந்திய சமயங்கள் வலியுறுத்தும் பிற உயிர்களை வருத்தாமை,

கொல்லாமை போன்றவற்றை மேற்கு நாட்டுத் தத்துவம் ஏற்பதில்லை.

கற்புநெறி மற்றும் உணவு சார்ந்த பழக்க வழக்கங்களிலிருந்து மேற்கு நாட்டுத தத்துவம் மிகவும் வேறுபட்டு உள்ளது. வாழ்வியலை ஒட்டி பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள அறநெறி சார்ந்த சடங்குகளை மேற்கு நாட்டுத் தத்துவம் ஏற்பதில்லை.

வினைப்பதிவு, பிறவித்தொடர், கர்மா தத்துவம் ஆகியவை மேற்கு நாட்டுச் சிந்தனையில் இடம் பெறவில்லை.

மேற்கு நாட்டுத் தத்துவ ஆராய்ச்சி ஒரு பொழுதுபோக்கு. மேற்கு நாட்டுத் தத்துவக் கொள்கைக்கும், மக்களது வாழ்க்கைக்கும் தொடர்பு ஏதுமில்லை. அங்கு தத்துவ விசாரம் என்பது சிந்தனையோடு மட்டும்நின்றுவிடுகிறது.

இந்திய தத்துவ ஞானம் என்பது பரந்த ஆராய்ச்சியைக் கொளண்டது. இந்திய தத்துவஞானம் என்பது இந்திய மக்களது வாழ்கைக்கையோடு ஒனறுபட்டது.

தத்துவஞானமும் , வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. முழுமையாக வாழ்வதற்கான வழிகளையும் தருகிறது.

மேற்கத்திய தத்துவஞானம் தர்க்கத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது. இந்திய தத்துவ ஞானம் வாழ்வியலை மையமாகக் கொண்டிருந்தது என்பதுதான் உண்மை.

மொத்தத்தில் தத்துவத் துறையில் இந்தியத் தத்துவஞானிகள் ஈடுபட்டுள்ள அளைவுக்கு மேலை நாட்டுத் தத்துவஞானிகள் ஈடுபடவில்லை.



# 3. தத்துவம் நமக்குத் தேவையா?

கடந்த காலத்தைப் பற்றிய உண்மைகளை முழுமையாகத் தெரிந்து கொள்ளவும், நிகழ்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளின் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், வருங்காலம் பற்றிய கணிப்புகளைச் சரியாக அறிந்து கொள்ளவும் ஒவ்வொரு மனிதனுக்கும் மிக இயல்பாகவே விருப்பம் உண்டாகிறது.

இதுபோன்று சரியான கண்ணோட்டத்தோடு வாழ்க்கைப் போக்குடன் இணைந்து முன்செல்ல விரும்பும் அனைவருக்கும் தத்துவ அறிவு இன்றியமையாதது ஆகும்.

வாழ்வில் ஏற்படும் சிக்கல்களையும், இடையூறுகளையும் எதிர்கொள்வதற்கு வேண்டிய வலிமையையும் தன்னம்பிக்கையையும் தத்துவம் மனிதனுக்குத் தருகிறது. செயலூக்கத்துடன் இலட்சியத்தை நோக்கி முன்னேற அவனுக்கு உதவுகிறது.

இந்திய தத்துவங்கள் அல்லது தரிசனங்கள் மோட்சத்தை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டவை. இந்திய மொழியில் கூறுவதானால் இது மோட்ச சாஸ்திரம்.

மற்ற கோட்பாடுகள் அறிவைப் பெறுவதற்காக பயன்பட்டாலும், தரிசனம் மட்டுமே விடுதலை தரும் மோட்சம் பற்றிய அறிவை அளிக்கிறது என்று தர்க்கலங்காரர் கூறுகிறார்.

இதுவே இந்திய தத்துவத்தின் குறிப்பிடத்தக்க குணம் என்றும் கூறப்படுகிறது.

இந்திய தத்துவம் பற்றி மாக்ஸ் முல்லர் கூறுவதாக உறிரியண்ணா கூறுகிறார்.

- **இந்தியாவில் தத்துவம் என்பது அறிவைப் பெறுவதற்காக அல்ல. இவ்வாழ்க்கையின் மனிதன் முயல வேண்டிய மிக உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காகவே இந்த உயர்ந்த இலட்சியம் என்பது தொல்லை நிறைந்த சமுத்திரமான சம்சார சாகரத்திலிருந்து விடுபட்டு அக்கரையை அடைவதுதான். அதாவது இவ்வுலக வாழ்க்கை என்பது தீமையே.**

ஆக, மனிதன் பிறப்பின் இலட்சியத்தை அடைவதற்கு தத்துவ அறிவு அவசியம் என்பதை இதன் மூலம் தெளிவு பெறலாம்.

தத்துவம் வெறும் தர்க்கங்களாக முன் வைக்கும் சிந்தனைகளை நடைமுறைத் தளத்துக்கு விரிவுபடுத்திகொள்ள நமக்கு முடியுமென்றால், தத்துவம் மிகமிக ஆர்வமூட்டும் துறையாக ஆகிவிடும்

நமது வீட்டில் ஒரு மின்சாரக் கருவி உள்ளது. அது சில மின்காந்த விதிகளின்படி செயல்படுகிறது. இக்கருவியைப் பழுதுபார்க்க

வேண்டுமெனில் அதன் செயல்முறையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அச்செயல்முறைக்கு அடிப்படையாக உள்ள மின்காந்த விதிமுறைகளை கற்பதுதான் முதன்மையான வழிமுறை, இல்லையா?

அதுபோல ஒரு அறிவுத்துறையை கற்க, அவ்வறிவுத்துறையின் ஆதாரமான செயல் விதிகளை அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு தத்துவம் உதவிகரமானது.

உதாரணமாக ஒரு கலை விமர்சகர் இந்த ஓவியம் அழகானது, அழகற்றது என்று விமரிசிக்கிறார். அழகு என்றால் என்ன என்று அவர் ஆராயத்தொடங்கினால் தத்துவத்துக்குள் இறங்கிவிடுகிறார்.

அழகுக்கும் பண்பாட்டுக்கும் இடையேயான உறவு என்ன என்ற கேள்வியை ஒரு தத்துவவாதி எழுப்பிகொள்ள மேற்கண்ட இருவரும் உதவுவார்கள்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் எந்த துறை மிகுந்த தீவிரத்துடன் செயல்பட்டுப் புதிய கேள்விகளை எழுப்புகிறதோ அந்த துறைக்கு நெருக்கமானதாகத் தத்துவம் இருக்கும்.

அந்தத்துறையில் உள்ள முக்கியமான பிரச்சினைகள் தத்துவத்துக்குள் வரும்.

கடந்த காலத்தில் மதத்திற்கும் மிக நெருக்கமானதாகத் தத்துவம் காணப்பட்டது. பிற்பாடு அது அரசியல் சித்தாந்தங்களை ஒட்டி செயல்பட்டது.

கடந்த ஐம்பது வருடங்களை எடுத்து பார்த்தால் மொழியியல், உயர் பௌதீகம், நரம்பியல், மரபணுவியல் முதலிய துறைகளில் உருவான அடிப்படைப் பிரச்சினைகளைத் தத்துவம் எடுத்துப் பேசியிருக்கிறது என்று காணலாம்.

உதாரணமாக ரஸ்ஸல் உயர் பௌதீகத்தைச் சார்ந்து சிந்தித்திருக்கிறார். விட்ஜென்ஸ்டைன் மொழியியல் பிரச்சினைகளை ஆராய்ந்தார்.



கார்ல் பாப்பர் பரிணாமக் கொள்கைகளை ஆராய்ந்தார். நாம் சாம்ஸ்கி மொழியியலையும் நரம்பியலையும் குறித்து ஆராய்ந்தார்.

ஆகவே எந்த துறையிலாவது ஆழமான சிந்தனைக்குள் போக வேண்டுமெனில் கண்டிப்பாகத் தத்துவ பயிற்சி அவசியம். அதை தவிர்க்க முடியாது.

இலக்கியத்தில் கூட 'தத்துவமின்றி நாவல் இல்லை' என்று கூறப்படுவதுண்டு. இலக்கிய விமர்சனம் என்பது தத்துவத்தின் கிளை போலவே இயங்கக்கூடியது.

## தத்துவ ஞானம் பற்றி வேதாத்திரியார்

முழுமுதற் பொருளை (மெய்ப்பொருளை) அறிய வேண்டும்; அதோடு கலப்புற வேண்டும் என்ற பிரபஞ்சத்தையே உள்ளடக்கிய ஒரு தத்துவத்தை, பெரிய ஆற்றலை உள்ளடக்கி இருப்பவன் தான் மனிதன்.

பிறந்தது முதற்கொண்டு அந்த வேகம் அப்படியே இருந்து கொண்டு இருக்கிறது. வேறு சில சிறு சிறு காரணங்களால், புலன் அறிவின் மயக்கத்தினால் எழுந்து இயங்க முடியாமல் அறிவு தேக்கமுற்று இருக்கிறது.



அந்த வேகத்தை ஒரு சிறு பொருள் மேல் பாய்ச்சுகிறோம். ஒரு செயலின் மேல் பாய்ச்சுகிறோம். ஒரு நாளைக்கு திருப்தியாக இருக்கிறது. இரண்டு மூன்று நாட்கள் கழித்து திருப்தி இல்லை.

இப்படி எந்தப் பொருள்களின் மீதும் ஆசை வைக்கிறோம். அனுபவிக்கிறோம். மீண்டும் வெறுக்கிறோம்.

காரணம் என்னவென்றால் - உண்மையாக எழுச்சிப் பெற்று உள்ளுணர்வாக இருக்கக்கூடிய ஆசை என்ற அறிவின் எழுச்சி, அது இதை நாடவில்லை என்பதே இதற்கு காரணம்.

அது நாட வேண்டியது பரிபூரணமான எல்லையை அடைவதே. அந்த அறிவின் எழுச்சியை சிறு சிறு எல்லையில் புகுத்தும் போது அது குறுகிய காலத்தில் நிறைந்து விடுகிறது. பிறகு வழிந்து ஓடுகிறது.

பெரிய வெள்ளம் வருகிறது. ஒரு குட்டையில் ஒரு நிமிடத்தில் நிரம்பிவிடுகிறது. நிரம்பிய அந்த வெள்ளம் மறுபடியும் வேறு பக்கம் ஒரு ஏரியில் போகிறது, ஏரி நிரம்பிவிட்டால் அதன் பிறகும் போகிறது.

பெரிய அணையில் நிரம்பிய பிறகு மீண்டும் ஆறாகப் போகிறது. சமுத்திரத்திற்குப் போன பிறகுதான் அதற்கு அமைதி வரும்.

எங்கே இருந்து புறப்பட்டதோ, அங்கே போனால்தான் அமைதி இருக்கும். பேராற்றலுள்ள அறிவு நிலைக்கும், எந்த இடத்திலிருந்து பிறவி தோன்றியதோ, அந்த இடத்தை அறிந்து கொண்டால் தான் திருப்தியாக இருக்கும். அங்கேதான் நிறைவு கிட்டிடும்.

இதற்கு மத்தியில் எந்தப் பொருளாலும் நிறைவு கிட்டாது. அறிவு உயர்வதற்காக மற்ற பொருட்கள், ஆராய்ச்சி எல்லாம் தேவை. கடமையினால்தான் அவை தேவையாக இருக்கின்றனவே தவிர, அவையே நம்மை இறைநிலைக்குக் கொண்டு போய் விட்டு விட முடியாது.

ஆழ் மனம் தேடும் பொருளின் (ஆதிநிலை / மெய்ப்பொருள்) மேல் தான் மனதிற்கு ஓயாத நினைவு (தேடுதல்) இருக்கும். அதன் மேல்தான் மதிப்பு இருக்கும். தேடுகிற பொருளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன என்று ஆராயும்போது அதுதான் தத்துவஞானம்.

# 4. பழங்கால தத்துவம் இன்றைக்கு எதற்கு?

பரவலாக கேட்கப்படும் கேள்வி இது. 'சரி, புதிய தத்துவம் என்று எதைச் சொல்கிறீர்கள்?' என்று கேட்போம். அவர்கள் மார்க்ஸியம் என்றோ, அணுக்கொள்கை என்றோ பதில் கூறுவார்கள்

இத்தத்துவங்களின் நடைமுறை சார்ந்த அம்சங்கள், சில தருக்க முறைகள் மட்டுமே புதியவை. அடிப்படைகள் முழுக்க புராதன கிரேக்க சிந்தனையில் இருந்து பெறப்பட்டவை என்பது தெளிவாகிறது.

தத்துவம் என்பது தொழில்நுட்பம் அல்ல. புதியது வந்ததும் பழையது போய்விடாது. ஒவ்வொன்றும் பிறிதின் தொடர்ச்சியாகவே எழமுடியும். தத்துவம் என்பது தருக்கங்களின் தொகுப்பு.

அத்தருக்கங்கள் எங்கிருந்து வருகின்றன? மனித மூளை செயல்படும் விதங்களில் இருந்து அல்லவா? மனித மூளை அன்றும் இன்றும் ஒன்றுதான். புறச் சூழல்தான் மாறிக் கொண்டே இருக்கிறது.

ஆகவே கலையிலும் தத்துவத்திலும் அடிப்படைகள் மாறுவதே இல்லை. அவற்றை எடுத்துரைக்கும் முறையும், புரிந்து கொள்ளப்படும் சூழலும் மட்டும் மாறியபடியே இருக்கும். மிகப்புராதனமான தத்துவ சிந்தனையின் அடிப்படைகள் இன்றைய நவீனச் சிந்தனைகளில் தொடர்வதைக் காணலாம்.

ஆகவேதான் அதி நவீன சிந்தனைகள் பெருகி வந்தபடியே இருக்கும் மேற்கத்திய அறிவுச் சூழலில் கூட அதிபுரான கிரேக்க சிந்தனையாளர்கள் முதற்கொண்டு எவருமே புறக்கணிக்கப்படுவதில்லை

ஒவ்வொருவரும் திரும்பத் திரும்ப வேறு வேறு கோணங்களில் வாசிக்கப்படுகிறார்கள். மறுகண்டுபிடிப்புச் செய்யப்படுகிறார்கள்.

முக்கியமான எந்த சிந்தனையும் காலாவதி ஆவதில்லை என்பதையும் நாம் முதலில் புரிந்துகோள்ள வேண்டும்.



உதாரணமாக ஹிட்லர் என்ற எதிர்மறை சக்தியின் உருவாக்கத்தில் நீட்சேக்கு பங்கு உண்டு என்பது வெளிப்படை. ஆகவே அவர் வெறுத்து ஒதுக்கப்பட்டார். அத்துடன் நவீன அறிவியல் நீட்சேயின் பல சிந்தனைகளை தவறெனக் காட்டியது.

அதே போல கார்ல் மார்க்ஸின் பொருள் முதல்வாதச் சிந்தனைகள் உருவானபிறகு ஹெகல் காலாவதியாகிவிட்டதாகக் கூறப்பட்டது

.



ஆனால் பின் நவீனத்துவ சிந்தனைகள் உருவானபோது இவர்கள் மறு கண்டுபிடிப்பு செய்யப்பட்டு உயிர்த்தெழுந்தார்கள். சமூக அதிகாரம் முதலியவை குறித்த இவர்களுடைய பார்வைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன.

ஐம்பதுகளில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த சார்தர், சி.ஜி. யங் முதலியோர் இன்று பின் நவீனத்துவர்களால் நிராகரிக்கப்படுகிறார்கள். அவர்கள் நாளை உயித்தெழக் கூடும்.

இன்று மறக்கபட்டுள்ள ஹென்றி பெர்க்ஸன், பிஷப் பெர்க்லி முதலியோர் மீண்டு வரும் அறிகுறிகள் தெரிகின்றன.

சிந்தனை பழமையாவது, காலவதியாவது குறித்தெல்லாம் பேசுபவர்கள் இங்கேயுள்ள ‘சிந்தனை இறக்குமதியாளர்கள்’ தான்.

மேற்கே எது புத்தம் புதிதோ அதைப்பற்றி பேசவேண்டும் என்ற துடிப்பே காரணம்.

**தத்துவங்கள் சில சமயம் அபத்தமான முடிவுகளுக்கு வருகின்றனவே?**

தத்துவத்தில் ஐம்பது வருடம் பின் சென்று அன்றைய முடிவுகள் சிலவறை எடுத்து இப்போது பார்த்தால் நமக்கு அதிர்ச்சிதான் கிடைக்கும்.

German Philosoper Nietzsche

நீட்சே சொன்னார்., பிரபஞ்சத்தில் ஜடப்பொருள் எல்லைக்குட்பட்டது; ஆனால் காலம் முடிவற்றது.

ஆகவே இங்கு பொருளின் பலவித சேர்க்கையின் மூலம் நடக்கிற ஒவ்வொரு நிகழ்வும் மீண்டும் மீண்டும் நிகழ்ந்தாக வேண்டும். நிரந்தரச் சுழற்சி (Eternal Recurrence) என்ற பெயரில் இதை முன் வைத்தார்.



German Philosoper Nietzsche

பொருளும் பிரபஞ்சத்தில் எல்லையற்றதே என அறிவியல் நிறுவிய பிறகு நீட்சேயின் சித்தாந்தம் மூடத்தனமான ஒன்றாக மாறிவிட்டது.

அப்படி என்றால் நீட்சே ஒரு மூடனா? பண்டைய தத்துவங்களில் பல இன்று தவறான முடிவுகளைத் தருவனவாகத் தெரிகின்றன. ஆகவே அவை பயனற்ற குப்பைகளா?

சிந்தனையின் விளிம்பு எல்லையில் தத்துவவாதி குடியிருக்கிறான். ஓர் ஊரில் பல்லாயிரம் பேர் குடியிருக்கிறார்கள்

ஊரை மேலும் எப்படி, எத்திசையில் விரிவுபடுத்தலாம் என்று பார்க்க, ஒரு சில முன்னோடிகள் எல்லா திசைகளிலும் கிளம்பிச் செல்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

அவர்களில் சிலர் வழி தவறிடலாம். சிலர் தவறான முடிவுகளுக்கு வரலாம்.காரணம், அவர்கள் போவது பிறர் அதுவரை போகாத திசைகள் அல்லவா?

அந்த முன்னோடிகளில் சிலரே நகரத்தை விரிவுபடுத்துவதற்கான வழியை கண்டுபிடிப்பார்கள்.

மானுட சிந்தனை வளர்வது இப்படித்தான். ஏற்கனவே தத்துவம் கண்டடைந்த இடத்தில் சொகுசாக வாழ்ந்தபடி தத்துவத்தின் முதிய முயற்சிகளை நாம் விமரிசனம் செய்கின்றோம்.

தத்துவத்தின் கண்டுபிடிப்பில் பத்துக்கு இரண்டுதான் உபயோகமாக இருக்கும். உடனே தத்துவம் 20% தான் சரியானது என்று கூறிவிட முடியாது.

பத்து புதுக்கண்டுபிடிப்புகள் வந்தால் தான் இரண்டு சரியான புதுச் சிந்தனைகள் நமக்கு கிடைக்கின்றன.

இன்னொன்றும் கூறவேண்டும். ஒரு தத்துவக் கண்டுபிடிப்பு, அப்படியே நேரடியாக எடுத்துக் கொண்டால், தவறாக, நடைமுறைப் பார்வையில் அபத்தமாகக்கூட, இருக்கக்கூடும்.

ஆனால் அதற்கு குறியீட்டு ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் அறிவுத்துறையில் எற்படக்கூடும்

உதாரணமாக அபாவம் (இன்மை) என்பதும் ஒரு பொருண்மை இருப்புதான் என்று நியாய சாஸ்திரம் கருதுகிறது.

அதாவது, ஒரு பொருள் இல்லாமலிருப்பதும் ஒரு வகை இருப்பே. இச்சிந்தனை வெறும் தருக்கம்தான்.

நடைமுறைக்குப் பயன்படாது. ஆனால் இது குறியீட்டு ரீதியாக விஞ்ஞானி சந்திர சேகருக்குக் கருந்துளைகள் ( Black Holes ) குறித்த ஆய்வுக்கு உதவியது.

வேறு எவ்விதமான அறிவு வளர்ச்சி இருந்தாலும் தத்துவ நோக்கு வளராவிட்டால் அசல் சிந்தனைகள் ஒரு சூழலில் ஏற்படாது என்பதே உண்மை

ஒவ்வொரு அறிவுத்துறையும் சாராம்சப்படுத்தப்பட்டு தத்துவம் நோக்கிக் கொண்டு செல்லப்பட்டாக வேண்டும்.

பலர் எண்ணுவது போல தத்துவம் என்பது உளவியல், மானுடவியல், இயற்பியல் போல அறிவுத்துறை முறையே தத்துவம் என்பது. நாம் சிந்திப்பதெல்லாமே தருக்கம் மூலம்தான்

அதாவது தத்துவத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தத்துவம் மூச்சு போல. அனைவரிலும் அது உண்டு. அதைத் தவிர்க்க முடியாது.

தத்துவச் சிந்தனையாளர்கள் இம்மூச்சைப் பற்றி சிந்திப்பவர்கள், அதைப் பயிற்சி மூலம் கட்டுப்படுத்திப் புதிய புதிய விதங்களில் விட முயல்பவர்கள்.

அதாவது, சிந்தனை என்பது சுவாசம் என்றால் தத்துவச் சிந்தனை என்பது பிராணாயாமம்.

எப்படியிருப்பினும் நம் நாட்டில் இருந்த தத்துவங்கள் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் இருக்கத்தான் வேண்டும்.

இவற்றை கூறியவர்கள் அனைவரும் மிகச் சிறந்த சிந்தனையாளர்கள் .

நம் காலத்திற்கு இவை உதவிகரமாக இருக்காது என்றாலும் இவை நமது அறிவை வளர்க்கும் அறிவு வளர்ச்சியின் அடிப்படையில் இவ்வுலுகை மாற்ற நடவடிக்ககை எடுக்க முடியும்.



# 5. இந்திய தத்துவ வரலாற்றின் சுருக்கம்

இந்திய மண்ணில் எழுந்துள்ள தத்துவங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுவன பன்னிரண்டு.

- ஐவகை தரிசனங்கள் - சாங்கியம், யோகம், வைசேடிகம், நையாயிகம், புர்வ மீமாம்சை
- மூவகை வேதாந்தங்கள் - அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம்.
- சைவ சித்தாந்தம், உலகாயதம், சமணம், பௌத்தம்.

இந்திய தத்துவப் பரப்பினை சுருக்கமாகச் சொன்னால் நான்கு நிலைகளில் சுருக்கி விடலாம்.

1. இந்தியத் தத்துவம் தன் தொடக்க காலத்தில் - கி.பி. 6-5 ஆம் நூற்றாண்டுகள் வரையான காலப்பகுதியில் - அறிவார்வம், சமூக அக்கறை என்பன கொண்டு திகழ்ந்தது.

2. பின்னாளில் தத்துவ மைய நீரோட்டம் தர்க்கவாதத்திறன், சமய நம்பிக்கை எனபவற்றில் புகலடைந்தது.

3. தொடக்கத்தில் புலப்பட்டு நின்ற சமூக அக்கறை சார்ந்த கூறுகள் அறம், பக்தி, ஆன்மநேயம் என்பவனவாகத் தனித்தனித் தளநிலைகளில் வளர்ச்சி எய்தின.


4. இன்று கிழக்குத் தததுவத்தை மேற்கத்தினரையும் கவரும் வண்ணம் எளிமைப்படுத்தி, வேதாத்திரியத் தத்துவங்கள் உலா வந்து கொண்டிருக்கின்றன. ஏன் உலகையே வசப்படுத்தி வருகின்றன.

இந்திய தத்துவ ஞானம் இன்ன காலத்தில் இன்னாரால் தொடங்கப்பட்டது என்று சொல்ல முடியாத அளவு பழமைமிக்கதாகும்.

அதன் தொடக்கம், சரித்திர காலத்திற்கு முந்தையதாக அமைந்துள்ளது.

விண்டர் நீட்ஸ் (வடமொழி இலக்கிய வரலாற்று அறிஞர் )என்பவர் வேதத்தின் காலத்தை மிகப் பழமையானதாகவும் கூற விரும்பாமல், அதே சமயம் தற்கால சகாப்தத்தில் தொகுக்கப்பட்டதாகவும் கூறாமல் சுமார் கி.மு. 2000 - 2500 என்று கூறுகிறார்.

மேற்கு நாட்டில் தத்துவ ஆராய்ச்சி, வளர்ச்சி குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஒருவரால் தொடங்கப்பட்டு போல் இந்திய தத்துவ ஞான வரலாற்றை அளவிட இயலாது.



இந்தியாவில், ஆசிரியர் - மாணவர் என்ற குருகுல அடிப்படை மிகவும் முக்கியமாகக் கருதப்பட்ட காலம்.

பல நூற்றாண்டுகளாக, தத்துவார்த்த அறிவு இம்முறையில்குருவிடமிருந்து சீடனுக்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்திய தத்துவ வரலாற்றை குறிப்பிட்ட கால கட்ட சூழலில் பார்க்க வேண்டும். இந்தியத் தத்துவ வரலாற்றின் கால கட்டத்தை முறைப்படுத்த வேண்டும்.

இதனை ஜெர்மானிய இந்திய வரலாற்று மரபு ஆய்வாளர் வால்டர் ரூபன் சுருக்கமாகப் பதிவு செய்துள்ளார்.

- “சாண்டோக்ய உபநிடத”த்தில் உத்தாலக ஆருணி என்பவர் காலத்திலிருந்து இது தொடங்குகிறது. அவருடைய லோகாயதம் மிகவும் பழமையானது. புராதனமானது. இவ்வுலகம் பற்றிய வரலாற்றுக்கு முத்தியது. உத்தலாகர் கி.மு. 600 வாக்கில் வாழ்ந்தார். அதை இந்தியாவின் இருப்புக் கால ஆரம்பம் எனலாம். இவருடைய பொருள் முதல் வாதத்திற்கு எதிராக யாக்ஞசவல்கியர் மிக தொன்மைக் கால இந்திய கருத்து முதல் வாதத்தை தோற்றுவித்தார். அதில்தான் தர்மா, சம்சாரம், மோட்சம் ஆகிய கோட்பாடுகள் இணைந்திருந்தன. இவ்வாறாக, இரு பெரும் தத்துவங்களுக்க இடையே மோதல்கள் தொடங்கின.

- இதற்கு அடுத்த கால கட்டம் கி.மு.599. இது மகாவீரர் மற்றும் புத்தர் காலம் தொடங்கி நந்தர்கள் காலம் வரை (கி.மு.330) நீண்ட காலமாகும். அப்போதுதான் கர்மாவுக்கு எதிரான வாதங்கள் உருப்பெற்றன. மகாவீரர் அகிம்சையை போதித்தார். புத்தர் அனிச்சை, அனத்த வாதங்களைப் போதித்தார். இது 12 “நிதானங்களை” கொண்டது. பொருள் முதல்வாதிகள்

உத்சேதவாதம், பதவாதம், யதுர்ச்சி வாதம் போன்றவற்றையும், கடவுள் பற்றி முடிவெடுக்க இயலாதவர்கள் அஞ்ஞான வாத்தையும் போதித்தனர். இக்காலத்தில் இருந்த ஆறு தத்துவ ஞானிகள் பற்றி திக்னிகாயா கூறுகிறது. அஜாதசத்ருவின் கொடுங்கோல் ஆட்சிக்கு இதில் ஐவர் ஆதரவு தெரிவித்தனர். சமணர்கள் இப்பிரச்சனையை தொடவில்லை. துறவறத்தை அவர்கள் ஆதரித்தனர். “ஜைன சூயகாடா” என்ற நூல் மனிதனை அடக்கி ஆள்வதை அவனை அடிமைபபோல் நடத்துவததை ஆதரிக்கிறது. அனால், இதை எந்த சமய முனிவரும் கூறவில்லை. திக்னிகாயா (1)-ல், ஒரு பத்த பிட்ச எல்லா வாதங்களையும் அறுபத்து இரண்டு தத்துவ வகையாகப் பிரிக்கிறார். ச்வேதாஸ்வதார உபநிடதத்தில் (1-2) இந்த வாதங்கள் பற்றி வருகிறது. உபநிடத வாதிகள் (ஔபநிஷதர்கள்) ஒரு வகையான தொடக்ககால வேதாநத்தைப் போதித்தனர். அதைப்பற்றி நமக்கு சரியாக எதுவும் தெரியவில்லை. மேலே கூறப்பட்டவை ஜைனம், சாங்கியம். யோகம், மீமாம்சம் ஆகியவற்றிற்கும் பொருந்தும். சாங்கியத்தில் ஒரு பகுதி கடவுள், பெண் கடவுள் பற்றிய பழங்குடியினரின் புராணக் கதைகள் உள்ளன. யோகத்தில் பழங்குடிமரபினரின் மந்திர, சூனிய , மதகுரு ஆட்சி பற்றி வருகிறது. சம்சாரம் என்பதை நிரூபிக்க பௌத்தர்கள்தான் இதைப் புகுத்தினர். இது புத்தர் பற்றிய மகாபோதியில் வருகிறது. ஜைனத்தில் பழங்குடியினரின் ஜடப் பொருள் ஆன்மவாதம் உள்ளது . சைவம் ஈசுவர வாதத்தக் கொண்டிருந்ததாக சிந்துவெளி நாகரீகம் கூறுகிறது. இவையெல்லாம் எங்கு, எப்படி, எப்போது தௌர்றின என்பதையெல்லாம் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. வரலாற்றாசிரியன் ஒன்றை மட்டும் கூற முடியும். இந்தயத் தத்துவத்தில் வேதங்களில் காணப்படாத தத்துவங்கள் தோன்றின. அவை பழைய வைதிக உபதேசங்களை எதிர்த்தன என்று கூற முடியும். பாணினி, உறிலயோடோரஸ் ஆகியோர் கூறுவது போல, கடவுள் நம்பிக்கை இதற்குப் பின் வந்த கால கட்டத்தில் தான் என்பது உண்மை.

- அடுத்த கால கட்டத்தில் இந்தியத் தத்துவங்கள் ஒரு சீராக அமைக்கபட்டன. மிகப் பழைய சாங்கியம் என்பது பிராமணீய தத்துவப்பிரிவு, அது கணக்கற்ற சாங்கியர்களின் தத்துவமாக விளங்கியது. மீமாம்ச, வேதாந்த, வைசேஷிக, நியாய, யோக சூத்திரங்கள் இதையடுத்து வந்தன. பதஞ்சலியின் மகாபாஷ்யம், மகாபாரம், சார்வாக சம்உறிதை ஆகியவற்றில் கடவுள் கோட்பாடு இடம் பெறவில்லை. பின்னர். இவை கடவுள் கொள்கைக்கு எதிராகப் பேராடின. மாறாக, யோகம், சாங்கியம், சில வேதாந்தங்கள், நியாய - வைசேஷிகம் பொன்றவற்றில் கடவுள் கொள்கை பெரும் பங்காற்றியது.

பல்வேறு காலகட்டங்களைப் பிரித்துப் பார்க்கும் போது இந்தியாவின் தத்துவார்த்த வளர்ச்சி, மற்ற நாடுகளைப் போலவே சமூக வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டுள்ளதைப் பார்க்கலாம்.



# 6. இந்திய தத்துவத்தின் சிறப்பு.

இந்தியத் தத்துவம் பல்வேறு வகையான கோட்பாடுகளை உடையதாகயிருந்தாலும் அனைத்தும் இறையுணர்வையும் அறநெறி வாழ்வையும் சார்ந்தே இருப்பதால், வேற்றுமையிலும் ஒற்றுமை காணும் சிறப்பு உடையது.

ஆன்ம நேயமே அதனுடைய உயிர்த்துடிப்பாக உள்ளது. ஆன்மநேய வெளிப்பாட்டால் அன்பு, கருணை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் முதலிய உயர்பணுபுகள் இந்தியத் தத்துவச் சிறப்பின அடித்தளமாக அமைந்துள்ளன.

“எல்லாம் இறைநிலை” என்ற உண்மை உணர்வே இந்திய வாழ்க்கை முறயைில் சத்திய நெறியை வேரூன்றச் செய்துள்ளது.

எந்த உயிருக்கும் துன்பம் செய்யாமல் வாழ்கின்ற உயர் பக்குவநிலைக்கு இந்த உண்மை நெறியே அடிப்படையாக அமைந்துள்ள என்பதுதான் மற்ற நாடுகளிலில்லாத ஒரு தனிச்சிறப்பாகும்.

இறைநிலையை உணரவும் அடையவும், வாழ்க்கைத் தேவைகள் அனைத்ததையும் துறக்க வேண்டும் என்பதில்லை, தேயையையொட்டி உலகப் பொருட்களோடு உறவ அமைய வேண்டும். அளவுமுறை அறிந்து இயற்கையோடு ஒட்டி வாழ்வதே துறவாகும். அதுவே பற்றற்ற வாழ்வாகும்.

இத்தகைய வாழ்க்கை முறையே இந்திய மக்களுக்கு ஆன்மிக வழி நடக்க உதவும் ஊன்றுகோலாகவும், காலத்தால் மாற்ற முடியாத பண்பாடாகவும் அமைந்துள்ளது.

இந்தியத் தத்துவ ஞானம் பக்தியோகம், கர்மயோகம், இராஜயோகம், ஞானயோகம் என்ற நான்கையும் வலியுறுத்துகின்றது.

1. பக்தியோகம் - பக்தியின் மூலம் கடவுளை அடைதல்.
2. கர்மயோகம் - சரியான செயல்களைச் செய்வதன் மூலம் கடவுளை அடைதல்.
3. இராஜயோகம் - மனத்தை ஒருமுகப்படுத்துவதன் மூலம் கடவுளை அறிதல்.
4. ஞானயோகம் - பகுத்தறிவின் துணைகொண்டு கடவுளை அறிதல்.

# குரு சீடர் உறவு

குரு என்பர் யார்? குருவின் பணி யாது? குருவிற்கும் சீடருக்கும் உள்ள உறவு எத்தகையது?

இந்தியத் தத்துவ மரபில் குரு என்பவர் முக்கிய இடத்தை வகிக்கிறார். குரு என்ற சொல் மிகவும் மதிப்பும் மரியாதையும் அளிக்கப்படும் சொல்லாகும்.



“குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, மகேஸ்வரன்” என்கிறது கீதை.

“கு” என்ற எழுத்து இருளைக் குறிக்கும். “ரு” என்ற எழுத்து ஒளியைக் குறிக்கும். அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்ஞான ஒளியைத் தருபவரே குரு. குரு என்றால் இருளைப் போக்குபவர் என்று பொருள்படும்.

இந்தியத் தத்துவம் உள்முகப் பயிற்சியாகும். இது இயற்கை இரகசியங்களைப் பற்றிய ஆராய்ச்சி மற்றும் தர்க்க அடிப்படையில் உருவாக்கப்ட்டு உள்ளது.

இந்திய தத்துவ ஞானம் விஞ்ஞானப்பூர்வமானது. இந்திய தத்துவ ஞானத்தின் பழமை, புதுமைக்கு விளக்கம் சொல்லிக் கொண்டே இருக்கிறது.

ஐன்ஸ்டைன் போன்ற மாபெரும் மெய்ஞ்ஞானிகள் கூட இந்திய தத்துவ ஞானத்தின் அழிவற்ற உண்மைகளை வியந்து பாராட்டி இருக்கிறார்கள்.



இந்தியத் தத்துவ ஞானிகள் தத்துவ ஆராய்ச்சியில் மட்டுமின்றி அந்த ஆராய்ச்சிக்குத் துணையான-அறிவு வருகின்ற சாதனங்களான அளவைகளை ஆராய்வதிலும் பெரிதும் ஈடுபட்டனர். அறிவைத் தரும் நூல்களை அதிகமாக ஆராய்ந்தனர்.

இந்தியத் தத்துவத்தில் சாதி வேறுபாடுகள் பிற்காலத்தில் நுழைக்கப்பட்டன. இதன் விளைவாக இந்திய நாட்டிற்கு பல்வேறு துன்பங்கள் உண்டாயின.

மொத்தத்தில் தத்துவத் துறையில் இந்தியத் தத்துவஞானிகள் வெளிப்படுத்திய தத்துவங்கள் மானுடத்தை இன்றும் வழிநடத்திச் செல்கின்றன என்பதில் ஐயமில்லை.

அறிவு வளர்ச்சி எவ்வாறு முடிவில்லாத தொடர்கதையாக இருக்கிறதோ, அதைப் போல இந்திய தத்துவ ஞான விளக்கமும் முடிவற்ற ஒரு தொடர்கதையாகத்தானிருக்கும்.


இந்திய தத்துவ வரலாற்றில்
வேதாத்திரி மகரிஷி
ராஜம் பதிப்பகம் Ebook publishers

# 7. தத்துவார்த்த இலக்கியங்கள்

இந்திய தத்துவ ஞான முடிவுகள் வெளியிடப்படிருப்பது பெரும்பாலும் வேதம், உபநிடதம், ஆகமம் எனப்படும் மிகப் படைய வடமொழி நூல்களிலேயாகும். இவையே இந்திய தத்துவ ஞானத்துக்கு ஆதார இலக்கியங்கள்.

இந்தியத் தத்துவத்தைத் தோற்றுவித்த நிறுவனர் என்பவர் யாருமில்லை. இந்தியத் தத்துவம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாகும். வேதகாலத்திற்கும் முற்பட்டு என்பது கருத்து.

ஆழ்ந்த சிக்கல்மிகு உண்மைகளை, இந்திய மக்கள் தங்களது உள்ளுணர்வால், தொலைநோக்குப் பார்வையால், அனுபவத்தால் ஏற்றுக் கொண்ட தத்துவங்கள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டு, விரும்புவோர்க்கு அளிக்கும் வித்தில் அமைந்துள்ளது இந்தியத் தத்துவம்.

இந்திய தத்துவ இயல் என்று உலக அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டிருப்பது சமஸ்கிருத இலக்கியங்களே.

> “இந்திய சமுதாயத்திற்கு வரலாறு கிடையாது. அறியப்பட்ட வரலாறு கூட கிடையாது” என்று காரல் மார்க்ஸ் சொல்கிறார். (22.07.1853 - லண்டன்)

- Indian Society has no history at all, atleast no known history” (Future Resullts of Brisish Role in India)

இதனால் நாம் வருத்தப்படவோ, அதிர்சியடையவோ தேவையில்லை.

கிரேக்க, சீன, எகிப்திய நாகரீகங்களுக்கு 4000, 5000 ஆண்டு வரலாற்றுக்கு கால அட்டவனணையுடன் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள் உள்ளன.

ஆனால், இந்தியாவின் வரலாற்று நிகழச்சிகளுக்கு நிர்ணயமான, துல்லியமான ஆதாரங்கள், பதிவுகள் கிடையாது.

இலக்கியங்களும் புராணங்களும், இதிகாசங்களும், கல்வெட்டுகளும் தருகின்ற தகவல்களிலிருந்து உருவாக்கப்பட்டதாகும்.

இருப்பினும் நமது சமஸ்கிருத தத்துவ இயல் இலக்கியங்கள் ஒரு மாபெரும் ஆழ்கடல், மகா சமுத்திரமாகம்.

மிகச் சிறப்பு வாய்ந்ததத்துவ ஞானிகள் பலர் பண்டைய காலத்திலிருந்தே தங்களின் சிந்தனை ஆற்றலை சிறகடித்துப் பறக்கவிட்டுள்ளனர்.

அவர்கள் தங்களது தத்துவக் கட்டமைப்புகளை தொடர்ச்சியாக ஒன்றன் பின் ஒன்றாக உருவாக்கியுள்ளார்கள்.

இவை இன்றளவும் உலக அறிஞர்களின் மரியாதைக்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன என்பது நாம் பெருமைப்படக்கூடிய அம்மசமாகும்.

இந்திய தத்துவ வரலாற்றிற்கு ஆதாரமாக உள்ள நூல்கள் சூத்திரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

பின்னாளில் வந்த தத்துவ நூல்கள் பழையனவற்றை விளக்கும் விளக்கங்கள் பாஷ்யங்கள் அல்த டிக்காக்கள்.

அதாவது வியாக்கியானங்களின் மீது வியாக்கியானம் ஆகியவையே. இவை கவிதை வடிவில் இருந்தன. அவற்றை காரிகைகள் என்பார்கள்.

பிற்காலத்தில் பல உரைநடை, கவிதை நடையிலும் வெளிவந்தன. ஆனால், சூத்திரங்கள் இறுதியான அறிவைக் கொண்ட பொக்கிஷமாக அமைந்தன.

வைசேசிக முறை என்பது கனாடா - அவரை கனபுஜா என்பவரால் எழுதப்பட்டது என்று கூறுகின்றனர்.

கனபுஜா என்றால் அணுக்களை உண்பவர் என்று பொருள். இப்பெயர் அவருக்கு வரக்காரணம், அவரது எளியை விளக்குவதாகும்.

பௌத்தர்களுக்கும், சமணர்களுக்கும் இவை போன்ற சூத்திரங்கள் இல்லை. ஆனால், இதே போன்ற முறையில் அவர்களும் பின்பற்றி தங்கள் தங்கள் தத்துவக் கருத்துக்களை வழங்கினர்.

சீனா, கிரீஸ் போன்ற நாடுகளில் இருந்த தத்துவார்த்த நடவடிக்கைகள் போலு. இந்தியாவிலும் கடந்த காலங்களில், பலவிதமான மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட தத்துவங்கள் இருந்தன என்பது தெளிவாகிறது.

இதுபற்றி ஸ்ட்செர்பாட்ஸ்கி பின்வருவமாறு கூறுகிறார்.

- கி.மு. 6 - 5 வது நூற்றாண்டுகளில், புத்தமதம் தோன்றுவதற்கு முன்பாக, இந்தியாவில் தத்துவார்த்த சிந்தனைகள் தோன்றின. மக்களிடையே பலவிதமான கருத்துக்கள் அமைப்புகள் பற்றிய பிரச்சாரம் நடைபெற்றது. இதில் சில தத்துவங்கள் இறுதியில் பெரும் இந்திய தத்துவங்களாக வளர்ந்துள்ளன.

## வேத இலக்கியங்கள்

நான்கு வேதங்களைத் தவிர பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரண்யங்கள் மற்றும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகிய அனைத்தும் வேத இலக்கியங்களில் அடங்குவனவாகும்.


வழிபாடுகள் மற்றும் வேள்விகள் குறித்த விளக்கங்கள் பிராமணங்களில் கூறப்பட்டுள்ளன. ஆன்மா, பிரம்மம், உலகின் தோற்றம், இயற்கை பற்றிய விளக்கங்களை உபநிடதங்கள் கூறுகின்றன.

---

## வேதாத்திரி மகரிசியின் ஞானக்களஞ்சியம்"

வேதாத்திரி மகரிசியும் தனது தத்துவங்களை கவிதை வடிவில் "ஞானக்களஞ்சியம்" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்கள்.

உரைநடையிலும் பல தத்துவக் குறிப்புகளை எளிய தமிழ் நடையில் வழங்கி உள்ளார்கள்.




உலகில் அவ்வப்போது தோன்றிய மகான்கள் பலரும் தாங்கள் உணர்ந்த உண்மைகளைக் கவிதைகளின் வாயிலாக வெளியிட்டு வந்துள்ளார்கள்.

தமிழகத்தில் தோன்றிய திருவள்ளுவர், திருமூலர், தாயுமானவர், வள்ளலார் போன்ற மகான்களும் இன்றும் உயிருள்ள கவிகளின் மூலம் மக்களுக்கு தாங்கள் சொல்ல வேண்டிய உபதேசங்களைத் தெளிவுபட விளக்கியுள்ளார்கள்.

அருள்தந்தை வேதாத்திரி மகரிசியும் ஆயிரத்துக்கு மேற்பட்ட அருட்கவிகள் மனிதகுல வாழ்விற்குத் தேவையான பல கருத்துக்களை அவ்வப்போது எளிய நடையில் இயற்றியுள்ளார்கள். அதனை் தொகுப்பதான் “ஞானக்களஞ்சியம்.”

மகரிசி தமது கவிதைகளில் குறிப்பிட்டுள்ள பல கருத்துக்கள் நாளைய சமுதாயத்தின் சிக்கல்களுக்குத் தீர்வாகவும், சமுதாயம் சீர்பெற எழுந்த வடிகாலாகவும் விளங்குவன.

ஞானக்களஞ்சியம் எவற்றைக் கூறுகின்றன? இறைவன் யார்? அவரை உணர்வது எப்படி? நிலையற்ற துன்ப வாழ்க்கையிலிருந்து - பிறப்பு இறப்புச் சுழற்சியிலிருந்து - அறியாமையிலிருந்து எப்படி விடுதலை பெறுவது?

உலகக் கடமைகளைச் செய்து கொண்டே இறைவனை உணர்ந்து ஆழ்ந்த அமைதியை எவ்வாறு பெறுவது?

இல்லறத்தில் இருந்துகொண்டே துறவு வாழ்க்கை வாழ்வது எப்படி? ஆகியவற்றை ஞானக்களஞ்சியம் கூறுகிறது.

அத்வைத பார்வையை அடிப்படையாகக் கொண்ட இந்த நெறியின் தனிச்சிறப்பு ஆன்மீகத் தத்துவங்களை விஞ்ஞான நோக்கில் விளக்குவதாகும்.

பழமையான வேதங்களும் உபநிடதங்களும் அருமையான தத்துவங்களை உள்ளடக்கியவை.

எனினும் வடமொழியிலிருந்து அந்நியப்பட்டு நிற்கும் சாதாரண மக்கள் இவற்றை அறிந்து கொள்வதற்கான வாயில்கள் அடைப்பட்டுக் கிடக்கின்றன.

மகரிசியின் தத்தவங்களின் பிழிவைப் புதிய வெளிச்சத்தில் எளிய இனிய தமிழில் தந்து விடுகிறார்.

வாழ்க்கையோடு ஒட்டியுடனிருந்து கடமைகளைக் கர்மயோகமாகச் செய்தும் ஞானம் பெறலாம் என்பதை வாழ்ந்து காட்டியும், உபதேசித்தும் வந்தார்கள்.

இந்த நெறி அனைவரும் ஏற்புடைய நெறியாகத் திகழ்வதால் "பாமர மக்களின் தத்துவஞானி" என்று மகரிசி போற்றப்படுகின்றார்.

ஞானக்களஞ்சியம் மகரிசியின் பன்முகப் பார்வைக்கு ஓர் அவணமாகத் திகழ்கிறது. பொதுவுடமை தத்துவங்களும், சமூகச் சிந்தனைகளும் இழையோடுகின்றன.

பொருளதாரம், அரசியல், கல்வி முதலிய அன்றாட நிகழ்வுகள் பற்றிய தம் அனுபவங்களை அதன் குறை நிறைகேளோடு பதிவு செய்யும் போது ஞானக்களஞ்சியத்தின் சமூக அக்கரை வெளிப்படுகிறது.

மெய்ஞ்ஞான விஞ்ஞான விளக்கங்களில் சித்தர்களின் முத்திரையை இங்கு காணலாம்.

ஞானக்களஞ்சியம் தற்கால வாழ்க்கை பற்றிய அறிவிற்கும் தெளிவிற்கும் ஒரு கலைக்களஞ்சியமாக எல்லாப் பொருளும் இதன்பால் உள என்று போற்றத்தக்க தத்துவநூலாகும்.

ஞானக்களஞ்சியத்தில் ஒரு சிறு துளியயையாவது நாம் பருக முடிந்தால் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றவர்கள் ஆவோம்.

பல சான்றோர்கள், அருளாளர்கள், கவிஞர்களை தனது ஞானக்களஞ்சியத்தில் ஒப்பாய்வு செய்துள்ளார் மகரிசி.

கணியன் புங்குன்றனார். திருவள்ளுவர். திருமூலர், தாயுமானவர். பட்டினத்தார். புத்தர், சாக்ரட்டிஸ், இயேசுநாதர், நபிகள் நாயகம், வள்ளலார் போன்ற சான்றோர்களின் தத்துவங்களை மொழி,

இனம், மத வேற்றுமையின்றி மகரிசி ஞானக்களஞ்சியத்தில் போற்றுகின்றார்.







*யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற*

*எண்ணத்தால் உயர்வடைந்த தமிழன்"*

என்னும் இடத்தில் கணியன் புங்குன்றனாரின் எண்ணக் கொடையை நினைவு கூர்கின்றார். பட இடங்களில் திருவள்ளுவரின் பெயர் சுட்டிப் போற்றும் மகரிசி,



*"துயர்தந்து உளம்மகிழும் அன்பர் கட்கும்*

*துணைசெய்ய இறையருளை இறைஞ்சு கின்றேன்"*

என்னும் இடத்தில் "இன்னா செய்தாரை ஒறுக்க" வள்ளுவ வழி பின்பற்றி ஒழுகும் நிலையை வெளிப்படுத்துகின்றார்.



"எல்லாரும் உலகெங்கும் இன்புற்று வாழந்திடுவோம்" எனும் போதும், "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கிற சீரறியச் செய்த குருவே" எனும் போதும் தாயுமானவரின் "எல்லோரும் இன்புற்றிருக்க" என்னும் எண்ணமும், "சும்மா இருக்கச் சுகம் சுகம் என்று கருதி எல்லாம் அம்மா நிரந்தரம் சொல்லவும்" எனும் பாட்டுப்பகுதியும் நம் நெஞ்சில் நிழலாடுகின்றன.

ஔவையாரின் "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்னும் பாடல் அமைப்பை ஒரு பாடலும் பாரதியாரின் "பாப்பா பாட்டை", "பாடு பாப்பா" என்னும் பாடலும் நமக்கு நினைவுட்டுகின்றன.



"*எண்ணிறந்த மதங்களுண்டு மனித ருக்கு*

*எனினும்தெய் வம்என்ப தொன்றே ஆகும்*"

என்ற ஞானக்களஞ்சிய வரிகள், **இராமகிருஷ்ணரின்** வாக்கையும் பாரதியின் ஆத்திச்சூடிக் கடவுள் வாழ்த்துப் பாடலையும் நமக்கு நினைவுட்டுகின்றன.

"தொல்லுலக மக்களெலாம் ஒன்றே" என்ற பாரதிதாசன் பாட்டுப் போக்கும், "அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக" என்ற மகரிசியின் பாட்டுப் போக்கும் ஒரே வழித்தடத்தில் பயணிப்பதை பார்க்கலாம்.

உலகப் பெரியோர்கள் உரைத்தவற்றை ஒப்பிட்டுப் பார்த்த மகரிசி, அந்த ஒப்பு நோக்கின் பயனைப் பின்வருமாறு கூறுதல் ஞானக்களஞ்சியத்தின் சிறப்பாக அமைந்துள்ளது.

**"புத்தனென்ற பெரியாரும் இயேசு நாதர்**

**பொதுநோக்கில் கவிபுனைந்த திருவள்ளுவர்**

**உத்தமராம் நபிகள்எனும் உயர்ந்த ஞானி**

**உண்மைக்கே உயிரளித்த சாக்கரட்டீஸ்**

**நித்தியமாம் நிலையறிந்த ஞானியர்கள்**

**நில உலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன**

**அத்தனையும் சேர்ந்துஒரு தொகுப்பாய்ச செய்தால்**

**அனைத்துமினைந்து ஒரே கருத்தாய் இருக்கக் காண்போம்.**

உயர்ந்தோர் சிந்தனைகள் ஒத்திலங்கும் பான்மையை மகரிசி பகர்ந்தது போலவோ, அவரின் சிந்தகைளும் முன்னோரை அடியொற்றுகின்றன.

மானுடத்தை வாழ்வாங்கு வாழவைத்துக் கொண்டிருக்கும் மகரிசியின் படைப்புப் பனுவல்களுள் சிறப்பானது "ஞானக் களஞ்சியம்" என்ற நூலாகும்.

உயர் கருத்து நலன்கள், அவற்றுக்கு ஊறு செய்யாத எளிய இனிய உவமை முதலிய அணிநலன்கள். நெஞ்சில் பதியும் யாப்பு வடிவங்கள, எளிமையான நடை நலன், ஆகியவற்றின் கலவையாய் அமைந்த மகரிசியின் பாடல்கள் கருத்துப் பெட்டகமாகவும், கலைப்படைப்பாகவும் கவின்முகங்காட்டுகின்றமையை "ஞானக்களஞ்சியம்" நமக்கு நன்குணர்த்துகின்றது.

அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்கள் இந்த நூற்றாண்டின அருளாளர்களில் முதன்மை பெற்றவர்.

அவர் சிந்தித்து வெளிப்படுத்தாத துறையேயில்லை. அவரே ஞானக்களஞ்சியமாக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

ஞானமோ, பக்தியோ, கர்மமோ என்று எந்த வழி நமதாக இருந்தாலும், எல்லோருக்கும் உத்வேகம் தரும் வழிகாட்டுதல்

அமுதமொழிகளிலும் ஞானக்களஞ்சியத்திலும் கிடைக்கிறது என்பதில் ஏதும் சந்தேகம் இல்லை.



# 8. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி:

சாக்ரட்டீஸ் வித்திட்ட பகுத்தறிவினைப் பெற்றுச் சிறப்புற்றிருக்கும் மனித இனம் விஞ்ஞானத்திலும், பொருள் துறையிலும் வியத்தகு முன்னேற்றம் கண்டிருந்தாலும், ஒவ்வொருவரும் ஏதேனும் சிக்கல்களுக்குள் தவித்துக்கொண்டுதான் வாழ்க்கையை நடத்திவருகின்றனர்.

இத்துன்பத்திலிருந்து விடுபட்டு மனித குலம் அமைதியோடும், அன்போடும், ஒற்றுமையோடும், வாழ்க்கையின் நோக்கத்தை உணர்ந்து நிறைவாக வாழ வழிமுறைகள் கண்டவர் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

சென்னையை ஆடுத்த கூடுவாஞ்சேரியில் 1911ஆம் ஆண்டு ஆகஸ்டு 14ஆம் நாள் எளிய நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தார்.

பத்து வயதாக இருக்கும்போது, மதிய வேளையில் தறியில் நெய்துகொண்டிருந்தார்.



அவரது அன்னையார் உணவு உண்ண அழைக்கும் வேளை வந்தது. ஆனால் அன்னையாரோ அவரைக் கூப்பிடாமல் சமையலறையில் அமர்ந்து அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தார்.


அன்னை கண்கலங்கி நின்றதை ஆந்தப் பிஞ்சு உள்ளத்தால் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. தனது அன்னையின் கால்களைக் கட்டிக்கொண்டு, ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டார்.

அன்னை அவரை இறுக அணைத்தபடி, “ஏன் செல்லமே நாங்கள் உன்னை தவமிருந்து பெற்றோம்.

ஆனால் இன்று உன் பசிக்குக் கூழ் கொடுக்க முடியாமல் தவிக்கும் பாவியாக இருக்கிறேனடா” என்று கூறி அழுதார். சிறுவனான வேதாத்திரியும் அழுதுவிட்டார்.

வறுமை ஏன் ஏற்படுகிறது? கடவுள் யார்? நான் யார்? உயிர் ஏன்றால் ஏன்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடைகாண வேண்டும் என்ற வேட்கை அவருக்கு எழுந்தது.


பிற்காலத்தில் இக்கேள்விகளுக்கெல்லாம் விடை கண்டு, பாமர மக்களின் தத்துவ ஞானியாக விளங்கினார் வேதாத்திரி மகரிஷி.





வேதாத்திரி மகரிஷியின் கருத்துக்கள் நமக்கு ஆதிசங்கரரை மட்டுமல்ல, ஆல்பர்ட் ஐன்ஸ்டீனையும் ஆடையாளம் காட்டுகின்றன.

சடப்பொருள்களானாலும், உயிரிகளின் பரிணாமமாக இருந்தாலும், தனது கருத்துக்களை ஆதியாகிய இறைவெளியில் விளக்க ஆரம்பித்து, அதை அறிவியலோடு தொடர்புபடுத்தி முடிப்பதால், வேதாத்திரியின் தத்துவங்கள் அறிவியல் அம்சத்துடனும்



அமைந்துள்ளன.

வரலாற்றுக் குறிப்புகள்.

1. காலம் - 1911 முதல் 2006.
2. பிறப்பு - 14.8.1911 திங்கள் காலை.
3. பிறந்த ஊர் - கூடுவாஞ்சேரி(சென்னை அருகே சிற்றூர்)
4. பெற்றோர் - சின்னம்மாள் - வரதப்பர்.
5. உடன்பிறந்தோர் - முதல் ஆறு பெண்கள், ஏழாவது ஆண், ஏழு வயதில் காலமானார். இவருக்கு அடுத்து ஒரு தம்பி.
6. இயற்பெயர் - வேதாத்திரி
7. சிறப்பு பெயர்கள் -யோகிராஜ் வேதாத்திரி மகரிசி, பாமர மக்களின் தத்துவஞானி
8. உறைந்த இடங்கள் - கூடுவாஞ்சேரி, சென்னை திருவான்மியுர். ஆழியார் (பொள்ளாச்சி)
9. பதிப்பித்த முதல் நூல் - உலக சமாதானம், 1958
10. மகரிசியின் உலக சமுதாய சேவா சங்க கிளைகள் - இந்தியாவிலும், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, மெக்ஸிகோ, சிங்கப்புர் மற்றும் ஐரோப்பிய, அரபுநாடுகள்.

11. நிறுவிய நிலையங்கள் - உலக சமுதாய சேவா சங்கம், திருவானமியுர், சென்னை. உலக சமுதாய சேவா சங்கம் (ஆழியார்) (பொள்ளாச்சி)
12. திட்டங்கள் - உலக அமைதி, ஓருலகக் கூட்டாட்சி, அனபு-சமத்துவம்-சகோதரத்துவம்-சமநீதி-மகளிர் மேன்மை.
13. ஆழியாரில் தொடரும் அருட்பணிகள்

    1. அறிவுத் திருக்கோயில் - மகரிசி உறைவிடத்தில் தியானமண்டபம்.
    2. மகரசியார் மணி மண்டபம் (சமாதி)
    3. அருள்நெறி மண்டபம், பயிற்சி வகுப்புகள், பட்டமளிப்பு விழாக்கள் நடத்துதல்.
    4. ஆயூர்வேத, சித்தா-மருத்துவமனை-மருந்தகம்-மருத்துவ சேவை.
    5. ஆன்மீகக்கல்வி, பல்கலைக்கழகங்கள் சார்பில், யோகமும் மனித மாண்பும், சான்றுகள், பட்டயம், இளங்கலை, முதகலை, ஆய்வு ஆகிய ஆன்மீகக் கல்வி அளித்தல் - தொடர்தல்
    6. தங்கம் விடுதிகளுடன் யோகாசனப்பயிற்சி, உடறபயிற்சி வசதிகளும் உள்ளன.
    7. ஆராய்ச்சி பயிற்சி மையம்

## இறைநிலையே ஆதாரம்

கடல் அலை எழுவதைப் பார்க்கிறோம். அலை என்பது கடல் நீரின் ஆசைவு, அலை என்னும் இயக்க நிகழ்ச்சியை நிறுத்திவிட்டால், மீதம் இருப்பது நீர் மட்டுமே. நீர் என்பதே மூலம். அதுதான் பிறப்பு நிலை. அலை என்பது தோற்றம். அது கடல் என்ற மூலத்தின் சிறப்பு நிலை.

இதைப் போலவே இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துத் தோற்றங்களுக்கும் உள்ள இயக்கம் என்னும் சிறப்பு நிலையைக் கழித்துவிட்டால் எஞ்சி நிற்பது இறைநிலையே.

இறைநிலையே எல்லாப் பொருட்களுக்கும் உட்பொருளாக உள்ளது என்பதை உணர்த்துகிறார் வேதாத்திரி மகரிஷி.

நமது மனதையும் அறிவையும் சேர்த்து நோக்கினால் மனம் சிறப்பு நிலை. அறிவோ உட்பொருள். உட்பொருளாக உள்ள அறிவு என்பது இறைநிலையைத் தவிர வேறொன்றுமில்லை.

மனிதப் பிறவியின் நோக்கமே மனிதன் அறிவில் முழுமை ஆடைய வேண்டும் என்பதுதான். அதுவே இறைநிலை உணர்தல் என்கிறார்.

அளவிட முடியாத எடை கொண்ட சூரியன் முதலான கோள்கள் அனைத்தும் சுத்த வெளியி லேயே இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இது போன்று பல லட்சம் சூரியக் குடும்பங்கள் சுத்த வெளியில்இயங்கிக்கொண்டிருந்தும், அவைகளைத் தனக்குள் தாங்கி, ஒரே சீரான ஒழுங்குடன் மிதக்க விட்டுக்கொண்டிருக்கும் சுத்த வெளியாகிய இறையாற்றலின் சக்தி எத்தகையதாக இருக்கும்?

பேரியக்க மண்டலத்தில் நிறைந்திருக்கும் சுத்த வெளியின்ஆற்றலே காந்த ஆற்றலாகமாற்றம் பெற்று எங்கும், எல்லாப் பொருட்களிலும் ஊடுருவி நிறைந்திருக்கிறது. இதையே தெய்வீக ஆற்றல் என்றும் அழைக் கிறோம்.

வானம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐந்து பௌதிகப் பிரிவுகளாகி உயிரற்ற பொருட்களாக இறைநிலையே தன்மாற்றம் பெற்றது. உயிரினங்கள் தோன்றியது. முடிவில் மனிதன் வந்தான்.

எது இறைவன் என்ற கேள்விக்கு சுத்த வெளியே இறைவன் என்கிறார் வேதாத்திரி மகரிஷி. சுத்த வெளியான இறைவெளியே தன்மாற்றம் பெற்றுத் தோற்றப் பொருள்களாக மாறியுள்ளது.


எனவே இறைவன் ஒன்றுதான் என்று இறைநிலையைப் பகுத்துணரச் செய்கிறார்.

இந்த உலகில் தோன்றிய மகான்கள் அனை வரும் ஏக இறைவனைத்தான் தாங்கள் உணர்ந்த பெயர்களால் தாயென்றும், தந்தையென்றும், பூரணமென்றும், அநாதியென்றும் அழைத்தனர்.

ஆனால் ஒவ்வொரு பெயரும் ஒவ்வொருவித இறைத்தன்மை என்று நினைக்கத் துவங்கியபோதுதான் இறைத் தத்துவமே தடம் புரண்டது.

மனிதன், ஏக இறைநிலைக்குப் பல்வேறு உருவங்களை வடித்து, அவற்றிற்குப் பல்வேறு பெயரிட்டு அழைப்பதால் இறைவனின் பெயரால் மக்களிடையே பகையினையும் பிரிவினையையும் ஏற்படுத்து கிறான்.

நாம் வைத்த பெயர்களுக்கும் உருவங் களுக்கும் அப்பாற்பட்டதுதான் ஏக இறை ஆற்றல். உருவம் என்ற சிறப்பு நிலையைக் கடந்து அவைகளின் பிறப்பு நிலையான மூலத்தை உணர வேண்டும். அதுவே ஞானம் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.





இந்திய தத்துவங்களை எல்லாம் உணர்ந்து வேதாத்திரியார் அந்த தத்துவங்களில் உள்ள சிறப்புகளையும் முக்கியத்துவத்தையும் எளிமையாக வடிவமைத்தார்.



பழைய மெய்ஞ்ஞானத்திற்கும் இன்றைய விஞ்ஞானத்திற்கும் இணைப்பு பாலமாக வேதாத்திரி மகரிசி திகழ்கிறார்.

மேற்கு நாட்டுத் தத்துவங்களுக்கும் கிழக்கு நாட்டுத் தத்துவங்களுக்கும் இணைப்ப பாலமாக விளங்குகிறார்.



இந்திய தத்துவத்தை மேலைநாடுகளுக்கு விவோகானந்தர் கொண்டு சென்றதை போல் தமது வாழ்நாளில் 22 தடவை உலகை வலம் வந்து நமது தத்துவங்களை பெருமையை சிறப்பை உலகறியச் செய்தார்.



# 9. வேதங்கள்.

வேதம் என்பதற்கு அறிதல் என்று பொருள். வேதம் “வித்” என்ற வடமொழிச் சொல்லடியிலிருந்து தோன்றியது. “வித்” என்ற வடமொழிச் சொல்லுக்கு அறிதல் என்று பொருள்.

**வேதங்கள்** என்பவை பொதுவாக இன்று இந்து சமயம் என்று அறியப்படும் சமயத்திலுள்ள அடிப்படையான நூல்களின் தொகுப்பு எனலாம். காலத்தால் முற்பட்டதும் ஆகும்.

வேதம் என்னும் சொல் பிற மதத்தாரும் தங்கள் சமயத்தின் முதன்மையான நூல்களுக்குப் பயன்படுத்துகின்றனர்.



கி.மு 5000 ஆண்டுகளுக்கு முன்னரும் இந்துக்களின் வேதங்கள் இன்றிருப்பது போலவே இருந்தது என்று பண்டித பால கங்காதர திலகர் நிரூபித்துள்ளதாக சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார்.

## வேதங்களின் வகைகள்

இந்து சமயத்துக்கு அடிப்படையானவை நான்கு வேதங்கள் ஆகும். இவை தமிழில் *நான்மறை* என்றும் கூறப்படும். என்றாலும் தமிழில் *நான்மறை* என்பன வேறானவை என்போரும் உள்ளனர் (இவை அறம், பொருள், இன்பம், வீடு என்பர்). சமசுக்கிருத வேதங்கள்:

- ரிக் வேதம் -
- யசுர் வேதம்

- சாம வேதம்
- அதர்வண வேதம்

என்பனவாகும். வேதங்கள் நான்கு என வகுத்தவர் வியாசர். வேதங்களை “சுருதி, மறை” எனவும் கூறுவர்.

## வேதங்களின் பெருமை.

இந்திய தத்துவ ஞானமனைத்துக்கம், சமய அறிவு அனைத்துக்கும் மூலம் வேதமே ஆகும்.

பிரபஞ்சம், உலகம், ஆன்மா, கடவுள் ஆகியவைப்பற்றி முதன் முதல் சிந்தித்த மனிதன் என்னென்ன கருத்துகளைக் கொண்டிருந்தான் என்பதை அறிய வேண்டுமாயினும் நாம் வேதங்களைத்தான் நாட வேண்டும்.

வேத காலத்துக்கு முற்பட்ட காலத்தில் ஆக்கப்பட்ட வேறு நூல் எதுவும் இன்று கிடையாது.

ஆகவே. இந்திய மக்களை மட்டுமன்றி மானுடம் முழுவதையுமே எடுத்துக் கொண்டல்கூட, மனித வர்க்கத்தின் முதல் சிந்தனைகளைக் கூறும் முதல் நூல் என்ற சிறப்பு வேதங்களுக்கே உரியது என்று அறுதியிட்டுக் கூறலாம்.

வேத காலத்திலும் அதற்கு முந்தைய காலத்திலும் இயற்றப்பட்ட இலக்கியம் அனைத்தும் அழிந்து போக, வேதங்கள் மட்டுமே அன்று போல் இன்றும் நிலைத்து நிற்கின்றன. இதுவே வேதத்தின் தனிச் சிறப்பாகும்.



வேதங்களின் காலம் பற்றி அதன் தொன்மைப் பற்றி பல கருத்துக்கள் நிலவினாலும், டாக்டர் ராதாகிருஷ்ணன் கருத்து ஏற்புடையதாக இருப்பதை அறியலாம்.

- வேதங்களின் காலம் கிறிஸ்துக்கு முன் 6000 ஆண்டு என்பதை யாரும் ஆட்சேபித்தாலும் கிறிஸ்துவுக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பே-அதாவது, இன்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பே-அவை ஆக்கபட்டுவிட்டன என்பதை யாரும் ஆடசேபிக்க மாட்டார்கள்.

வேதங்கள் யாவும் குறிப்பிட்ட ஒருவரால், குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஆக்கபட்பட்டவை அல்ல என்று உறுதியாக தெரிகிறது.

## வேதங்களின் நான்கு பாகங்கள்

வேதங்களுக்கு நான்கு பாகங்கள் உண்டு. அவையானவை:

1. சம்ஹிதை - தொகுப்பு; “மந்திரங்கள்” (கடவுளால் தரப்பட்டவையாக கருதப்படும் பாடல்கள்)
2. பிரமாணம் எனப்படும் உரை அல்லது சடங்கு வழிமுறைகள்
3. ஆரண்யகம் எனப்படும் காட்டில் வாழும் முனிவர்களின் உரைகள்
4. உபநிடதங்கள் (வேதங்களுக்கான தத்துவ உரைகள்/ விளக்கங்கள்/ எதிர்ப்புக்கள்) ; இவை வேதத்தின் முடிவில் வருவன வேத அந்தம் (முடிவு) என்னும் பொருளில் வேதாந்தம் எனபப்டும்.

## வரலாறு

வேதங்களில் பல்வேறு கடவுள்களைப் புகழ்ந்து இந்த பாடல்கள் புனையப்பட்டிருக்கின்றன.

சடங்குகளின் போது பின்பற்றப்படுவதற்காக பல்வேறு விவரங்கள் யஜூர் வேதத்தில் குறிப்பிடப்படுகின்றன.


சடங்குகளின் போது இசைப்பதற்காகவே சாம வேதம் இயற்றப்பட்டதாகும். சாம வேதத்திலிருந்தே இந்திய இசை தோற்றியதாகவும் கூறப்படுகின்றது.

அதர்வண வேதமும் சடங்குகளைப் பற்றியே குறிப்பது ஆகும்.

இவற்றுள் காலத்தால் முற்பட்டது ரிக் வேதமாகும். இது இந்தியாவில், கி.மு. 1500விற்கு முன் உருவாகியிருக்கக்கூடுமெனக் கருதப்படுகின்றது.

வேதங்கள் வேத மொழி என்னும் மொழியில் ஆக்கப்பட்டுளது. இம்மொழி சமசுக்கிருத மொழியின் முன்னோடி. வேதங்கள் இன்றளவும் வாய்வழியாகவே வழங்கிவந்துள்ளன.

ஏறத்தாழ கி.மு 300 ஆம் ஆண்டளவில் எழுத்துவடிவம் பெற்றிருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது என்றாலும் வாய்வழியாகவே தலைமுறை தலைமுறையாக நிலைப்பெற்று வந்துள்ளது.




விசய நகரப் பேரரசை ஆண்ட முதலாம் ஹரிஹரர் காலத்தில் வாழ்ந்த சாயணாச்சாரியர் (सायण) என்னும் 14 ஆவது நூற்றாண்டு காலத்து வேத அறிஞர், வேதத்தின் பொருளை

விளக்கி எழுதிய, வேதார்த்த பிரகாசா (Vedartha Prakasha) என்னும் நூலே முதன்முதலாக எழுத்து வடிவில் கிடைக்கும் வேதங்களாகும்.

இதன் சமய முக்கியத்துவம் தவிர, உலகின் மிகத் தொன்மையான நூல்களிலொன்று என்ற வகையிலும் இதற்கு முக்கியத்துவம் உண்டு.

வழிபாடு, சமயக் கிரியைகள் முதலியவற்றை சில இடங்களில் உரைநடையிலும், மற்ற இடங்களில் ரிக் என்று சொல்லப்படும் வேதகால செய்யுள்நடையிலும் எடுத்துக் கூறும் வேதங்கள், அக்கால சமூக வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

கி.பி. 14 ஆவது நூறாண்டில் வாழ்ந்த சாயனர் (சாயனாச்சார்யர்) வேதத்திற்கு விரிவான விளக்கம் எழுதியுள்ளார்.

ரிக்கு வேதத்தில் 1028 சுலோகங்கள் உள்ளன (10522 மந்திர வரிகள்), மற்றும் அதற்குரிய பிராமணிய சடங்குகள், காடுவாழ் முனி உரை, உபநிடத தத்துவ உரை ஆகியவை உண்டு.

வெள்ளை (சுக்ல) யசுர் வேதத்திற்கு எழுதப்பட்ட சதபத பிராம்மணம் என்னும் உரைநூல் தான் பழமையானதும், மிக முக்கியமானதும் ஆகும். இந்த 100 வழி என்னும் பொருள் படும் சதபத பிராம்மணம் சுமார் கி.மு 700-800 வாக்கில் எழுதப்படிருக்கலாம் என கருதப்படுகின்றது.

முதல் இரண்டு பாகங்களும் “கர்ம கண்டங்களாகவும்”, அதாவது செயலுக்கு (ஓதுவதுக்கும், சடங்குக்கும்) அல்லது அனுபவத்துக்குரியவையாகவும், கடைசி இரண்டும் மெய்ப்பொருள் உணர்வதற்குத் துணையான வேதாந்த பாகங்களாகவும் வகைப்படுத்தப்படுவதுண்டு.

வேதாந்தம் என்றால் வேதத்தின் இறுதியில் வந்த கடைசி பாகம் என பொருள்படும். இதனை ஞான காண்டம் என்பர்.

நான்கு பாகங்களும் ஒரு நபராலோ அல்லது ஒரே குழுவாலோ அல்லது ஒரே காலத்திலோ எழுதப்படவில்லை.

குறிப்பாக உபநிடதங்கள் முதல் இரண்டு பாகங்களுக்கும் பல எதிர்ப்புக்களையும், மறுப்புக்களையும் தெரிவிக்கின்றது.

## முந்தைய வேதம்

## ரிக் வேதம்

இது முந்தைய வேதகாலம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் காலம் கி.மு 2200 முதல் கி.மு 1600 வரை ஆகும். ரிக் வேதத்தில் 10600 பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

ரிக் வேத காலத்தில் ஆரியர்கள் சிந்து சமவெளி பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர். இப்பாடல்கள் ரிக் வேத மக்களின் வாழ்க்கைமுறை, அரசியல், பழக்கங்கள் ஆகியவற்றை தெளிவாக கூறுகின்றது.

மேய்ச்சலே ரிக் வேதகால மக்களின் முக்கிய தொழிலாகும். ரிக் வேத மக்கள் தச்சு வேலைகளும் செய்துள்ளனர். மண்வேலைகள் செய்வது, நூல் நூற்றல் , பருத்தி கம்பளி உடைகள் தயாரிப்பது ஆகியன ரிக்வேத கால மக்களின் உப தொழிலாக இருந்துவந்துள்ளன.

மேலும் வேதங்கள் மக்களின் கடவுள்களைப் பற்றியும் அதிக தகவல்கள் தருகின்றன. ரிக் வேத மக்கள் இந்திரனையும், அக்னியையும் முதற்கடவுளாக வழிபட்டுவந்துள்ளனர்.

### பிந்தைய வேதம்

பிந்தைய வேத காலங்களில் ஆரியர்கள் கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளனர். இக்குறிப்புகளை பிந்தைய வேதங்கள் குறிப்பிடுகின்றன. பிந்தைய வேத காலங்களில் அவர்களின் நம்பிக்கை, பழக்கவழக்கங்களும் மாற்றம் பெற்றுள்ளன. முந்தைய வேதகாலங்களில் கடவுளான இயற்கையை விட சிவன், பிரம்மன், விஷ்ணு ஆகியோரை வழிபட்டு வந்துள்ளனர்.

## யசுர் வேதம்

இது பிந்தைய வேதங்களில் ஒன்று ஆகும். இதன் காலம் கி.மு 1400 முதல் கி.மு 1000 வரை ஆகும்.

## சாம வேதம்

இதுவும் பிந்தைய வேதங்களில் ஒன்று ஆகும்.சடங்குகளின் போது இசைப்பதற்காகவே சாம வேதம் இயற்றப்பட்டதாகும். சாம வேதத்திலிருந்தே இந்திய இசை தோற்றியதாகவும் கூறப்படுகின்றது.

## அதர்வண வேதம்

அதர்வண வேதம் இறுதியான வேதமாகும். இதனை நான்காவது வேதம் என்றும் கூறுவர். அதர்வண வேதமும் சடங்குகளைப் பற்றியே குறிப்பது ஆகும்.-



வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியதே" "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்றார் மாணிக்கவாசகர்.

வேதம், ஆகமம் இரண்டு இறைவன் நூல்கள். அவை ரிஷிகள் வாக்கில் தவழ்ந்து வளர்கின்றன. வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பான

சாதன நூல்

வேதமும் ஆகமமும் உள்ளறிவுச் சுரங்கமாம். பாரத சமுதாயப் பண்பாட்டின் உயிர்த்துடிப்புகளே இரண்டும்.

ஒரே மின்சாரம், விளக்கில் ஒளி, விசிறியில் காற்று, அடுப்பில் வெம்மை, குளிர்ப் பெட்டியில் தண்மை, ரேடியோவில் ஒலி, தொலைக்காட்சியில் ஒளி ஒலியாக இயங்குகிறது.

வேத மந்திரங்கள் பரநாதப் பண்ணொலி. உள்ளான்மாவின் யாழிசை. ஓங்காரக் குழலிசை. வேதவாக்குகள் தெய்வக் கனற் பொறிகள். அவை, மனித வாழ்வு தெய்வத்தன்மை பெற வழிகாட்டி நடத்தும் மெய்யறிவுச் சுடர்.

புத்தர் முதல் காந்தி வரையில், ஆதிசங்கரர் முதல் அரவிந்தர் வரையில், பதஞ்சலி முதல் பரமஹம்சர் வரையில், வியாசர் முதல் வேதாத்திரி மகரிசி வரையில் அருட் பெரியார் உள்ளமெல்லாம் வேதத்தை பலவாறாக ஆய்வு செய்துள்ளார்கள்.

-வேதத்வேதத்தை வியாச ர் நான்கு நூலாக்கினார். அவை ரிக், யஜிர், சாம, அதர்வணம்.

| வேதம் | | கிளைகள் |
|---|---|---|
| ரிக் | வேதம் | 21 |
| யஜிர் | வேதம் | 109 |
| சாம | வேதம் | 1000 |
| அதர்வண | வேதம | 50 |

வேதங்களின் சாரம் என்ன?

1. ரிக் வேதம் கூறுவது - பிரக்ஞானம் பிரம்மம்(அறிவேதெய்வம்.)
2.யஜிர் வேதம் - அகம் பிரம்மாஸ்மி (நானே தெய்வம்)
3. சாம வேதம் - தத்துவ மஸி (அதுவே நீயாக இருக்கிறாய்.)
4. அதர்வண வேதம்- அயமாத்மா பரபிரம்மம் (இந்த ஆத்மா பரபிரம்மம்)

இந்த நான்கு வேதங்களின் சாரம்தான் வேதாத்திரியம் கூறும் பிரம்மஞானம். (வேதங்கள் கூறும் பிரம்மஞானம்.)

• விஞ்ஞானம் வேறு மெய்ஞ்ஞானம் வேறு அல்ல. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் எதை நாடிச் செல்கின்றன என்றால் இறைநிலை என்ற ஆதிநிலையை உண்மைநிலையை நோக்கிச் செல்கின்றன.

மெய்ப்பொருளை நாடி தேடிக் கொண்டேபோவது மெய்ஞ்ஞானம். விண்ணை அடிப்படைகாகக் கொண்டு மேலும் மேலும் தேடிக்கொண்டே போவது விஞ்ஞானம். ஆனால் இவ்விரண்டும் சேரும் இடம் பிரம்மஞானம்.

• தன்னையறிந்தால்தான் சரியாக வாழ முடியும். தன்னை அறிவதுதான் பிரம்மஞானம். முதலில் மனமாக இருக்கிறோம். மனதிற்கு அடித்தளத்தில் போகும்போதோ, அறிவாக இருக்கிறோம். அந்த அறிவை யார் என்று பார்க்கிறபோது இறைவானாக இருக்கிறோம். அப்போது அடுத்தவன் யார்?


• இறைநிலை என்பது சுத்தவெளிதான். அதற்கான ஆதாரங்களை எல்லாம் உலகுக்கு விளக்கி, முழுமையாக இறை தத்துவத்தை உணர்ந்து கொள்வதற்கு நாம் பிரம்மஞானம் என்ற பயிற்சியைக் கொடுத்து வருகிறோம்.

மானுடத்திற்கு தேவையான வழிமுறைகளை வியாசர் தொடங்கி வைத்தார். வேதாத்திரி முடித்து வைத்தார்.

இனிமேல் மகான்கள் பிறக்க வேண்டியதில்லை. வேதாத்திரியத்தில் எல்லாமே அருளப்பட்டுள்ளது.



# 10. வேதாத்திரி மகரிசி பார்வையில் வேதங்கள்.

இன்று மேற்கில் வளர்ந்துள்ள மேனாட்டுத் தத்துவ ஞானமனைத்தும் கிரேக்க ஞானியான பிளேட்டோவின் சில தத்துவங்களை விளக்க எழுந்தவைகளே என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

அதைப் போலவே கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்திய தத்துவ ஞானத் துறையிலே ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான விருத்தி அனைத்தும் வேதங்களிலே காணப்படும் சில வாக்கியங்களுக்கு விளக்கமும், அந்த விளக்கத்துக்க விளக்கமுமாக எழுந்தவையே எனக் கூறலாம்.



www.alamy.com - AC8BP3

“அறிவோடு ஐம்புலன்கள்தமைப் பண்படுத்தி

அனைவருக்கும் நலம் விளைக்கும் வேத நூல்கள்

சிறியவர்கள் பெரியவர்கள் ஆண்கள் பெண்கள்

செல்வந்தர் ஏழைஎனும் எல்லோர்க்கும் நல்
நெறியுணர்த்தும் போதனைகள் என்று கண்டோம்.
குறியோன்றே கொண்டுளது கூர்ந்தாராய்ந்தால்
கொள்கை எலாம் மனிதஇனப் பண்பாடாகும்."

- வேதாத்திரி மகரிசி.

## வேதத்தின் முடிவு.

"வேதத்தின் உட்பொருளையறிய என்றால்,
விவாதத்தால் முடியாது. அறிவை ஒன்றி,
பேதமாய்க் கற்பனைத் தோற்றங்கள்
பிறக்குமிடம் கண்டு நிற்க, வேதம் என்ற
போதனைகளில் பொதிந்த கருத்து யாவும்
புவுலக மாந்தர்களைப் பண்படுத்தி,
நாதத்தின் மூலமென்ற மௌனம் காட்டி,
நான்யார்? என்றறிய வைக்கும் மார்க்கமாகும்."

- வேதாத்திரி மகரிசி.

# வேதம்.

ஓதிக் கொண்டிருப்பதற்காகவே வேதம் தோற்றுவிக்கப்படவில்லை. அதன் உட்கருத்தை உணர்ந்தொழுகுவதற்காகவே வகுக்கப்பட்டது.



ஓதிக்கொண்டேயிருக்கும் வரையில் உணர்ந்து கொள்ளவில்லை என்பதும், உணர்ந்து கொண்ட பின் ஓத வேண்டியதில்லை என்பதும் தெளிவான விளக்கமாகும்.

இதனால், வேதம் ஓதாதவர்கள் எல்லோருமே வேதத்தின் பொருள் உணராதவர்கள் என்று அர்த்தமில்லை.

ஓதாமல் உணர்ந்தோர்களுமுண்டு, ஓதி உணர்ந்தோர்களுமுண்டு. ஓதியும் உணராதவர்களுமுண்டு.

பிறர் காதுக்கும், கருத்துக்கும் , எட்டச் செய்ய வேண்டும் என்ற பெரும் நோக்கத்துடன் வேதத்தின் பொருளுணர்ந்து அதை ஓதினால், அவ்விடத்தில் அச்செலைச் சிறந்த செயலாகவே கொள்ள வேண்டும்.

- வேதாத்திரி மகரிசி




# 11. வேதவாக்கியங்களில்

# வேதாத்திரி மகரிசியின் பிரம்மஞானம்.

1.தத்துவமசி 2. அகம்பிரம்மாஸ்மி 3. அயனாம்சம் பிரம்மம். 4. பிரக் ஞானம் பிரம்மம் ஆகிய வேதவாக்கியங்கள் என்னும் மகாவாக்கியங்கள் நான்கும் பிரம்ம ஞானத்தை நான்கு வெவ்வேறு கோணங்களில் விளக்க வந்தவை.

அவற்றின் உட்கருத்தை தெளிவாகவும் இன்றைய அறிவியல் காலத்திற்கேற்ற வாறும் மகரிசி விளக்குகிறார்கள.

## 1. நான் யார்? தத்துவம் அசி.

எந்த ஒரு அகன்ற எல்லையிலா அருட்பேராற்றல் குறுகிய எல்லையில் கட்டுண்டு மயக்க நிலையில் வாழும் மனித மனத்திற்கு சுத்த வெறியாக ஏதுமற்றதாக விளங்குகிறதோ அதுவே தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் தெய்வநிலை (இறைநிலை) ஆகும்.

இத்தகைய எக்காலத்தும், எவ்விடத்திலும் நீக்கமற நிறைந்தும், தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலாய், தனக்குள்ளாகத் தழும்பேறி முகிழ்ந்த சிறு மடிப்பே தனது சூழந்தழுத்தத்தால் இடைவிடாமல் தொடர்ந்து விரைவாகச் சுழலும் நுண்ணியக்க மூலக்கூறுதான் பரமாணு எனும் விண்ணாகும்.

இத்தனித்துகள்கள் நிறைந்த வெளியே விண்வெளி. விண்துகளின் கூட்டு அடர்த்தி நிலைக்கேற்ப, காற்று, அழுத்தக் காற்று (வெப்பம்), நீர், கெட்டிப் பொருள் என மொத்தம் ஐந்து களங்களாக இயக்க மண்டலமாகிய பேரியக்க மண்டலத்தில் ஒன்றோடு மற்றதாகக்

கலந்து இயங்கிக் கொண்டிருக்கிறன. இதுவே, பேரியக்க மண்டலம் எனும் இயக்க களம்.

1. விண்துகள்கள் கூடிய ஒரு கூட்டமைப்பே ஒரு சீவ இனத்தின் பருவுடல்.
2. பருவுடலுக்குள் தனித்தனியே விரைவாகச் சுழன்ற கொண்டிருக்கும் விண் வெளிதான் சீவ இனத்தின் சூக்கும உடல் (Astral Body ). இது உயிர் என்றும் வழங்கப்படுகிறது.
3. உயிர் எனப்படும் விண்துகள்களின் சுழற்சி விரைவானது அதைச் சுற்றியுள்ள இருப்பு நிலையான இறை வெளியில் உரசும் போது எழும் அலைகளின் தொகுப்பே காந்தமாகும். உயிரின் உடலுக்குள் உற்பத்தியாகி விரைவாக உடல்முழுதும் சுழன்றியங்கும் காந்த ஆற்றலே அழுத்தம், ஒளி, ஒலி, சுவை, மணம், மனம் என ஆறுவகையாக இயங்கிக் கொண்டிருக்கிறன்றது. இவ்வளவுக்கும் மூலமான ஆதிநிலையான புரணம், விரைவு, அறிவு எனும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாத ஒன்றிணைப்புத் தன்மையுள்ள அருட்பேராற்றலே நீயாக இருக்கிறாய். அதாவது பரம்பொருளான தெய்வமே நீயாக இருக்கிறாய் என்ற கருத்தாகும். இதனை விள்கும் சூத்தரமே “தத்துவம் அசி” எனும் வார்த்தை. நான் யார் எனும் சிந்தனையில் எழும் உயர்ந்த வினாவுக்கு இது பொருத்தமான விடையாகும்.

## 4. எனது உளமெனும் ஆன்மா யார்? அகம் பிரம்மாஸ்மி.

அருட்பேராற்றலான இறைநிலையே தனது இருப்பு நிலையில் புரணம், விரைவு. அறிவு எனும் முத்தன்மையைக் கொண்டு அணு முதல் பஞ்ச புதங்கள் அண்டங்கள் மற்றும் ஓரறிவு முதல் ஆறறிவு முதலான உயிரினங்களான தொடர் வரிசையில் மனிதனாக வந்த உனக்கு உள்ளாகப் பருவுடல், நுண்ணுடல், காந்தக்களம் என்பனவாக இருலக்கும் உண்மையினை நினைவுகொள்.

காந்த ஆற்றல் என்பது இறைநிலையின் தன்னிறுக்கச் சூழ்நதழுத்தும் பேராற்றலும் அதிலிருந்து எழுந்த சுழலையாகிய விண்ணின் சுழற்சியால் எழுந்த விரிவலையும் கூடிய வியத்தக மறைபோருளேயாகும்.

இந்தக் காந்த ஆற்றல் பரு உடலில் விரைவாகச் கூழலும் போது அதற்கு ஏற்படும் மையப்புள்ளி உடலின் மையப்பகுதியில் அமைய அதுவே கருமையம் ஆகும்.

இக்கருமையத்தின் ஈர்ப்பு ஆற்றலலால் உடலில் இயங்கும் விண்வெளி ஆற்றலான சூக்கும உடலுக்கும் இம்மையமே இயக்க மையமாகிறது.

இம்மையமே பரு உடலில் ஊறும் ஆண்-பெண் வித்துக் குழம்பான விந்து-நாதம் இரண்டிற்கும் இயக்க மையமாக (இருப்பு மையமாக) அமைகின்றது.

இந்தக் கருமையத்தின் முதற் பொருளான தன்னிறுக்க சூழ்ந்தழுத்தும் பேராற்றலின் ஈர்ப்பு ஆற்றல் உடலின் இயக்கத்தால் ஏற்படும் காந்த அலையின் தன்மையினையும்,

உடலுக்கு வெளியே நடைபெறும் வான்காந்த ஆற்றலின் தன்மாற்றங்களான புலன்கள் வழியே உணரப்பெறும் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் ஆகிய அலைகளையும் ஈர்த்துச் சுருக்கி இருப்பாக வைத்துக் கொண்டு,

மன அலையின் சுழல் தகுதிக்கேற்ப அப்பதிவுகளை எண்ணமாகவும் செயலார்வமாகவும், இன்ப துன்ப உணர்வுகளாகவும் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றது.

இந்தக் கருமையமே சீவன்களிடம் ஆன்மா எனப்படுகின்றது. கருமையத்தில் அமையும் பதிவுகளைக் கொண்டே ஆன்மாவின் அறிவாட்சித்தரம் அமைகின்றது.

சீவனிடம் அமைந்தியங்கும் வியத்தகு புதினப் பொருளான கருமையமே ஆன்மா என்றும் அகம் என்றும் உட்பொருள் என்றும் வழங்கப்படுகின்றது.

இக்கருமையமானது இறைநிலையைத் தொடக்கமாகப் பெற்று அதன் பரிணாமத் தொடரில் ஏற்பட்ட இயக்க அலைகளுடைய தன்மைகள் அனைத்தையும் சுருக்கிப் பதிவாகக் கொண்டு காலத்தாலும் இடத்தாலும் பொருளாலும் அழிந்து போகாத ஒரு தெய்வீகத் தொடரியக்கமாகும்.

கருமையமே உயிரனங்களின் பெருக்கத்திற்கும் தரப்பிரிவுகளுக்கம், பிறவித் தொடருக்கும் காரணமாகும்.

இந்தக் கருமையமானது இறைநிலையின் பேராற்றல்கள் அனைத்தையும் இருப்பாகக் கொண்ட சரித்திரப் பெட்டியாகும்.

இந்த உண்மையை உணர்த்த ஞானிகள் கூறும் வார்த்தைகள்தான் அகப்பொருளாகவுள்ள ஆன்மாவே இறைநிலைதான் என்பதாகும். இதுவே அகம் பிரம்மாஸ்மி என்ற சூத்திரத்தால் விளக்கப்டுகிறது.

5. இத்தனை பெரிய பேரியக்க மண்டலம் பரிணாமமடைந்திருப்பது அயானம்சம் பிரம்மம்.,

அருட்பேராற்றலான இறைவெளி தனது முழுமைத் தன்மையான புரண நிலையிலிருந்து விரைவு அறிவு இரண்டாலும் பரிணாமத்தில் படிப்படியாக உயர்ந்து கொண்டே இருக்கிறது.

விண்துகள்கள், பஞ்சபூதங்கள். அண்டங்கள், உயிரினங்கள் என்ற வரிசையிலான இந்த உணர்மாற்றச் சிறப்புத்தான் அயனம் எனப்படும்.

இவ்வாறு பரிணாமமடையும் எல்லாத் தோற்றங்களுக்கும் மூலப்பொருளாக உள்ளது.

இறைவெளி எனும் தெய்வ நிலைதான் என்பதை விளக்கும் ஒரு வார்த்ததான் அயனாம்சம் பிரம்மம்.
பிரபஞ்சப் பரிணாமத்தில் விளையும் ஒரு அங்கமாக இருப்பதை நினைவுபடுத்துகின்றது இந்தச் சூத்திரம்.

இவ்வளவு பெரிய பேரியக்க மண்டலத்தையும் அதிலுள்ள பொருட்கள் விளைவுகள் அனைத்தும் உணர்ந்து ஒழுங்காற்றலாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் எல்லாம் உணரும் அறிவு எது?

## பிரக்ஞானம் பிரம்மம்

இருப்பு நிலையாக இருந்த அருட்பேராற்றல் எந்த ஓர் எல்லாம் அறியும் தன்மையால் காலத்தைக் கடந்து வெவ்வேறு உருவங்களாகவும் இயக்கங்களாகவும் விளைவுகளாகவும் இன்றுவரை வந்து கொண்டிருப்பதற்கு இயக்க ஒழுங்கு என்றும் அறிவு என்றும் நெறி தவறா விழிப்பு நிலையாக (Awareness )

அந்தந்தப்பொருளுக்கும் இயக்கத்திற்கும் ஏற்ற அறிவாக மனமாக இருக்கிறதோ அந்த அகன்ற விரிந்த பேராற்றலே தெய்வம் ஆகும்.

அந்த முற்றறிவின் ( Consciousness ) பகுதியாக மனமென்னும் காந்த அலை இயக்கமாக இருக்கிறாய் நீயே.

மனிதனே!

- தன்னிறுக்கச் சூழந்து அழுத்தும் பேராற்றலாகவும்,
- எல்லா இயக்கங்களையும் அனுபவங்களையும், ஒன்றுவிடாமல் பதிவு செய்து இருப்பாக எல்லா உயிரினங்களின் கருமைய ஆற்றலான ஆன்மாவாகவும்,
- அணுமுதல் பஞ்சபபூதம், அண்டங்கள், உயிர்கள் இவைகளாகவும்,
- பரிணாமச் சிறப்பில் சிறப்புற்று வரும் பிரபஞ்சமாகவும்,
- பிரபஞ்சத்தில் எப்பெருளிலும் எந்த இடத்திலும், எந்தக் காலத்திலும் மயங்காத விழிப்பு நிலையான நெறி தவறா இயக்க ஒழுங்கான அறிவுச்சுடராகவும்

இருப்பதுதான் அருட்பேராற்றல் என நாம் அழைத்துவரும் இறைநிலை என்னும் பிரம்மம்.



அதுவே நீயுமாக, உன்னில் அதுவும் அதனில் நீயுமாக இரண்டறக் கலந்து நிற்கும் உன் சிறப்பை உணரும் போதுதான் உனக்கு முழுமைப்பேறு. அதுவே முக்தி.

அந்த எல்லையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் உனது பயணமே எனது எண்ண மூலமும் அசைவம் நிறைவும் ஆகும்.

வேதத்தை நான் படித்ததில்லை – ஆனால் வேதத்தின் உட்பொருளாய் என்னைக் கண்டேன் . வாதத்தில் நான் கலந்து கொள்வதில்லை வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய் உள்ளேன் என்ற வேதாத்திரியம்.

உன்னிலே நான் அடங்க, என்னுள்ள

நீ விளங்க, உனது தன்மை ஒளிர

எனதுள்ளத் தூய்மை பெற்றேன்

இன்னும் வேறென்ன வேண்டும்

இப்பேறு பெற்ற பின்னர் எடுத்த

மனிதப் பிறப்பு எய்தியதே முழுமை.

என்று வேதாவாக்கியங்களுக்கு வேதாத்திரியத்தில் எளிமையாக விளக்கமளிக்கிறார்.



# 12. வேத சாசனமும் வேதாத்திரிய சாசனமும்

மனிதமரபு தோன்றிய போதே அதற்கொரு வழி பிறந்தது. அதையே அறம், தருமம் என்பார்கள். அதையே வேதம் ஒதுகிறது. பண்டறமான சனாதன தரும வேதம் எல்லையற்றது.

வேதத்தில் பூரணப்பொருள் ஒன்றே என்று குறிப்பிடும் சுலோகம் பிரபல்யமானது.

"ஓம் பூர்ணமத பபூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதரச்யதே!

பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமே வாவிஸிஷ்யதே!!



இதற்கு தமிழில் விளக்கம் தருகிறார் சுத்தானந்த பாரதியார்.

அதுவும் பூரணம் இதுவும் பூரணம்

பூரணத்திற் போந்தது பூரணம்

பூரணத்திற் பூரணம் எடுத்தும்

நிற்பது பூரண நிறைவாம் ஒன்றே!

இன்னும் புரியவில்லையா? பூரணத்திற்கான விளக்கத்தை புட்டு புட்டு எளிமையாகவும் தெளிவாக தருகிறார் அருட்தந்தை.

- புரணம், பிரம்மம், அறிவு, ஆற்றல் எல்லாம் ஒன்றே.
- எங்கும் நிறைந்தது. வற்றாயிருப்பு.
- தமிழில் வற்றாயிருப்பு என்ற பெயரை அதிகமாகக் கேட்டு இருக்க மாட்டீர்கள். "பூரணம்" என்ற ஒரு வார்த்தை இருக்கிறது. இல்லையா? பூர்ணம் என்பது வடமொழி வார்த்தை. அதற்கு "அட்சயம்" என்று சொல்வார்கள். சயம் என்றால் குறைந்த கொண்டே போவது. அதற்கு "அ" போட்டுவிட்டால் அ + சயம் = அட்சயம். குறையவே குறையாது. எவ்வளவு எடுத்தாலும் அது குறையாது. அத்தகைய ஒரு தன்மை உடையது இறையாற்றல்.

பிரபஞ்சக் காட்சிகள் அனைத்தும் இறைவெளியிலிருந்து வந்தனவாதலால். இறை நிலையைப் புரணம் என்றும், தன்னையே இறுக்கத்திற்கு உள்ளாக்கி ஆற்றலாக வெளிப்பட்டு-----

பிரபஞ்சமாகவும் மலர்ந்து, அப்பரபிஞ்சத்தையே இயக்கும் தன்மை உடையதால் அது பேராற்றலுடையது எனவும்.

பின் முதல் மண் வரை விரிந்து, பின்னர் பிரபஞ்சமாகவும்,, ஓரறிவு சீவன் முதல் ஆறறிவு மலர்ச்சி பெற்றதிலே இறையாற்றலில் உள்ள இயக்க ஒழுங்கு, இயக்க நியதி என்ற இறையாற்றலின் தன்மைகளை வேதாத்திரியம் பேரறிவு என்று அழைக்கிறது.



இறைவெளியில், இயல்பாக அழுத்தமும் நுண்ணதிர்வும் உள்ளன. இரு அதிர்வுகளுக்கிடையே உள்ள இடைவெளியை "காலம்" என்றும் வேதாத்திரியம் காலத்திற்கு உரிய, புதிய, துல்லியமான விளக்கத்தை அளித்துள்ளது.

வேதாந்தம் இந்திய நாட்டின் பலம். அது முறையாக உணர்ந்து முறையாகப் பரப்பாது முடக்கி வைக்கப்பட்டது இந்த நாட்டின் பலவீனம்.

பலத்தைத் தக்கவைத்துக் கொண்டு. பலவீனத்தை அகற்றுகிறது வேதாத்திரியம்.

முடக்க வைக்கப்பட்டதின் முடிச்சுகளை அவிழ்க்க முனைந்து அதைத் தாராளமயமாக்கிய பெருமை வேதாத்திரியத்தைச் சாரும்.


இந்திய தத்துவ வரலாற்றில்
வேதாத்திரி மகரிஷி
ராஜம் பதிப்பகம் Ebook publishers

## 13. கடவுள் தத்துவத்தில் . வேதமும் வேதாத்திரியமும்

தத்துவ ஆராய்ச்சியில் வழக்கமாக மூன்று விஷயங்களை அடக்குவது வழக்கம். முதலாவது கடவுள். இரண்டாவது ஆன்மா. மூன்றாவது உலகம்.

வேத மந்திரங்கள் இயற்கையின் கூறுகளாகிய நிலம், நீர். நெருப்பு, காற்று ஆகியவற்றைத் தெய்வங்களாக்கி அவறுக்குச் செலுத்தும் வழிபாடுகளாகவே பெரும்பாலும் காணக்கிடக்கின்றன.

இடி, மின்னல், முகில், மழை, கடல் இவைகளைத் தெய்வங்களே இயக்குகின்றன என ஆதி மனிதன் கருதினான்.

தனக்கு எவ்விதக் கெடுதல்களும் செய்ய வேண்டாமென்று இத்தெய்வங்களை வேண்டி வழிபாட்டான்.

தனக்கு கேடு செய்யாதிருப்பதற்கும், நன்மை செய்வதற்கும் கைம்மாறாகத்தான் தன்னால் இயன்ற பெருள்களை வழங்குவதாக கூறினான்.

அக்கினியும் ஒரு தெய்வம். ஏனைய தெய்வங்களுக்கு மனிதன் கொடுக்கும் பொருள்களை அவைகளிடம் கொண்டு போய் சேர்ப்பதே அக்னியின் கடமையாகக் கருதப்பட்டது.

அதனால்தான் தெய்வங்களுக்குச் சேர வேண்டிய பொருள்களை அக்கினியில் இடும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

வருணன் ஒழுக்கத்துக்குத் தெய்வம். வருணன் மனிதனுடைய செயல்களை எவ்வளவு தூரம் கண்காணிக்கிறான் என்பதை

உணர்த்துவதற்காகப் போலும் சூரியனையே வருணனுடைய கண்ணாக வேதத்திலே பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

வேத காலங்களில் மனிதன் இயற்கையைத் தெய்வமாகக் கருதி வழிபட்டான்.

பல தெய்வங்கைள் கற்பனை செய்து அவற்றை வழிபட்ட பல தெய்வ வழிபாடுதான் வேதங்களிலே சொல்லப்படும் முக்கிய விஷயம் என்று கருதக்கூடும்.

அப்படியாயின், வேதங்களிலே சிறப்பு ஏது? அறியாமையையும் பிற்போக்குத் தன்மையையும் அல்லவா இது காட்டுகிறது.

அப்படியிருக்கையில் இந்திய தத்துவ ஞான வளர்ச்சிக்கு இவை எவ்வாறு அடிகோலின என்ற வினாக்கள் எழுவது இயல்புதானே?

வேதங்களை கூர்ந்து நோக்கினால், தெய்வங்களைப் பற்றிய இக்கொள்கைகளிலே மிக நுட்பமான அடிப்படைத் தத்துவங்கள் பல பொதிந்திருப்பதைக் காணலாம்.

- மூல காரணம் - காணப்படும் இந்த உலகம் காணப்படாத மூலப் பொருள்களிலிருந்து உற்பத்தி ஆகின்றது என்ற பேருண்மையொன்றைத்தான் ஒவ்வொன்றுக்கும் காரணம் ஒவ்வொரு தெய்வமே என்றதன் மூலம் இவ் வேத மந்திரங்கள் குறிப்பாக உணர்த்துகின்றன.
- காரண காரியத் தொடர்பு - மின்னலுக்கும் இடிக்கும் காரணம் இந்திரன் என்னும்போதும், மழைக்குக் காரணன் வருணன் என்னும் போதும் இந்த உலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு காரணமுண்டு என்று நம்பிக்கையிலிருந்து இக்கருத்துக்கள் தோன்றின என்பது புலனாகிறது. இந்தக் காரண காரியத் தொடர்பை

உணர்வதும், குறிப்பதும் தத்துவ ஆராய்ச்சியின் அடிப்படைகளுள் முக்கியமானது.

- ஒழுங்கும் ஒழுக்கமும் - இயற்கையின் நியதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்வமே காரணம் என வேதங்கள் சொல்லும்போது இயற்கை நிகழ்ச்சிகளில் ஒரு நியதியும் ஓர் ஒழுங்கும் உண்டென்பதை அது உணர்ந்தமையால்தான் அங்ஙனம் கூறுகின்றன. இந்த ஒழுங்கைப் பற்றிய குறிப்பு வேதங்களிலே முக்கியமான இடத்தை வகிக்கின்றது. ஒழுங்கைக் குறிப்பதற்கு "றிதம்" என்றொரு சொல் வழங்கப்படுகின்றது. இயற்கை நியதிக்கு நீதியான தெய்வமே காரணம் என்பதை வேதங்கள் உணர்த்துகின்றன. இவ்வாறு இயற்கை நியதியையும், தெய்வ நீதியையும், பின் அவற்றோடு மனித ஒழுக்கத்தையும் தொடர்புபடுத்தியது வேதங்களின் ஒப்பற்ற சிறப்பாகும்.
- பிற்காலத்தில் தத்துவ தரிசனங்களில் விவரிக்கப்படும் தர்மம், அதர்மம், நல்வினை, தீவனை, முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய பலவற்றிற்கும் மூலம் இந்த "றிதம்"
- ஒரு தெய்வ வாதம் - நாளடைவில் வேதத்தில் ஒரு தெய்வக் கொள்கை வலுப்பெற்று வந்தது. இதற்கு வேதத்திலுள்ள் ஒரு சுலோகமே "ஒன்றுதான் உள்ளது. அதனையே அறிஞர்கள் அக்கினி என்று... யமன் என்றும் வெவ்வேறு பெயர்களால் குறிக்கின்றனர் என்றும் கூறுகின்றது. வேதத்திலே முக்கியமாகப் பேசப்படுவது ஒரு தெய்வக் கொள்கையே என்பதற்கு இது சான்றாகும்.
- ஒருமை வாதம் - நாளடைவில் போகப் போக இந்த ஒரு தெய்வக் கொள்கையிலும் மாற்றம் ஏற்படுகின்றது. தெய்வம் என்ற சொல் கைவிடப்பட்டு மூலமாக உள்ளது ஒரேயொரு பொருள் என்ற கொள்கை வலியுறுவதைக் காண்கிறோம்
- அப்பொருள் அவன் அவள் என்ற பாகுபாடு கடந்தது. சத் என்ற சொல்லாலும், தத் ஏகம் என்ற சொற்களாலுமே அந்த மூலப்பொருள் குறிப்பிடப்படுகின்றது.

பிற்காலத்தில் வளர்ச்சியடைந்து விரிவடைந்து வேதாந்த சிந்தாந்தக் கொள்கைகளுக்கு இதுவே மூலம்.

- உதாரணமாகப் பிரம்மம் மட்டுமே உள்பொருள் என வேதாந்திகளும், சுதந்திரமான பொருள் ஒன்றே ஒன்றுதான் எனச் சைவ சித்தாந்திகளும் கொள்வதற்கு வேதங்களிலே காணப்படும் இக்கருத்துகளே விதைகள் ஆகும்.
- எனவே வேதங்களின் உட்பிரிவுகளாகிய மந்திரம், பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் ஆகியன பற்றிய “கொள்கைகள், பிராமணங்களுக்கும் உபநிடதங்களுக்குமுள்ள தொகை வகைகள், அத்தெய்யவங்கள் மூலம் உணர்த்தப்படும் தத்துவங்கள், வேதக் கருத்துக்கள் பிற்கால இந்திய தத்துவஞான வளர்ச்சிக்கு வித்துக்களாக அமைந்தன என்றால் மிகையாகாது.

பௌத்தம் தவிர அனைத்து தத்துவங்களும் ஓரளவு கடவுளை (பிரம்மத்தை) ஏற்றுக் கொள்கின்றன.

புத்தர்தான் கடவுள் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அதைக் கண்டுபிடிக்க எனக்கு அவசியமில்லை. அதனால் எனக்கு இழுக்கு எதுவும் இல்லை என்கிறார்.



இதை சுவாமி சித்பவானந்தர் அக்ஞேயவாதம் ( Agnosticism ) என்கிறார்.

பொதுவாக ஆத்திகவாதிகள், நாத்திகவாதிகள், அக்ஞேயவாதிகள் பற்றி புகழ் பெற்ற உளப்பகுப்பாய்வு அறிஞர் சிக்மண்ட் பிராய்டு பின்வருமாறு கூறுகிறார்.

- ஆத்திகர்களும் நாத்திகர்களும் உளநோயாளிகள். அக்ஞேய வாதிகள் மட்டுமே மனநலம் உள்ளவர்கள்.

## வேதாத்திரியின் கடவுள் தத்துவம்

ஒரே தெய்வம் "சுத்தவெளி" என்பது வேதாத்திரியம்.

"வற்றாயிருப்பு ,பேராற்றல், பேரறிவு ,காலம் எனும்

வளம் நான்கும் ஒன்றிணைந்த

பெருவெளியே தெய்வமாம்."

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் ஆகிய நான்கு வளங்கள் ஒன்றிணைந்த இயற்கைப் பெருவேளியே இறைநிலை.



வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் ஆகிய நான்கு வளங்களையும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாதபடி இவை இறைநிலையின் தன்மைகளாகவே இருக்கின்றன.

**வற்றாயிருப்பு**

எல்லையற்ற் இறைநிலையானது தன்னிறுக்கத்தால் தானே நொறுங்கி இறைத்துகள்களாகி, பரமாணுவாகி அவற்றின் கூட்டால்

விண் என்ற எல்லாத் தோற்றங்களுக்கும் மூலக்கூறாக உள்ள அணுவாகி அவற்றின் இணைப்பால் பிரபஞ்ச தோற்றத்தில் எல்லாப் பொருட்களும் உற்பத்தியாகின்றன.

இச்செயல்களினால் இறைவெளி அளவிலும் ஆற்றலிலும் துளி கூட குறையாத வற்றயிருப்பாய் உள்ளது.

## பேராற்றல்

இறைநிலையில் தோன்றிய அத்தனைப் பொருட்களையும், இறைநிலையிலே தாங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஆற்றலாகப் பேராற்றல் இருக்கிறது.

## பேரறிவு

எந்த்பொருளிலும் உள்ள இயக்க ஒழுங்கு அதாவது வடிவம். துல்லியம், காலம் இவை மூன்றும் தவறுவதில்லை. இதுவே அறிவு என்னும் தத்துவமாகும்.

இந்த அறிவு இறைநிலையின் இயல்பாக அடங்கியுள்ளது. இதுவே, இறைநிலையின் தன்மாற்ற விளைவுகளான கோடிக்கணக்கான பொருட்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பேரறிவாக உள்ளது.

## காலம்

இறைநிலையின் தன்னிறுக்கத்தால் அது விட்டுவிட்டு அழுத்தும்போது, தானாகவே ஓர் அதிர்வு ஏற்பட்டிருக்கிறது.

இது இறைநிலைக்கு அப்பாற்பட்டதல்ல. அதனின் இயல்பாகவே இருக்கிறது.

இவ்வதிர்விலிருந்து தோன்றி அனைத்துமே இவ்வதிர்வின் தன்மை உடையதாகவே இருக்கின்றன. இயங்குகின்றன. இதுதான் காலம் என்பதாகும்.

அனைத்திற்கும் உள்ளும், புறமுமாக எல்லையற்றதாக உள்ள பெருவெளியின் தன்மாற்ற வெளிப்பாடுகளே நாமும், நாம் காணும்அனைத்தும் என்பதே வேதாத்திரியத்தின் சாரமாகும்.

"எல்லாம் வல்ல தெய்வமது

எங்குமம் உள்ளது நீக்கமற"

என்பது வேதாத்திரியம்.

# 14. ஆன்மா - வேதங்களும் வேதாத்திரியாரும்

ஒவ்வொர் உடலுக்கும் ஒவ்வொரு ஆன்மா உண்டு. உடல் அழியும் போது ஆன்மா அழிவதில்லை என்பது இப்போதைய கருத்து.

ஆனால் வேதங்களின் கருத்து இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். ஒருவன் இறந்ததும் அவனடைய ஆன்மா அவன் செய்த நல்ல வினை தீயவினை ஆகியவைகளுக்கும் தக்க மோட்சத்துக்கோ அல்லுத நரகத்துக்கோ செல்லும் கருத்துடையது வேதம்.

வேதங்களின் முற்பகுதியாகிய மந்திரப் பகுதியில் மறுபிறப்புப்பற்றிய குறிப்பு கிடையாது. ஆனால் பிற்பகுதியாகிய பிராமணத்திலே சிற்சில குறிப்புகள் காணப்படுகின்றன.

வேத உபநிஷத்துக்களில் கடோபநிஷத்தும் ஒன்றாகும். அதில்—

ஆத்மா எங்கேயுள்ளது? எப்படியுள்ளது?

ஆத்மா அணுவுக்கும் அணுவாய், மகத்திற்கும் மகத்தாய், உயிர்களின் இருதய குகையில் உள்ளது.

"அணோ ரணியான் மஹதோ மஹியான்

ஆத்மா அஸ்ய ஜந்தோ நிஹிதோ குஹாயாம்"

அதை யார். எப்ப அடைவார்கள்?

ஆசையற்றவர்கள், சோகத்தினின்றும் விடுபட்டு அ்நதக் கரண சுத்தியாலும், சாந்தத்தாலும் ஆத்மாவின் மகிமையைக் காண்கிறார்கள்.

ஆத்மன் சும்மாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்கிறான். படுத்திருந்தாலும் எங்கும் செல்கிறான்.

விழிப்பில் இன்புற்றும், சமாதியில்உலகின்பத்தை உணராமலும் இருக்கும் என்னைத் தவிர அந்த ஜோதிப்பொருளை யாரே அறிவார்?

அந்தரங்கத் தத்துவமான ஆத்மாவை அவரவர் அந்தரங்க சுத்தியினாலேதான் அறியமுடியும். அது பிறரால் சுட்டிக் காட்டும் பொருளன்று. ஏன்?

அது உடலற்றது. அழியும் உடல்களில் எல்லாம் அதுவே உயிருக்குயிராயுள்ளது. அது எங்கும் நிறைந்த பரமாத்மா. அதை அறிந்த தீரன் விசனிப்பதில்லை.

திச்செயலார், கொடியர், அமைதியற்றவர்கள். உள்ளடங்க மற்றவர்கள், தியானமற்றவர்கள், மனச் சமாதானமற்றவர்கள். அறிவினாலும் இதை அடைய முடியாது. இத்தீமையற்ற் நல்லோர், உபசாந்தர், அடக்கமானவர், தியான சீலர்களே அத்மாவை அடைவார்கள்.

வேதாத்திரியத்தில் - ஆத்மா எளிமையாக அடையாளம் காட்டுகிறார் வேதாத்திரி மகரிசி.

ஆத்மா என்ற சொல்லுக்கு ஒரு புதிய விஞ்ஞான விளக்கத்தை வேதாத்திரியம் தந்திருப்பது நமது சிந்தனைக் உரியதாக இருக்கிறது.

கருத்து முதல் வாதிகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கமாக அமைந்துள்ளது.

அனைத்துக்கும் ஆதியாக ஆதி மூலமாக இருக்கும் மெய்ப்பொருளை ஆத்மா என்று கூறுகின்றன வேதாந்தங்களும், உபநிடதங்களும்.



ஆனால், வேதாத்திரியம் ஒவ்வொரு ஜீவனிலும் உள்ள கருமையத்தை ஆத்மா என்கிறது.

ஆத்மாவிலுள்ள பதிவுகள் முளையின் வழியாக புலன்களை இயக்கும் போது அதுவே மனமாகிறது. மனம் என்பது ஓர் அலைத் தொகுப்பே என்பது வேதாத்திரியம் இவ்வுலகத்திற்குத் தருகிற மகத்தான ஞானமாகும்.

ஆதியில் அறிவாக இருப்பது அசைந்து அலையாகி, அவ்வலையே ஜீவனில் மனமாக வருவதால் மனமென்பது ஆதியின் மறுபக்கமே என்பது வேதாத்திரியம் தரும் ஞானம். “The other end of the mind is Almighty the God” என்பது வேதாத்திரியம்.

உடல் இயங்கிக் கொண்டிருக்கிற ஆத்ம அலைகள், உடலை விட்டபின் என்னவாகின்றன என்ற ஞானம்.

முற்பிறவியல் நாம் யார்? நமது மறுபிறவி என்பதென்ன? வாசனைகள் எப்படி உடலுக்கு உடல் தாவுகின்றன என்பன போன்ற தத்துவ உச்சங்கள் வேதாத்திரியத்தின் உள்ளுணர்வில் விளைந்த முத்துக்களாகும்.

வேதாதந்த, சித்தாந்த தத்துவக் கருத்துக்களுக்கு புதிய விளக்கங்களைத் தருகிற வேதாத்திரியம் வாழ்க்கையின் சாரத்தையும், வாழ்வாங்கு வாழ்கிற வழி முறைகளையும தந்து கொண்டே இருக்கிறது..




# 15. உலக உற்பத்தி - வேதங்களும் வேதாத்திரியாரும்

உலகம் உண்மை என்பது தான் வேதங்களின் கருத்தாகும். உலகம் உண்மை இல்லை என்ற கருத்து வேதங்களில் கிடையாது.

ஆனால், இந்திய தத்துவ ஞானிகளுள் ஆதிசங்கரரும் அவரைப் பின்பற்றுவோரும் இந்த உலகம், கயிறு பாம்பாகத் தோன்றுவது போன்ற ஒரு தோற்றமேயொழிய உண்மையல்ல என கருதினர்.

ஆனால் சைவ சித்தாந்திகள், உலகம் பொய்யல்ல. அது இல்லாத பொருளல்ல. அது உள்ள பொருளே என்ற கருத்தை கொண்டவர்களாக விளங்கினர்.

வேதம் காட்டும் பிரபஞ்சம்





இந்த உலகம் எதிலிருந்து உற்பத்தியாவது என்பது குறித்து வேதங்களிலே பல கருத்துகள் காணப்படுகின்றன.

அவற்றில் ஒன்று -- தண்ணீர்தான் மூலப்பொருள். அதிலிருந்துதான் ஒன்றிலிருந்து ஒன்றாக ஏனைய பஞ்ச புதங்களும், அவற்றால்தான் இந்த உலகமும் உற்பத்தயாயின என்ற கருத்தை வேதங்களிலே காணலாம்.

இந்தக் கருத்தைத்தான், மேல்நாட்டுத் தத்துவ ஞானமனைத்துக்கும் தந்தை எனக் கருதப்படும் கிரேக்கத்

தத்துவஞானி தேல்ஸ் (கி.பி.6 ஆம் நூற்றாண்டு) என்பவனும்



கொண்டிருந்தான்).

அறிவுடைய ஒருவனே இந்த உலக உற்பத்திக்குக் காரணமானவன் எனபதும் வேதங்களின் கருத்தாகும்.

அவன் இந்த உலகத்தை தன்னிடமிருந்தே உற்பத்தித செய்தான் என்றும் புறம்பான ஒரு பொருளிலிருந்து உற்பத்தி செய்தான் என்ற இரண்டு கருத்தும் வேதங்களிலே காணப்படுகிறது.

## உலக உற்பத்தி - வேதாத்திரி மகரிசி.

.

சுத்த வெளியில் இருந்து திணிவு திணிவு உருண்டு முதலில் அணு என்று பெயரை எடுத்து,

பிறகு பேரண்டத்திற்க்குள் வந்து அதை சுழ்ந்து அழுத்தும் காரணத்தினால் அணு வேகமாக சுழன்று அணுக்கள் கூடி?

அது மற்ற அணுக்களோடு இணைந்து அதன் சுழல் வேகத்திற்கு தக்கவாறு பௌதிகமாகி, முதல் பூதம் என்ற விண், பின்பு காற்று, பின்பு நெருப்பு, பின்பு நீர், பின்பு கெட்டி பொருளாக அதன் வேகத்திற்கு தக்கபடி பஞ்சபூதமாகி .

இதன் விகிதாசாரத்திற்க்கும் ஏற்ப உயிர்களாகி, அறிந்து கொள்ளும் சக்தியை பெற்று ஓர் அறிவை பெற்று, அதை அறியும் வகையுள்ள உறுப்பையும் பெற்ற உயிரினமாகி, முறையே ஒன்று முதல் ஐந்து வித அறிவையும், உறுப்பையும் பெற்ற உயிரினணுக்களாகி .

பின்பு நுட்பமான அறிவையும், உடல் அமைப்பையும், அழகான தோற்றத்தையும் பெற்ற மனிதனாகி,

அதன் பிறகு ஐந்தின் அறிவை கொண்டு முதிர்ந்து தெளிந்த பின்பு ஆறாவது பகுத்தறிவை பெற்று வாழ்கின்ற மனிதன் உயிர் இனங்களிலேயே உயர்ந்த நிலையில் வாழும் இனமாகும்.

"ஆதியெனும் பரம்பொருள்மெய் எழுச்சிபெற்று அணுவென்ற உயிராகி அணுக்கள்கூடி மோதியிணைந்து இயங்குகின்ற நிலைமைக்கேற்ப மூலகங்கள் பலவாகி அவையிணைந்து பேதித்த அண்டகோடிகளாய் மற்றும் பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி நீதிநெறி உணர்மாந்தராகி, வாழும் நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம்காண்போம்"..

வேதாத்திரி மகரிசி.



மெய்விளக்கம் பெற்ற எவராயினும் அவர் மனக் கண்ணோட்டத்தில் :.

1) மெய்ப் பொருளாகிய இருப்பு நிலை,.
2) விண் என்ற சுழல் விரைவு ஆற்றலான உயிர் நிலை,.
3) உயிர் எனும் விண் துகளிலிருந்து எழும் விரிவு அலை,.
4) விண்ணிலிருந்து பரவும் விரிவு அலையானது சுற்றிலுமுள்ள இருப்பு நிலையோடு ஊடுருவி இணைந்து விடுவதால் ஏற்படும் வான்காந்தம்..

5) வான் காந்தமே உயிர் உடலுக்குள் எல்லகட்டித் தனிச் சுழலாக இயங்குங்கால் பெறும் சிறப்பான சீவகாந்தம்..
6) வான்காந்தமோ சீவகாந்தமோ பருப் பொருட்களில் இயக்க அலையால் திணிவு பெறும் போது அது சமனாகும் இயக்க விளைவுகள் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் ஐந்து தன்மாத்திரைகளாக மாற்றம் பெரும் இயல்பூக்கம்..
7) இருப்பு நிலையான மெய்ப்பொருளே அறிவாகி நுண்பொருளான விண்ணிலிருந்த பேரியக்க மண்டலத்திலுள்ள எல்லாப் பொருட்களிலும் ஊடுருவி நிறைந்து அது அதன் வடிவத்திற்கேற்ப இயக்க ஒழுங்காகவும், புலனுணர்வாகவும், தன்னையே அறிந்து கொள்ளத்தக்க ஆறாம் நிலை அறிவாகவும் விளங்கும் அருட் பேராற்றலான அறிவு நிலை, இவையெல்லாம் அயரா விழிப்பு நிலையில் காட்சியாக விளங்கும். இந்த முழுமையான பேரியக்க மண்டல விளக்கமே மெய்ஞானம் என்று வழங்கப் பெறுகிறது.



# 16. ஆதிசங்கரர்

பரந்து கிடந்த வேதங்களைத் தொகுத்தவர் ஆதிசங்கரர். அத்வைதம் என்ற அரிய சித்தாந்தத்தை, மிகப் பெரிய தத்துவ ஞானத்தை உலகுக்கு வழங்கி விட்டுச் சென்றிருக்கிறார். பிரபஞ்ச பேராற்றலுக்கு சரியான விளக்கத்தை தந்தார்.

**ஆதிசங்கரர்**, ஏழாம் நூற்றாண்டு இன்றைய கேரளத்திலுள்ள “காலடி“ எனப்படும் ஊரில் ஆர்யாம்பாள்/சிவகுரு தம்பதியினருக்கு மகனாய் தோன்றிய மெய்ஞான வல்லுநர்.

இளமை பிராயத்தில் கௌடபாதர் சீடரான கோவிந்த பகவத்பாதர் இடம் வேதாந்தம் மற்றும் இதர தத்துவங்கள் பயின்று சங்கர பகவத்பாதர் என்று அழைக்கலானார்.

பத்து உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் மற்றும் பகவத் கீதைக்கு விளக்கவுரை அளித்து அவை போதிக்கும் அத்வைத வேதாந்தம் அதாவது **இரண்டற்றது** என்கிற அத்வதை தத்துவத்தை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர்.

மேலும் விஷ்ணு சஹஸ்ரநாமம் போன்ற சமய நூல்களுக்கும் இவர் விளக்கவுரை எழுதியுள்ளதாக பொதுக் கருத்து உள்ளது.

சிவானந்த லஹரி, பஜ கோவிந்தம், விவேகசூடாமணி, தத்துவபோதம், உபதேச சாஹஸ்ரி, கனகதாரா ஸ்தோத்திரம், சுப்ரஹ்மண்ய புஜங்கம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

## சங்கரர் நிறுவிய அத்வைத பீடங்களும் அவரது சீடர்களும்

சங்கரர் பாரதம் முழுவதும் பயணித்து தெற்கில் சாரதா பீடம், சிருங்கேரி, மேற்கில் துவாரகா பீடம், துவாரகை, வடக்கில் ஜோஷி மடம் மற்றும் கிழக்கில் கோவர்தன பீடம், புரி என நான்கு அத்வைத பீடங்கள் நிறுவி தன் சீடர்களான ஹஸ்தமாலகர், சுரேஸ்வரர், பத்மபாதர் மற்றும் தோடகர் என்பவர்களை ஒவ்வொரு பீடத்திற்கும் மடாதிபதிகளாக நியமித்தார்.

தமது 32ஆம் அகவையில் மரணம் அடைந்த இவர் பொது நம்பிக்கையில் இந்து மதத்தின் மாபெரும் சிற்பி எனப் போற்றப்டுகிறார்

## காலம்

கி.மு. நான்காம் நூற்றாண்டு என்பதும் கி.பி ஏழாம் நூற்றாண்டு என்பதும் இவர் வாழ்ந்துவந்த காலத்தினை பற்றி இரு வாதங்கள் நிலவுகின்றன.

## தத்துவம்

பொதுவாக உலக ஆன்மாவைப் பற்றிக் கூறியது. அது பிரம்மம் என்றும் அடிப்படையான எதார்த்தமென்றும், ஒரே சாராம்சமென்றும் அழைக்கப்பட்டது.

இயற்கைப் பொருட்களின் உலகம் இந்த ஆன்மாவினால் உருவாக்கப்பட்ட ஒன்று என்று கூறுகிறது. இவரது தத்துவம் அத்வைதம் என்று அழைக்கப்படுகிறது.

பிரம்மத்தின் கனவாக, நினைவுத்தடமாக இந்த உலகம் உள்ளது. இயற்கை நிகழ்வுகளின் உலகம் ஒரு பிரம்மை தான்.

நிலையான மனிதனிடமிருந்து மறைக்கக்கூடிய அலைகள், குமிழிகள், நுரையாக உலகம் விளங்குகிறது. நிரந்தர ஆன்மாவிற்கு மனித உடல் ஒரு புறவடிவமாகும்.

ஆன்மா என்பது பிரம்மத்தின் அவதாரம் அல்லது துளியாக இருக்கிறது. நிரந்தரமான பிரம்மம் முன்னால் இருக்கிறது. பின்னால் இருக்கிறது, வலப்புறத்திலும், இடப்புறத்திலும் மேலும் கீழும் பரவியிறுக்கிறது.

இவை அனைத்திலும் பிரம்மம் ஒன்றுதான். அதுவே சிறந்தது. பிரம்மத்தை தவிர வேறெந்த பொருளும் கிடையாது.

உலகின் தோற்றங்களனைத்தும் பிரம்மம் தான். வேறு எதுவுமில்லை. தெய்வீக ஆத்மாவான பிரம்மத்திடமிருந்து தான் எல்லா உயிர்களும் தோன்றியுள்ளன.

ஆகவே அவை அனைத்தும் பிரம்மம் தான். இதை புரிந்து கொள்ள வேண்டும். சாதாரண மக்களின் உடனடி பிரச்சனைகளுக்கு தத்துவம் வழிகாட்டாது. அது தொலைவில் உள்ளது.

தத்துவவாதி வாழ்க்கைக்கு வெளியில் நின்று அதை காண வேண்டும் என்று எழுதினார். ஒரே உண்மையான எதார்த்தம் என்பது பிரம்மம் ஆகும்.



நிகழ்ச்சிகள் நிரம்பிய தற்காலிக உலகம் உண்மையான அறிவாகாது. பிரம்மத்தை புரிதல் மட்டுமே உண்மையான அறிவாகும் என்பது சங்கரரின் அத்வைதம்.

## துறவறம்

தமது நான்காம் அகவையில் துறவறம் மேற்கொண்ட சங்கரர் கோவிந்த பகவத்பாதர் என்பவரிடம் அத்வைதம்முதலிய விஷயங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

## மனீஷா பஞ்சகம்

தமது அத்வைதக் கொள்கைகளை பறைசாற்றி வரும்போது ஒரு நாள் சங்கரர் ஆற்றில் நீராடி விட்டு வருகிற பொது ஐந்து நாய்களுடன் சண்டாளர் ஒருவர் அவர் முன்னே வருகின்றார்.

அதைக் கண்டு பதைத்த சங்கரரின் சீடர்களும் சங்கரருக்கு வழி விட்டு ஒதுங்குமாறு அவரைக் கேட்கின்றனர்.

அப்போது அச்சண்டாளர் சங்கரரிடம் “என் உடல் நகர வேண்டுமா அல்லது ஆத்மா நகர வேண்டுமா” எனக் கேட்க, சங்கரர் அவன் காலில் விழுந்து பணிகிறார் என சங்கர விஜயம் கூறுகின்றது.

உண்மையுணர்ந்தவராய், அத்வைதத்தின் பரிபூர்ண உண்மையை தமக்கே உணர்த்தி அருளியதாக கூறி அச்சண்டாளரை தமது குருவாக ஏற்று சங்கரர் மனீஷா பஞ்சகம் பாடினார்.

இதுவே சங்கரருக்கு அத்வைத ஞானம் பரிபூர்ணமாக கிடைத்த நிகழ்வு ஆகும்.

இவ்வுண்மையை சங்கரருக்கு உணர்த்த சண்டாள உருவில் சிவனே வந்ததாக *சங்கர விஜயம்* முதலிய நூல்கள் கூறுகின்றன.

## சங்கரர் நிறுவிய ஆறு மதங்கள்

தொன்று தொட்டு நிலவி வந்த சிவனை வழிபடும் சைவம், திருமாலை வழிபடும் வைணவம், சக்தியை வழிபடும் சாக்தம், வினாயகரை வழிபடும் கணாபத்தியம், முருகனை வழிபடும் கௌமாரம், சூரியனை வழிபடும் சௌரம் முதலியவற்றை முறைப் படுத்தி ஆறு சமயங்களாக (ஷண்மதங்கள்) வகுத்தளித்தார்.

## வாதங்கள்

கபாலிக சமயம், அவர் தடுத்தாட்கொண்ட சமயங்களுள் ஒன்று. இன்றைய சென்னைக்கு அருகில் இருக்கும் மாங்காடு எனும் ஊரே காபாலிகர்களோடு சங்கரர் வாதம் செய்த இடமாகும்.

கர்ம மீமாம்ஸா எனப் படும் கொள்கையினை பின்பற்றி மஹிஷ்மதி எனும் ஊரில் வசித்து வந்த மண்டன மிஸ்ரர் உடன் அவரது மனைவி *சரஸவாணி* முன்னிலையில் வாதம் செய்தார் சங்கரர்.

மண்டன மிஸ்ரரைத் தொடர்ந்து அவரது மனைவி சரஸவாணியுடனும் வாதிடுகின்றார் சங்கரர்.

சங்கரருடன் வாதத்தில் தோல்வி அடைந்த மண்ட மிஸ்ரர், சுரேஷ்வரர் பெயருடன், சங்கரரின் சீடரானார்.

இன்றைய தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடைமருதூர் எனும் ஊரில் சைவ சமயத்தவருடன் வாதிடுகின்றார் சங்கரர்.

## நிர்வாணாஷ்டகம்

நிர்வாணாஷ்டகம் என்பது ஆதிசங்கரரால் இயற்றப்பட்ட ஆறு சுலோகங்களின் தொகுப்பாகும்.

இப்பாடல்களில் சிவ வழிபாட்டின் பெருமையை கூறியும், வேதம், வேள்வி, மதம்ஆகியற்றை மறுத்து சிவனே ஆனந்த மயமானவன் என்றும் ஆதிசங்கரர் கூறுகிறார்.

ஆறு பாடல்களையும் சிதானந்த ரூப: சிவோஹம் சிவோஹம் என்ற ஒரு வரியாலேயே முடிக்கிறார்.

ஆதிசங்கரரின் முக்கிய குறிக்கோள் புத்தமதம் பரவுவதை தடுத்து இந்து மதத்தின் சிறப்பினை நிலைநாட்டுவதாகும்.

புத்தரின் வேத மறுப்பினை ஆதிசங்கரர் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, புத்தமதத் துறவிகளுடன் விவாதங்கள் நடத்தினார்.

அதே சமயத்தி வேதத்தின அடிப்டையில் சடங்குகள் அர்த்தமற்ற முக்கியத்துவம் கொடுப்பதையும் ஆதிசங்கரர் ஏற்றுக் கொள்ளவில்லை.

சமூகத்திற்கு ஒவ்வாத ஆதாரமற்ற, தேவையற்ற சமயப் பழக்க வழக்கங்களாக கருதியவைகளைச் சாடவும் செய்தார்.

ஆதிசங்கரர் வேதங்களையும், உபநிடதங்களையும் கற்றுத் தேளிந்து பிரபஞ்ச சக்தியும், மனிதச் சக்தியும் வேறு வேறானவை அல்ல, இரண்டும் ஒன்றேதான், பிரபஞ்சத்தில் அது வியாபித்திருக்கிறபோது பரமாத்மா என்றும், மனித உடலில் அது செயல் படுகின்றபோது ஜீவாத்மா என்றும் அழைக்கப்படுவதாக அவர் கூறினார்.

ஆதிசங்கரரின் மாயாவாதமும் வேதாத்திரியத்தின் பரிணாம வாதமும் மானுடத்திற்கு பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஆதிசங்கரரின் விளக்கத்தின்படி பளபளக்கும் சிளிஞ்சலை வெள்ளியென்று எண்ணுகிறோம். இருளில் கயிற்றைக் கண்ட பாம்பென்று நினைக்கிறோம்.

அருகில் சென்று அது வெள்ளியல்ல, கிளிஞ்சலே. பாம்பல்ல, கயிறே என்று அறியுமட்டும் நாம் கண்ட தோற்றம் உண்மையாக இருப்பினும் அது இறுதி உண்மையல்ல.

மனிதர்கள் தங்களை உடலாக கருதுவதற்கும், ஒன்றேயான பிரம்மத்தை பல படித்தான் தோற்றங்களாகக் காண்பதற்கும் காரணம் மாயை என்கிறார் சங்கரர்.

மாயை என்றால் எது இல்லையொ அது என்பது பொருள். இம்மாயைக் கடந்து உண்மை நிலையை நாம் அறிய வேண்டும்.

"காண்பன யாவும் நான்" என்று அறியும் போது அன்புமயமாக, அறிவுமயமாக, ஆனந்தமயமாக ஆகி, கர்மத்தளையை உடைத்து பிறப்பு இறப்புகளிலிருந்து மீண்டு, அமர நிலையை அடையவேண்டும் என்கிறார் சங்கரர்.

வேதாத்திரியமோ, ஆதியின் அசைவே பரம அணு என்றும் அவை ஒவ்வொர் அளவில் கூடி வேதம் கூறும் ஐம்பதங்களாயின் என்று பரிணாமக் கொள்கையின்படி அததுவைதத் தத்துவத்தை விளக்குகிறது.

"ஒவ்வொரு பொருளும் பரமுதலாய்
அவ்வுரு வரையில் வந்த கதை
செவ்விய சிறுசொல் பரிணாமம்
சிறப்பை உணர்வாய் நீயுமதே"

"பொருள் என்றால் தெய்வநிலை ஒன்றே அஃது
பூரித்த நிகழ்ச்சிகளே பிரபஞ்சம் ஆம்
அருளான மெய்ப் பொருளின் நிலை உணர்ந்தால்
அவன் அதுவாய் எல்லாமாய் அறிவிற்கெட்டும்",



எல்லாம் வல்ல இறையற்றல் எவ்வாறு அணுவாகவும், காந்தமாகவும், ஐந்து பௌதீகப் பிரிவுகளாகவும், பஞ்சதன் மாத்திரைக்களாகவும் உடல் உயிர்களில் மனமாகவும் பரிணமிதித்துள்ளது என்பதை பிரம்ம ஞானக் கவிகளில் வேதாத்திரியம் விளக்கியுள்ளது.

“இறைவெளியே தன்னிறுக்கச் சூழந்தழுத்தம் ஆற்றல்

    இதன் திணிவு மடிப்பு விழச் சுழலும்நுண் விண்ணாம்

நிறைவெளியில்விண் சுழல நெருக்குகின்ற உரசல்

    நிலைவெளியில் எழுப்புகின்ற நேர் அலைகள் காந்தமாம்

மறை பொருளாம் காந்தம் தன் மாத்திரைகள் ஐவகை

    மலைக்காதீர் விண்கூட்டம் மாபுதம் ஐந்துமாம்

முறையாய் அக்காந்த அலை மனமாம் உயிர் உடல்களில்

மதி உயர்ந்திவ்வுண்மை பெற மா பிரம்ம ஞானமாம்."

ஆதியாக இருந்த சக்திக்கு மேலாகவும், அப்பாலாகவும் வேறொன்றுமில்லை.




# 17.உபநிடதங்கள்

**உபநிடதங்கள்**அல்லது உபநிஷத்துக்கள் பண்டைய இந்திய தத்துவ இலக்கியமாகும்.

இந்து சமயத்தினரின் ஆதார நூல்களின் கீழ் இது வகைப்படுத்தப்படுகிறது.

வேதங்களில் இவை இறுதியாக வந்தவையாகும் எனவே இவை வேதாந்தம் எனவும் கூறப்படுகின்றன.

சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இவ்விலக்கியத்தில் பெரும்பாலும் யோகம், தத்துவம் போன்றவற்றைப் பற்றியே விவாதிக்கப் படுகிறது.




பெரும்பாலும் குரு - சீடன் இடையே நடைபெறும் உரையாடலாக இவை அமைந்துள்ளன. இந்து சமய நூல்களில் இவை மிக உன்னதமான மதிப்பு பெற்றவை.

## பொருளும் பெருமையும்

நான்கு வேதங்களுக்கும் சாகைகள் என்று பெயருள்ள பல கிளைகள் உள்ளன. எல்லா சாகைகளும் தற்காலத்தில் காணப்படவில்லை.

ஒவ்வொரு வேதசாகை முடிவிலும் ஒரு உபநிஷத்து இருந்திருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது. பற்பல சாகைகள் இன்று இல்லாமல் போனாலும் நூற்றுக்கும் மேற்பட்ட உபநிஷத்துக்கள் கிடைத்துள்ளன.

வேதங்களிலுள்ள சடங்குகளைப்பற்றிய விபரங்களும், அவற்றில் எங்கும் அள்ளித் தெளிக்கப் பட்டிருக்கும் தெய்வ அசுர இனத்தாருடைய பரிமாறல்களும் இன்றைய விஞ்ஞான உலகத்திற்கு ஏற்புடையதாக உள்ளதா இல்லையா என்ற ஐயங்களை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு வேதப்பொருளின் ஆழத்தை அறிய முயலும் யாரும், உபநிஷத்துக்களிலுள்ள தத்துவங்களினால் கவரப்படாமல் இருக்கமுடியாது.

அதனாலேயே இந்துசமயத்தின் தத்துவச்செறிவுகள் உபநிஷத்துக்களில்தான் இருப்பதாக மெய்யியலார்கள் எண்ணுகிறார்கள்.

உபநிஷத்துக்களில் சில மிகச் சிறியவை, சில கிறிஸ்தவ மதத்தின் பைபிள் அளவுக்குப்பெரியவை. சில உரைநடையிலும் சில செய்யுள்நடையிலும் உள்ளன.

ஆனால் எல்லாமே ஆன்மிக அனுபவங்களையும், வாழ்க்கையின் அடிப்படைப் பிரச்சினைகளையும் அலசுபவை.

- வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? பிறப்பும் இறப்பும் ஏன், எப்படி நிகழ்கின்றன? அடிப்படை உண்மை யாது?
- அழிவில்லாத மெய்ப்பொருள் ஒன்று உண்டானால் அதன் சுபாவம் என்ன? அதுதான் கடவுளா?
- இவ்வுலகம் எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது?
- மறுபிறப்பின் தத்துவம் என்ன? நன்மையும் தீமையும் மனிதனைப் பொருத்ததா, அல்லது அவைகளுக்கென்று தனித்துவம் உண்டா?
- அறிவு என்பதும் மனதின் பல ஓட்டங்களைப்போல் ஒன்றுதானா அல்லது அறிவு நன்மை தீமைகளைத் தாண்டிய ஒரு அடிப்படை உண்மையா?

இவைகளையும் இன்னும் இவற்றைப் போலுள்ள பல ஆழமான தலையாய பிரச்சினைகளையும் சலிக்காமல் பட்சபாதமில்லாமல் அலசிப் பார்க்கும் இலக்கியம் தான் உபநிஷத்துக்கள்.

மேலும் எதையும் ஒரே முடிந்த முடிவாகச் சொல்லிவிடாமல், கேள்விகளை எழுப்புவதும், கேள்விகளிலுள்ள விந்தை பொதியும் மாற்றுத் தத்துவங்களை வெளிக் கொணறுவதும், பிரச்சினையைப் பற்றிப் பல ஆன்மிகவாதிப் பெரியார்கள் சொந்த அனுபவத்தைக்கொண்டு என்ன சொல்கிறார்கள் என்று அவர்கள் வாயாலேயே சொல்ல வைப்பதும், உபநிஷத்துகளின் முத்திரை நடை.

இதனால் உலகின் எண்ணச்செறிவுகளிலேயே உபநிஷத்துக்கள் ஒரு உயர்ந்த இடத்தில் வைக்கப்படவேண்டியவை என்பது கற்றோர் யாவரின் முடிவு.

## உபநிஷத் என்ற வடமொழிச்சொல்லின் பொருள்

இதில் மூன்று வேர்ச்சொற்கள் உள்ளன. 'உப', 'நி' மற்றும் 'ஸத்'. சொற்கள் புணரும்போது ஸத் என்பது ஷத் ஆகிறது.

- 'உப' என்ற சொல்லினால் குருவை பயபக்தியுடன் அண்டி அவர் சொல்லும் உபதேசத்தைக் கேட்பதைக் குறிக்கிறது.
- 'நி' என்ற சொல்லினால், புத்தியின் மூலம் ஏற்படும் ஐயங்கள் அகலும்படியும், மனதில் காலம் காலமாக ஊறியிருக்கும் பற்பல எண்ண ஓட்டங்களின் பாதிப்பு இல்லாமலும், அவ்வுபதேசத்தை வாங்கிக் கொள்வதைக் குறிக்கிறது.
- 'ஸத்' என்ற சொல்லினால் அவ்வுபதேசத்தின் பயனான அஞ்ஞான-அழிவும், பிரம்மத்தின் ஞானம் ஏற்படுவதைக் குறிக்கிறது.

## பகுப்பு

வேதப்பொருள் மூன்று வகைப்படும் அவை கர்ம காண்டம்,உபாசன காண்டம்,மற்றும் ஞான காண்டம்.

இவற்றுள் ஞான காண்டம் தான் 'உபநிஷத்' எனப்படுவது. ஆன்மாவைப் பரம் பொருள் அருகே உய்ப்பது ஆகும். அதாவது வேதத்தின் உட் பொருள் எனக் கொள்ளலாம்.

இவ்விதம் 108 உபநிஷத்துக்கள் இருப்பதாக முக்திகோபநிஷத்தில் ராமபிரான் ஆஞ்சனேயருக்குச் சொல்கிறார்

.அவற்றில் பத்து மிக முக்கியமானவை என்பது வழக்கு. மிகப் பழமையானவையும் கூட.

காலடி தந்த ஆதிசங்கரர், ஸ்ரீபெரும்புத்தூர் வள்ளல் இராமானுஜர், உடுப்பி மத்வர், நீலகண்ட சிவாசாரியார் ஆகிய நான்கு சமயாசாரியர்களும் முறையே அத்வைதம், விசிஷ்டாத்வைதம்,

துவைதம், சித்தாந்தம் என்னும் கொள்கைகளையொட்டி மேற்கூறிய பத்து முக்கிய உபநிஷத்துக்களுக்கும் விரிவுரை எழுதியுள்ளனர்.




இராமானுஜர் மத்வர்

உபநிஷத்பிரம்மேந்திரர் (18வது நூற்றாண்டு) என்று பெயருள்ள துறவி 108 உபநிஷத்துக்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

பாரதத்தில் தோன்றிய மெய்யியல் பெரியோர் ஒவ்வொருவரும் உபநிஷத்துக்களில் உள்ள கருத்துக்களைப்பற்றி விரிவாக்கம் தரவோ, ஒரு சில உபநிஷத்துக்களுக்காவது உரையோ விளக்கமோ எழுதவோ தவறியதில்லை.

108 உபநிஷத்துக்களும் கீழ்க்கண்டவாறு பகுக்கப்படுகின்றன:

- 10 முக்கிய உபநிஷத்துக்கள். அவையாவன:
    - ஈசா வாஸ்ய உபநிடதம் (சுக்ல யசூர்வேதம் - வாஜஸனேய சாகை)
    - கேன உபநிடதம் (சாம வேதம் - தலவகார சாகை)
    - கடோபநிடதம் (கிருஷ்ணயஜுர் வேதம் - தைத்திரீய சாகை)
    - பிரச்ன உபநிடதம் (அதர்வண வேதம்)
    - முண்டக உபநிடதம் (அதர்வண வேதம்)
    - மாண்டூக்ய உபநிடதம் (அதர்வண வேதம்)
    - ஐதரேய உபநிடதம் (ரிக் வேதம் - ஐதரேய சாகை)
    - தைத்திரீய உபநிடதம் (கிருஷ்ணயஜுர் வேதம் - தைத்திரீய சாகை)

   - பிரகதாரண்யக உபநிடதம் (சுக்லயஜுர் வேதம் - கண்வ சாகை, மாத்யந்தின சாகை)
   - சாந்தோக்யம் (சாம வேதம் - கௌதம சாகை)

- சாமானிய வேதாந்த உபநிடதங்கள்
- யோக உபநிடதங்கள்
- சன்னியாச உபநிடதங்கள்
- வைணவ உபநிடதங்கள்
- சைவ உபநிடதங்கள்
- சாக்த உபநிடதங்கள்

இவைகளில்,

10 ரிக்வேதத்தைச் சார்ந்தவை

32 கிருஷ்ண யஜுர்வேதத்தைச் சார்ந்தவை

19 சுக்ல யஜுர்வேதத்தைச் சார்ந்தவை

16 சாம வேதத்தைச் சார்ந்தவை

31 அதர்வணவேதத்தைச்சார்ந்தவை.

முக்கிய பத்து உபநிஷத்துக்களைத்தவிர, இதர 98 இல்

- சுவேதாச்வதரம்
- கௌஷீதகீயம்
- நரசிம்மபூர்வதாபனீயம்
- மகோபநிஷத்
- கலிஸந்தரணம்
- கைவல்யம்
- மைத்ராயணீயம்

ஆகியவையும் முன்னிடத்தில் வைக்கப்பட்டுப் பேசப்படுகின்றன.

## உபநிடதங்களின் வகைகள்

இந்த உபநிடதங்கள் 112 வரையும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால் இவைகளில் அதிகமானவை பிற்காலங்களில் உபநிடதங்களாக உருவாக்கிக் கொள்ளப்பட்டவையாகவே இருக்கின்றன.

இருப்பினும் இவற்றில் கீழ்காணும் பதின்மூன்று உபநிடதங்கள் உண்மையானவை என்று கொள்ளலாம். அவற்றின் காலங்களைக் கொண்டு அவைகளை வகைப்படுத்தலாம்.

- பழங்கால உபநிடதங்கள்
- இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள்
- மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள்
- நான்காம் காலகட்ட உபநிடதங்கள்

## பழங்கால உபநிடதங்கள்

கி.மு. 700 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் இருந்த மூன்று உபநிடதங்கள் பழங்கால உபநிடதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை

1. ஈசா
2. சாந்தோக்யம்
3. பிரகதாரண்யகம்

## இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள்

கி.மு. 600 -500 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த இரண்டு உபநிடதங்கள் இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவை

1. ஐதரேயம்
2. தைத்திரீயம்

## மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள்

கி.மு. 500 -400 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த ஐந்து உபநிடதங்கள் மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவை

1. பிரச்னம்
2. கேனம்
3. கடம்
4. முண்டகம்
5. மாண்டுக்யம்

## நான்காம் காலகட்ட உபநிடதங்கள்

கி.மு. 200 -100 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இருந்த மூன்று உபநிடதங்கள் நான்காம் காலகட்ட உபநிடதங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவை

1. கவுஷீதகி
2. மைத்ரீ
3. சுவேதாசுவதரம்

## வேதாத்திரியார் கருத்து.

பயிற்சி இல்லாது என்னதான் வேதாந்தம் படித்தாலும் உண்மை பிடிபடாது. அதனால்தான் வேதங்களுக்கு எல்லாம் விளக்கம் எழுதிய போது உபநிஷத்து என்ற பேர் வந்தது.



உபநிஷத்து என்றால் இறைவனுக்கு மிக அருகில் கொண்டு போய் வைப்பது. அருகில் கொண்டு போய் சேர்த்து விடலாமே தவிர, உணர்த்தி விட முடியாது. தவந்தான் உணர்த்தும். தவத்தால் தான் இறைநிலையை உணரலாம்.



# 18. மனுதரும சாத்திரம்

இந்துக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையில் பின்பற்றவேண்டிய சடங்குகள், சம்பிரதாயங்கள், அற ஒழுக்க விதிமுறைகளை ஒழுங்குபடுத்திக் கூறும் நூல் மனுதர்ம சாஸ்திரமாகும்.

இதனை சுவாயம்பு (மனு) எனும் பண்டைய வேத கால முனிவர் தொகுத்தார். இது 2685 செய்யுட்களாகவும், 3 பகுதிகளாகவும், 12 அத்தியாயங்களாகவும் அமைந்துள்ளது.

இந்நூலை முதலில் கல்கத்தா உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர் சர்.வில்லியம் ஜோன்ஸ் என்பார் 1794ல் சமசுகிருதத்தில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழில் திருலோக சீதாராம் என்பார் மொழி பெயர்த்துள்ளார்.

தனி மனித மற்றும் சமுதாய வாழ்க்கையை நெறிப்படுத்திக் கூறும் ஒரு சட்டக்கோவையாக இது. இந்தியாவில் நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தது.



மனுநீதிச் சோழன் இதனை முழுமையாகப் பின்பற்றி ஆட்சி செய்ததாக போற்றப்படுகிறான். இந்து தத்துவத்தினுள் சாதியம் சார்ந்த கருத்துக்களை வலியுறுத்தும் மேட்டுக்குடியினரின் உத்தியாக இதனை விமர்சிப்பவர்களும் உள்ளனர்.

இந்நூலுக்கு மானவ தர்மம்(சமசுகிருதம்) என்ற பெயரும் உள்ளது. அதற்கு மானுட அறம் என்று பொருளாகும்.

## மனுவின் காலமும் வாழ்ந்த பகுதியும்

மனு வாழ்ந்த காலம் கி.மு 1500 என்பதை சதபத பிராமணத்திலும், சொராஷ்ட்டிர மத வேதநூலான ஜெண்ட் அவஸ்தாவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


ரிக் வேத கால நதிகளான சரசுவதி மற்றும் திருட்டாதுவதி நதிக்கரை பகுதிகளான பிரம்மவர்த்த பகுதிகள் [இன்றைய வடக்கு இராசபுதனம் மற்றும் தெற்கு அரியானா] பெருமழையால் அழிந்த பின்பு ஆரியர்கள்,விந்தியமலைக்கு வடக்கு பகுதிகளில் [தற்கால நேபாளம், உத்தர பிரதேசம்,பிகார்,மத்திய பிரதேசம்,வங்காளம், குசராத் மற்றும் கிழக்கு இராசபுதனம்] குடியேறினர்.

அப்பகுதி பின்பு ஆரிய வர்த்தம் எனற பெயரால் அழைக்கப்பெற்றது.அப்போது மற்ற முனிவர்கள் சுவாயம்பு மனுவையும் அணுகி இயற்கைச் சீற்றங்களை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் சமூக வாழ்க்கை நெறி முறைகளை எவ்வாறு மக்கள் வகுத்து

கொண்டு வாழ்வது என்று கேட்டதற்கு, மாமுனி மனு வகுத்து கொடுத்ததே மனுஸ்மிருதி என்ற சட்ட தொகுதிகளாகும்.

## சிறப்பம்சங்கள்

இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் இந்திய குடியுரிமை சட்டங்கள் இயற்றுவதற்கு முன்பு இந்தியாவை ஆண்ட இசுலாமியர்களும் பிரித்தாணியர்களும் இந்து மக்களுக்கு எதிரான குற்ற வழக்குகளிலும், குடி உரிமை வழக்குகளிலும் மனு தரும சாத்திரத்தின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கினர்.



மேலும் இந்நூலை பின்பற்றி சந்திரகுப்த மௌரியரின் தலைமை அமைச்சர் கௌடில்யர் என்ற சாணக்கியர் படைத்த அர்த்த சாஸ்திரம் என்ற அரசு நிர்வாகம் தொடர்பான நூலை எழுதி புகழ் பெற்றார்.

## தாக்கங்கள்

மனு தர்ம சாத்திரத்தின் தாக்கம் இந்தியா முழுவதும் காணக்கிடைக்கிறது. வருண மற்றும் சாதிப் பாகுப்பாடுகளின் மூல கருத்தாவாக மனுதர்மம் கருதப்படுகிறது.

## உள்ளடக்கம்

பரம் பொருளாகிய பகவான் தமது விருப்பத்தின் காரணமாக பிரம்மா மூலம் அண்ட சராசரங்களை படைத்தார்.

மனித குலத்தை பெருக்கவே மரிசி, ஆங்கிரசர், அத்திரி, புலத்தியர், புலகர், கிருது, பிரசேதகர், வசிட்டன், பிருகு மற்றும் நாரதர் எனும் பத்து பிரசாபதிகளை படைத்தார்.

இந்த பிரசாபதிகள் மூலம் சுவாயம்பு மனு உட்பட எழு மனுக்களும், தேவர்கள், சுவர்க்கலோகம், மாமுனிகள், யட்சர்கள், காந்தர்வர்கள், கிண்ணரர்கள், கிம்புருடர்கள், அசுவனிகுமாரர்கள், அட்டதிக்கு பாலகர்கள், அசுரர்கள், அப்சரசுகள், மருத்துக்கள், இராக்கதர்கள், பைசாசர்கள், நாகர்கள், கருடர்கள், சர்ப்பங்கள், பிதுர்கள், தாவரங்கள், விலங்கினங்கள், நீர் வாழ் பிராணிகள் தோன்றின.

பின்னர் மக்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க சமூகம் கட்டுக்கோப்பாக இயங்க வர்ண மற்றும் ஆசிரம தருமங்களை மனு வகுத்து கொடுத்தார்.

இது ஆசாரப்பகுதி, விவகாரப்பகுதி, பிராயச்சித்தப் பகுதி என மூன்று பகுதிகளையும் 12 அத்தியாங்களையும் கொண்டது.

### 1வது அத்தியாயம்

**உலகத் தோற்றம்**:-அண்ட சராசரங்களின் தோற்றம், தேவர்கள்,மானிடர்கள், அசுரர்கள், தோற்றம் , காலக்கணக்கீடு, நால்வகை வர்ண சமூகம், நால்வகை ஆசிரமம் மற்றும் அதன் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி விவரிக்கிறது.

### 2வது அத்தியாயம்

பிரம்மச்சர்யம்:- பூணுல் அணிதல் (உபநயனம்), குருபக்தி, வேதம் படித்தல், வழிபாட்டு முறைகள் மற்றும் குருகுல நிலை பற்றி விவரிக்கிறது.

### 3-5 அத்தியாயங்கள்

அந்தணர் **தருமம்**:-இல்லறத்தின் மேன்மைகள், திருமண உறவுகள், யக்ஞம், விருந்தோம்பல், பலியிடுதல், இறந்த முன்னோர்களுக்கு செய்ய வேண்டிய பிதுர் கடன்கள், தகாத உறவுகள், கலப்புத் திருமணங்கள், விலக்க வேண்டியவைகள், வேதம் ஒதுதல், ஒதுவித்தல், ஒழுக்க நெறிகள்,உணவு முறைகள், தூய்மை, பெண்டிர் தொடர்பான விதிகள், உண்ணத்தக்கவை, தகாதவைகள், விசேட காலங்களில் புலால்

உண்ணல், பிறப்பு-இறப்பு தீட்டு விதிகள், பெண்களுக்கு உகந்தவைகளும், விலக்கத்தக்கவைகளும் தொடர்பான விதிகள்.

### 6வது அத்தியாயம்

வானப்பிரத்தம் & துறவறம்:-காட்டில் வாழ்தல், உணவு முறைகள் ,ஒழுக்க விதிகள், செபம்,தவம் செய்தல்,வேத வேதாந்த விசாரம் செய்தல் தொடர்பான விதி முறைகள்.

### 7வது அத்தியாயம்

சத்திரிய தருமம்:-மன்னர்களின் மாண்புகள் & பண்புகள், கடமைகளும் பொறுப்புகளும்,அரசின் நீதிநெறி சட்டங்கள்,அரசியல் சிந்தனைகள்,அரசின் அதிகாரிகள்,தலைநகரம்,போர் அறம்,உள்நாட்டு நிர்வாகம்,வரி விதித்தல்,பகை அரசர்களின் பலம் பலவீனம் அறிதல்,பகை நாட்டை முற்றுகையிடல்,போர் செய்யும் முறைகள்,வெற்றி வாகை சூடல்,புலவர்களுக்கு பரிசு வழுங்குதல்,வேதம் அறிந்த அந்தனர்களுக்கு தானம் வ்ழங்குதல்,வேள்விகள் செய்தல்,சமூகத்தில் வர்ணாசிரம தரும நெறிகள் காத்தல் பற்றி விவரிக்கிறது.

### 8வது அத்தியாயம்

**நீதிநெறிசட்டங்கள்**:-குடிவகுப்பு, நீதிமன்றம், உடைமைகள், புதையல், களவுகள், கடன்கள், வட்டி, கொதுவை, காப்பு பொருள், பொருள் விற்பனை, பொருள் விற்பனை விலை நிர்ணயம்,அடிதடி கலவரம், பலாத்காரம், நிலத்தகராறு, நட்ட ஈடு,மான-நட்ட ஈடு, உடன்படிக்கைகள், நம்பிக்கை துரோகம், செய்கூலி, கலப்படம் தகாத செயல்கள் பற்றி விவரிக்கிறது.

பாலியல் பலாத்காரம் என்று அழைக்கக் கூடிய ஒரு குற்றத்தை ஒருவன் செய்தால் அவன் எந்த வருணத்தைச் (சாதி) சேர்ந்தவன் என்ற அடிப்படையிலேயே அவனுக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனையை மனுதர்ம சாத்திரம் தீர்மானிக்கிறது.

மேல்வருணத்தார் மூவரின் (அதாவது பிராமணன், சத்திரியன், வைசியன்) மனைவியையும் ஒருவன் (சூத்திரன்) தனது வலிமையாற் கூடினால் உயிர்போகும் வரை அவனை தண்டிக்கவும்

– *மனுதரும சாத்திரம், அத்தியாயம் 8. செய்யுள் 358*

கற்பினளான பிராமணப் பெண்ணைக் கூடும் வைசியனக்கு ஒரு வருட காவலும் ஆஸ்திப் பறிமுதலும் தண்டனைகள். இவ்விதம் குற்றமிழைத்தவன் சத்திரியனாயிருப்பின் ஆயிரம் பணம் தண்டம் விதித்து கழுதை மூத்திரத்தை விட்டு அவன் தலையை மொட்டை இடுக!

– *மனுதரும சாத்திரம், அத்தியாயம் 8. செய்யுள் 374*

ஒரே குற்றத்திற்கு சூத்திரருக்கு மரண தண்டனை, வைசியருக்கு ஒரு வருடம் சிறையும் ஆஸ்திப் பறிமுதலும், சத்திரியருக்கு ஆயிரம் பணம் அபராம் மொட்டையடித்தல், பிராமணருக்கு காயமின்றி பொருளுடன் ஊரைவிட்டு துரத்துதல்.

### 9வதுஅத்தியாயம்

வைசியர், **ஆடவர் & பெண்டிர் அறம்**:- திருமணம்,மகப்பேறு,பாகப்பிரிவினை,கவறாடல் முதலிய குற்றங்களுக்கு தண்டனைகள் மற்றும் வைசியர்களின் கடமைகள் பற்றி விவரிக்கிறது.

### 10வது அத்தியாயம்

சூத்திரர் & வர்ண கலப்பு சாதிகள் **மற்றும் ஆபத்து தர்மம்**:-சூத்திரர்களின் கடமைகள், கலப்பு சாதிகளின் தோற்றமும் சமூகத்தில் அவர்களுக்குரிய தகுதிகளும், கல்வி ஞானத்தால் கீழ்ப்பிறப்பாளர்கள் உயர்நிலை அடைதல், ஆபத்து காலங்களில் உயர்குடி மக்களுக்கு விதி விலக்குகள் தொடர்பான விதிகள் பற்றி விவரிக்கிறது.

### 11வது அத்தியாயம்

**குற்றங்களும் அதற்க்கான கழுவாய்களும்** :- தெரிந்தும் தெரியாமலும் செய்த குற்றங்களுக்கு செய்ய வேண்டிய கழுவாய்கள், யாகம், பாவங்களின் விளைவுகள், குற்ற வகைகள், உண்ணத்தகாதவைகள், மறுபிறப்பு, முக்குணங்கள் பற்றி விளக்குகிறது.

### 12வது அத்தியாயம்

**வினைப் பயன்கள்**:- நல்வினை தீவினைகளும் அதன் விளைவுகளும், முக்குணங்கள், வேதங்கள் மற்றும் வேதாந்தங்களின் வாய்மை, ஆன்ம ஞானம், முக்திக்கு வழிகள் முதலியவைகளை விவரிக்கிறது.

### மனுதரும சாத்திரமும் பெண்களும்

பெண்களுக்கு தனி அடையாளங்களையோ சுயேச்சையான செயல்பாடுகளையோ மனு தர்மம் நிராகரிக்கிறது. அவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளை அது அனுமதிக்கவில்லை.

இளமையில் தந்தையாலும் பருவகாலத்தில் கணவனாலும் முதுமையில் மைந்தராலும் காக்கப்பட வேண்டியவர். ஆதலால் மாதர் எஞ்ஞான்றும் தம்மிச்சையாக இருக்கக் கூடாதவர்

– *மனுதரும சாத்திரம் , அத்தியாயம் 9 செய்யுள் 3*

எந்தப் பருவத்தினளாயினும் தனது இல்லத்தில் கூட எந்தப் பெண்ணும் தன்னிச்சைப்படி எச்செயலும் இயற்றலாகாது.

– *மனுதரும சாத்திரம் , அத்தியாயம் 5 செய்யுள் 147*

பெண்களை ஒழுக்கக் கேடானவர்களாகவும் மயக்கும் குணம் கொண்டவர்களாகவும் மனுதர்மம் சித்தரிக்கிறது. பாலியல் ரீதியில் ஒழுக்கக் கேடுகள் எவையாவது நடந்தால் அதில் ஆணுக்கு பொறுப்பு எதுவுமில்லை என்பது போலவும் அவனை ஒரு அப்பாவியைப் போலவும் கருதி பெண்களை மனுதர்மம் இழிவுபடுத்துகிறது.

தங்கள் அலங்காரத்தால் மனிதரைக் கவரும் தன்மை பெண்களின் இயல்பாகையால் அறிந்தோர் பெண்களிடம் கவனக் குறைவாக நடந்து கொள்ளமாட்டார்கள்.

– *மனுதரும சாத்திரம் , அத்தியாயம் 2 செய்யுள் 213*

புலன்களை அடக்கியவனாயினும் அறிவிலியாயினும் அவர்களைத் தங்களது தொடர்பால் காமக்குரோதமுள்ளவனாகச் செய்வர் மாதர்.

– *மனுதரும சாத்திரம் , அத்தியாயம் 2 செய்யுள் 214*

பெரும்பாலும் மாதர் கற்பிலார் என்றே பெரிதும் பல நூல்களிலும் குறப்படுவனவற்றையும் கேட்பீராக.

– *மனுதரும சாத்திரம் 9, அத்தியாயம் செய்யுள் 19*

இவ்வாறு பெண்களை இழிவுப்படுத்தும் மனுதர்மம் மாதரைக் காப்பாற்றுவதற்கான காரணத்தையும் விளக்குகிறது .

வீட்டிற்கு வேண்டிய பாத்திரம் முதலியவற்றை தேடிப் பெறுவதற்காக பொருளை அவளிடம் கொடுத்தும் அதனைக் காப்பாற்றி வைத்து வேண்டிய போது செலவிடும்படி செய்தும் தட்டு முட்டுச் சாமான்களை சுத்தமாக வைத்துக் கொள்ளச் செய்தும் வீட்டை துப்புரவாக்கி வைத்தல், தேவ பூசைக்கான ஏற்பாடுகளைச் செய்தல், அடுக்களைப் பொறுப்பு, பாத்திரம் படுக்கை முதலியவற்றைச் சரியாக கவனித்துக் கொள்ளல் போன்ற இன்றியமையாத இல்லத்துக் காரியங்களை மனைவிக்குக் கற்பித்து அவற்றை அவளைக் கொண்டு செய்வித்தல் போன்றவற்றாலும் அவளது மனம் வேறிடம் செல்லாமற் காக்க!

– *மனுதரும சாத்திரம் , அத்தியாயம் 9 செய்யுள் 11*

கணவன் எவ்வளவு மோசமானவனாக இருந்தாலும் பெண் அவனுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்று விதிக்கிறது மனுதர்மம்.

கணவன் சூதாடுகிறவனாயினும் குடிகாரனாக இருந்தாலும் பிணியாளனாயினும் மனைவி அவனுக்கு செருக்குற்று பணிபுரியாமலிருந்தால் அவளுக்கு அழகு செய்தல், ஆடை, படுக்கை இவற்றை மறுத்து மூன்று மாதம் விலக்கி வைக்கவும்.

– *மனுதரும சாத்திரம், அத்தியாயம் 9 செய்யுள் 78*

இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றையுடையவனாயினும் கற்பினாளான பெண் தன் கணவனை தெய்வமாகப் பேணுக.

– *மனுதரும சாத்திரம், அத்தியாயம் 5 செய்யுள் 154*

மறுமையின் பத்தில் நாட்டமுள்ள பெண்மணி தன் கணவன் இருப்பினும் இறப்பினும் அவன் கருத்துக்கு மாறுபாடாக நடக்கக் கூடாது.

– *மனுதரும சாத்திரம், அத்தியாயம் 5 செய்யுள் 156*

## *சாதி - மனுவின் பார்வையும் வேதாத்திரியப் பார்வையும்*

திருதிருவள்ளுவர் மாணிக்கவாசகர் போன்ற சான்றோர்கள் சாதி சமய சாத்திர வேறுபாடுகளைக் 'காலந்தோறும் கண்டித்து ஒதுக்கி வந்திருப்பினும் இவ்வெற்றுமைகள் யாவும் நீர்ப்பாசி போல் மிண்டும் மீண்டும் நாட்டில் நிலைபெற்று வந்து கொண்டுதான் இருக்கின்றன. இச்சாதிமத வேற்றுமைகள்தான் நம் மக்களை ஒன்றுபட்டு வாழ விடாமல் செய்து அந்நியருக்கு அடிமைப்படலவும் வாய்த்தன.

இந்த நிலையில் வள்ளலார் முன்னோர்கள் அனைவரினும் தெளிவாக –சாதிமதங்களைச்சாடி மக்களை ஒன்றுபட்டு 'வாழுமாறு அறை கூவினார்.

'சாதி மதம் சமயம் எனும் சங்கடம் விட்டறியேன்

சாத்திரச் சேறாடுகின்ற சஞ்சலம் விட்டறியேன்' (3319)

வள்ளலார் தொடங்கிய சன்மார்க்க் விவேக விருத்தி பத்திரிகைக்கு இந்து சமயத்தில் அய்யர்– செட்டி– பிள்ளை– முதலியார்– பரங்கிப்பேட்டை காதர் சாயபு– தானப்ப நயினார் என இசுலாமிய சமண சமயத்தவரும் உறுப்பினராக இருந்துள்ளனர்.

இப்படி வள்ளலார் காலத்தில் ஒடுங்கிய சாதி சமயங்கள் 'மீண்டும் இன்று துளிர்விட்டுச் செழித்து வருவதை கண்ட வேதாத்திரி மகரிசி சாதியை ஒழிக்க மீண்டும் சாட்டையைக் கையிலெடுத்தார்.

'கருவான நாதவிந்தில் ஜாதியேது? (ஞாக588)

'விஞ்ஞானம் இயந்தியங்கள் பெருகிய பின் சாதி

வேற்றுமைகள் மனிதரிடை நீடித்தல் தீதே' (ஞா. க. 589)

‘வரும் நாளில் கல்வியொடு பொருளாதாரம்

வளர்ச்சி பெற்றால் ஜாதியெலாம் ஒழிந்திடாதோ’ (ஞா. க592)

*பெண்கள் - மனுவின் பார்வையும் வேதாத்திரியப் பார்வையும்.*



மகரிசி தாய்மைக்கு ஏற்றுவகையில் அமைந்துள் ்பெண்ணின் உடற்கூற்றியயலைப் போற்றுகிறார்.

‘எல்லையற்ற ஆற்றலுள்ள ்இவைன்திரு உள்ளமென்ன

எவ்வுயிரும் தோன்றதற்கு ஏற்றதொரு திருவழியாய்

வல்லமையாய்ப் ்பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே’

என்று இறைத ்தத்துவமாம் கடவுளுக்கு அடுத்த நிலையில் பெண்மைக்கு சிறப்பிடம் கொடுக்க வேண்டுமென்கிறார்.

'பெண் வயிற்றிலுருவகிப் பினனுமந்தப்

பெண் கொடுத்த பால்உண்டே வளர்ந்து மேலும்

பெண்துணையால் வாழுகின்ற பெருமை கண்டு

பெண்மையிடம் பெருமதிப்பு அறிஞர் கொள்வார்' (ஞாக. 1 பக்.170)

பெண்ணுக்குக் கல்வியையும் பொருளாதார உரிமையையும் பெண்ணியக் கோட்பாடுகள் பெரிதும் வலியுறுத்துகின்றன. திருமண வாழ்க்கை உணவு உடை என்ற அடிப்படைத் தேவைகளுக்கான அடிமை வாழ்வாக அமைவதில் மகரிசிக்கு உடன்பாடில்லை.

'ஒரு பெண் தன் உடலினையே அர்ப்பணித்து

உணவு உடை வாடகைபோல் பெற்றுலாவும்

ஒரு இழிந்த அடிமைநிலை பெண்ணினத்திற்கு

உலகினிலே இனி வேண்டாம் ஒவ்வோர் பெண்ணும்

ஒரு தொழிலைச் செய்துபொருள் ஈட்டிக் காத்து

உண்டுடுத்துக் கடமை செய்யும் உரிமை வேண்டும்'

( ஞா. குக 1 பக்.170)

கற்பு நெறியை ஆணுக்ககும் பெண்ணுக்கும் ஒருங்கே வலியுறுத்துகின்றார் வேதாத்திரி மகரிசி. மறுமணம் செய்து கொள்வதிலும் ஆண் பெண் சமத்துவம் தேவை என்பது அவருடைய கருத்து.

'ஆண்களோ பெண்டிழந்தால் அவர் மறுமணம் கொள்வார்

வீண்பழி சொல்வார் இந்த விதமதைப் ' பெண்கள் செய்தால்'

என்று ணெ்களுக்கென வாதிடுகின்றார். பெண்ணை ஒதுக்குகின்ற துறவறத்திற்கு மாறாகப் 'பெற்றோரை பிறந்தகத்தை பிறந்த ஊரை விட்டுப் பிரிந்து வந்து பொருநோக்கில் கடமையறம் ஆற்றுகின்ற 'பெண் பற்றற்ற துறவி போன்று தான் செயல்படுகிறாள் என்பது மகரிசியின் வாதம்.

இல்லறத்தைத் திறமையுடன் நடத்த ஏற்றதொரு எண்ணநிலையே துறவறம்' என்று தாம் உணர்ந்ததை உலகுக்கு உணாத்துகின்றார்.

'உடன்கட்டை ஏறுதல்' என்ற சதி மற்றொரு கொடுமையான செயல். இறந்த கணவன் உடலோடு சேர்ந்து மனைவி உயிரோடு எரிய வேண்டும். ஆங்கிலேயர் காலத்தில் நீக்கப்பட்ட் இச்சட்டத்தை மீண்டும் கொண்டுவர முற்பட்டன சில மத வெறியர்கள்.

மீண்டும் உடன்கட்டை ஏறும் ' பழக்கத்தை அமல்படுத்த நினைத்த மதவெறியர்களுக்குச் சாட்டையடி கொடுக்கிறார் மகரிசி.

'ஆண்கள் இறந்து விட்டால் பெண்கள் உடன்கட்டை ஏற வேண்டுமென்ற சட்டத்தை மீண்டும் கொண்டு வருவதாக இருந்தால் மனைவி இறந்தால் அவள் கணவனும் உடன்கட்டையே வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும்' என்று கூறி சமயச் ' சான்றோர்களைத் தலைகுனிய வைத்தார் நம் மகரிசி.

பெண்கள் மேம்பாடு குறித்து தம் எண்ணங்களுக்கு மகரிசி செயல்வடிவம்கொடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அவற்றுள் முக்கியமானவை:

1. பெண்களுக்கான அகில உலகப் பெண்கள் ஆன்மீகக் கல்வி அறக்கட்டளை.
2. 'அன்னை லோகாம்பாள்' பிறந்த நாளான ஆகஸ்ட் 30 ஆம் நாளை மனவளக்கலை மன்றங்கள் மூலம் 'மனைவி நல வேட்பு' நாளாகக் கொண்டாடுவதை நடைமுறைப்படுத்தியமை.

1. பெண் கல்வியும் பொருளாதார உரிமையும் தொடர்ந்து வற்புறுத்தி நடைமுறைப்படுத்தும் முயற்சிகள்.

வையகம் வளமுடன் வாழ உலக மக்களில் சரிபாதியாக அமையும் மகளிர் மேம்பாடு பற்றிய வேதாத்திரி மகரிசியும் விழையும் செயல்பாடு, உலகெங்கும் பரவலாக்கம் பெற்றுப் பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் என்ற நம்பிக்கை வலுப்பெற்று வருகிறது.



# 19. பிரம்ம சூத்திரம்

**வியாசரால் எழுதப்பட்டது பிரம்ம சூத்திரம்**. சூத்திரம் என்றாலே சுருங்கக்கூறுவது.

மிகப்பெரிய உண்மைகளை மிகச் சில சொற்களால் சொல்கிறது பிரம்ம சூத்திரம். எது உபநிடதங்களில் உள்ளதோ, எதுவெல்லாம் கீதையில் பேசப்பட்டதோ அதுவெல்லாம் பிரம்ம சூத்திரத்தில் அடக்கம்.



அண்டத்தில் உள்ளதை அணுவாக்கித் தந்திருக்கிறார் வியாசர். உபநிடதங்களில் சொல்லப்படுபவற்றை ஒழுங்கமைத்துச் சுருக்கி விளங்கவைக்கும் முயற்சியில் இயற்றப்பட்ட நூல். இந்நுநூல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது.

பகவத்கீதையில் பிரம்ம சூத்திரம் தொடர்பான குறிப்புகள் வருவதால் இது கீதைக்கும் முற்பட்டதெனத் தெளிவாகிறது.

## பிரம்ம சூத்திரம் பெயர்க் காரணம்

இந்து தத்துவங்களின்படி பரம்பொருளை விளக்குவதற்காகச் சூத்திரங்கள் எனப்படும் நூற்பாக்களால் ஆனதால் இந்நூலுக்குப் பிரம்ம சூத்திரம் என்னும் பெயர் உண்டாயிற்று.


வேதத்தின் இறுதிப் பகுதியாக அதாவது வேதத்தின் அந்தமாகக் கருதப்படும் உபநிடதங்களில் சாரமாக அமைந்திருப்பதன் காரணமாக இது *வேதாந்த சூத்திரம்* எனவும், பிரம்ம மீமாம்சை, வேதாந்த தர்சனம், என்கிற பெயர்களால் இது அறியப்படுகிறது.

மீமாம்சம் என்றால் ஆழமாக சிந்திப்பது, ஆராய்வது, விவாதிப்பது என்று பொருள்.

வேதாந்தம் என்றால் வேதத்தின் முடிவு பகுதியான, உத்தர மீமாம்சை என்று அழைக்கப்படும் உபநிடதங்கள். வேதாந்த தரிசனம் என்பதில் தரிசனம் என்ற சொல்லுக்கு ‘பார்த்து அறிதல்’ என்று பொருள். பார்த்ததை மட்டும் அறிவதல்ல, பார்த்ததின் உட்பொருளையும் அறிவதாகும்.

## பிரம்ம சூத்திரத்தின் அமைப்பு

555 சூத்திரங்களை கொண்ட பிரம்ம சூத்திரம் நான்கு அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது.




ஒவ்வொரு அத்தியாயத்திலும் நான்கு பாதங்கள், ஒவ்வொரு பாதத்திலும் அதிகரணங்கள் (தலைப்புகள்) என்று சூத்திரங்கள் என்று வகுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக 1.1.1 என்றால் முதல் அத்தியாயம், முதல் பாதம், முதல் சூத்திரம் ஆகும். முதலாவது சமன்வய அத்தியாயம், இது சமன்படுத்துகிறது.

இரண்டாவதான அவிரோதா அத்தியாயம், முரண்பாடுகளை களைகிறது.

மூன்றாவதான சாதனா அத்தியாயம், வீடுபேறுக்கான வழிகளைப் பயில்வது. நான்காவது பலன் அத்தியாயம் வீடுபேற்றை விவரிப்பது.

## பிரம்ம சூத்திரத்தின் சிறப்பம்சம்

இவை வேதாந்த தத்துவத்தை விளக்குபவையாக கருதப்படுகின்றன. "வேதங்கள் என்கிற மரத்தில் பூத்திருக்கிற உபநிடதப்பூக்களைத் தொடுத்திருக்கிற ஞானமாலையே பிரம்ம சூத்திரம்" என்கிறார் ஆதிசங்கரர்.

"நாம், இந்த உலகம், இதற்கு காரணமான மூலப்பொருளான பிரம்மம்" ஆகிய மூன்று தத்துவங்களை விவாதிக்கிறது.

அண்டத்தில் உள்ளதை அணுவாக்கி தந்திருக்கிறார் வியாசர். பிரம்ம சூத்திரம் கைக்குள் அகப்படுத்தப்பட்ட கடல். உலக உயிர்கள்

அனைத்தும் பிரம்மத்துடன் தொடர்புடையவைதாம். அந்தத் தொடர்பை அறிய பிரம்மத்தை அறிய வேண்டும்.

ஆத்ம ஞானம், பிரம்ம சிந்தனை, பிரம்ம தியானம் தேவை என்கிறார் ஆதிசங்கரர்.

பணம், புகழ், பதவி, உலகியல் இன்பம் ஆகியவைகளைத் தாண்டி ஆராய்பவர்களுக்கு பிரம்ம சூத்திரம் ஒருவழிகாட்டி.

பிரம்ம சூத்திரம் மதசார்பற்றது. எந்தக் கடவுளைப் பற்றியும் குறிப்பிட்டுப் பேசவில்லை என்பதுதான். மிகப்பெரிய உண்மைகளை சூத்திரங்களாக வடிக்கப்பட்டுள்ளது.

சூத்திரம் என்றாலே விதி, இரகசியம், தீர்ப்பு, உபாயம் என்று பல பொருள்கள்உண்டு.

அத்தனை பொருள்களும் பிரம்ம சூத்திரத்திற்கு பொருந்தும். இது பிரபஞ்சத்தின் தோற்றம், பிரம்மம், மனிதப்பிறவி, மரணம், வீடுபேறு பற்றி விவரிக்கிறது.

பிரம்ம சூத்திரம் தர்க்க நூல் வகையைச் சார்ந்தது. பிரம்ம சூத்திரம் ஆராய்ச்சி பூர்வமான சிந்த்தனையைத் தூண்டுவது.

இது வேத உபநிடதங்களை ஆராய்கிறது. விசயங்களை விவாதிக்கிறது. முரண்பாடானவைகளை மறுத்து, தகுதியானவற்றை உறுதிப்படுத்துகிறது.

## பிரம்ம சூத்திரத்தின் அவசியம்

இந்து சமயத்துக்கு அடிப்படையாக விளங்குவன வேதங்கள். வேதங்களின் இறுதிப்பகுதியாகவும், அவற்றின் சாரமாகவும் கருதப்படுபவை உபநிடதங்களாகும்.

நூற்றுக்கு மேற்பட்டனவாக உள்ள இந்த உபநிடதங்கள் பல்வேறு காலப்பகுதிகளில் உருவானதாலும், பலரால் இயற்றப்பட்டதாலும் இவற்றிலுள்ள தகவல்கள் ஒழுங்கின்றியும், சிதறிய நிலையிலும், பல சமயங்களில் ஒன்றுக்கொன்று முரணாகவும்

தோன்றுவதால், இவற்றை வாசித்து விளங்கிக் கொள்வது மிகக் கடினமானது. ஆகவே பிரம்ம சூத்திரங்கள் இயற்றப்பட்டது

## பிரம்ம சூத்திரத்தின் உரையாசிரியர்கள்

உபநிடதங்களுக்கு விளக்கங்கள் இந்தநூலும், அதன் சுருக்கம் காரணமாக அதன் உள்ளடக்கத்தைப் பல்வேறு விதமாகப் புரிந்து கொள்வதற்கு இடமளித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்நூலுக்கு விளக்கமாக விரிவுரைகளை எழுதியவர்கள் சங்கரர், இராமானுஜர், மத்வர், ஶ்ரீகண்டர்.

இந்நூலின் உள்ளடக்கங்களுக்குத் தாங்கள் உணர்ந்துகொண்டபடி, வெவ்வேறு விதமான விளக்கங்களை அளித்ததன் மூலம், வேதாந்தம் - அத்வைதம், துவைதம் மற்றும் விசிஷ்ட அத்வைதம் என்று மூன்று பிரபல பிரிவுகள் அடைந்தன.

## வேதாத்திரி மகரிசி அண்டமும் பிண்டமும்.

அண்டத்தில் கடவுளாய் அழைக்கப் படுபவன்
பிண்டத்தில் உயிரெனப் பேசப்படுகிறான் .
கண்டத்தின் மேலே கருத்தை நிறுத்தினோன்
அண்டத்தும் பிண்டத்தும் அவனையே காண்கிறாய் ."



மனித மனத்தின் உட்பொருளாக , இருப்பு நிலையாக இருப்பதே இறைநிலையாகும். நிலைபொருள் நிலையில் அறிவாகவும், அலைபொருள் நிலையில் மனமாகவும் , இரண்டுமாகவும் இருப்பவன் மனிதன்.

அலையை நிறுத்தி அழைக்கு அடித்தளம் கண்டால் அதுவே நிலை.

நிலை என்ற இருப்பு நிலைதான் தெய்வமாகவும், அறிவாகவும் இருக்கிறது . இதுவே அகண்டாகார பேரியக்க மண்டலத்தில் எங்கும் நீக்கமற நிலைத்து உள்ள சுத்தவெளியாக இருக்கிறது.

அகண்டாகார பேரியக்க மண்டலத்தில் சுத்தவெளி அறிவும் மனமுமாக இயங்கும் சீவனில் உயிர்த்துகளாகிய விண்ணின் மையத்தில் இருப்பதுவும் அதே சுத்தவெளி தான் .

அதுவே பேரியக்க மண்டலம் அனைத்தையும் சூழ்ந்து அழுத்தி எல்லாவற்றையும் முறையாக இயங்கச் செய்கிறது .

சீவனுக்குள்ளாக அமைந்த சுத்தவெளி அதன் படர்க்கை நிலையென்ற மனத்தால் தனது அலையாற்றலால் தோன்றி இயங்கும் அனைத்தையும் சீவன்களின் மூலமும் மனிதனின் சிந்தனையின் மூலமும் உணர்ந்து கொள்கிறது.

--அருள் தந்தை

## தற்காலத்திற்கேற்ற வேதாத்திரி மகரிசியின் பிரம்மஞானம்.

பிரம்மத்தை உணர்ந்த அறிந்த ஞானிகள் அதைப் பற்றி எடுத்துரைக்க அவர்களுக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. ஒன்றிய நிலையில் பேசமுடியவில்லை.

ஓரளவு விளக்குவதற்கும் அதற்கான விஞ்ஞான சாதனங்கள் அக்காலத்தில் இல்லை. ஓரளவு வார்த்தைகளில் வடிக்க முடியவில்லை. ஓரளவு வார்த்தைகளில் வடிக்க முற்பட்டபோது அதை மற்றவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

இது நவீன கம்யூட்டர் காலம். சிந்தனைவாதிகள் மிகுந்த காலம். பிரம்மத்தை, பிரம்மஞானத்தை சாதாரண பாமரனும் உணரும்படி செய்தவர் வேதாத்திரி மகரிசி.

"பிரம்மஞானம்" "பிரம்மம்" என்பது என்ன என்று விளக்கியதோடு மட்டுமல்ல, அதை பாடமாக்கி பல்கலைக்கழகங்களிலும் கொண்டு சென்றுவிட்டார்.

"பிரம்மஞானத்தை உணர்ந்து அதனைப் புத்தகத்தில் பதிந்து " பேசுகிறார் வேதாத்திரி மகரிசி.. . . . .

"மாபெரும் அருட்பேராற்றலாக அமர்ந்திருக்கும் எல்லையற்ற பெருவெளியெ பிரம்மம் எனும் தெய்வநிலை.

இதன் உள்ளடக்கத் தன்மைகள் - புரணம், விரைவு, அறிவு என்ற மூன்று பிரிக்க முடியாத தன்மைகள் ஆம். இது தன் தெய்வீக ஆற்றல்களான பரிணாமம், இயல்புக்கம், கூர்தலறம் எனும் முத்திறன்களாக மலர்ந்து ஒழுங்கமைப்போடு இயங்கிக் கொண்டிருக்கும்.

பேரியக்க மண்டலமான நந்தவனத்தில் இறுதியாகப் புத்த மலர்களே மனித குலம்.

இறைவெளியிலிருந்து மனித மனம் வரையிலான பிரம்ம நிலையின் சரித்திரத்தை உணர்ந்து நிறைவுபெறும் அறிவே பிரம்ம ஞானம் ஆகும்.

மனிதப் பிறவியின் முழுமைப் பேறான பிரம்ம ஞானத்தை அடைந்து உய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு ஆர்வமுடன் படிக்கும் அன்பர்களுக்கு இந்த மதிப்புமிக்க தத்துவ நூலான "பிரம்ம ஞான மறையை" மதிப்போடும் அன்போடும் அர்ப்பணித்து நிறைவு பெறுகிறேன்."

---- அருள்தொண்டன், வேதாத்திரி.

ஆதிசங்கரர், திருமூலர், வள்ளுவர், வள்ளலார் கண்ட அத்வைதத்தின் அற்புத விளக்கமாகவும், நியுட்டன், ஆல்பெரர்ட் ஐன்ஸ்டைன், ஸ்டீபன் உறாக்கின்ஸ் போன்ற விஞ்ஞான

மேதைகளால், தொடங்கப்பட்டு, ஆனால் தெளிவு பெற முடியாத சில விஞ்ஞானக் கோட்பாடுகளின் தெளிவுரையாகவும் மகரிசியின் “பிரம்மஞானம்” அமைகிறது.

“மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் கலந்த ஞானக் கலவையே இந்தப் பிரம்மஞானம்.

இயற்கை, இருப்பு நிலையிலிருந்து இயக்க நிலைக்கு வந்த பரிணாமத்தைப் பற்றிய சரித்திரமே இந்த நூல்.

ஒரு சாயலில், இது விஞ்ஞானப் புர்வமான மெய்ஞ்ஞானம், மற்றொரு சாயலில் இது மெய்ஞ்ஞானம் புசிய விஞ்ஞானம்.

“மெய்பொருள் காண்பது அறிவு” என்றார் வள்ளுவர். யோகப் பயிற்சியினாலும். தியானப் பயிற்சியினாலும் அக அறிவு, புறத்தே உள்ள பரஅறிவோடு ஒன்றித்து, அந்த ஒன்றித்த விளைவறிந்த விழிப்பு நிலையான சமாதி நிலையில், தாம் கண்ட அகக் காட்சிகளை மகரிசி அவர்கள் இந்த பிரம்மஞானத்தில் தந்திருக்கிறார்கள்.

“உய்வதனைத்திலும் ஒன்றாய்-எங்கும்

ஓர் பொருளானது தெய்வம்”

என்றார் பாரதியார்.

அந்த ஓர் பொருளான , இருப்பு நிலையான அந்த இறைவெளியைப் பற்றிய விளக்கமே மகரிசியின் பிரம்மஞானம்.

மகரிசியின் பிரம்மஞானம் என்ற நூல், மெய்ஞ்ஞானத்திற்கு தத்துவ விளக்கமாகவும், விஞ்ஞானத்திற்கு வழிகாட்டியாகவும்

அமைந்திருப்பதோடு. பாமரமக்களுக்கும் எளிமையாக அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

இங்கு, ஸ்டீபன் உறாக்கின்ஸ் உடைய கீழ்க்காணும் வாசகம் நினைவு கூறத்தக்கதாகும்.

- However, if we do discover a complete theory. It should in time be understandable in broad principle by everyone, not just a few scientists. Then we shall all, philosophers, scientists, and just ordinary people, be able to take part in the discussion of the question of why it is that we and the univers exist. If we find the answer to that, it would be the ultimate triumph of human reason - for then we would know the mind of God

Ultimate Triumph”

என்று சொல்லக் கூடிய அந்த இறுதி வெற்றியை நோக்கி மனித குலத்தின் பயணம் ஆரம்பமாகி விட்டது.

அதற்கு சாட்சியே இந்த பிரம்மஞானம்.

# 20. மாயை

எல்லா இந்தியத் தத்துவங்களுமே இவ்வுலகைப் பற்றி தவறான கருத்துக்களையே கொடுப்பதாகத் தெரிகிறது. இவ்வுலகம் மாயை என்றே அனைவரும் கருதுகின்றனர்.



ஆதிசங்கரர்தான் கண்டிப்பாக இவ்வுலகம் மாயை என்கிறார்.அனேகமாக நீங்கள் எல்லோரும் மாயை என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

பொதுவாக பொய்த் தோற்றம், மனமயக்கம் போன்றவற்றைக் குறிக்கவே இந்தச் சொல் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் மாயைக் கோட்பாடு வேதாந்தத்தைத் தாங்கும் தூண்களுள் ஒன்றாகும்.

அதைச் சரியாகப் புரிந்துகொள்வது மிகவும் அவசியம். நீங்கள் சிறிது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில் இதைத் தவறாகப் புரிந்துகொள்ளும் ஆபத்து இருக்கிறது.

மாயைபற்றி வேதங்களில் நாம் காணும் கருத்து, மனமயக்கம் என்ற பொருளில் அது பயன்படுத்தப்பட்டிருப்பதுதான். அப்பொழுது மாயையைப் பற்றிய உண்மையான கருத்து உருவாகவில்லை.

இந்திரன் தனது மாயையின் மூலம் பல உருவங்களை எடுத்துக் கொண்டான் என்பது போன்ற செய்திகளையே காண்கிறோம்.

இந்த இடத்தில் மாயாஜாலம் போன்ற ஒரு பொருளில்தான் அது பயன்படுத்தப்பட்டிருப்பது உண்மைதான். வேறு பல இடங்களிலும் மாயை இதே பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

மிகவும் பிற்கால உபநிடதம் ஒன்றில் மாயை என்ற சொல்

மறுபடியும் தோன்றுவதைக் காண்கிறோம். இப்பொழுது இந்தச் சொல்லிற்கே ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

அதற்கு எத்தனையோ அர்த்தங்களும் உண்டாகிவிட்டன. அதைப் பற்றிய பல கொள்கைகளும் தோன்றி அவை மீண்டும்மீண்டும் சொல்லப்பட்டன.

வேறு கொள்கைகளும் தோன்றின. கடைசியில், மாயை என்பதற்கு நிச்சயமான ஒரு பொருள் நிர்ணயமாயிற்று.

இயற்கையே மாயை என்பதையும், அதை ஆள்பவன் பரம்பொருளே என்பதையும் அறிந்துகொள் என்று சுவேதாஸ்வர உபநிடதத்தில் காண்கிறோம்.

நமது தத்துவ ஞானிகளை எடுத்துக்கொண்டால் ஆதி சங்கரர் காலம்வரை மாயை என்ற இந்தச் சொல்லைப் பலர் பலவிதமாகப் பொருள்படுத்தி வந்ததைக் காண்கிறோம்.

பவுத்தர்களும், மாயைக்கொள்கையைக் கையாண்டார்கள். அவர்கள் பெருமளவில் இதனை, லட்சிய வாதத்தைப் போன்ற ஒரு கருத்தாகவே பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இப்பொழுதும் மாயை என்ற சொல்லிற்குப் பொதுவாக இந்தப் பொருள்தான் நிலவுகிறது.

உலகம் மாயை என்று இந்துக்கள் சொல்லும் போது இந்த உலகம் ஒரு பொய்த் தோற்றம் என்று அவர்கள் குறிப்பிடுவதாகவே மற்றவர்கள் நினைக்கிறார்கள். பவுத்தர்கள் கொண்ட பொருளே இந்தக் கருத்திற்கு ஓரளவு அடிப்படையாகும்.

ஏனென்றால் பவுத்தத் தத்துவ ஞானிகளும் ஒரு பிரிவினர் புறவுலகம் என்பதே இல்லை என்று நம்புபவர்களாக இருந்தார்கள்.

வேதாந்தத்தில் மாயை என்ற சொல்லின் பொருள் இறுதிப் பரிணாமத்தை அடைந்துள்ளது.

இங்கே மாயை என்பது லட்சிய வாதமோ. பிரத்தியட்ச வாதமோ அல்ல அது ஒரு கொள்கையும் அல்ல. அது நிஜங்களின் ஒரு தெளிவான சித்திரம்; நம்மையும் நம்மைச் சுற்றி நாம் காண்பவற்றையும் பற்றிய ஒரு சித்திரமே அது.

வேதங்களை வெளிப்படுத்திய ரிஷிகளின் மனத்தில், கோட்பாடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும், அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் பலமாக வேரூன்றி இருந்தது.

. கருத்துக்களின் விளக்கத்திற்காகக் காத்திருக்கவோ, அவற்றை ஆராய்ச்சி செய்யவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. அவர்கள் பொருட்களின் மையத் தத்துவத்திற்கே செல்லும் விருப்பம் உடையவர்களாக இருந்தார்கள்.

அப்பாலுள்ள ஏதோ ஒன்று அவர்களை அழைப்பதுபோல் அவர்கள் உணர்ந்தார்கள். வேறு எதற்காகவும் காத்திருக்க அவர்களால் முடியவில்லை.

தற்காலத்தில் விஞ்ஞானம் என்று நாம் கூறுகின்ற துறையில் காணப்படும் விவரங்களை உபநிடதங்களில் நாம் காணவே செய்கிறோம். ரிஷிகள் இந்த விளக்கங்களைப்பற்றிக் கவலைப்படாததால் பல இடங்களில்இவை தவறாக இருக்கின்றன. ஆனால் அவற்றின் மையத் தத்துவங்கள் சரியாகவே இருக்கின்றன.

உதாரணமாக, ஆகாசத் தத்துவம். இது தற்கால விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களில் புதிய ஒன்றாகும்.

இந்தத் தத்துவத்தைப் பற்றி இன்றைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதைவிட அதிக வளர்ச்சியுற்ற நிலையை உபநிடதங்களில் நாம் காண்கிறோம்.

இங்கே அது கருத்தளவில் இருக்கிறது. அதன் செயல்முறை விளக்கங்களைக் காட்ட முயன்றபோது, அவர்கள் தவறு செய்துவிட்டார்கள். .

மாயைக்குக் கட்டுப்படாமல் மாயையைக் கடந்து நிற்கும் ஏதோ ஒன்றை வேதாந்தத் தத்துவ ஞானிகள் உணர்ந்திருக்கிறார்கள். நாமும் அந்த நிலையை அடைய முடிந்தால், மாயையில் கட்டுப்பட மாட்டோம்.

இந்தக் கருத்து ஏதோ ஒருவகையில் எல்லா மதங்களுக்கும் பொதுவானது. வேதாந்தத்தைப் பொறுத்தவரை இந்தக் கருத்து,

மதத்தின் ஆரம்பமே தவிர முடிவு அல்ல. இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, இதை ஆட்சிபுரிபவரான, மாயை அல்லது இயற்கையின் தலைவர் என்று நாம் கூறுகின்ற சகுணக் கடவுள்கருத்து வேதாந்தத்தின் முடிவல்ல.

அது வெறும் ஆரம்பமே. இந்தக் கருத்து வளரவளர, யார் வெளியே இருக்கிறார் என்று நினைத்தோமோ, அவர் உண்மையில் நமக்குள்ளேயே இருக்கிறார்.

அவரே நாம் என்பதை உணர்வோம். நாம் எல்லைக்கு உட்பட்டுவிட்டதால் கட்டுப்பாட்டிருப்பதாக நினைக்கிறோம். நாம் உண்மையில் முக்த புருஷர்களே, சுதந்திரர்களே.

திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவன சுவாமி சித்பவானந்தர் மாயைக்கு ஒருவித விளக்கம் தருகிறார்.

- "யாதொன்று இப்போது இருப்பதுபோல் இல்லாமல் மாறிக்கொண்டே இருக்கின்றதோ அது மாயை"

ஆதிசங்கரர் உலகை மாயை என்று கூறிவிட்டதால், இங்கு பெறப்படும் விஞ்ஞானப்புர்வமான அறிவு உட்பட அனைத்து அறிவும் அறிவே அல்ல என்று கூறிவிடுகிறார். அதை "அவித்தா" என்று கூறுகிறார்.

இதன் காரணமாக அறிவைத் தேடும் பணியில் தேக்க நிலை ஏற்படத்தானே செய்யும் என்பது பலரது கேள்வியாகும்.

வேதாத்திரி மகரிசி தரும் எளிமையான விளக்கம்.

பழம் என்பது அணுக்களால் ஆகிய கூட்டு. ஒவ்வொரு அணுவுக்கும் இடைவெளி இருக்கிறது.



அணு என்றால் சுழற்சி உண்டு. ஆனாலும் அதற்கு இடையில் உள்ள இடைவெளி நமக்குத் தெரிவதில்லை.

அதனால் அது அப்படியே கெட்டிப் பொருளாக இருக்கிறது என்று நினைகிறோம். இதுதான் மாயை.

பழத்தை நன்றாக எரியும் நெருப்பில் போட்டால் ஒரு நிமிடத்தில் பொலபொலவென்று சாம்பலாகி விடும்.

ஒவ்வொரு அணுவும் சூடு உண்டாகிற போது சழல் விரைவு அதிகமாகி ஒன்றையொன்று தள்ளி நிறுத்ததுகிறது.

அதனால் அணுக்கள் விலகிப் போய்விடுகின்றன. ஆனால் அவை சேர்ந்திருக்கின்றன என்ற நினைப்பதுதான் மாயை.

"இன்பத்தை மாத்திரமே விரும்பி என்றும்,

எண்ணம்சொல் செயல்விளைவை யுகிக் காமல்,

இன்பத்திற் கேமுரணாய்ச் செயல்கள் ஆற்றி,

இயற்கையே கம்விளைவை மறந்தி ருந்தும்,

இன்பதுன்பம் எவைஎன்றே அறிந்தி டாமல்

இரண்டையுமே கற்பனையால் மாற்றிக் கண்டும்

இன்பமென்ற நிறைசெல்வ ஊற்றி ருக்கும்

இடமறியா மயக்கமுமே மாயை ஆகும்."

இயற்கை செயற்கை நிகழ்ச்சி தன், விளைவுகள் இவைகளையறியாமல், இன்பம் எது துன்பம் எதுவெனக் கண்டறியாமல், எப்போதும் இன்பமே வேண்டும் என்று விரும்பியும்,

இன்பம் பெறவேண்டிய வகைக்கு முரணாகச் செயல்கள் ஆற்றியும், இயற்கைத் தத்துவத்தையே மறந்தும், இன்பத்தைத் துன்பமாகவும், துன்பத்தை இன்பமாகவும் அறிவின் மயக்கத்தால், ஆராய்ச்சியின்மையால், தவறாகக் கருதிக் கொண்டும்,

எது வேண்டும், என்ன செய்வது என்ற தெளிவு இல்லாமல் திகைப்புடன் செயல் ஆற்றி,

கற்பனையால் கொண்ட இன்பத்தை நாடி உண்மையான துன்பத்தையும், சிறிது நேர இன்பத்தை நாடி நீண்டகால துன்பத்தையும்,

ஒருவர் இன்பத்தை நாடிப் பலரின் துன்பத்தையும், விளைவித்தும் - அனுபவித்தும் - வருகிற திகப்புற்ற அறிவின் மயக்க நிலையே மாயை எனப்படும்.

# 21. மகாபாரதம் கூறும் தத்துவம்

தத்துவம் எங்குண்டோ, தத்துவனும் அங்குண்டு என்றார் திருமூலர். மகாபாரதம் கூறும் பாடம் என்ன?

ஜெயித்தாலும் தோற்றாலும் இவ்வுலகில் எதுவும் நமக்கு சொந்தம் கிடையாது.

அரசன் ஆண்டியாவான். ஆண்டியும் அரசனாவான். ஆனால் எந்நிலையிலும் இறைவனை மறவாது இருப்பவர்கள்.

அவனருளால் துன்பங்களை தாங்கும் ஆற்றலையும் அவன் அருளையும் பெறுவார்கள். என்பதை உணர்த்துவதை புரிந்துகொண்டு. இறைநினைவோடு கூடிய வாழ்க்கையை வாழவேண்டும்.



தத்துவ ஞானத்தைத் தெளிவாக உணரும்போது அதனை வாழ்வில் பயனாக்கி வெற்றியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடிகிறது. அப்போது தத்துவஞானமானது விஞ்ஞானமாகிவிடுகிறது.

## மகாபாரதமும் வேதாத்திரியமும்.

**இவ்வையகம் அறிந்துள்ள இதிகாசங்களுள் மிகப் பெரியது மகாபாரதம். மகாபாரதம் என்னும் பெரிய நூல் பல**

**நூற்றாண்டுகளாக மக்கள் உள்ளத்தில் சீரிய இடம் பெற்று வந்துள்ளது**

**மகாபாரதத்திலுள்ள பாத்திரங்களையும் கோட்பாடுகளையும் சான்றுகளாக எடுத்துக் காட்டுவது கற்றவர்களுடைய செயலாக இருந்து வருகிறது.**

**சான்றோர்களும் கவிஞர்களும் கதாசிரியர்களும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக மகாபாரதத்திலிருந்து மேற்கோள்களைத் தாராளமாகக் கையாண்டு வந்திருக்கின்றனர்.**

**மகாபாரதத்தில் வரும் பாத்திரங்களே குணநலன்களை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டதாகும்.**

**கர்ணன் - நட்பு**

**குந்தி - அறிவு**

**திரௌபதி - மனம்**

**பஞ்சபாண்டவர்கள் - ஐம்புலன்கள்**

**கும்பகர்ணன் - செஞ்சோற்றுக்கடன்.**

**பீஷ்மர்,துரோணர் - மனச்சாட்சி**

துரியோதனன், சகுனி போன்றவர்கள் காம, குரோத, லோப, மதம், மாச்சரியம் என்ற குணங்கள்.

**திரௌபதி அவமானப்படுத்தப்பட்ட போது அறிவு (குந்தி) அங்கே இல்லை. ஐம்புலன்களின் (பாணடவர்கள்) வயப்பட்டு சீர்ழிகின்ற மனதைக் காக்க மனச்சாட்சியினால் முடியவில்லை.**

**(பிஸ்மர், துரோணர்) புலன்கள் தன்னைக் காக்க முடியாததை நினைத்து மனம் (திரேளபதி) கண்ணீர் சொரிந்து நிற்கிறது. இறைவனே கதி என்று சரணடைந்த போது விடிவு பிறக்கிறது.**

**தீய குணங்கள் வலுவிழந்து போகின்றன. ஐம்புலன்களும் சீறி எழுகின்றன. தீய குணக்களை வேரறுப்பதாக சபதம் செய்கின்றன.**

**மனமும், வைராக்கியமும் கொண்டு சபதம் செய்கிறது. புலன்கள் ஒடுங்கி தவம் செய்து பலம் பெறுகின்றன. வெற்றி பெறுகின்றன.**

**ஐம்புலன்களுக்கும், ஆறு குணங்களுக்கும் நடத்திய யுத்தம் தான் பாண்டவ-கௌரவர்களின் யுத்தம் ஆகும்.**

**தவமும், தற்சோதனையும் தீய குணங்களை அழிக்க உறுதுணையாக நின்றன.**

**ஐம்புலன்களை அடக்கி ஆள்வதற்கும். ஆறுகுண சீரமைப்பிற்கும் பயிற்சியுடன் வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.**

**வேரறுந்த மரத்தினைப் போன்றவர்கள் ஐம்புலன்களில் கட்டுப்பட்டவர்கள் என்ற வேதாத்திரியம் அதனை வென்றிட பயிற்சிமுறையினை வகுத்துள்ளது.**

**ஒன்றி புள்ளியாய் ஒடுங்கி நீ இரு.**

**அன்றி விரிந்திடில் ஆராய்ச்சியோடிரு.**

**நின்றிடு அகண்டாகார நிலைதனில்**

**வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே.**

**(ஞானக்களஞ்சியம்)**

**“தான், தனது என்ற தன்முனைப்பின் காரணமாக, மனிதனுக்கு ஆறு தீய குணங்கள் பிறக்கின்றன. இக்குணங்கள் ச்நதர்ப்பங்களை ஒட்டிச் செயல்களாக விளைகின்றன.**

**ஆசையின் மறுமலர்ச்சியே ஆறு தீயகுணங்கள்.**

**இத்தகைய ஆறு தீய குணங்களால் ஐந்து பழிச் செயல்களை மனிதன் செய்கிறான். அவை 1. பொய், 2. களவு, 3. கொலை, 4. சூது, 5. கற்பழிவு என்பவை.**

**இவற்றால் தனக்கும் பிறர்க்கும் துன்பங்களே விளைகின்றன. துன்பம் விளைவிக்கும் செயல்களைப் பாவம் என்றும் பழிச் செயல்கள் என்றும் சொல்கிறோம்.**

**ஆறு தீய குணங்களை ஆறு நற்குணங்களாக மாற்ற வேண்டும். அந்த மாற்றும் வித்தையினையும் கற்றுத்தருகிறது வேதாத்திரியம்.**

- **பேராசையை நிறைமனமாகவும்**
- **சினத்தை - சகிப்புத் தன்மையகவும்.**
- **கடும்பற்றினை - ஈகையாகவும்**
- **முறையற்ற பால் கவர்ச்சியை – கற்புநெறியாகவும்.**
- **உயர்வுதாழ்வு மனப்பான்மையை – நேர்நிறை உணர்வாகவும்**
- **வஞ்சத்தை - மன்னிப்பாகவும்**

**மாற்றுவதே அறுகுண சீரமைப்பாகும்.**

**அறிவதனைக் கருவினிலே இணைத்து தவம் ஆற்ற**

**ஐம்புலன்கள் அமைதி பெறும் ஆறுகுணமும் சீராகும்"**

**"தேவையால் அறுகுணம் தோன்றிடும் மிகுந்திடும்**

**தேவையும் பொருட்களும் அறிவும் சமம் கொள்வோம்."(1361)**

**இவ்வாறு குணநலம் பெற வேதாத்திரியத்தின் அகத்தாய்வில் ஐந்து பயிற்சிகள் உள்ளன.**

**1. எண்ணம் ஆராய்தல்.**

2. **ஆசை சீரமைத்தல்.**

3. **சினம் தவிர்த்தல்.**

4. **கவலை ஒழித்தல்.**

5. **நான் யார்?**

**என்ற தன்னிலை அறிதல்**

**மகாபாரதத்தில் கதையாகச் சொன்னதை பாடமாக்கி சாதனையாக்கி பாமரனுக்கும் கொண்டு சென்றது வேதாத்திரியம்.**

## 22. சதிக்குச் சதி செய்த வேதாத்திரியார்.

இந்தியாவில் கல்வி என்பது பிரிட்டிஷாரால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பாக கிறிஸ்தவ மிஷனரிகளால்.

இதுதான் இந்தியக் கல்வி பற்றிப் பெரும்பாலானோருடைய மனதில் கல்வெட்டுபோல் அழுத்தமாகப் பதிந்திருக்கும் வாசகங்கள். ஒரு பொய்யானது தொடர்ந்து சொல்லப்பட்டு வந்தால் காலப்போக்கில் அது உண்மையாகிவிடும் என்பதற்கான மிகச் சரியான உதாரணம் இது.

கொஞ்சம் தாராள மனம் கொண்டவர்கள் இந்தியாவில் கல்வி பழங்காலத்திலேயே இருந்திருக்கிறது. ஆனால், அது பிராமண, சத்ரிய, வைசிய சாதிகளுக்கு மட்டுமே தரப்பட்டது.

அதிலும் பிராமணர்கள் மட்டுமே கல்வியின் முழுப் பயனையும் அனுபவித்து வந்திருந்தார்கள் என்று சொல்வார்கள்.

ஐரோப்பாவில் தொழிற்புரட்சி ஏற்பட்ட 18-ம் நூற்றாண்டுக்கு முன்பு வரை உலகின் எல்லாப் பகுதிகளிலும் நிலைமை அதுதான் என்றாலும் இந்தியாவைப் பற்றிச் சொல்லும்போது மட்டும் அதை கண்டனத்துக்குரியதாகச் சொல்வார்கள்.

(ஆனால், உண்மையில், இந்தியாவில் அதற்கு முன்பு கல்வி, அனைவருக்கும் தரப்பட்ட ஒன்றாக இருந்திருக்கிறது என்பது வேறு விஷயம்).

அந்த 17-18-ம் நூற்றாண்டுவரை இந்தியா உலகப் பொருளாதார வல்லரசாக இருந்துவந்திருக்கிறது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இருந்திருக்கிறது.

தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கியிருந்திருக்கிறது. இலக்கியம், ஓவியம், இசை, கட்டடக்கலை போன்றவற்றில் உச்சத்தை எட்டியிருக்கிறது.

ஆனால், அந்த இந்தியாவானது கல்வி அறிவு இல்லாத தேசம். சாதி வெறிபிடித்த தேசம்.

பெண்ணடிமை நிறைந்த பகுதி. கணவன் இறந்ததும் மனைவியும் உடன் கட்டை ஏறிவிடுவார்கள். இந்தியா காட்டுமிராண்டிகள் வாழும் தேசம்.

யானை, பாம்பு, குரங்குகள் நிறைந்த நாடு. கிட்டத்தட்ட இந்தியாவை ஓர் விசித்திர பொருட்காட்சி சாலையாக, சீர்திருத்தப்பட வேண்டிய ஒன்றாகப் பார்க்கும் போக்குதான் மேற்கத்தியர்களுக்கு இருந்தது.

அப்படியான ஓர் இந்தியாவைத்தான் அவர்கள் விரும்பினார்கள்.

எனவே, அதையே அவர்கள் கண்டடையவும் செய்தார்கள். ஆனால், உண்மையான இந்தியா என்பது முற்றிலும் வேறானதாக இருந்தது.



உடன்கட்டை ஏறுதல் தவறான நடைமுறை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், பிரிட்டிஷார் சொன்னதுபோல் அது அவ்வளவு அதிகமாகவோ நாடு முழுவதுமோ இருந்ததில்லை.

அது இந்திய நாடு முழுவதும் இருப்பதாகவும், இந்து மதம் அதை நிர்பந்திப்பதாகவும் ஆயிரக்கணக்கான பெண்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள் என்றும் பிரிட்டிஷ் அரசு கூறியது.

'சில விதிவிலக்குகளைத் தவிர, அனைத்து ஹிந்துக்களும் (எந்தப் படிநிலையில் இருப்பவராக இருந்தாலும்) உடன்கட்டை ஏறுவதைப் புனிதமானது என்றே எண்ணுகிறார்கள்' என்பதுதான் உடன்கட்டை ஏறுதலைத் தடுக்க அரசாணை பிறப்பித்த வில்லியம் பென்டின்க் பிரபுவின் கண்டுபிடிப்பாக இருந்தது.

அதற்கான எந்த ஆதாரங்களையும் அவர் தரவில்லை. அவருடைய இந்த வார்த்தைகளை எடுத்துக்கொண்டு பார்த்தால், உடன்கட்டை ஏறுவதை உயர்வாக எண்ணும் மனோபாவம் இருந்தது என்பதுதான் தெரியவருகிறதே தவிர அதையேதான் அனைவரும் பின்பற்றினார்கள் என்று அல்ல.

நாம் உயர்வாக நினைக்கும் அனைத்தையும் செய்வதில்லையே! அப்போதைய ஆவணங்களிலும் உடன்கட்டை ஏறுதல் மிகக் குறைவாகவே நடைமுறையில் இருந்திருக்கிறது என்பதற்குப் போதுமான சான்றுகள் இருக்கின்றன.

உடன்கட்டை ஏறும் வழக்கம் சில வகுப்பினரிடையே, அதுவும் சில குடும்பங்களில் மட்டுமே இருந்திருக்கிறது.

வட மற்றும் கிழக்கு இந்தியாவின் சில பகுதிகளைத் தவிர்த்து, இந்தியாவின் வேறு இடங்களில் இந்த வழக்கம் வெகு சொற்பமே.

1815-1828 இடையேயான பதின்மூன்று ஆண்டுகளில், பதிவு செய்யப்பட்ட உடன்கட்டை ஏறல்களில் 63 சதவிகிதம், கல்கத்தாவைச் சுற்றி நடந்திருக்கிறது.

இதில் விநோதம் என்னவென்றால் அந்தப் பகுதி அப்போது ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தது. 63% என்றதும் ஏதோ பெரிய அளவு என்றுதான் தோன்றும்.

ஆனால், 1824ல் பிரிட்டிஷார்களாலேயே தொகுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, வங்காள மாநிலத்தில் விதவைகளான 250,000 பெண்களில், சிதையில் ஏறியவர்களின் எண்ணிக்கை 600 தான். அதாவது 0.2 சதம் தான்.

வாரணாசி பற்றிய புள்ளிவிவரங்கள் நமக்கு இன்னும் ஆச்சரியத்தைத் தரும். 1820க்கும் 1828க்கும் இடையேயுள்ள ஒன்பது ஆண்டுகளில், 125 பேர்தான் உடன்கட்டை ஏறினார்கள்.

‘உடன்கட்டை ஏறுவது மதரீதியான கட்டாய வழக்கமாக இருந்திருக்கவில்லை; இந்தியா முழுதிலும் அது நடைமுறையில் இருந்திருக்கவும் இல்லை’ என்று வாரணாசியின் நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

இவைதான் பதிவு செய்யப்பட்டிருக்கும் உண்மைகள். ஆனால், ஹிந்துக்களின் வாழ்க்கை நெறியைப் பழிக்கவும் தங்களுடைய ஆதிக்கத்தை நியாயப்படுத்துவதற்கும் ஆங்கிலேயர்கள் இந்த வழக்கத்தைப் பெரிதுபடுத்திவிட்டார்கள்.

உடன்கட்டை ஒழிப்பு சட்டம் அமலுக்கு வந்ததும், மத போதகர் வில்லியம் கேரி, ‘…கடந்த இருபது நூற்றாண்டுகளில் முதன்முறையாக, இரத்தம் கலக்காமல் கங்கை கடலைச் சென்றடைந்தது’ என்று எழுதியிருக்கிறார்.


எப்படியிருப்பினும் உடன்கட்டை ஏறுதல் என்பது மூடத்தனமான செயல் என்பதை மறுப்பதற்கில்லை.

## சதிக்குச் சதி செய்த வேதாத்திரியார்.

“ சதி” என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் தொடக்கக் காலத்தில் இந்து மதத்தில் சடங்காக நிலைபெற்றிருந்தது.

இம்முறை ஆங்கிலேயர் காலத்தில் ஒழிக்கப்பட்டது. அதை மீண்டும் கொணர்வதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வேதாத்திரி மகரிசியிடம் ஆலோசனைக் கேட்டார்கள்.

இதனைச் செவியுற்று நீண்ட நேரம் சிந்தித்த வேதாத்திரி மகரிசி "நான் சில திருத்தங்கள் கூறுகிறேன். அத்துடன் சேர்த்து உங்கள் தீர்மானத்தையும் நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்று கூறினார்.



வந்தவர்களும் ஆர்வத்துடன் "என்ன திருத்தம்? விரைவில் கூறுங்கள்" எனக் கேட்டனர்.

"நான் கூறும் திருத்தம் மிகச் சிறியது தான். அது என்னவென்றால், ஆண்கள் இறந்துவிட்டால் பெண்கள் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற வரிகளில் கீழ், இதே போன்று, "மனைவி இறந்துவிட்டால் அவள் கணவனும் உடன்கட்டை ஏறவேண்டும்". இதுதான் நான் உங்களுக்கு எடுத்துக் கூறும் திருத்தம்" எனக்கூற அனைவரும் அதிர்ச்சியில் உறைந்தனர்.

அத்தீர்மானம் கைவிடப்பட்டது. சதி என்னும் இத்திட்டதின் கீழ் எத்தனை சகோதரிகள் துடிதுடித்து உயிரிழந்து மடிந்திருப்பார்கள்?

இத்தகைய தவறான கருத்துக்களை மாற்றி நமது வாழ்க்கை பண்பாட்டைச் சீர்திருத்த வேண்டியது அறிஞர் பெருமைக்களுடைய கடமை என மொழிகிறார், வேதாத்திரியார்.



## 23. கருத்து முதல்வாதமும், பொருள் முதல்வாதமும்

தத்துவம் என்பது உலகைப் பற்றிய கருத்தோட்டங் களின் தொகுப்பு. அதாவது உலகைப் பற்றிய அனைத்தும் தழுவிய உலகக் கண்ணோட்டமே தத்துவமாகும்.

இன்னும் விளக்கமாகப் புரிந்து கொள்ள வேண்டு மென்றால் தத்துவ ஞானம் உலகம் முழுவதையும் பற்றி ஒரு கருத்தோட்டத்தை உருவாக்குகிறது.

அதற்கேற்ப ஒரு அமைப்பு முறையை வளர்க்கிறது. மேலும் உலகிற்குள் நிகழும் நிகழ்வுப் போக்குகளைப் பற்றி ஒரு பொதுவான விளக்கத்தைத் தருகிறது.

இறுதியில் அது மக்களின் உலகக் கண்ணோட்டமாக இருக்கிறது. இதுவே தத்துவமாகும்.

(உலகம் என்று சொல்வது இப்பிரபஞ்சம் முழுவதும். தமிழில் சொல்வதென்றால் அண்டம் அல்லது பால்வெளி)

மேற்குறிப்பிட்ட உலகைப் பற்றிய தத்துவ ஞானம் இரு வகையாகப் பிரிந்துள்ளது.

அதில் 1. பொருள் முதல்வாதம், 2. கருத்து முதல் வாதம். இவ்விரண்டு தத்துவங்களும் வேறுபடுகின்ற இடம் பொருளுக்கும் உணர்வு நிலைக்கும், இயற்கைக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு நிலைகளைப் பற்றிய படிப்பாய்வின் வேறுபட்ட முடிவுகளே இவ்விரு வேறுபாட்டிற்கு அடிப்படையாகும்.

அதாவது உலகின் தோற்றம் குறித்தான ஆய்வின் முடிவுகளின் வேறுபாடே இவ்வகைக் கண்ணோட்டங் கள்.

இந்த இயற்கையில் மனிதன் மனிதனாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தபோது அவன் எழுப்பிய முதல் கேள்வி இந்த உலகம் எப்படித் தோன்றியது?

அடுத்தது இந்த உலகில் எது முதலில் தோன்றியது? என்பதுதான்.

இயற்கையின் வியப்புமிக்க நிகழ்வுப் போக்குகள் மனிதனைச் சிந்திக்கவும் வைத்தது.

அதைவிட அதிகமாக அச்சமூட்டியது. இவ்வச்சம் விரைவாக இவனை ஒரு முடிவை நோக்கித் தள்ளியது.

இதன் விளைவு தனக்கு மீறிய ஏதோ ஒன்று இருக்கிறது. அதுதான் இவ்வுலகை இயக்குகிறது என்ற முடிவுக்கு வந்தான். சரி அது எது என்ற கேள்விக்கு? அது கண்ணுக்குத் தெரியாது.


ஆனால் எல்லா இடத்திலும் இருக்கிறது. அது ஏதோ ஒன்று நம்மை மீறிய சக்தி. இதுதான் மனிதனின் தொடக்க நிலை முடிவு.

இறுதியில் அந்த ஏதோ ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. அதுதான் கடவுள். இப்போது உலகைப் படைத்தவர் கண்டுபிடிக்கப்பட்டார்.

உலகைப் படைத்த கடவுள் அவரின் சிந்தனைச் சக்தியின் வெளிப் பாடாக மனிதனையும் மற்ற உயிரினங்களையும் படைத்து விட்டார்.

ஆக உலகம் கடவுளால் படைக்கப்பட்டதென்றும், சிந்தனையின் வெளிப்பாட்டில்தான், மற்ற பொருட் கள் அனைத்தும் (உயிருள்ளது உயிரற்றது) தோன்றின என்பதுதான் கருத்து முதல் வாதத்தின் மையத் தத்துவம்.

அதாவது கருத்தே முதலானது மற்றவை யெல்லாம் அதற்கடுத்ததுதான். இதனடிப்படையில் புதிய புதிய கடவுள்களும், மதங்களும் மதக் கோட்பாடுகளும் உருவாயின.



அடுத்து இந்த உலகம் யாராலும் படைக்கப்பட்ட தில்லை. இது இயற்கை பொருட்களாலானது. இது எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இருக்கும். இதற்கு முதலுமில்லை. முடிவுமில்லை.

இயற்கைப் பருப் பொருட்களின் இயக்க நிகழ்ச்சிப் போக்கின் விளைவே மனிதனும், மற்ற உயிரினங் களும் தோன்றக் காரணம்.

எனவே பொருளே அனைத்து மூலத்திற்கும் அடிப்படை என்பதுதான் பொருள் முதல் வாதத்தின் அடிப்படைத் தத்துவ மாகும்.

இது கடவுள், மதம், ஆன்மா, மறுபிறப்பு, சொர்க்கம் இப்படி எந்த மாயக் கோட்பாடுகளையும் ஏற்பதில்லை. ஐம்புலன்களால் அறியப்படாதது எதையும் ஏற்பதில்லை. அறிவியல் வழிப்பட்ட ஆய்வு முடிவுகளை மட்டுமே ஏற்கிறது.

இவ்விரு வாதங்களையும் கடந்து மூன்றாவதாக "இருமை' வாதத் தத்துவங்களும் இருக்கின்றன. இருமைக் கோட்பாட்டாளர்கள் முன் வைப்பது கருத்தும், பொருளும் இரண்டும் ஒன்றோடொன்று நெருக்கமாகத் தொடர்புடையது.

எனவே இரண்டும் முதன்மையானதுதான் என்பதுதான் இதன் கோட்பாட்டு அடிப்படையாகும்.

இருந்த போதிலும் இருமைக் கோட்பாடு தனித்துவமான செல்வாக்குப் பெறவில்லை. மேலும் சாரம்சத்தில் இது கருத்து முதல்வாதக் கோட்பாட்டின் அடிப்படையைக் கொண்டிருப்பதால், இது கருத்து முதல் வாத வகையைச் சேர்ந்ததாகவே கருதப்படுகிறது.

கருத்து முதல் வாதத்தை மறுத்து வந்த தத்துவம் தான் இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம்..

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருள் முதல் வாதச் சிந்தனையாளர்கள் உலகம் முழுவதுமே இருந்துள்ளனர். அந்த வகையில் குறிப்பிடத்தக்க ஒருசிலரை நாம் தெரிந்து கொள் வோம்.



கி.மு.530 470 களில் பொருள் முதல் வாத உலகக் கண்ணோட்டத்தின் வளர்ச்சிக்கு எபிஸஸ்ஸைட் சேந்த

ஹெராக்ளிட்டஸ் என்னும் கிரேக்கத் தத்துவ ஞானி பெரும் பங்காற்றியுள்ளார்.

அவரைத் தொடர்ந்து கிரேக்கத் தத்துவஞானி டெமாக்ரீட்டஸ் பொருளைப் பற்றிய அணுத் தத்துவத்தை முன்வைத்து பொருள் முதல்வாதக் கோட்பாட்டை மேலும் வளர்த்தார்.

இவரைத் தொடர்ந்து கி.மு. 43ம் நூற்றாண்டுகளிலும் கி.மு. முதலாம் நூற்றாண்டுகளிலும் முறையே எபிக்குரஸ் என்ற கிரேக்கத் தத்துவ ஞானியும் ரோமன் தத்துவ ஞானியான டைடஸ் ஒக்கரைட்டியஸ் காரஸ் என்பவரும் பொருள் முதல்வாத அணுத் தத்துவத்தை மேலும் வளர்த்தார்கள்.

**அன்றைய காலத்தில் இதற்கு எதிராக கிரேக்கத் தத்துவஞானி பிளாட்டோ (கி.மு.427 347) அணுத் தத்துவத்தையும், பொருள் முதல் வாதத்தையும் எதிர்த்த கருத்து முதல்வாதி.**

பிளாட்டோவின் வெளிப்படையான கருத்து முதல் வாதத்திற்கு எதிராக (கி.மு. 384 322) அரிஸ்டாட்டில் கடுமையாக விமர்சனம் செய்தவர்.

இவர் அடிப்படையில் பொருள் முதல் வாத உலகக் கண்ணோட்ட முடையவர். இருந்த போதிலும் கருத்து முதல்வாத எண்ணவோட்டங்களும் இவரிடம் இருக்கவே செய்தன.

கி.பி. 17ம் நூற்றாண்டுகளில் பொருள் முதல் வாதச் சிந்தனை மேலும் வலுப் பெற்றது.

பிரஞ்சுத் தத்துவஞானி பிரான்ஸ்லின் பேக்கன் (1561 1625) பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்திற்கு மிகப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

இவரைத் தொடர்ந்து ஆங்கிலேயத் தத்துவஞானி தாமஸ் வேறாப்ஸ் (கி.பி.1588 1679) பேக்கனுடை பொருள் முதல் வாதச் சிந்தனையை மேலும் வளர்த்தார்.

18ம் நூற்றாண்டில் ரஷ்யப் பொருள் முதல்வாதிகளில் குறிப்பிடத்தக்கவர்கள், மைக்கேல் லோமோனோ சோவ், அலெக்சாண்டர் ராதிஷ் சேவ் ஆகியோர் முதன்மையானவர்கள்.

அதேபோல் இந்திய ஆட்சிப் பகுதியிலும், தமிழகத்திலும் பொருள் முதல் வாதச் சிந்தனையாளர்களின் பெரும் பங்களிப்பு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியச் சமூக அமைப்பில் வேத மந்திரங்களே கருத்து முதல் வாதத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

வேத, யாக கருத்தமைவு என்பது வெறும் கருத்து முதல் வாத அளவுகோலோடு மட்டும் அவர்கள் தத்துவம் இருக்கவில்லை.

அது சமூக ஒடுக்கு முறைகளையும், ஏற்றத் தாழ்வுகளையும், வெளிப்படையாக வலியுறுத்தி விரிந்த உலகப் பார்வையைக் கொண்டதல்ல.

குறுகிய தங்களின் ஆளுமைத் தன்மை நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட தத்துவங்கள்தான். வேத காலத் தத்துவங்கள், இருந்த போதிலும் இது உலகத்தைப் பற்றியும் பேசுகிறது.

**ரிக் வேதம்**

வேத காலம் கி.மு.1500 இக்காலத்தில் தான் ‘‘ரிக் வேதம்', ‘‘சாம வேதம்', ‘‘யஜுர் வேதம்' அதர்வ வேதம் என நான்கு வேதங்களை உருவாக்கினார்கள்.

அதற்கடுத்து மனு எழுதிய ‘‘மனு சாஸ்திரம்' அடுத்து வந்த ‘‘பகவத் கீதை' போன்றவை தத்துவ இயலை வெளிப்படுத்தும் தத்துவ நூலாகும்.

இதுவே இந்தியக் கருத்து முதல் வாதத் தத்துவமாகவும் அறியப்படுகிறது. இதைக் கடந்து பல்வேறு கருத்து முதல்வாதத் தத்துவங்களும் இருக்கிறது.

இருந்த போதிலும் கி.மு. 1500 ரிக் வேத காலம் தொடங்கி இன்று வரை கருத்து முதல் வாதத் தத்துவங்கள் முதல் நிலையில் இருப்பதால் இதையே நாமும் முதன்மைப்படுத்து கிறோம்.

மேலும் இத் தத்துவம் கருத்து முதல் வாதத்தை எதிர்த்தே அனைத்துப் பொருள் முதல் வாத சிந்தனைகளும் உருவானது என்பதும் குறிப்பிடத் தக்கது.

**உபநிடதம்**

கி.மு. 8ம் நூற்றாண்டுக்குப் பிறகு பொருள் முதல் சிந்தனைகள் வெளிப்பட்டன. குறிப்பாக இந்தக் கால கட்டத்தில் ‘‘உபநிடதம்' தோன்றின.

(இதில் வேதத்தை ஏற்றுக் கொண்ட கருத்து முதல் வாத உபநிடதங்களும் பெருமளவில் இருந்தன) குறிப்பாக ‘‘முண்டக உபநிடதம்' பிரம்மத்தைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:

‘‘‘‘பிரம்மம் பிறப்பற்றது; இறப்பற்றது.

அது எதிலிருந்தும் தோன்றவில்லை; எதையும் தோற்றுவிக்கவில்லை.

அது பிறந்ததும் இல்லை; இறந்ததும் இல்லை.

அது நித்தியமானது, ஊழிக் காலமாய் இருந்து வருகிறது.

அதன் உடல் துண்டிக்கப்பட்டாலும் அது துண்டிக்கப்படுவதில்லை"

இப்படி ஏராளமான உபநிடதங்கள் உலகம் இயற்கையானது. உலகத்தை யாராலும் படைக்க முடியாது. படைக்கவும் இல்லை. கடவுள், சொர்க்கம், மறு பிறப்பு என்று எதுவுமில்லை என்று சொல்கிறது.

**வைசேசியம் கணாதர்**

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் ‘‘கணாதர்' என்பவர் வைசேஷிக சிந்தனையைத் தோற்றுவித்தார். (விசேசமானது என்ற பெயராலும் அழைக்கப்பட்டது) அது உலகின் தோற்றத்தை இயற்கையைச் சார்ந்தே

வெளிப்படுத்தியது. மேலும் உலகத் தோற்றத்தின் காரணம் அணுவே என்று விளக்கியது. அணுக் கொள்கையை விரிவாக ஆய்வு செய்தது. கணாதர் பொருள் முதல்வாதச் சிந்தனைவாதி.

**நியாயம் கவுதமர்**

கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் கவுதமர் நியாயக் கோட்பாட்டை உருவாக்கினார்.

நியாயம் என்ற சமஸ்கிருதச் சொல் “ஆய்வுப் பொருளை நாடிச் செல்லுதல்' என்று பொருள்படும்.

அதாவது தருக்க முறையில் காரண காரியங்களைப் பகுத்தாய்தல் என்பதாகும்.

அதாவது தீர்வை எட்டுதல் என்பதே நேரடிப் பொருளாகும். கவுதமர் வைசேஷிகர்களின் அணுக் கொள்கையையும் ஏற்றுக் கொண்ட பொருள் முதல் வாதி. நியாய மரபின் அடிப்படை தர்க்கவியலை அடிப்படையாகக் கொண்டது.

**சாங்கியம் கபிலர்**

கி.மு. 7ம் 6ம் நூற்றாண்டுகளின் இடைப்பட்டக் காலத்தில் வாழ்ந்தவர் கபிலர். இவர் தோற்றுவித்த சிந்தனை மரபு சாங்கியம். சாங்கியம் என்ற சொல் (கணக்கிடுதல்) சாங்கிய என்ற சமஸ்கிருத வேர்ச் சொல்லிலிருந்து கிளைத்தது.

உலகின் படிமுறைச் செயல்பாடுகளைப் பகுத்தறிவுடன் கவனித்து விளக்கம் கூறுவதால் சாங்கியம் என்ற பெயர் பெற்றது. சாங்கியக் கருத்துக்கள் வெறுமனே மெய்ஞானச் சிந்தனை மரபு மட்டுமல்ல.

பிரபஞ்சத்தின் ஆற்றல் களை மாற்றுதலும், அழித்தலும், திரட்டுதலும் பற்றிய அறிவியல் அடிப்படையிலான விளக்கமும் ஆகும்.

கபிலர் வேத, யாக தத்துவத்திற்கு எதிரான மிகப் பெரிய பொருள் முதல் வாத சிந்தனைவாதி.

"புலனுறுப்புகள் இயற்கையின் உருவாக்கமே' புலனுறுப்புகள், புறவுலகு பற்றிய உண்மையான தோற்றத்தை அப்படியே நமக்குப் புலப்படுத்துகிறது என்பது கபிலரின் திட்டவட்டமான கூற்று. இல்லாத ஒன்றிற்கு எதுவுமே உருவாகாது என்பதே சாங்கியத் தின் ஆதாரக் கொள்கை.

மேலும், சாங்கியம் அறிவியல் வழிப்பட்ட தர்க்க முறைகளையும், பரிணாமக் கோட்பாடுகளையும் சாங்கிய மெய்ம்மை ஏற்றுக் கொள்கிறது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கபிலர், கருத்து முதல்வாதக் கருத்தியலை முற்றாக மறுத்த புரட்சியாளர்.

இவர் காலத்திற்கு பிறகு தொடங்கி இன்றுவரை இந்த எதிர்ப்பு சிந்தனை மரபுகளின் நீட்சியாக சாங்கியம் இருந்தது, இருக்கிறது.

சாங்கியத்தை கருத்து முதல்வாதிகள் சிதைத்து அழித்து விட்டாலும் அதன் சிந்தனை மரபு தொடர்கிறது.

**லோகாயதவாதம்**

"லோகாயதாம்' சரியான காலத்தை குறிப்பிட முடியவில்லை. ஒரு சிலர் கி.மு. 6 ம் நூற்றாண்டு என்றும், ரிக் வேத காலத்திலேயே இந்து இதிகாங்களில் இதுபற்றி குறிப்பு இருப்பதாகவும் கூறுகின்றனர்.

குறிப்பாகப் பிரகஸ்பதியின் லோகாயதா சூத்திரம். கி.மு.600 களில் அழிக்கப்பட்டது. கருத்து முதல்வாதிகள் எதிர் சிந்தனை என்ற அடிப்படையில் இதன் மீதான எதிர்ப்பின் பதிவுகளே இப்பொருள் முதல் வாதச் சிந்தனையின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

லோகாயத்தை அசுரர்களின் கோட்பாடு என்றே வேத நூல்கள் கூறுகின்றன.

லோகாயதா என்றால் "உலக மக்களுக்காக' என்பதாகும். பொறிக் காட்சிகளில் உணரப்படுபவை மட்டுமே லோகாயத மரபில் திடமான சான்றுகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சான்றாகக் கூறப்படும் பருப் பொருள்கள் மண், நீர், நெருப்பு, காற்று, செல்வமும், மகிழ்ச்சியுமே மனித வாழ்வின் தேவைகள் .

பருப் பொருட்களுக்கு உணர்வு உண்டு. வேறு உலகம் என்று ஒன்றில்லை. இறப்புக்குப் பின் எதுவுமில்லை என்பது இதன் தத்துவமாகும்.

சிறந்த பொருள் முதல் வாதமான லோகாயதம் சாதி, வேதம், யாகம் போன்ற எல்லாப் பிற்போக்குத் தனங்களையும் இரக்கமின்றி விரிவாக, விரிவான விளக்கவுரையுடன் எழுதப்பட்டது.

இது இந்தியாவின் பொருள் முதல் வாதத் தத்துவமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

சமணமும் பௌத்தமும் தோன்றுவதற்கு சார்வாகரின் (லோகாயதம்) தத்துவம் அடிப்படை யானது.

**பௌத்தம் புத்தர்**

கி.மு. 543ம் ஆண்டு வாக்கில் சாக்கிய மன்னன் சுத்தோ தனனுக்கும், அரசி மாயா தேவிக்கும் மகனாகப பிறந்த சித்தார்த்த கௌதமன், வேத, சமயத் தத்துவங்களைத் தோலுரித்தார்.

இவர் இயற்கையின் நிகழ்வுகளையும், அதன் இயக்கப் போக்குகளையும் ஏற்கிறார்.

“உலகிலுள்ள அனைத்துமே நிலையற்றவை. பிறப்பும், இறப்பும் தொடர் நிகழ்வுகள். வாழ்க்கை என்பது நீரோட்டம் போன்றது. வருவதும் போவது மெய்ம்மையின் அடிப்படை என்றார்.

இவருடைய சிந்தனைகள் பெரும்பாலும் மனித வாழ்க்கையை பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. இல்லாத ஒன்றைப் பற்றி இவர் அதிகமாகச் சிந்திக்கவில்லை.

இவரின் செயல், தருக்க முடிவு, சிந்தனைகள் அனைத்தும் வேத மரபுகளை முற்றாக எதிர்த்தது. இவ் எதிர்ப்பில் எவ்வித இரக்கமும் காட்டவில்லை.

இவரின் தத்துவம் பொருள் முதல் வாத தர்க்கவியலைக் கொண்டிருந்தாலும், அதாவது அணுக் கொள்கையின் அடிப்படையில் உலகம் பற்றிய தங்களது சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொண்ட பௌத்த மதத்தினர் வாழ்க்கையைப் புறவயமானது (பருப் பொருள்) அகவயமானது (மன உணர்வு) என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்தார்கள்.

அணுக்களின் கூட்டு, அதாவது தனிமங்களின் வினோதமான சேர்மானத்தைச் சார்ந்துதான் மன உணர்வு உள்ளது.

எனவே, புறப் பொருட்களின் செயல்பாட்டிலிருந்து தான், அக உணர்வு உருவாகிறது. அணுக்களின் கூட்டு ஓர் இயக்கத்தை உண்டு பண்ணுகிறது.

அந்த இயக்கம் இருத்தலின் பகுதிகளாகிய உணர்வாகவும், அரிதலாகவும் வெளிப்படுகிறது என்பது புத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

இதையும் அறிவுக்குப் பொருந்தி நிற்கின்றனவா என்று ஆய்ந்தறிந்து அதன் பின்பு அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதே புத்தரின் அறிவுரையாக இருந்தது.

இருந்த போதிலும் கடவுள் மறுப்பிறப்பு பற்றி தெளிவான முடிவுக்கு அவர் வந்தடையவில்லை.

**சமணம் மகாவீரர்**

புத்தருக்கு முந்தைய காலத்தவரான (கி.மு. 598) வர்த்தமானர் (மகாவீரர்) புத்தருக்கு இணையான சிந்தனையாளராக இருந்தவர். இவர் சமண மதத்தை நிறுவினார் (ஜைனம்). இதன் அடிப்படைக் கொள்கையாக,

1. இருத்தல் மீது உண்மையான நம்பிக்கை.

2. உள்ளதை உள்ளமபடியே அய்யமின்றித் தெளிவாக அறிவது.

3. புற உலகப் பொருட்கள் மீது விருப்பமின்றி வாழும் நல்ல நடைமுறை.

இதுவே சமணர்களின் அடிப்படையாகும். 1. கொல்லாமை, 2. வாய்மை, 3. கள்ளாமை, 4. நியமங் களைக் கடைப்பிடித்தல், 5. பொருளாசை இல்லாமை போன்ற ஒழுக்க நெறிகளை வகுத்துச் செயல்பட்டனர்.

மகாவீரர் கடவுள் வழிபாட்டை முழுவதும் தடை செய்தார். கடவுள் என்று ஒன்று இல்லை. உள்ளது உலகு மட்டுமே. பாவம் என்பது கடவுளுக்கு எதிரானது அல்ல. அது சக மனிதனுக்கு எதிரானது என்பது சமணர்களின் உறுதியானக் கொள்கை.

சமணமும் பௌத்தம் போலவே வேத, யாக வேள்வித் தத்துவத்திற்கு எதிரானது. இதன் தத்துவங்கள் வாழ்வின் தேவையிலிருந்து உருவா னவை. சமணமும் பொருள் முதல் வாதச் சார்புடையதே.

இப்படி கருத்து முதல் வாதச் சிந்தனைக்கு எதிராக பொருள் முதல் வாதச் சிந்தனைகள் தோன்றினாலும் அது ஒரு வடிவம் பெறாமல் தன்னை முழுமையாக மீட்டுருவாக்கம் செய்து கொள்ளாமல் காலப் போக்கில் கருத்து முதல் வாதச் சிந்தனைகளோடு கலந்து போயின.

இதற்குக் காரணம் என்ன? என்ற கேள்வியைக் கேட்டு வைத்துக் கொள்வோம்.

**தொல்காப்பியர்**

3000 ஆண்டுகளுக்கு முன்பாக தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் வெறும் மொழி இலக்கண நூல் மட்டுமன்று. வாழ்வியல் இலக்கணமும் இரண்டறக் கலந்த மெய்யியல் தான் தொல்காப்பியம்.

இதில் உலக வாழ்வை புறம், அகம் என்று பிரிக்கப்பட்டு விளக்குகிறது. மேலும் உலகத்தின் மூலமே பொருள்தான் என்றும், அது முதல், கரு, உரிப் பொருள்தான் என முப் பொருள்களைக் கொண்டது என்றும் விளக்குகிறது. தில் முதல் பொருள் நிலம், பொழுது என்றும் கூறுகிறது.

(பொருள்கள் மூன்று (தொல்காப்பியம்)

949. முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே

நூலலுங்காலை முறை சிறந்தனவே

பாடலுள் பயின்றவை நாடும் காலை.

முதல் பொருள்

950. முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்

இயல்பு என மொழி இயல்பு உணர்ந்தோரே)

தொல்காப்பியரை முழுமையான பொருள் முதல் வாதி என்று நாம் சொல்ல முடியாது. புற, அக வாழ்வை முன்னிறுத்துதலின் வழி இவர் “இருமை வாதியாக' இருந்துள்ளார்.

இருந்த போதிலும் இயற்கையின் ஒழுங்குமுறை இயக்கத்தை ஏற்று அதன் வழி எதார்த்த வாழ்விற்குத் தேவையான ஒழுக்க விதிகளை இயற்கை விதிகளோடு விளக்கியிருப்பது இதன் சிறப்பு.

கடவுள், மதம் சம்பந்தமான நேரடியான கருத்து முதல் வாத அடிப்படைகளை இவர் வலியுறுத்தவில்லை.

மாறாக பொருள் முதல்வாத சார்பு சிந்தனையின் தர்க்க முடையவராகவே இருந்துள்ளார்.

மொழியின் இயற்கை அமைப்பையும், மனித வாழ்வின் இயற்கை அமைப்பையும் இலக்கணமாக்கிய தமிழகத்தின் முதன்மையான சிந்தனையாளர்.

## திருவள்ளுவர்

2000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த திருவள்ளுவர் ஒரு பொருள் முதல்வாதச் சிந்தனையாளர்.

அவரின் சிந்தனைகள் அனைத்தும் இவ்வுலகின் இருப்பு நிலைகளைப் பற்றியதே! இல்லாத ஒன்றை அவர் எப்போதும் எங்கும் சொன்னதில்லை.

திருக்குறளில் வரும் கடவுள் வாழ்த்துப் பகுதி என்பது இடைக் காலத்தில் செறுகப்பட்ட இடைச் செறுகளே என்று சிலர் கூறுகின்றனர்!

கடவுளின் தேவை திருக்குறளில் எந்த இடத்திலும் இல்லை. எல்லாவற்றையும் மனிதனே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற இயற்கை சார்ந்த நடைமுறை வாழ்வியல் தத்துவமே திருக்குறள்.

* எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு.

* பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பெனும்

செம்பொருள் காண்ப தறிவு.

போன்ற குறள்கள் பொருள் வாதத் தத்துவத்தைச் சார்ந்தவை. அதுபோல் வான் சிறப்பில்,


* வானின் றுலகம் வழங்கி வருவதால்

தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

* நீரின் றமையா துல கெனின் யார்யார்க்கும்

வானின் றமையா தொழுக்கு.

இக்குறள் உலக உயிரினங்களின் உருவாக்கத்திற்கு நீரே ஆதாரம். நீரில்லையேல் இவ்வுலக உயிரினங்கள் இல்லை என்று சொல்கிறது.



“சார்லஸ் டார்வினின்' உயிரியல் தத்துவத்தின் கோட்பாட்டை 2000 ஆண்டு களுக்கு முன்பாகவே திருவள்ளுவர் சொல்லியிருக் கிறார்.

இவ்வுலகின் தோற்றத்திற்கு பொருளே ஆதாரம். உயிரினங்களின் தோற்றத்திற்கு நீரே ஆதாரம். இங்கே கடவுளுக்கு என்ன வேலை? எனவே திருவள்ளுவர், அய்யத்திற்கு இடமற்ற பொருள் முதல்வாதிதான்.

**சித்தர்கள்**

தமிழகத்தில் சித்தர்களின் சிந்தனைகள் பெரும் பாலும் இயற்கை சார்ந்தவைகளே. இருப்பு உலகைப் பற்றியே அதிகமாகச் சிந்தித்தனர்.

கடவுள், மறுபிறப்பு, சொர்க்கம் என்ற இல்லாத ஒன்றுக்காக எப்போதும் கவலைப்படாமல் இயற்கையின் உண்மைகளை ஏற்றுக் கொண்டார்கள். அணுக் கோட்பாடுகளையும் பெரும்பான்மையான சித்தர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இவர்கள் சாதி, மதம் போன்ற பிற்போக்கு அமைப்புகளை மறுதலித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சித்தர்களில் பெரும்பாலானோர் பொருள் முதல்வாதச் சிந்தனைச் சார்பாளராக இருந்துள்ளனர்.

இப்படி உலகம் முழுவதும் கருத்து முதல்வாத உலகக் கண்ணோட்டத்திற்கு எதிராக பொருள் முதல் வாதச் சிநதனையாளர்களும் பொருள் முதல் வாதத் தத்துவங்களும் இருந்தன.

இருந்த போதிலும் இதை முழுமைப்படுத்தியது மார்க்சும், எங்கல்சும்தான். சமூக நோக்கில் இவ்விரு தத்துவங்களின் செயல்பாடுகளை ஆராய்ந்து அறிந்தனர்.

குறிப்பாக கருத்து முதல் வாதத் தத்துவத்திற்கும், பொருள் முதல்வாதத் தத்துவத்திற்கும், இருவேறு வர்க்கக் கண்ணோட்டங்கள் உண்டென வெளிப்படுத்தினார்கள்.

இதனடிப்படை யில் உருப்பெற்ற தத்துவம்தான் இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதம். இது உலகப் பொருள் முதல்வாதத் தத்துவத்திற்கு புதிய வெளிச்சத்தைக் கொடுத்தது.



எல்லாத் தத்துவங்களுக்கும் அடிப்படையானவை இருத்தலுக்கும், இல்லாததற்கும் இடையேயான நிலை குறித்தே. இவை குறித்து விவாதிக்க ஆரம்பித்தாலே பிரச்சனைதான். பொருள்வாதம் தெளிவாக தன்நிலை கருத்தை வைத்தாலும் கருத்து முதல்வாதம் விடுவதாக இல்லையே!

கருத்து முதல்வாதம் வேறொரு லோக்கத்துக்கு தள்ளிக் கொண்டு செல்கிறது. வரும் ஆனா வராது என்பது போல், உணர முடியும், ஆனா பார்க்க முடியாத தத்துவமாக ஒட்டிக் கொண்டிருக்கிறது கருத்துவாதம்.

கருத்து முதல்வாதிகளால் யதார்த்த வாழ்க்கையை முழுவதாக புறக்கணிக்க முடிவதில்லை. அதேநேரம் முழுவதுமாக ஏற்கவும் முடியாத குழப்பநிலை.

இவை சாண்டோக்ய உபநிடதத்தில் இருந்து தொடருகிறது. பொருள் முதல்வாதத்தில் பௌத்தர்கள் காலத்தில் இருந்தே கருத்து முதல்

வாதத்தோடு போராட வேண்டி இருந்தது.

. அண்மைய நூற்றாண்டுகளில் கூட கருத்து முதல்வாதத்தோடு பொருள் முதல்வாதிகள் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஏங்கெல்ஸ் முதற்கொண்டு தேவி பிரசாத் சட்டோபாத்யாயா வரை நீள்கிறது. இன்னும் எப்படித்தான் விளக்குவது?

“விட்டுத் தள்ளுங்கள், இன்னும் சில நூற்றாண்டுகளில் மனிதனின் அறிவு வளர்ச்சி கூடும் போது இந்த மதவாதிகளின் கூப்பாடு மக்களிடம் எடுபடாமல் போய்விடும்” என்று கூலாக சொல்கிறார்கள் இன்றைய தத்துவ ஆராய்ச்சியாளர்கள்.

அப்படி கூறும் வேதாத்திரி மகரிசி போன்ற சில தத்துவவாதிகளின் நூல்களையும் ஆய்வுகளை நீங்களும் வாசித்துப் பாருங்கள்:

Erich Frauwallner எழுதிய “Geschichteder Indishen philosophic” [இதில் வைசேஷிகம், ஜைனம், லோகாயதம் குறித்த தத்துவங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது]

Debiprasad Chattopadhyaya எழுதிய “Lokayata: A Study in Ancient Indian Materialism” - New Delhi, 1959 [பொருள் முதல்வாதம் குறித்த தத்துவ ஆய்வு]


அமெரிக்காவைச் சேர்ந்த Dale Riepe எழுதிய “The Naturalistic Tradition in Indian Thought”

P.N. Anikieu எழுதிய History of Philosophy

வால்டர் ரூபன் எழுதிய “Geschichte der Indiscaen philosophie” [1954]



வேதாத்திரி மகரிசி எழுதிய "Journey of Conciousness " பிரம்மஞானம்.




எப்போது இக்கருத்துப் போராட்டம் மனிதனிடம் தொடங்கி இருக்கக் கூடும்? மனிதன் உடலின் உள்நோக்கிய சிந்தனையில் தொடங்கி இருக்கிறது கருத்து முதல் வாதம். அனேகமாக 'சாண்டோக்ய உபநிடதத்தில்' தேடுதல் தொடங்கியிருக்க வேண்டும்.

இந்திய தத்துவ வரலாற்று ஆராய்ச்சியாளரான தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவும் "Lokayata: A Study in Ancient Indian Materialism" ஆய்வு நூலில் மனிதனின் உள்நோக்கிய சிந்தனை ஆத்மா தேடலில் சாண்டோக்ய உபநிடதத்தில் தான் தொடங்கப்பட்டிருக்கிறது என்கிறார்.

வேதாத்திரி மகரிசியின் விளக்கம்.

மகரிசியின் மாற்று விஞ்ஞானத்தில் தன்மாற்றத்தில் ஏற்படுகின்ற பல

நிகழ்ச்சிகளில் இயக்கக் காரணமங்ளை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.


சுத்தவெளி விண்துகளாக மலர்ந்தபோதுதான், நாம் கணிக்கிற காலம் பிறக்கிறது.

தன்மாற்றம் ஆரம்பமாகிறது. சுத்தவெளியே விண்துகளாக மாறுவதால், விண்துகள் (வேதான்) அறிவுடையது. ஆற்றலுடையது.

"பல சிந்தனையாளர்கள், "கருத்து முதலில் தோன்றியா? பொருள் முதலில் தோன்றியதா என்ற வாதத்தில் கலந்து , கருத்து - முதல் - வாதி என்றும், பொருள் - முதல் - வாதி என்று பிரிந்து நிற்கிறார்கள்.

வேதாத்திரிய விஞ்ஞானப் பார்வையில் கருத்தும் (அறிவு) பொருளும் (ஆற்றலும்) ஒரு சேரத் தோன்றுகின்றன, கருத்தில்லா பொருளோ, பொருளின்றிக் கருத்தோ சாத்தியமில்லை.

**தன்மாற்றச் சரித்தரத்தில் (பரிணாமத் தொடரில்) ஒரு நிகழ்ச்சி இன்னொரு நிகழ்ச்சிக்குக் காரணமாக அமைகிறது. இதை நாம் "செயல் விளைவுத் தத்துவம்" என்று அழைக்கின்றோம்.**



**இயக்கப் பிரபஞ்சத்தில் செயல்விளைவுக் கொள்கை துல்லியமாகச் செயல்கடுகிறது.**

**ஆனால், இப்பிரபஞ்சத்தின் விதிகள் மூல நிலையையாக இருக்கும் சுத்தவெளிக்குச் செல்லுபடியாவதில்லை. மூலநிலைதான் ஆதி என்பதால், அதன் செயலுக்கு வேறொரு செயல் காரணமாக அமைய முடியாது.**

**சுத்தவெளியின் செயலுக்குச் சுத்த வெளியே காரணம். அது, அதுவாகவே. தானாகவே செயல்படுகிறது. எல்லாவற்றுக்கும் "தாய் - தந்தை" யாக இருக்கிற சுத்தவெளிக்கு "தாய், தந்தை" கிடையாது. ஆகவே அது அநாதி.**

**விண்துகள்களை உருவாக்கிய சுத்தவெளி, தன் பேரறிவால், அவற்றை முறையாகச் சேர்த்து RNA, DNA போன்ற மூலக்கூறுகளை உருவாக்குகிறது.**

**விண்துகளில் ஆரம்பித்து வேறு வேறு அமைப்புகளாகி, எல்லா அமைப்புகளிலும் அந்தந்த அமைப்பின் அறிவாக இருந்து அவற்றை இயக்குவது சுத்தவெளியின் பேரறிவுதான் (Consciousness) .**

**அந்தந்த அமைப்புகளில் இயங்கும் அறிவுதான் அவற்றின் இயக்க ஒழுங்காக ( Order of function ) பரிணமிக்கிறது. "Consciousness is order of function " என்பார் வேதாத்திரி மகரிசி.**

**அந்தப் பேரறிவின் ஓர் அங்கமாகத் திகழ்கிற விஞ்ஞானி, எல்லா அமைப்புகளிலும் அணு முதல் அண்டம் வரை அந்தப் பேரறிவுதான் செயல்படுகிறது என்பதை உணர்ந்து அனைத்திலும் இயங்குகின்ற அந்தப் பேரறிவுதான் இறைநிலை, தெய்வம், பிரம்மன், பிதா, அல்லா என்று தெளியும்போது, ஒரு மெய்ஞ்ஞான விஞ்ஞானி ஆகிறான்.**

## 24 . ஆறுவகை சமயங்கள்.

இறைநிலையே அனைத்துமாக இருப்பதும், அதுவே மனிதனாக வந்துள்ளதும், மனிதனிடம் உள்ள போட்டிகளும் , கருத்துப் பிணக்குகளும், பகைமை உணர்வுகளும் விலங்கினத் தொடராக வருதையும் உணர்ந்து கொண்டான்.

இம்மண்ணுலகில் வாழ்கின்ற எல்லோரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள்தாம். எனவே அனைவதரும் சமம் என்ற கருத்தும் வளர்ந்தது.

இதை வைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் ஒத்தும் உதவியும் வாழவேண்டும் என்ற ஒரு நெறியைப் பரப்பினார்கள். இதுவே சமயம் எனப்பட்டது. சமம் + இயம் = சமயம். நேர்நிறைவு உணர்வு - சமய நெறி என்று வந்தது.

மதமும் சமயமும் ஒன்றே.

இறையுணர்வை ஏற்படுத்தி, தவறுகள் செய்யாமலும்,துன்பம் கொடுக்காமலும் பாதுகாக்கும் பொருட்டு பேரறிஞர்கள் பொதுவாக மனித குலத்திற்குக் காட்டியுள்ள வாழ்க்கை நெறியே மதம் என்பதாகும்.

மானுடம் வாழ வழிகாட்டியாக அமைத்த ஒரு நல்வழி மதமாகும்.

மதம் என்றாலும் சமயம் என்றாலும் ஒரே பொருளைக் குறிக்கும். மதம் என்ற சொல்லின் பொருள் “கொள்கை” என்பதே ஆகும். சம + இயம் = சமயம் என்பதன் கருத்து ஆன்மநேய ஒருமைப்பாட்டு வாழ்க்கை நெறியெ ஆகும்.

**வாழக்கை உரிமையில் நேர்நிறை உணர்வு சமயம் ஆகும். அவரவர் திறமைக்கேற்ப கடமையாற்றித் தான் வாழ்வேண்டுமென்ற யெல்முறைத்திட்டம் மதம் .**

**சொல் வளத்தால், சமயம், மதம் இரண்டும் வேறுபட்டிருந்தாலும் உட்கருத்தில் இரண்டும் ஒன்றேயாகும். இதனால் சமயத்தை மதம் என்றும், மதத்தைச் சமயம் என்றும் சொல்வது வழக்கமாகிவிட்டது.**

## வேதாத்திரி மகரிசி பார்வையில் மதம்.

**வாழ்க்கையை வாழத் தெரியாதவர்களுக்கும், வாழ்க்கை அனுபவமில்லாதவர்களுக்கும் வாழ்க்கையை அறிந்து கொண்டவன் வகுத்துக் காட்டும் வாழ்க்கை நெறி மதம் ஆகும்.**

**இறைவழிபாடும் அறநெறியும் இணைந்து வாழ்க்கை நெறியை உருவாக்கவதுதான் மதங்களின் நோக்கமாக இருந்தது.**

**இறையுணர்வு, அறவழி போதிப்பதற்கு இதுவரையிலே மகான்கள் எடுத்த முயற்சிதான் அந்தந்தக் காலத்தில் அந்தந்த இடத்திலே தோன்றிய மதம், அவர்கள் சொன்னவற்றுக்குக் காலத்திற்கேற்ற மாற்ம் கொடுக்காமல் அப்படியே வைத்துக் கொண்டு, சடங்குகளாக்கி, “இதற்கு மேலேயும் போகக் கூடாது. கீழேயும் வரக்கூடாது” என்று சட்டம போட்டுள்ளார்கள் அதுதான் மதம்.**

**எந்த மதமும் அதைத் தொடங்கி வைத்த பேரறிஞர்களால் உருவாக்கப் பெற்றிருந்ததே. ஆனால் பின்னர் மதத்தின் அடிப்படைக் கருத்துக்கள் அமுக்கப் பெற்றுச் சடங்குகளும், கற்பனைகளும் முதலிடம் பெற்றன.**

## ஆறு சமயங்கள்.

**இறைவழிபாட்டிற்கு அந்த காலத்தில் ஒத்த தெய்வநிலை தேவைப்பட்டது. வணக்கத்திற்குரிய தெய்வ நிலை தேர்வு காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மக்கள் அறிவின் வளர்ச்சிக்கேற்ப வேறுபட்டது. அதில் குறிப்பிடத்தக்கவை ஆறு.**

**1.சிவம் 2. சக்தி 3. விஷ்ணு 4. கணபதி 6. முருகன் என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் சமயமங்களாக மாறின. அவை 1. சைவம் 2. சாக்தம் 3. வைணவம் 4. சௌரம் 5. காணபத்தியம் 6. கௌமாரம் ஆகும்.**

**சைவ சமயம்.**



சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவசமயமாகும்.

" வெட்டவெளியிலிருந்து விண் முதலாக பஞ்சபுதங்கள் தோன்றின. பஞ்சபுதங்களின் கூட்டாக உண்டானவையே மற்ற அனைத்தும். மனிதனும் அவ்வாறே."

ஆகையால் வாழும் காலத்தில் ஒருவருக்கொருவர் ஒத்தும் உதவியும் ஒழுக்கமாக வாழவேண்டும் என்றபோது அந்தத் தெளிவோடு வாழும் நெறியைச் சைவ சமயம் என்றார்கள்.

"சுத்தவெளியிலிருந்து விண் முதலாக பஞ்சபுதங்கள் தோன்றின. பஞ்சபுதங்களின் கூட்டாக உண்டானவையே மற்றனைத்தும், மனிதனும் அவ்வாறே".

ஆகையால் வாழும் காலத்தில் ஒருவருக்கொருவர் ஒத்தும், உதவியும் ஒழுக்கமாக வாழவேண்டும் என்றபோது அந்தத் தெளிவோடு வாழும் நெறியச் சை சமயம் என்றார்கள்.

சைவசமயம் குறித்து வேதாத்திரி கருத்து

"சைவம் என்றால் சிவமே அனைத்துமாகி உள்ளது என்ற நேர்நிறை உணர்வு. பேரியக்க மண்டலத்தையே தெய்வத்தின் வடிவமாக உணரும் பேரறறிவு. அந்தப் பொருளை உணர்ந்த கொண்டால், அதன் பரிணாமப்படிகளில் ஒன்றுதான் மனித இனம் என்ற உணர்வு, எல்லோரும்

சமம் என்பது இவையனைத்தும் அந்தத் தெளிவில் தான் விளங்கும்.”

சாக்த சமயம்.

சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் சாக்தமாகும். இந்து சமயத்தில் இறைவனைத் தந்தையாக, தலைவனாக, தோழனாக, தனயனாக என்று பல வழிகளில் அடியார்கள் அன்பு பாராட்டினாலும் இவற்றில் தலைசிறந்ததும், அந்நியோன்மானதுமான அன்பு முறை தாய்-பிள்ளையாகும். இறைவனைத் தாயாகக் காணும் வழிபாடு சக்தி வழிபாடாகும்.

“ அம்மையே அப்பா ஒப்பிலாமணியே.. மங்கயர்க்கரசி.., பிடியதனுருவுமை.., மாதர்ப்பிறைக்கண் ணியானை..,” இதைவிட சங்கரரது பிரபஞ்சசாரம், சௌந்தர்யலகரி போன்ற நூல்களிலே சக்தி போற்றப்படுகின்றன.



பல்லவர் காலத்தின் பின்பும் சக்திவழிபாடு சிறப்புற்றிருந்தது. சோழர் காலத்தில் சக்திக்குரிய தலங்கள் அமைக்கப்பட்டன. சோழர்கள் ராஜராஜேஸ்வரியையும், பாண்டியர் நாயக்கர் மீனாட்சியையும் வழிபட்டிருந்தனர்.

நாயக்கர் காலத்தில் மதுரை மீனாட்சி கோயில் முழுமையாக அமைவுபெற்றிருந்தது. குமரகுருபரர் சகலகலாவல்லிமாலையையும் அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியையும் சக்திமீது பாடினர்.

கஜபாகு மன்னர் காலத்தில் கிராமிய வழிபாட்டின் அம்சமாக கண்ணகி வழிபாடு தோற்றபெற முத்துமாரி அம்மன் வழிபாடும் கிராமிய வழிபாட்டில் தன் இடத்தை எடுத்துக் கொண்டது.

இம்முத்துமாரி காத்தவராயனின் தாயாகவும் காணப்பட்டாள். இவளுக்கு கரகமெடுத்து நேர்த்திக்கடனை கிராமிய மக்கள் நிறைவேற்றினர். இவள் முத்துமாலையை கோபத்தால் வீசியபோது அம்பாள் நோய் தோன்றியதெனவும் குளிர்த்தி, கரகம் முதலிய நேர்த்திக்கடன்களை நிறைவேற்றியதால் நோய்தீர்ந்தது

எனவும் கர்ணபரம்பரைக் கதையொன்று கூறும்.

பிரதேசத்துக்கு பிரதேசம் கிராமத்திற்கு கிராமம் அம்மன் வழிபாடு சிறப்புப்பெற்றது. பொதுவாக மக்கள் கரகம், காவடி, குளிர்த்தி என்பவற்றால் வழிபாட்டை நிறைவேற்றுகின்றனர்.

மேற்கூறிய பெண்தெய்வ ஆலயங்கள் சீரும் சிறப்பும் பெற்று ஆகம முறைப்படியாக பெரிய ஆலயங்களாக உருப்பெற்றன.

இந்தியாவின் வட நாட்டிலேயே மிகுதியான செல்வாக்கை சக்தி வழிபாடு பெற்றுள்ளது. அச்செல்வாக்கு தென் நாட்டிலும் வலுப்பெற்றுள்ளது.

உதாரணமாக நவராத்திரியை தென்னாடு பெற்றுக் கொண்டது. தசரா என்னும் விஜயதசமி பண்டிகையை கொண்டாடுவது சான்றாகிறது. வட நாட்டில் வாழ்ந்த காளிதாசர், விவேகானந்தர், இராமகிருஷ்ணர் போன்றோர் அம்பாள் உபாசகர்களே.

குமரகுருபரர், அபிராமிபட்டர் போன்றோரும் தென்நாட்டு அம்பாள் உபாசகரே. “தனம் தரும் கல்வி தரும்…” என அபிராமிப்பட்டர் கூறியுள்ளார்.

இவ்வாறான சக்திக்குரிய சிறந்த விரதமாக நவராத்திரியையும், கணவனைப்பெற கார்த்தியாயினி விரதமும் கன்னிப்பெண்கள் அனுஷ்ட்டிப்பர். கேதாரகௌரி விரதம் உமை சிவனை அடைந்த வரலாற்றைக் கூறுகிறது எனலாம்.

20ம் நூற்றாண்டிலே அம்பாள் வழிபாடு சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளதைக் காணலாம். வீடுகள், பாடசாலைகள், வேலைத்தளம் என்பவற்றில் நவராத்திரி கொண்டாடப்படுகிறது. இவ்வாறு வரலாற்று நோக்கிலே அம்மன் வாழிபாட்டினைப் பற்றிக்கூறலாம்.

பேரியக்க களத்தின் இயக்க மூலக்கூறு சக்தியென்று வழங்கப்பட்டு, சக்தி வழிபாட்டு நெறி சாக்தம் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சிவநிலையைத் தெய்வம் என்றும், அதை வழிபடு கடவுளாகக் கொள்டவர்கள் தெய்வர்கள் அல்லுது தேவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். சக்தயை வழிபடு தெய்வமாகக் கொண்டவர்கள் விண்ணவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

வைணவமதம்.

**வைணவ சமயம்** திருமாலை (விஷ்ணுவை) முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். இச்சமயம் வைணவம் என்றும் வைஷ்ணவம் என்றும் அழைக்கப்படுகிறது.

உலகில் தீமைகள் ஓங்கும் போது இறைவன் அவதாரம் எடுத்து அவற்றை அழிப்பார் என்பது வைணவ நம்பிக்கை.



வைணவக் கடவுளான திருமால் எண்ணற்ற அவதாரங்கள் எடுத்துள்ளதாகவும் நம்புகிறார்கள். திருமாலின் எண்ணற்ற அவதாரங்களில் குறிப்பிடத்தக்க மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற பத்து அவதாரங்கள் தசவதாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. உபநிடதங்களில் பதின்மூன்று வைணவ உபநிடதங்களாகும்.

விண்ணின் திரட்சியே மற்ற நான்கு புதங்களாகவும், எல்லாத் தோற்றங்களாகவும் உணர்ந்தார்கள்.

பிற்காலத்தில் உயிரினப் பரிணாமத் தொடரை டார்வின் என்ற விஞ்ஞானி விளக்கியிருப்பது போல வைணவ சமயத்தவர்கள் பரிணாமப் படிகளைப் பத்து வகையாக உணாந்தார்கள். அதுவே தசாவதாரம் எனப்படுகிறது. வைணவம் அவதாரக் கொள்கைகளை நம்புகிறது.

குப்தர் போன்ற அரசர்களின் காலத்தில் செல்வாக்கு பெற்று தெற்காசியா முழுவதும் வைணவம் பரவியிருந்தது.வைணவ சமயத்தில் வைணவம், ஸ்ரீவைணவம் என உட்பிரிவுகள் உண்டு. ஸ்ரீவைணவத்தில் வடகலை, தென்கலை என்று இருபிரிவுகள் உண்டு.

அறநெறியில் இரண்டு விதக் கருத்துக்கக்ள உண்டு. புரண வளர்ச்சி பெற்ற மக்களிடையே அறநெறியைப் புகட்டிப் பழகச் செய்து கொள்ளலாம் என்பது ஒரு கருத்து.

குழந்தைப் பருவத்திலிருந்து பழகினால் அல்லாது வராது என்ற காரணத்தால் சிறு வயதிலிருந்தே நன்னெறிகளைப் புகட்ட வெண்டும் என்பது மற்றொரு கருத்து.

பக்தி மார்க்கம் என்ற போதனையிலன் மூலமாகச் சிறுவயதிலலேயே அறநெறிக்கு உரியவற்றை எடுத்துச் சொல்லி வந்தால் குழந்தைகள் வளர்ந்த பிறகு நன்மை தீமைகளை உணர்ந்து அதற்கு ஒத்தமுறையில் பிணக்கு இல்லாமல் வாழ முடியும். இதுவே வேதாத்திரி மகரிசி கருத்து.

இயற்கை இரகசியங்கள் என்னும் தத்துவ உண்மைகளை ஆசானாகப் பொறுப்பேற்பவர்கள் வரையில் “இரகசியார்த்தம்” என நிறுத்திக் கொண்டு, மற்ற மக்களுக்குச் சடங்குகள் மூலமும் வழிபாட்டு முறைகள் மூலமும் வாழ்வில் நலம் காணும் முறையை வகுத்தவர்கள் - அதாவது ஞானநெறி, பக்திநெறி என்று இறைவழிபாட்டு முறையைப் பிரித்து எல்லா மக்களும் இனிய வாழ்வு பெற வழி வகுத்தவர்கள் வைணவ சமயம் கண்ட பெரியார்களே ஆவர்.

சௌர சமயம்.

விண் எனும் நுண்ணியக்க மூலக்கூறுகூட சிந்தனையில் மிக்கோர்களில் சிலரால் மட்டுமே உணர்ந்து ஒப்புக் கொள்ள முடிந்தது. மற்ற பாமரர்களுக்குச் சிவமோ சக்தியே அறிவிற்குப் பிடிபடவில்லை.



அத்தகையவர்கள் கண்ணால் காணத்தக்க

பேராற்றல் உடைய சூரியனையே வழிபடு கடவுளாகக் கொண்டார்கள்.

வெப்பத்தால் உயிர்கள் அனைத்தும் ஆக்கவும் காக்கவும் பெறுகின்றன என்ற அடிப்படைக் கருத்தில் எல்லாவற்றுக்கும் காரணமானவன் சூரியனே என்றும், அவனால் ஆக்கவும் காக்கவும் பெறும அனைவரும் உடன் பிறந்தோர்கள் என்றும் கொண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வில் பின்பற்றப்பட்ட வாழ்க்கை நெறியே சௌர சமயம் எனப்பட்டது.

காணபத்யம்

இயற்கையை வெளிப்புறச் சிறப்பாகவும் அழகாகவும் காணும் அறிவால் அதே இயற்கையின் இரகசியங்களை உட்புறமாக - அக உணர்வாகப் பெற்றார்கள் சில சான்றோர்கள்.

மன ஓர்மை முறையான யோமுறையை-அகத்தவ முறையை- அதன் பெருமையினைச் சமுதாய மக்களிடம்உணர்த்த விரும்பினர் பேரறிஞர்களாக விளங்கிய ஞானிகள்.

அவர்கள் மூலாதாரம் முதற்கொண்டு முதுகெலும்பு வழியே உச்சி, புருவ மையம் என்ற பாதையில் உயிர்ச்சக்தி அந்தத்ந்த இடங்களில் மையங்கொண்டு இயங்குவதையும், ஒவ்வொரு மையத்திலும் உயிரியக்கம் அழுத்தம் கொள்ளும்போது உடலுக்கும்அறிவிற்கும் ஏற்படும் நன்மைகளையும் உணர்ந்தனர்.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபுரகம், அநாகதம், விசுக்கதி, ஆக்கினை, பிரம்மரந்திரம் என ஏழு மையங்களில் உயிர் இயக்கம் அழுத்தம் பெற்று இயங்குகிறது என்பதை அறிந்தனர்.

மனம் உயிரை நோக்கி உயிரில் இலயமாகிப் பின் மேலும் நுணுகி பரவெறியிற் கலந்து முழமைபெறும் கலையை உருவாக்கினார்கள்.

இக்கலையில் மனம் செல்லும் பாதை நெற்றி முதல் உச்சி, கழுத்து, முதுகுத்தண்டு என அதன் அடி குறிப்பாக வைத்து தெய்வ வழிபாடு தொடங்கினார்கள்.

பொதுவாக எந்தத் தத்துவ விளக்கித்திலுவம் அயையாளமாகக் கொண்டு முக்கியக் குறிப்போடு மனித உருவத்தையும் இணைத்தே

பாமரர்கள் உருவ வழிவாடு நடத்த வேண்டியிருந்தது.

இதனால் சிவநிலை, சக்தி நிலை. சங்கு சக்கர நிலை, சூரியன், "ஓ" வடிவம், ஆறுமுகக் குறிப்பு எல்லாவற்றிற்கும் அவ்வக் காலங்களில் உருவங்களைக் கற்பித்து வழிபாடு நடந்து வந்தது.



""ஓ"வுடன் மனித உருவம் இணைந்த வடிவமே கணபதி வடிவமாகும். இதனை வழிபடு தெய்வமாகக் கொண்நெறி காணபத்யம் என்று வழங்கப்பட்டது.

கௌமார சமயம்

பரிணாம வளர்ச்சியில் மனிதனுடைய அறிவு மேலும் வளர்ச்சி பெற்ற போது இறையுணர்வில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது.

வெளி எனப்படும் சிவமும், ஆற்றலாக உள்ள சக்தியும் இணைந்த திணிவு பெறும் நிலைக்கேற்ப ஐம்பெரும் புதங்களும் உயிர்வகையும் உருவானபோதிலும், அவற்றை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், அறிவு என்னும் ஆறு வகை பேரியக்க மண்டலமாக இருப்பதால் இவற்றையே வழிபடு தெய்மாகக் கொண்டால்தான் தெய்வ வழிவாடு முழுமையான பொருள் உடையதாகும் என்று சிந்தித்தனர்.



இந்த ஆறு நிலைகளைஆறு முகங்களாகக் குறிப்பிட்டு முருகன் (இயற்கை அழகு) என்றும், சக்தியும் சிவனும் இணைந்த கூட்டால் தோன்றியவன் என்ற கருத்தில் குமரன் (குமாரன்) என்றும், சக்தி சிவத்தில் அமையும்போது ஏற்படும்

மாற்றத்தைக் காந்த ஆற்றலென்றும், அதனால்அந்த நிலையை கந்தன் (காந்தன்) என்றும் வழங்கி வழிபடத் தொடங்கினார்கள்.

இந்தப் பிரிவினர் பின்பற்றிய வாழ்க்கை நெறியே கௌமார சமயமாகும்.

இவ்வாறு குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் அவ்வக்கால அறிவு வளர்ச்சிக்கும் வாழக்கை வசதிகட்கும் ஏற்ப வெவ்வேறான வழிபடு தெய்வத்தைக் கொண்டு வாழ்வை முறைப்படுத்திக் கொண்டார்கள். ஆறுவகை வழிபடு தெய்வங்களின் பெயரலால் உருவானவையே ஆறு சமயங்களாகும்.

இந்திய சமயத்தில் பல்வேறு இனமக்களின் பல்வேறு வழிபாட்டுப் பிரிவுகளும் தனித்தனி சமயங்கள் போல் தோன்றுகின்றன.

இருப்பினும் அவை அனைத்தும் குறிப்பிட்ட மரபுகளிலிருந்து தோன்றியனவாகும். அக்காரணத்தால் ஒன்றுமையுடைய ஒரு குடும்பம் போல் இருக்கின்றன.

## வேதாத்திரி மகரிசி பார்வையில் இறைநிலை

இறைநிலை என்பது என்ன? தத்துவஞானிகளாலும், விஞ்ஞான அறிஞர்களாலும் உணரப்பட்ட தெளிவின்படி, இந்தப் பிரபஞ்சத்திற்குத தோற்றுவாயாக மூலநிலையாக இருந்த ஒன்றே இறைநிலை என்பது தேர்ந்தேடுக்கப்பட்ட உண்மையாகும்.

விஞ்ஞான முறைப்படி இறைநிலையைக் கடவுள், தெய்வம், அல்லா, பிதா, எல்லாம் வல்ல முழுமுதற்பொருள், பிரம்மம் என்ற வார்த்தைகளால் மொழி வேறுபாட்டை வைத்துக் கொண்டு தத்துவததையும், விஞ்ஞானத்தையும வெவ்வோறகக் கருதக் கூடாது.

விஞ்ஞானத்திற்கும் , மெய்ஞ்ஞானத்திற்கும் ஒரே இணைப்பான கருத்துக்களை உணர வேண்டியுள்ளது.

வேதாத்திரியத்தில் இறைநிலை, சுத்தவெளி, இறைத்துகள் - காந்தம், விண், வான்காந்தம், சீவகாந்தம் போன்றவை இந்நூலின் கடைசி அத்யாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இந்தியத் தத்துவ தரிசனங்கள் கூறும் கடவுள் கோட்பாடுகளையும், ஆறு சமயங்கள் தோன்றிய விதங்களையும் அவை கூறும் கருத்துக்களையும் ஆராயுமிடத்து அனைத்தைப் பற்றியும் எளிதில் விளங்கிக் கொள்ளும் விதமாக வேதாத்திரிய இறைநிலை விளக்கம் அமைந்துள்ளது கண்கூடு.

அது மட்டுமின்னிற இறைநிலையோடு மனத்தை ஒன்றச் செய்து முழுமை பெறத்தக்க வகையில் மனத்திற்கான பயிற்சி முறைகளையும் உள்ளடக்கியுள்ளது இதன் சிறப்பாகும்.

நாடெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்கள் வழியாக இவற்றை அறிந்தும், பயிற்சி செய்தும் பயன்பெறலாம்.

# 25. பகவத் கீதை

**பகவத் கீதை** (சமக்கிருதம்என்பது இதிகாசத்தில் ஒன்றான மகாபாரதத்தின் ஒரு பகுதியாகும். பகவத் கீதை என்பதற்கு பகவானின் பாடல்கள் என்று பொருள்படும்.

மகாபாரதத்தில் நடைபெறும் குருச்சேத்திரப் போர் தொடங்கும் முன் எதிரணியை ஒருமுறை பார்வையிட்ட அருச்சுனன் அங்கே அவன் உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் போன்றோர் இருப்பதால் போரிட மறுத்தார்.

இதைக் கண்ட அவன் தேரோட்டியான கிருஷ்ணர், தர்மத்திற்காகப் போரிடும் பொழுது உறவுமுறைகள் குறுக்கிடக்கூடாது என்பது குறித்து விளக்கினார்.

அந்த விளக்கத்தில் தத்துவங்கள், யோகங்கள் போன்றவை பற்றியும் தெரிவித்தார்.



இந்த உரையாடல் கருத்துக்களே பகவத் கீதையாகும். இதில் கிருஷ்ணர் சொல்வதாக 620 ஸ்லோகங்களும், அர்ஜுனனின் சொல்வதாக 57, சஞ்சயன் சொல்வதாக 67, திருதராஷ்டிரன் சொல்வதாக ஒரு ஸ்லோகம் என மொத்தமாக 700 ஸ்லோகங்களையும், 18 அத்தியாயங்களையும் கொண்டதாகும். [1]

இந்நூலை பிரஸ்தான த்ரயம் என்றும் சொல்வதுண்டு. இதற்கு பிரம்ம சூத்திரம், உபநிஷத்துகள் ஆகியவற்றோடு பகவத் கீதையும் இணைந்து மூன்று அஸ்திவாரங்கள் என்று பொருள்படி பிரஸ்தானத்திரயம் என்று அழைக்கப்படுகிறது.

ராஜாஜியின் *கைவிளக்கு*, பால கங்காதர திலகரின் *கர்ம யோகம்*, மகாத்மா காந்தியின் *அநாஸக்தி யோகம்* போன்றவை பகவத் கீதை உரைகளாகும்.

**கண்ணனின் ஐந்து வாதங்கள்**

கண்ணன் அர்ச்சுனனுக்கு எடுத்துரைக்கும் வாதங்கள் ஐந்து.

- வேதாந்தப் பார்வை
- சுயதருமப் பார்வை
- கர்ம யோகப் பார்வை
- பக்தி யோகப் பார்வை
- ஞான யோகப் பார்வை

## வேதாந்த வாதம்

“வருந்தப்பட வேண்டாததற்கு வருத்தப்படுவது அறிவாளிகளுடைய செயலல்ல. மூன்று காலத்திலும் எந்தப் பொருள் இல்லையோ அதற்கு ஒரு காலத்திலும் இருப்பு என்பதில்லை. இருப்பது போல் தோன்றினாலும் அது நிகழ்காலத் தோற்றம் மட்டும்தான்.

மூன்று காலத்திலும் எந்தப் பொருள் உள்ளதோ அதற்கு ஒரு காலத்திலும் இல்லாமை என்பதில்லை. புலன்களுக்கு அகப்படாததை இல்லை என்று சொல்லிவிட முடியாது.

ஆன்மா என்ற ஒன்றுதான் அழியாத நிரந்தரமான உட்பொருள். அதை யாராலும் அழிக்க முடியாது. அழிவதாக நமக்கு தெரிவதெல்லாம் உடம்பு தான்.

“அர்ச்சுனா, எதிரிகளின் மீதுள்ள பாசத்தை விட்டுப் போர் புரி. அவர்கள் உடம்பில் குடிகொண்டிருக்கும் ஆன்மா யாரையும் கொல்லாது, அதை யாராலும் கொல்லவும் முடியாது. அதனால் நீ யாருக்காகவும் வருத்தப்பட வேண்டர்ம்” என்கிறார்.

இந்த முதல் வாதத்தின் அடிப்படையில் தான் முழு கீதையும் செயல்படுகிறது.

## சுயதரும வாதம்

“அர்ச்சுனா, உன்னுடைய சுயதருமம் க்ஷத்திரியனுக்குகந்த தருமப்போர் தான். இப்போருக்காக நீ பல ஆண்டுகள் தவமிருந்திருக்கிறாய். போரிலிருந்து பின்வாங்குவது உனக்கு ஒவ்வாத ஒன்று.” ‘சுயதருமமும் உன் சுபாவமும் விதிக்கும் க்ஷத்திரிய தருமத்தில் குறை இருந்தாலும் அதைக் கைவிடாதே. எந்தச்

செய்கையிலும் நெருப்புக்குப் புகைபோல் ஏதாவதொரு குறை இருக்கத்தான் செய்கிறது'.(18-48)

'பிறிதொருவனுடைய கடமையை ஏற்று அதை நன்றாகச் செய்தாலும் அதைவிடச் சிறந்தது தன்னுடைய கடமையில் ஈடுபட்டிருப்பதே. அது முறையாக ஆற்றப்படாவிடினும் அதுவே சிறந்தது' (3-35). 'சுபாவத்தினால் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்வதில் பாவம் சம்பவிப்பதில்லை' (18-47).

இந்த சுயதருமப் பார்வை எப்படி மற்ற வாதங்களுடன் ஒழுங்காகவும் தர்க்க ரீதியாகவும் பிணைக்கப் படுகின்றது

## கர்மயோகப் பார்வை

இது கர்ம யோகம் என்று பெயர் கொண்ட புரட்சி மிகுந்த உபதேசம். எளிதில் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடியது.

'ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டிய கடமைகள் பல. அவைகளைச் செய்வதில் விருப்போ அல்லது வெறுப்போ ஒரு பிரச்சினை ஆகக்கூடாது.

கடமையைக் கடமைக்காகவே செய்ய வேண்டும். கடமையைச் செய்வதற்குத் தான் உனக்கு அதிகாரம். அவை என்ன பயன் தருகிறதோ, தருமோ என்ற பிரச்சினை உன்னை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது.

பயனுக்காகவோ அல்லது பயனை விரும்பியோ, வெறுத்தோ செயலில் ஈடுபடுவது உன்னை கட்டுப்படுத்தும். இந்தப்போர் உன்னுடைய கடமைகளில் ஒன்று. இதை ஆசையோ, நிராசையோ, கோபமோ தாபமோ இல்லாமல், ஆனால் அலட்சியமும் இல்லாமல், நன்றாகவே செய்யவேண்டும்'

. 'உனது செயல்களை யெல்லாம் எனக்கு அர்ப்பணித்து விட்டு என்னில் நிலைத்த மனதுடன், பயனில் பற்றற்று, அகங்காரத்தை விட்டு, மனக் கொதிப்பில்லாமல் போரிடு' (3 – 30).

கீதை 2வது அத்தியாயம் 39 வது சுலோகத்திலிருந்து 5வது அத்தியாயம் முடியும் வரை இதை கர்ம யோகம் என்ற ஒரு உயரிய யோக நூலாக விவரிக்கப்படுகிறது.

கர்மயோகம் பற்றி வேதாத்திரி மகரிசி.

- தனக்கு எல்லா வசதிகளையும்அளித்து காத்து வருகின்ற சமுதாயத்திற்கு தனது கடனையாற்ற அறிவாலோ உடலாலே உழைப்பதுதான் கர்மயோகம்.
- தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகு, ஐவகைக் கடமை ஒன்றினால் ஒன்று கெடாமல் செய்தல்.
- உடலுக்கும் பொருளுக்கும் தொடர்புணர்ந்து உழைத்துண்டு உதவுதலே கர்மயோகம்.
- செய்தொழில்களில் இறைநீத உணர்ந்து பிணக்கின்றிஅதன் வழியே செயல்படுதல்தான் கர்மயோகம்.
- தாய், தந்தை, குரு, அரசு, தெய்வம் ஐங்குறவர் வழிபார்.

## பக்திப் பார்வை

‘எல்லாம் வல்ல இறைவன் நான். என்னை நம்பு. நீயாகச்செய்வது ஒன்றுமே இல்லை. என்னையன்றி ஓரணுவும் அசையாது.’ 11 வது அத்தியாயத்தில் தன் விசுவ ரூபத்தைக் காட்டிவிட்டு கண்ணன் சொல்கிறான்: ‘இவர்களெல்லாம் என்னால் ஏற்கனவே கொல்லப்பட்டவர்களே. நீ என் கருவி மட்டும் தான்.’ (11–33). ‘உன் செயல்களை யெல்லாம் எனக்காகச் செய். இவ்வுலகிலும் சரி, அவ்வுலகிலும் சரி. நான் உன்னுடன் இருப்பேன்.’ என்று கண்ணன் தன்னை ஆண்டவனாகவே வைத்துப் பேசுவதாக இந்தப் பகுதி உள்ளது.இது எல்லாம் ஈசன் செயல் என்ற பக்தி வாசகத்தை ஆதாரமாகக் கொண்டு எடுத்தாளப்பட்ட வாதம் என்கிற கருத்தும் உண்டு.

பக்தி பற்றி வேதாத்திரி மகரிசி.

- பெரியவர்கள் அறிவில் தெளிந்தவர்கள் சொற்படி அவர்கள் வழியில் செயல்புரிந்து தன்னை ஆன்மீக வாழ்வுக்குத் தகதியாக்கிக் கொள்வது பகுதி பக்தி யோகம்.
- வளர்ப்போர் சொல்லிக் கொடுப்பதைத் திருப்பித் திருப்பிச் சொல்லும் கிளியைப் போன்று , தன் தாயார் சுட்டிக்காட்டிய ஒருவன் தான் தன் தகப்பன் என்று உறுதியாகச் சொல்லும் மகனின் மனோநிலை போன்ற

பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள கருத்துக்களே சரி என்று நம்ப உறுதி கொண்டிருக்கும் நிலையே பக்தி.

## தத்துவப் பார்வை

பிரகிருதி என்பது மனிதனின் கூடவே பிறந்த சுபாவம். ‘அகங்காரத்தினால் நீ செய்வதாக நினைத்துக்கொண்டு நான் சொல்வதைக் கேளாமல் செயற்படுவாயானால், அழிந்து போவாய்’ (18–58). ‘அகங்காரத்தின் மயக்கத்தினால் நீ போரிட மாட்டேன் என்று நினைப்பது வெற்றுத் தீர்மானம். அது நடக்காது. உன் பிரகிருதி உன்னை அப்படிச் செய்ய விடாது’ (18 – 59). ‘எந்தக் காரியத்தைச் செய்ய மாட்டேன் என்று நீ பின்வாங்குகிறயோ அதையே செய்யும்படி உன் பிரகிருதி (சுபாவம்) உன்னைக் கட்டாயப்படுத்தும்.’ (18-60). இது பிரகிருதியை ஆதாரமாகக் கொண்டு தத்துவ ரீதியில் சொல்லப்பட்ட ஐந்தாவது வாதம்.

## சரணாகதி என்ற முத்தாய்ப்பு

‘உன் சுமையையெல்லாம் என்மேல் இறக்கி வை. தருமம், அதருமம் இரண்டுக்கும் பொறுப்பாளி நீயல்ல என்றறிந்து, என்னையே ஒரே புகலிடமாகக் கொண்டு, உன் கடமையைச் செய்.’ (18-66) என்று கடைசியாகக் கண்ணன் சொல்வதாக உள்ளது.

இவ்வைந்து வாதங்களின் பலத்தால் தான் அர்ச்சுனன் போரிடத் தொடங்குகிறான்.

## கீதையின் போதனை

போர் புரியமாட்டேன் என்ற அர்ச்சுனனை மாற்றுவதற்காக எடுத்தாளப்பட்ட ஐந்து வாதங்கள் மனிதர்கள் அனைவருக்கும் கண்ணனால் கூறப்பட்ட போதனைகள் என இந்து சமய நம்பிக்கையுடையவர்களுக்குச் சொல்லப்படுகிறது.

- *பற்றுகளை அறு. அதற்காக புலனடக்கம் என்ற யோகசாதனையைச் செய்துகொண்டே இரு.*
- *பலனில் பற்றற்று சுயதருமத்தை ஒழுகு.*

- *ஈசனை மறக்காதே. அந்த இரண்டற்ற பரம்பொருளிடம் சுயநலமற்ற பக்தியைச் செலுத்து.*
- *அம்மெய்ப் பொருளையே புகலிடமாகக் கொள்.*
- *யாரையும் எதையும் வெறுக்காமலிருக்கும் சமநோக்கு அல்லது பிரும்ம உணர்வு என்னும் முடிவை நோக்கிச் செல்.*

## பகவத் கீதையின் உட்கருத்து

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையதை எதை இழந்தாய் என்று எதற்காக நீ அழுகிறாய?
- எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
- எதை நீ படைத்தாய், அது வீணாவதற்கு?
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது
- மற்றொரு நாள் அது வேறு ஒருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும் படைப்பின் சாரமாகும்.

வேதாத்திரி மகரிசியின் மனவளக்கலையில் கீதையின் சாரத்தையும் படிக்கலாம்.

# 26. உலகாயதம்

**உலகாயதம்** இந்திய தத்துவ வரலாற்றில் உலகாயதம் முக்கிய பங்கு வகிக்கிறது.

உலகாயதம் என்பது ஒரு வாழ்க்கை நெறி. இயற்கையை பிரபஞ்சத்தை, உலகை கண்களால் கண்டு விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு முறை இது.

உள்ளதை உள்ளவாறு அறிந்து செயல்பட்டு அதன் மூலம் மாற்றத்தை மவிளைவிக்க வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்ட முறை இது. உலகாயதம் என்பதைச் “சாருவாகம்” என்றும் அழைப்பர்.

உலகை நோக்கி பொருள்முதல்வாத அனுபவாத அணுகுமுறையை இது முன்னிறுத்துகிறது.

கடவுள், மாயை, பிறவிச்சுழற்சி, ஆன்மா போன்ற சமய நம்பிக்கைகளையும் இயற்கை விளக்கங்களையும் இது மறுக்கிறது.

உலகாயதம் இவ்வுலக வாழ்வில் நம்பிக்கையும், “உலக உடன்பாட்டு சிந்தனையும்” கொண்டது.

இந்த சிந்தனை வாழ்வில் வீடு காண்பதை விட இன்பத்தை முதன்மைப்படுத்துகிறது.

உலகாயுதர்கள் மட்டுமே, மூட நம்பிக்கைகளும் அவற்றுடன் இணைந்தவையும் சேர்ந்த கருத்து முதல் வாதத்தை மறுத்தது பொருள் முதல் வாதத்தை தூக்கிப் பிடித்தனர்.

**பிரமாணம்**

இந்திய தத்துவத்தில் **பிரமாணங்கள்** , தேவநாகரி: அல்லது **அளவை** என்பது ஏற்புடைய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகளைக் குறிக்கின்றது.

ஆறு வகையான இத்தகைய வழி முறைகளைப் பற்றி இந்திய தத்துவ நூல்கள் பேசுகின்றன.

பிரமாணங்கள் வேத மந்திரங்களுக்கான விளக்கவுரையுடன் எழுதப்பட்ட பகுதிகள் ஆகும்.

வேதங்களில் உள்ள துதிப்பாடல்களுக்குரிய உரைநடை நூல்கள் எனலாம். சமயச் சடங்குகள், வேள்விகள் பற்றிய விளக்கங்களும் அவற்றைச் செய்யும் முறைகளும் உள்ளன. புரோகிதர்களுக்கு சரியான வழியைக் காட்ட இவை பெரிதும் உதவுகின்றன.

## ஆறு வழிமுறைகள்

1. புலனுணர்வு - (பிரத்தியட்சம் - perception by the senses)
2. உய்த்துணர்வு - (அநுமானம் - deduction or inference)
3. உரைச்சான்று - (சப்தம் அல்லது ஆப்தவாக்கியம் - trustworthy testimony or revelation)
4. ஒப்புநோக்கு - (உபமானம் - analogy or comparison)
5. சூழ்நிலைசார் உய்த்துணர்வு - (அர்த்தாபத்தி - deduction or inference from circumstances)
6. எதிர்மறைச் சான்று - (அனுபலப்தி - proof by the negative method)

எல்லாத் தத்துவப் பிரிவுகளுமே இந்த ஆறு முறைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை.

பல தத்துவப் பிரிவுகள் இவற்றுள் சிலவற்றை மட்டும் ஏற்றுக்கொள்கின்றன.

தத்துவப் பிரிவுகளிடையே வேறுபாடுகள் காணப்படுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

**அடிப்படையான பிரமாணங்கள் மூன்று**

**பிரமாணங்களைப் பற்றிய வரையறை எந்தத் தத்துவ ஞானத்துக்கும் மிக முக்கியமான ஒன்றாகும்.**

பிரமாணங்கள் என்றால் இந்தப் பிரபஞ்சத்தை அறிவதற்கான வழிமுறைகள் எனப் பொருள்.

பிரபஞ்சத்தை, அதன் அம்சங்களை நாம் சரியாக அறிந்தால் தான் அவற்றுக்கு அடிப்படையான உண்மைகளை அறிய முடியும்.

எனவே இந்தியத் தத்துவ மரபில் உள்ள எல்லாத் தத்துவப் பிரிவுகளுமே அறிதல் முறைக்கு முக்கியத்துவம் கொடுக் கின்றன.

**பிரத்தியட்சம்** –

பார்வை முதலான புலன்கள் மூலம் அறிவது.

**அனுமானம் அல்லது யூகம்**:

உய்த்துணர்வு – தர்க்க அறிவின் மூலம், ஊகித்து / அலசி அறிவது (புகை இருந்தால் நெருப்பு இருக்கும். இடி இடித்தால் மழை பொழியும்…).

ஆப்த வாக்கியம்

ஒப்பு நோக்கு. வெவ்வேறு விஷயங்களை ஒப்பிட்டு, அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை அலசிப் புரிந்துகொள்ளுதல். முன் சென்ற சான்றோர்கள் தாம் நேரரே கண்டும் அனுபவித்தும் கொண்ட

அறிவைச் சொல்லியம் எழுதியும் வைத்துள்ளனர். அன்னாருடைய வாக்கியங்களே ஆப்த வாக்கியங்கள்.

நம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுள்ள அறிவு முழுவதையும் தருவனே மேலே நாம் கண்ட பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம் ஆகிய 5ன்று பிராமாணம் என்று கூறலாம்.

பெரும்பாலான இந்திய தத்துவ ஞானிகள் அனுமானமும் ஆப்த வாக்கியமுமே உண்மையைத் தரவல்லன எனக் கொள்வர்.

உலகாயுதம் மட்டுமே பிரத்யட்சம் ஒன்றை மட்டுமே நம் புகிறது. அனுமானம், ஆப்தவாக்கியம் இரண்டையும் உண்மையைத் தரவவல்லன என்பது உலகாயதர் கொள்கை.

அனுமானம் பற்றிய உலகாயதர்களின் கருத்துப ப்றிற அறிய மிக முக்கியமான ஆதாரத்தை தாஸ்குப்தா நமக்கத் தந்துள்ளார்.

மனித எல்லைக்கு அப்பாற்பட்டவை, மரணத்திற்குப் பிறகான வாழ்கை, கர்மா கோட்பாடு ஆகிய சாதாரண புலன்களால் உணர முடியாதவை இவ்றறைப் பயன்படுத்து முடியாது" சமண ஆசிரியர் வாததிதேவ சூரியின் குறிப்பகளின் அடிப்படையில் புரந்தரின் கொள்கைகளை தாஸ்குப்தா பின்வருமாறு விளக்குகிறார்.

- சாதாரண ஊகத்தின் அடிப்படையில் அமைந்த அனுபவத்திற்கம், மனித எல்லைக்கு அப்பாற்பட்ட உண்மைகள் பற்றி கூறுவதற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. முதலாவதில் பார்க்கக் கூடிய பலவற்றையும் பார்க்க் முடியாத சிலவற்றையும் கவனித்து தொகுப்பாய்வு முறையில் ஒரு முடிவக்கு வர முடியும். ஆனால் மனித எல்லைக்கப்பாற்பட்ட மட்டத்தில் இது நடவாத காரரியம். அப்படி இருந்தாலும், அவற்றை புலன்களால் உணர முடியாது. இவ்வாறு, மனித எலலைக்க அப்பாற்பட்ட பலன்களால் உணர முடியாது உலகத்தில் ஂசாத்யத்துட்ன இசைவாகப் போகும் உறது இருக்க முடியாது. ஏனெனில், இங்கு தொகுப்பாய்வு முறையோ, இணைந்து செல்லும் நிலையோ இருக்க முடியாது.

உலகம் - பிரபஞ்சத் தத்துவம்

கண்ணுக்கும் காட்சிக்கும் தெரியும் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கும் தான் அடிப்படையான பொருள்ளகள். ஆகாயம் அனுமானமே. அனுமானத்தை ஏற்றுக்கொள்ளாத உலகாயதர் ஆகாயத்தை ஏற்றுக் கொள்வதில்லை.

பூதங்கள் நான்கும் வெவ்வேறு விதத்திலும் ஒன்று சேர, அச்சேர்க்கையால் எழுந்தனவே இவ்வுடலும் உலகிலுள்ள பல்வேற பொருள்களும். இதுவே அதன் சுபவாவம் என்பது இவர்களது கொள்கை.

உயிர் தத்துவம்

கண்ணால் கண்டதுதான் மெய் என்பது இவர்களது கொள்கை. மற்றவை யாவும் பொய் எனச் சொல்லும் உலகாயுதர் உடலின் வேறாய், உடல் தோன்றுவதற்கு முன்னும் உள்ளதாய், உடல் அழிந்த பின்னும் நிலைத்து நிற்பதாய் உள்ள உயிரென்ற ஒன்று உண்டென்பதை ஒப்புக் கொள்ளவில்லை.

உடலும் உயிரும் ஒன்றே என்பது இவர்களது கொள்ளை

உயிரும் இறைவனும் பொய்

கடவுள்.

உயிரும் கடளும் உண்டென்று கூறுபவர்கள் அறியாமையாலும் வஞ்சகச் சூழ்ச்சியாலும்தான் இவ்வாறு கூறுகின்றனர் என்பது உலகாயுதர் கருத்து.

ஆன்மா

ஆன்மா என்ற ஒன்றிலை்லை. உடலின் இயல்புதன் ஆன்மா, உடலின் குணமே் ஆன்மா,

உடலில்லாத ஆத்மா கிடையாது. ஆகவே மேலுலகம் செல்லும் பிரச்சனையோ, மோட்சம் அடைவதோ எழவில்லை.

உடலே பிரக்ஞை. அதுவே ஆத்மா. இதற்கு அவர்கள் கூறும் காரணம்,

- உடல் இருக்கும் இடத்தில் ஆத்மா இருக்கின்றது" ஒன்று இருக்குமிடத்தில் வேறு ஒன்று இல்லாத போது வேறொன்றும் இல்லாமல் இருந்தால், முன்னதை நாம் பின்னதன் குணமாக கூறுகிறோம். ஒளியும் சூடும் நெருக்கின் குணங்களாக நாம் கூறுகிறோம். உயிர். இயக்கம், பிரக்ஞை, நினைவாற்றல் போன்றவை ஆத்மாவின் குணங்கள் என்று சுதந்திரமான ஆத்மா இருப்பதாகக் கூறுபவர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால், இவை உடலில் தான் இருக்கின்றன, வெளியே இல்லை. உடலிலிருந்து வெளியே இருப்பதாக நிரூபிக்க் முடியாது. இவை உடலின் குணங்களே என்றுதான் கூற வேண்டும். ஆகவே. ஆத்மா என்பது உடலே அன்றி வேறில்லை.

பகுத்தறிவு

உண்மை, பொய் என்பதைப் புலன்களால் உண்டாகும் அனுபவத்தைக் கொண்டுதான் தெரிந்து கொள்ளக்கூடும். நாளை அனுபவம் மாறும். நமது யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருந்தியது எதுவோ அதுதான் உண்மை.

அனுபவக் காட்சிகளை வகுப்பது மூளையின் தன்மை. புலன்களால் அறிந்தவைகளின் ஒற்றுமையையும், வித்தியாசங்களையும் வகுத்துப் பார்ப்பது பகுத்தறிவு. அனுவத்தைச் சொற்களால் வகுத்துச் சொல்வது பகுத்தறிவு.

பாவமும் புண்ணியமும்.

வாழ்வில் செய்யப்படும் கர்மம், வினை, செயல் செய்பவரோடு சேர்வதுவே! ஆனால் கர்மம் மட்டும் தனியாக இருந்து அவருடைய ஆன்மாவிற்கு அடுத்த பிறவிக்கும் ஏதும் ஆவதில்லை.

ஒருவர் செயலில் புண்ணியம், பாவம் இல்லை. பிறவித் தொடர்ச்சியும் இல்லை. சொர்க்கமும் நரகமும் இல்லை.

ஒருவருக்கு வரும் இன்பம் துன்பம் இயல்பானவை. அவர் செய்த புண்ணிய, பாவங்களால் வருவன அல்ல. அவருடைய செயலில் வருவன. தெய்விக சக்திகள் இதை ஏற்படுத்தித் தருவதில்லை.

கோயில் கட்டுவது, குளம். கிணறு, நீர்ப்பந்தல் ஏற்படுத்துவது, சத்திரம் சாவடி நடத்துவது எனபன ஊர்விட்டு ஊர்போகும் பயணிகளுக்காக ஆகும்.

பொன்தானம், நிலதானம், விருந்து தருதல் ஆகியன வறுமை கொண்டவர்களைப் பேணுவதற்காக ஆகும். மற்றபடி இதில் புண்ணியம் என்ற ஒன்று இல்லை. பாவம் நீங்கிப் புண்ணியம்கிட்டுவதுமில்லை.

பஞ்சபூதச் சேர்க்கையால் பொருட்கள் தோதற்றமாவதும், பிரிவால் மீண்டும் பஞ்சபுதங்களாக மாறுவதும் ஆகின்றன.

பஞ்சபபூதங்கள் தோன்றுவதும் மறைவதும் இல்ல. உலக என்றும் உள்ள உண்மை. அது மாயை அல்ல. புலன்களால் அறியப்படும் அனைத்துப் பொருட்களும் உண்மையே

. பாவ புண்ணியம் என்று ஒன்று இல்லை. இன்பமும் துன்பமும் பாவ புண்ணியத்தால் வருவன அல்ல. அவரவருடைய செயல்களினால் வருபவையே ஆகும்.

புலன்களால் உணர்ந்தவை மட்டுமே உண்மை என்ற கருத்தைக் கொண்டது உலகாயதம். பிரத்தியட்சம் என்ற அளவையை மட்டுமே ஏற்கிறது. உலகாயதத்தை நிறுவியவர் சாருவாகர். அதனால் உலகாயதத்தைச் சாருவாகம் என்பர்.

# 27. சமணம் தந்த மகாவீரர்

வேத காலம் சடங்குகளையும், யாகங்களையையும், கிரியைகளையும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தபோது, சமண மதத்தில் மகாவீரர் என்ற புரட்சி சிந்தனையாளர் தோன்றினார்.

சமண மதத்தின் 24வது தீர்த்தங்கரர் மகாவீரர் என்று உலகத்தால் உணரப்பட்ட வர்த்தமானரின் ஞான உபதேசங்கள்தான், இந்திய தத்துவ ஞானத்தின் ஆரம்பம் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

புத்தரும், மகாவீரரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தில் வேதங்களை மையமாகக் கொண்டு வைதீகர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது.

வைதீகர் அல்லாதோர் வேதம் படிக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டார்கள்.

சடங்குகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பாமர மக்களுக்கும், உயர்ந்த நெறிகளுக்கும் தொடர்பில்லாத ஒரு சமுதாய சூழ்நிலை இருந்தது.

மேலும் வேதங்கள் சமஸ்கிருத மொழியல் எழுதப்பட்டிருந்ததாலும் ஜாதிப் பாகுபாடுகள் மேலோங்கிக இருந்தன. ஆன்மீக விஷயங்கள் பாமர மக்களுக்கத் எட்டாத ஒன்றாக, தொடர்பில்லாத ஒன்றாக அந்தக் காலத்தில் இருந்தது.

இதனால் பாமர மக்கள் ஆன்மீக வளாச்சி பெற வாய்ப்பம் வசதியும் இல்லாமல் இருந்தது.

அந்தக் காலத்தில் இந்துமதச் சடங்குகள் ஏராளமாக இருந்ததால், பாமர மக்கள் அந்தச் சடங்குகளில் ஈடுபட முடியாத நிலையில் இருந்தார்கள்.

அதனால் அவர்கள் சமுதாய வாழ்க்கையிலிருநது ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாக இருந்தனர். ஆன்மீக வாழ்க்கைக்க ஆசைப்பட முடியாதவர்களாகவும் இருந்தார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில்தான் சமண மதமும் புத்தமதமும் பாமர மக்களிடம் ஆன்மீகத் தெளிவையும், ஞானத்தையும் ஏறபடுத்துகின்ற பெரும் முயற்சிகளில் ஈடுபட்டன.

புத்த மதமும், சமண மதமும் பாமர மக்களுக்கு ஞானக் கதவுகளைத் திறந்துவிடுகின்ற பணியினை மேற்கொண்டன.

மனித இனத்துக்கு வழிகாட்டிய சமணமும் பௌத்தமும் தந்த போதனைகள் பாமர மக்களுக்கு ஆன்மீக வாழ்க்கைக்கு நம்பிக்கைஊட்டுவதாக அமைந்தன.

வேதங்களில் சொல்லப்பட்ட சடங்குகளைத்தான் இந்த இரண்டு ஞானிகளும் மறுத்தார்களே தவிர, அவர்கள் அதற்கு முன்பிருந்த ஆன்மீகச் சிந்தனைகளை மறுக்கவில்லை.

இந்தியாவில் தோன்றிய பழைய சமயங்களுள் சமண சமயமும் ஒன்று. இது பொதுவாக ஜைனம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆருகதம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. அகிம்சை சமண சமயத்தின் மையக் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

இன்று உலகில் சமண சமயத்தை ஏறத்தாள 5 மில்லியன் மக்கள் பின்பற்றுகின்றார்கள். பல்வேறு வரலாற்று காலகட்டங்களில் தமிழர்களிடம் **சமணம்** பரவி இருந்தது, இன்றும் குறிப்பிடத்தக்க சமணர்கள் தமிழர்கள் ஆவார்கள். இவர்கள் தமிழ்ச் சமணர் அன்று அறியப்படுவர்.

வடநாட்டினின்று வந்த சமணரும் தமிழ்ச் சமணரும் கலாச்சார இரீதியாகவும் மொழி இரீதியாகவும் வேறுபட்டவர்கள் ஆவர்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் மகாவீரரால் பின்பு இம்மதம் பிரசித்தப்படுத்தப்பட்டது.மகாவீரருக்கு முன்பு 24 தீர்த்தங்கரர் என அறியப்படும் சமணப்பெரியார்கள் இருந்துள்ளார்கள்.

## சமணத்தின் அடிப்படைக் கொள்கைகள்



சமண சமய இல்லறத்தார்களும் மற்றும் சமணத் துறவிகளும் பின்பற்ற வேண்டிய அறங்களை **அனுவிரதம்** என்றும் **மகாவிரதம்** என்று அடைவு செய்துள்ளது. விரதம் என்பது நோன்பினை குறிக்கும்.

வாழ்க்கையை ஒரு விரதமாக கடைபிடிக்க வேண்டும் என்பது மகாவீரரின் குறிகோள் ஆகும். இதனால்தான் இல்லறத்தாரைச் **சாவகநோன்பிகள்** என்றும் துறவறத்தாரை **பட்டினி நோன்பிகள்** என்றும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

## இல்லறத்தாரும் மற்றும் துறவறத்தாரும் பொதுவாக கடைபிடிக்க வேண்டிய ஐந்து அனுவிரதங்கள்

1. அகிம்சை
2. வாய்மை
3. கள்ளாமை
4. துறவு
5. அவாவறுத்தல்

### *1. அகிம்சை (கொல்லாமை)*

இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் என்ற நான்கு கொள்கைகளையும் சேர்த்து அகிம்சை என்கின்றனர்.

“**அஹிம்சோ பரமொ தர்ம**” என்பது மகாவீரரின் பொன்பொழியாகும். கொல்லாமையே மேலான அறம் என்பது இதன் பொருள். எந்த உயிருக்கும் எந்த வகையிலும் இம்சை செய்யாமையே அகிம்சை எனப்படும்.

சமண சமயத்தின் பன்னிரண்டு அங்க ஆகமங்களில் முதல் ஆகமம் ஆகிய **ஆயாரங்க சுத்தத்தில் அகிம்சை** எனப்படும் அறத்தினை **மகாவீரர்** போதித்துள்ளார்.

அதன் ஒரு பகுதியில் “ மனிதர்களே “, எந்த ஒரு உயிரையும் துன்புறுத்தவோ, வதைக்கவோ, கொல்லவோ கூடாது. பிறறை அவமதிப்பது கூட இம்சையாகும்.

ஆகவே அகிம்சை என்பது உயிர்க்கொலை புரியாமை மட்டும் அன்று; ம்ன்னுயிர்க்கும் இன்னா செய்யாமையும், பிறறை அவமதிக்காமையும் அகிம்சை ஆகும். மனிதர்களே, நீங்கள் எடுத்துவரும் பல்வேறு பிறவிகளில், உங்களால் இம்சிக்கப்பெறும் உயிராகவும் நீங்களே பிறப்பெடுத்து இருப்பீர்கள்;

ஆகவே, எல்லா உயிர்களையும் உங்கள் உயிர் போல மதித்து நடப்பதே அகிம்சையாகும், என்று மகாவீரர் அறிவுறுத்தியுள்ளார்.

எவ்வகை அறங்களுக்கும் மூலமாகவும் முதலாகவும் சுடர்விடுவது **தயா** எனப்படும் **பெருங்கருணை** ஆகும். இப்பேரருள் வாய்க்கப் பெற்றவர்கள் மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்க மாட்டான். அனைத்துயிர்களையும் சம நோக்குடன் பார்ப்பான்.

### *2. வாய்மை (அசத்திய தியாகம்)*

மகாவீரரின் இரண்டாவது பேரறமாகத் திகழ்வது **பொய் பேசாமை** எனப்படும். இதனை “அசத்தியத் தியாகம்” என்பர்.

சத்தியம் என்பது உண்மை. அசத்தியம் என்பது உண்மைக்குப் புறம்பாகிய பொய். **தியாகம்** என்பதற்கு கைவிட்டுவிடுதல் என்பது பொருள்.

எனவே அசத்தியத்தியாகம் எனில் பொய் பேசுவதை அறவே கைவிட்டுவிடுதல் என்று பொருள். மகாவீரர் வாய்மை அறத்தினை முழுமையாகப் பின்பற்றுவதற்கு ஐந்து வழிகள் அறிவித்துள்ளார்.

- எந்த ஒரு கருத்தையும் ஆராயாது பேசுதல் கூடாது.
- சீற்றத்துடன் பேசுதல் கூடாது.
- ஆசைகாட்டி பேசுதல் கூடாது.
- அச்சம் ஏற்படும்படி பேசுதல் கூடாது.
- பிறர் சிரிக்க வேண்டும் என்பதற்காகவோ, விளையாட்டிற்காகவோகூட பொய் பேசுதல் கூடாது.

அகிம்சையும் சத்தியமும் அறமாகக் கொண்டு செயல் புரிவோர் பல்வேறு சித்திகளைப் பெறுவர் என்பது சமண சமயத்தின் நம்பிக்கை.

காந்தியடிகளின் அறப்போராட்டத்திற்கு மகாவீரர் போதித்த அகிம்சையும் சத்தியமுமே இரு பெரும் ஆயுதங்களாக பயன்பட்டு வெற்றி தேடித் தந்தது.

### *3. கள்ளாமை*

மகாவீரரின் அறிவுரைகளில் மூன்றாவது அறமாகப் பேசப்படுவது **அஸ்தேயம்** ஆகும். ஸ்தேயம் எனில் களவு. அஸ்தேயம் எனில் களவு புரியாமை எனும் கள்ளாமையாகும்.

கொல்லாமை அறத்தினால் பிற உயிர்களுக்கு தீங்கு புரியாமை குறித்த மகாவீரர் கள்ளாமை அறத்தினால் பிறர் உடைமைகளுக்கு தீங்கு நேராதபடி வாழவேண்டும் என வலியுறுத்துகிறார்.

எப்பொருளாக இருப்பினும், பிறர் கொடாத பொருளைக் கொள்ளுதல் கூடாது என்பதுதான் கள்ளாமையாகும்.

சமண நூல்களில் ஐந்து வகையாக கள்ளாமை விளக்கப்படுகிறது. 1 பிறர் இருக்கையில் தங்க முன்னிசைவு கேட்டல் 2 பெற்ற பிச்சையில் பங்குகொள்ள குருவின் இசைவு கேட்டல் 3 தங்குமுன் வீட்டின் உரிமையாளரின் இசைவினைப் பன்முறை வேண்டல் 4 ஆசனங்கள் மற்றும் பிறபொருட்களைப் பயன்படுத்த இசைவு கேட்டல் 5 மற்றொரு துறவிக்காக இவை வேண்டுதல்

### *4. பிரமசரியம்*

காமம் இன்மை என்பது மகாவீரரின் மற்றொரு அறமாகும். தகாத ஆசையே மனிதன் துயரப்பட காரணமாகிறான்.

தனக்குரிய தலைவியைத் தவிர, பிறன் மனை வாழும் பெண்ணை மனதால்கூட தொடுதல் பாவம் என்று மகாவீரர் எச்சரித்தார்.

### *5. அவாவறுத்தல்*

அவா அறுத்தல் என்பது மகாவீரரின் ஐந்தாம் அறமாகும். அவாவறுத்தல் என்பது ஆசையை குறிப்பதாகும். அவாவறுத்தல் (அவா + அறுத்தல்) ஆசையை துறத்தலாகும். ஆனால் அறநெறியில் பொருள் ஈட்டும்படியும், ஆனால் முறைகேடாக செல்வத்தை ஈட்டுவதை

மகாவீரர் கண்டித்தார். எனவே, அளவாகவும், குறைவாகவும் பொருள் ஈட்ட வேண்டும், தேவைக்கு மேல் பொருள் ஈட்டக்கூடாது என்பது கருத்தாகும்.

### துறவறத்தார் கடைபிடிக்க வேண்டிய மகாவிரதங்கள்

1. ஐம்பொறி அடக்கம் ஐந்து
2. ஆவஸ்யகம் ஆறு
3. லோசம்
4. திகம்பரம் (உடை உடுத்தாமை)
5. நீராடாமை
6. பல் தேய்க்காமை
7. தரையில் படுத்தல்
8. நின்று உண்ணல்
9. ஒரு வேளை மட்டும் உண்ணல்

### சமணத்தின் பிற கொள்கைகள்

### நிலையாமை

தோண்றும் பொருட்கள் யாவும் ஒருநாள் அழியக்கூடியதே. எனவே உடல்நலமாக உள்ளபோதே வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மை தரும் அறச்செயல்களை ஆற்றுதல் வேண்டும்.

### வினைக்கோட்பாடு

ஒருவனின் செயல்களின் நுண்ணிய அணுக்களும் உயிருடன் ஒட்டியுள்ளன் என்பதும், அது இப்பிறவியிலோ அல்லது மறுபிறவிலோ விளைவினைத் தருவதற்குரிய காலம் வரும் போது அவை வெளிப்பட்டு இன்ப துன்பங்களை உண்டாக்கும்.

இவ்விணைக்கோட்பாட்டை, **ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதூஉம்** எனச்சிலப்பதிகாரம் செப்புதல் நோக்குதல் வேண்டும்.

## சுபாவவாதக் கொள்கை

ஒருவர் செய்த பாவத்திற்கு பரிகாரம் உண்டு என வைதீக மதங்கள் கூறின. ஆனால் சமண சமயம், ஒருவர் மனதாலும், சொல்லாலும், செயலாலும் செய்த பாவத்தை இப்பிறவிலோ அல்லது மறுபிறவியிலோ அனுபவித்து தீர்ப்பது தவிர வேறு வழியில்லை எனக்கூறுகிறது. எனவே மனவடக்கம், சொல்லடக்கம் மற்றும் புலனடக்கத்துடன் வாழவேண்டும் என்று சமணம் அறிவுறுத்துகிறது.

## நவபதார்த்தங்கள் (ஒன்பது பொருட்கள்)

கண்ணால் காணவும் கருத்தால் அறியபடுப்ப்டுகின்ற எல்லாப் பொருளகளையும் சீவன் என்றும் அசீவன் என்று இரு பெரும் பாகுபாட்டில் அடைவு செய்து ஆராய்ந்து உணர்த்திய சிறப்பு மகாவீரர்க்கு உண்டு.

ஒரு அறிவு படைத்த உயிர்முதல் ஆறு அறிவு படைத்த மனிதன் வரை 1.**சீவன்** என்றும் மற்றவற்றை 2. **அசீவன்** பிரித்துக் கூறியவர். மற்ற ஏழு பதார்த்தங்களான 3.புண்ணியம், 4.பாவம், 5.ஊற்று எனும் ஆஸ்வரம், (உயிரில் வினைகள் ஊற்றேடுக்கும் என்றும் மனம், மொழி, செயல் ஆகிய மூன்றின் வாயிலாக உயிரிடம் வினைகள் ஊற்றுக்கள் சென்று சேருவது), 6.செறிப்பு (சம்வரை) எனும் தத்துவம் (இன்ப-துன்பங்களுக்கு காரணமான ஊற்றின் வழியை மூடுதல்), 7.உதிர்ப்பு எனும் நிர்ஜரை (வாழ்க்கையை கடுந்தவம், தருமத்தியானத்தினால் கழிப்பது), 8.கட்டு (பந்தபாசத்திலிருந்து விடுபடுதல்), 9.வீடுபேறு.

சமண சமயத்தின் சிறப்பு

பிறப்பினால் உயர்வு தாழ்வு காணும் குறுகிய மனப்பான்மை சமண சமயத்தில் இல்லை. எக்குலத்தவராயினும் சமண சமயத்தைப் பின்பற்றுவாராயின் அவரைச் சமணம் ஏற்றுக் கொண்டு

போற்றி வந்தது. உணவு, அடைக்கலம். மருந்து. கல்வி என்னும் நான்கு தானங்களைச் செய்வதில் சமணர்கள் வல்லவர்கள்.

சமணத்தில் கடவுள்.

சமணத்தில் கடவுளைப் பற்றிக் கூறுவதில்லை. பந்தத்திலிருந்து விடுபட்டு வீடுபேற்றை அடைந்த உயிரே கடவுள் என்பது சமண சமயக் கருத்து. உயிர்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனிக்கடவுள் இருக்கிறது என்று பிற சமயங்கள் கூறுவது போல, சமண சமயம் தனிப்பட்ட ஒரு கடவுள் உன்டென்று கூறுவதில்லை.

மனிதனுக்கே முக்கியத்துவம்.

உயிரினங்களுக்குச் சமணம் இடமளித்த போதிலும், மனிதனுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது.

ஆன்மிக வளர்ச்சிக் கண்ணோட்டத்தல மனிதனைத் தனிச் சிறப்பு வாய்ந்தவனாகக் கருதுகிறது. ஆன்மிக விடுதலையடைக் கூடிய தகுதியையம் மனிதனுக்கு மட்டுமே அளிக்கிறது.

உலகில் தோன்றிய மானிடர் வாழ்வின் ஒட்டுமொத்த முயற்சியும் இந்த ஆன்ம விடுதலையாகிய நிர்வாண நிலையை நோக்கியதாக அமைதல் வேண்டும். நிர்வாண நிலை எய்தல் என்பது பிறவியை அறுப்பது என்பதாகிறது.

ஆன்மா முழுமையாக தூய்மை நிலையை அடைதல் ஆகும். கர்மங்களால் கட்டப்பட்டிருந்த ஆன்மா அக்கர்ம வினைகளினின்றும் முற்றிலுமாக நீங்கி தூய்மை நிலையை எய்துவதே இது.

**அகிம்சையைப் போதித்த மகாவீரர்**

இந்திய மாநிலம் பீகாரில் ஜமுயி மாவட்டத்தில் இருந்த லச்சுவார் என்ற முன்னாள் அரசாட்சியின் **சத்திரியகுண்டா** என்றவிடத்தில் மகாவீரர் *சித்தார்த்தன்* என்னும் அரசனுக்கும் *திரிசாலா* என்ற அரசிக்கும் இந்திய நாட்காட்டியில் *சைத்ர* மாதம் வளர்பிறை

பதின்மூன்றாம் நாள் (கிரெகொரியின் நாட்காட்டியில் ஏப்ரல் 12) அன்று பிறந்தார்.

அவர் அன்னையின் கருவில் இருக்கும்போதே அரசருக்கும் அரசாட்சிக்கும் செல்வம் மற்றும் பிற வளங்களை பெருக்கியதாக நம்பப்படுகிறது;காட்டாக அபரிமிதமான பூக்களின் மலர்ச்சி. எனவே அவருக்கு வளர்ப்பவர் என்ற பொருளுடைய வர்த்தமானன் என்ற பெயர் சூட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சமண சமய நம்பிக்கைகளின்படி, பிறப்பினையடுத்து தேவலோக அரசன் இந்திரன் ஓர் எதிர்கால தீர்த்தங்கரருக்கு உரித்தான பால் அபிசேகம் உற்பட சடங்குகளைச் செய்வித்து அன்னையிடம் கொடுத்ததான்.

உலகெங்கும் உள்ள சமணர்கள் (ஜைனர்கள்)அவரது பிறந்தநாளை மகாவீர் ஜெயந்தி எனக் கொண்டாடுகின்றனர்.

## சிறுவயது

சித்தார்த்தனின் மகனாக இளவரசனாக வாழ்ந்தார் வர்த்தமானன். இருப்பினும் அச்சிறுவயதிலும் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டிருந்தார். தியானத்திலும் தன்னறிவதிலும் கூடுதல் நாட்டமுடையவராக விளங்கினார். மெதுவாக உலக சிற்றின்பங்களிலிருந்து விலகி சமண சமய கொள்கைகளில் ஈடுபாடு கொண்டார்.

## பன்னிரெண்டாண்டுகள் ஆன்மீகத் தேடல்



மகாவீரரின் காலத்தில் இந்தியா

தமது முப்பதாவது வயதில் அரசாட்சி மற்றும் குடும்பத்தைத் துறந்து துறவறம் மேற்கொண்டார். துறவியாக 12 ஆண்டுகள் தியானம் செய்து ஆன்மீகத்தேடலில் ஈடுபட்டார்.

பிற உயிரினங்களுக்கு,மனிதர்கள்,தாவரங்கள் மற்றும் விலங்குகள்,மதிப்பளித்தார்.அவற்றிற்கு ஊறு விளைவிக்காமல் வாழ்ந்து வந்தார்.

இவ்வாண்டுகளில் தமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தார். அவரது பொறுமையும் வீரமுமே அவர் *மகாவீரர்* என அழைக்கப்பட காரணமாயிற்று.

இந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக **கைவல்ய ஞானம்** கிடைக்கப்பெற்றார். அச்சமயம் அவர் அளவற்ற சமசீர்மை,அறிவு மற்றும் கட்டுப்பாடு கொண்டவராக இருந்தார்.

## பின்னாள் வாழ்க்கை

மகாவீரர் தமது எஞ்சிய நாட்களில் இந்தியா முழுவதும் உள்ள மக்களிடையே தாமறிந்த ஆன்மீக விடுதலையின் வரையற்ற உண்மையை பரப்பத் துவங்கினார்.

வெறும் கால்களில் துணிகள் எதுவுமன்றி கடுமையான காலநிலைகளில் பயணம் செய்த அவரின் பேச்சைக் கேட்க அனைத்துத் தரப்பு மக்களும் திரண்டனர்.

அவரது முயற்சியால் சமண சமயம் இந்தியாவெங்கும் பரவியது. தமது 72ஆவது வயதில் பாவபுரி என்னுமிடத்தில் இந்திய நாட்காட்டியில் தீபாவளியின் கடைசி நாளன்று நிர்வாணம் எய்தினார்.

அவர் பேறு பெற்ற இந்நாளை சமணர்கள் கொண்டாடுகிறார்கள். அவர் கி.மு 599 முதல் 527 வரை வாழ்ந்ததாக ஜைனர்கள் நம்பினாலும் சில வரலாற்றாசிரியர்கள் கி.மு 549-477 காலத்தவராக கருதுகிறார்கள்.

## மகாவீரரின் மெய்யியல்



மகாவீரரின் மெய்யியலில் முதன்மையாக எட்டு கொள்கைகள் உள்ளன - மூன்று கருத்துமயமானவை மற்றும் ஐந்து நெறிவழிப்பட்டவை. குறிக்கோள் வாழ்வின் தரத்தை உயர்த்துவதேயாகும்.

இந்த தனிப்பட்ட எட்டு கொள்கைகளும் குறிக்கோளை நோக்கிய ஓர்மையும் நெறிவழிப்பட்ட வாழ்வின்மூலம் ஆன்மீக வளமை பெற்றிடும் வழியையும் காட்டுவனவாக உள்ளன.

அவரது கருத்தியலில் மூன்று கொள்கைகள் உள்ளன:**அநேகாந்தவடா**,**சியாத்வடா** மற்றும் **கர்மா**. ஐந்து நெறிவழிகளாவன:**அகிம்சை**,**சத்தியம்**,**அஸ்தேயம்**, **பிரமச்சரியம்**, **அபரிகிருகம்**.

மகாவீரர் ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஓர் **ஆத்மா** உண்டென்றும் அது தனது நல்ல அல்லது கெடுதல் செயல்களின் விளைவாக ***கர்மா*** எனப்படும் வினைப்பயன்களை சேர்த்துக் கொள்கிறது என்றும் கூறுகிறார்.

கர்மாவின் மாயையால் ஒருவர் தற்காலிக மற்றும் மெய்போன்ற இன்பங்களிலும் பொருள் சேர்க்கையிலும் கவரப்படுகிறான்.

இவற்றின் தேடலில் அவனுக்கு சுயநலமுள்ள வன்முறை எண்ணங்களும் செயல்களும் கோபம்,வெறுப்பு,பொறாமை மற்றும் பிற பாவச்செயல்களில் ஈடுபாடும் ஏற்படுகின்றன. இவற்றால் அவனது *கர்மா* பளு கூடுதலாகிறது.

இதனிலிருந்து விடுபட, மகாவீரர் சரியான நம்பிக்கை (*சம்யக்-தர்சனம்*), சரியான அறிவு (*சம்யக்-ஞானம்*), மற்றும் சரியான நடத்தை(*சம்யக்-சரித்திரம்*)தேவை என்பதை வலியுறுத்தினார். நன்னடத்தைக்கு துணைநிற்க ஜைன மதத்தில் ஐந்து உறுதிமொழிகள் எடுக்க வேண்டும்:

- **வன்முறை தவிர்த்தல்** (*அகிம்சை*) - எந்தவொரு உயிரினத்திற்கும் தீங்கு விளைவிக்காதிருத்தல்;
- **வாய்மை** (*சத்தியம்*) - தீங்கில்லாத உண்மையை மட்டுமே பேசுதல்;
- **திருடாமை**(*அஸ்தேயம்*) - தனக்கு கொடுக்கப்படாதது எதையும் எடுத்துக் கொள்ளாதிருத்தல்;
- **பாலுறவு துறவு** (*பிரமச்சரியம்*) - பாலுணர்வு இன்பம் துய்க்காதிருத்தல்;
- **உரிமை மறுத்தல்/பற்றற்றிருத்தல்** (*அபாரிகிருகம்*) - மக்கள்,இடங்கள் மற்றும் பொருளியலில் பற்று அற்று இருத்தல்.

கருத்தியல் கொள்கைகளான **உண்மை ஒரேஒன்றல்ல** என்ற *அநேகாந்தவடா* மற்றும் சார்நிலைக் கொள்கையான *சியாதவடா* இவற்றை கொள்ளாமல் இந்த உறுதிமொழிகளை முழுமையாக கடைபிடிக்க வியலாது.

இவற்றை ஆண் மற்றும் பெண் துறவிகள் நிச்சயமாகக் கடைபிடிக்க வேண்டும்;பிறர் அவர்களால் எந்தளவு இயலுமோ அந்தளவு கடைபிடித்தால் போதுமானது.

மகாவீரர் ஆண்களும் பெண்களும் ஆன்மீக நோக்கில் சரிசமனானவர்கள் என்றும் இருவருமே துறவறம் மூலம் வீடுபேறு (மோட்சம்) அடைய முடியுமென்றும் கூறினார்.

அவரை அனைத்து தரப்பு மக்களும்,சமூகத்தின் கடைநிலையில் இருந்தவர்கள் உட்பட,பின்பற்றினர்.வருணாசிரம முறையை விலக்கி புதிய நான்கு நிலைகளை உருவாக்கினார்;ஆண்துறவி (*சாது*),பெண்துறவி(*சாத்வி*),பொதுமகன் (*ஷ்ராவிக்*) மற்றும் பொதுமகள் (*ஷ்ராவிக்*).இதனை *சதுர்வித ஜைன சங்* என்று அழைக்கலாயினர்.

மகாவீரரின் பிரசங்கங்கள் அவரது உடனடி சீடர்களால் *அகம் சூத்திரங்கள்* என வாய்மொழியாக பாதுகாக்கப்பட்டன.


காலப்போக்கில் பல அகம் சூத்திரங்கள் இழக்கப்பட்டும்,அழிக்கப்பட்டும்,மாற்றப்பட்டும் சிலவே மிஞ்சின.

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் கழித்து இவை பனையோலைகளில் பதியப்பட்டன.

சமணர்களின் ஒரு பிரிவினரான *சுவேதம்பர்கள்* இவற்றை அப்படியே உண்மையான போதனைகளாக ஏற்றுக் கொள்கின்றனர், ஆயின் மற்றொரு பிரிவினராகிய *திகம்பரர்கள்* இதனை ஓர் உசாத்துணையளவிலேயே ஏற்கின்றனர்.

சமண சமயம் மகாவீரரின் காலத்திற்கு முன்னரும் கடைபிடிக்கப்பட்டது. மகாவீரரின் போதனைகள் அவரது முன்னோரின் போதனைகளை பின்பற்றியதே.

எனவே மகாவீரர் ஓர் நிகழ் மதத்தின் சீர்திருத்தவாதியே தவிர புதிய சமயத்தை உருவாக்கியவர் அல்லர். இவரது குருவான பரசுவந்த் தீர்த்தங்கரரின் வழிகளைப் பின்பற்றியவர்.




ஆயினும் தமது காலத்திற்கேற்ப சமண மத கொள்கைகளை சீர்திருத்தம் செய்தார்.

மகாவீரரின் நிர்வாணத்திற்குப் பிறகு சில நூற்றாண்டுகளில் சமண சமயம் சடங்குகள் மற்றும் பிற குழப்பங்களை உட்கொள்ள துவங்கியது.

சமணத்தில் மோட்ச நிலை நிர்வாண நிலை என்று கூறப்டுகிறது. விடுதலை பெற்ற ஆன்மாக்களின் உறைவிடம் சித்தசீலம் எனப்படுகிறது.

சமண சமயத்தில் இறைநிலையோடு இரண்டறக் கலப்பது என்பது இயலாது. கடவுள் கோட்பாட்டில் படைப்பு வரலாற்றையே, கடவுளின் தோற்ற நிலையே சமணம் ஏற்றுக் கொள்ளவில்லை.

சில விமரிசகர்கள் மகாவீரரையும் பிற தீர்த்தங்கரர்களையும் இந்து மத கடவுளர் போன்று வழிபட துவங்கியதாக கூறுகின்றனர்.

# 28. பௌத்தம் தந்த புத்தர்

**இந்திய நாட்டில் தோன்றிய பெருமதங்களில் பௌத்த மதமும் ஒன்று. உயர்ந்த சிந்தனை மிக்க தத்துவ தரிசனமாக பௌத்தம் திகழ்கிறது.**

**பௌத்த சமயத்தை தோற்றுவித்தவர் கௌதம புத்தர் ஆவார். கி.மு. 6 ஆம் நூற்றாண்டில்** (கி.மு 563க்கும் கி.மு 483க்கும் இடையில் வாழ்ந்தவர்.

**கௌதம புத்தரை** அடிப்படையாகக் கொண்டு பௌத்த சமயம் உருவாக்கப்பட்டது. இவர் பிறக்கும் போது இவருக்கிடப்பட்ட பெயர் **சித்தார்த்த கௌதமர்** என்பதாகும். பின்னர் இவர் ஞானம் பெற்று புத்தர் (ஞானம் பெற்றவர்) ஆனார்.

அவற்றுள் மிக முக்கியமானதாக தம்மபதம் விளங்குகிறது, பிற மத நூல்களைப் போன்று அல்லாமல் இந்நூல் மக்களின் சாதாரண பேச்சு வழக்கில் உருவக்கப்பட்டது.

## புத்தரின் வரலாறு

சித்தார்த்த கௌதமர், வாரணாசி எனட இடத்திலிருந்த 100 மைல் வடக்கே உள்ள கபிலவஸ்து என்ற ஊரில் சாணக்கிய

வம்சத்தின் அரசர் சுத்தோதனர். மாயாதேவி என்பவருக்கு மகனாகப் பிறந்தார்.

சித்தார்த்தர், தனது 16வது வயதில் யசோதரையை மணந்தார். பிறகு இருவரும் ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தனர். அவனது பெயர் ராகுலன். சித்தார்த்தருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர் தந்தை ஏற்படுத்தித் தந்தார்.

வெளியுலகைப் பற்றி அறிந்து கொள்ளாமல் அரண்மனை வசதிகளை அனுபவிப்பதிலேயே தன் நேரத்தை செலவிட்டார் சித்தார்த்தர்.

அவரது 29 ஆவது வயதில் தனது வாழ்க்கையைப் பற்றி யோசிக்கும் தருணம் வாய்க்கப் பெற்றார். ஒருமுறை உதவியாளரொருவருடன் வெளியே சென்றபோது,

நான்கு காட்சிகளைக் காண நேர்ந்தது. அவை

1. ஒரு வயதான தள்ளாடும் கிழவர்,
2. ஒரு நோயாளி,
3. அழுகிக் கொண்டிருந்த ஒரு பிணம்,
4. நாலாவதாக ஒரு முனிவன்.

இக் காட்சிகளினூடாக மனிதவாழ்க்கையின் துன்பங்களை முதன் முதலில் உணர்ந்துகொண்ட சித்தார்த்தர், வாழ்வின் ரகசியத்தைக் காண கானகம் நோக்கிப் பயணித்தார்.அவர் துறவறம் பூனவில்லை, மாறாக வாழ்வின் ரகசியத்தைக் காண்பதே அவரின் நோக்கம்.

கானகம் நோக்கிச் சென்ற சித்தார்த்தர், அப்போதைய வழக்கப்படி பட்டினி கிடந்து பல நாட்கள் குளிக்காமல் யோக நெறியில் தவத்தில் அமர்ந்தார். இவரின் தவத்தைக் கண்டு சில சீடர்கள் அவர்க்குக் கிடைத்தனர்.

வாரணாசி அருகே உள்ள சாரநாத் எனும் இடத்தில் முதன் முறையாக ஐவரை சீடர்களாக ஏற்றுக்கொண்டு அவர்கட்கு புத்தி புகட்டினார்.

இந்நிகழ்ச்சி தம்மச் சக்கரப் பிரவாத்தனம் அல்லது அறவாழி உருட்டுதல் என புத்த சமய நூல்களில் அழைக்கப்படும்.

பலநாட்கள் கழித்து ஒரு இசைக்கலைஞன் அவர் தவம் புரிந்து கொண்டு இருந்த வழியாகச் சென்ற போது, தனது சீடனிடம் "யாழ் பற்றியும் அதன் நுணுக்கம் பற்றியும் கூறிச் சென்றான்,

அவற்றில் ஒரு நாணை யாழில் இணைக்கும் பொழுது நாண் அதிகமாகவும் இழுத்துக் கட்டினால் நாண் அறுந்து விடும் என்றும், மிகத் தளர்வாகக் கட்டினால் இசை மீட்ட முடியாது என்றும் கூறிக் கொண்டு சென்றான்".

சித்தர்த்தாவின் அறிவு அப்போது வேலை செய்ய ஆரம்பித்தது. தனது கடந்த காலத்தில் போதையிலும், பெண் போகத்திலும், செல்வச் செழிப்பிலும் வாழ்ந்த தான் இப்போது அதற்கு மிக மாறாக தன்னை வருத்திக் கொண்டு இருக்கிறேன் என்றும், ஐந்தே நிலை நீடிக்குமானால் தனது உடல் இறந்து விடும் என்றும்; தான் தேடி வந்த ஞானம் அடையும் முன்னமே தான் இறந்து விடுவோம் என்றும் உணர்ந்தார்.

எனவே கடுந்தவம் இருப்பதை கைவிட்டு விடும்படி எண்ணினார். எனவே அதிக போகவாழ்க்கையும் ஞானத்தினைக் கொண்டுவராது, மிக நெடிய தவமும் ஞானத்தைக் கொண்டு வராது என்றும், நெடிய தவம் இருந்தால் இவ்வுடல் அழிந்து விடும் என்றும் யோசிக்கத் தொடங்கினார்.

எனவே முதன் முறையாக அவருக்கு அருகே இருந்த ஆற்றில் சென்று குளிக்க வேண்டுமென முடிவு செய்தார். ஆற்றில் இறங்கும் பொழுது அந்த ஆற்றில் இழுவைக்கூட தன்னால் ஈடு கொடுக்க முடியாமையை உணர்ந்தார்.



அவ்வாறு ஆற்றில் குளித்து விட்டு வரும் பொழுது, அங்கே இருந்த ஒரு மாடு மேய்க்கும் பெண் குழந்தை இவரின் நிலையைக் கண்டு தான் கொண்டு வந்த சோற்றை அவருக்கு ஊட்டி விட்டார்.

தனது 35ஆம் வயதில், இந்தியாவின் தற்போதைய பீகார் மாநிலத்தில் உள்ள கயை எனும் இடத்தில் சுமேதை என்பவளிடம் மோர் வாங்கிக் குடித்துவிட்டு போதி மரத்தினடியில் அமர்ந்த சித்தார்த்தர், ஞான நிலை அடையும் வரை அந்த இடத்தை விட்டு எழுந்திராமல் நிகழ்வுகளைக் கவனிப்பது என தீர்மானித்தார்.

ஒரு வாரம் தனது மிக நுண்ணிய கவனிப்பின் பலனாக முதன் முறையாக கவலைக்கு, துன்பத்திருக்குக் காரணம் பற்றியும், தான் முதன் முறையாக மிக மகிழ்ச்சியாக இருப்பதையும் உணர்ந்தார்.

புரிந்துணர்வையே ஞானத்தின் அடிக்கல் என்பதை உணர்ந்தார். இவர் தத்தாகதர் என்று (அதாவது 'எது உண்மையில் அதுவாக உள்ளதோ அந்த நிலை எய்திவர்') உணர்ந்து கொண்டார்.

புத்தர் ஞானம் பெற்ற அவ்விடம் இன்று புத்த கயை என்று புத்த மதத்தினரின் யாத்திரைத் தலமாக விளங்குகிறது.

அவரது வாழ்க்கையின் அடுத்த 45 ஆண்டுகளில் பலர் அவரைப் பின்பற்றி அவரது சீடர்கள் ஆயினர். தனது 80ஆம் வயதில் புத்தர் குசினாரா என்ற இடத்தில் காலமானார்.

சங்கம் தோற்றம்.

வாழ்வில் மனிதனுக்கு ஏற்படும் துன்பத்துக்குக் காரணம் என்ன என்பதை உணர்ந்தார். வாரணாசி அருகே தனது முதல் சொற்பொழிவைத் தொடங்கினார்.

அவர் அளித்த முதல் போதனை தர்ம சக்ர பரிவர்த்தன சூத்ர ஆகும். அவரது நண்பர்கள் அவரின் சீடர்களாக மாறினர்.

புத்தர் வடஇந்தியாவில் பல இடங்களுக்குச் சென்று தமது போதனைகளைப் பரப்பினார். பாமர மக்களுக்கு ஏற்றவாறு புத்தர் தமது தத்துவக் கோட்பாடுகளை விளக்கினார்.

அவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் பலர். அவரது கோட்பாடுகளைப் பின்பற்றினர். பலரது பின்பற்றலுக்குப் பிறகுப் பௌத்த சங்கம் உருவாகியது. அவரது பெயரை அடிப்படையாகக் கொண்டு அம்மதத்தின் பெயரும் அமைந்து உள்ளது.

"பலரின் நன்மைக்காக, சுகத்திற்காக உலகை நேசித்தவாறே மனிதர்கள் பயன்பெறும் வகையில் சேவை செய்யுங்கள். ஒரு பாதையில் இருவர் செல்ல வேண்டாம். தனித்தனியாகச் சென்று, தர்மத்தைமாற்றமில்லாமல் மக்களுக்கு எடுத்துக்கூறி, தூய்மையாக நிறைவான முழுமை பெற்ற வாழ்வு குறித்துப் போதியுங்கள்" என்றார்.

"தனது கருத்துக்களும் போதித்த உண்மைகளும், தமது சீடர்களுக்கு ஆசிரியராக அமையட்டும்" என்றார்.

"மற்ற சமயங்களைக் காட்டிலும் பௌத்த சமயக் கோட்பாடுகள் பழமையானது " என எட்வின் அர்னர்ல்டு கூறுகிறார்.

## புத்தரின் போதனைகள்

புத்தர் என்றுமே தன்னை ஒரு தேவன் என்றோ, கடவுளின் [அவதாரம்] என்றோ கூறிக்கொண்டதில்லை.

தான் புத்த நிலையை அடைந்த ஒரு மனிதன் என்பதையும், புவியில் பிறந்த மானிடர் அனைவருமே இந்த புத்த நிலையை அடைய முடியும் என்பதையும் தெளிவாக வலியுறுத்தினார். **ஆசையே துன்பத்தின் அடிப்படை** என அவர் கூறினார்.

"பிறர் உனக்கு எவைகளைச் செய்ய வேண்டும் என எண்ணுகிறாயோ அவற்றை நீயும் செய்ய வேண்டும். பிறர் உனக்கு எது செய்யக் கூடாது என நினைக்கிறாயோ அதை நீயும் செய்யக் கூடாது" என்றார்.

ஞானத்தைப் பெற நான்கு மேன்மையான உண்மைகளையும் எட்டு மேன்மையான வழிகளையும் பின்பற்ற வேண்டும்" எனப் போதித்தார்.

மும்மணிகள்.

1.நான் புத்தரைச் சரணடைகிறேன்.(புத்தம் சரணம் கச்சாமி)

2.நான் தர்மத்தைச் சரணடைகிறேன்.(தர்மம் சரணம் கச்சாமி)

3.நான் சங்கத்தைச் சரணடைகிறேன். (சங்கம்சரணம் கச்சாமி)

நான்கு வாய்மைகள்.

1. துயரம்
2. துயரத்திற்கான காரணம்
3. துயரத்தை விலக்குதல்
4. துயரத்தை விலக்கும் வழி.

எட்டு மேன்மையான வழிகள்

1. சரியான நோக்கு - நல்காட்சி
2. சரியான சிந்தனை - நல் எண்ணம்
3. சரியான பேச்சு - நல் எண்ணம்
4. சரியான செயல் -நற்செயல்
5. சரியான வாழ்வு -நல் ஊதியம் (வாழும் முறை)
6. சரியான முயற்சி - நல்முயற்சி
7. சரியான உந்துதல் - நல்லூற்றம்
8. சரியான தியானம் - நல்சமாதி

சடப்பொருளின் பரிணாமமே ஆன்மா

"சடப்பொருளின் பரிணாமமே ஆன்மாவாகப் புலப்படுகிறது. சடப்பொருளின்றி ஆன்மா என்று ஒன்று தனியே இல்லை.

ஆன்மா உடலுக்குப் புறமாகத் தனித்த ஒரு பொருளாயினும்அது நிலையான பொருள் அன்று. மிக வேகமாக இயங்கி கொண்டிருக்கும் உணர்வுகளின் கோர்வைதான் ஆன்மா.


ஆன்மாவை நிலைப்படுத்த, தாங்கி நிற்க, நிலைத்த அடிப்படைப் பொருள் எதுவும் தேவையில்லை. புத்கலம் எனும் சீவனும் மாற்றம் உடையதே.

பௌத்தம், நிலையான ஆத்மா என்று ஒன்று இல்லை என்கிறது. எனவே கத்தத்தை அனாத்மவாதம் என்று குறிப்பிடுகின்றனர்.

## புத்தரைப் பற்றி வேதாத்திரியார் ------

ஆசையே" துன்பத்திற்கு அடிப்படைக் காரணம் என்னும் தத்துவத்தை உலகிற்கு போதித்தவர் கௌதம புத்தர்.

உலக மகா ஞானிகளில் தனக்கென தனி இடம் பிடித்தவர். பௌத்த மதம் என்னும் சமயத்தை தோற்றுவித்து மக்கள் யாவரும் முக்தி அடைய ஒரு எளிதான வழியைக் காட்டியவர்.



உலகம் துன்பமானது" என்பதிலும், அத்துன்பநிலை நீக்கப்பட வேண்டியது என்பதிலும் புத்தரும் வேதாத்திரியமும் வேற்றுமையில் ஒற்றுமை என்றவாறான கருத்து நிலையைக் கொண்டுள்ளனர்.

உலகியல் வாழவியலைக் கண்ணுற்ற் புத்தர் நால்வகை வாய்மைகளை உருவாக்கி மானுட உயிர்கள் தன்பமில்லா வாழ்வை நோக்கிச் செல்ல ஆற்றுப்படுத்துகிறார்.

துன்பம் என்பது இவ்வுலக வாழ்வில் உள்ளது.

துன்பங்களுக்கான தோற்றுவாய் உள்ளது. இது பன்னிரு சார்புகளினால் தோன்றும். ஆசையில் அடங்கியுள்ளது.

இத்துனபங்களிலிருந்து நீங்க முடியும்.

துன்ப நீக்கங்களுக்கான வழிமறைகள் உள்ளன. அவை, எண்வகை நெறிகள் ஆகும்.

இவ்வுலகப் பொருள்களும், அதன் பொருட்டு எழும் உணர்வுகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன. மாறிக் கொண்டிருக்கும் உண்மையை அறியாமல் ஒவ்வொன்றிலும் நிலை கொள்ளும் ஆசையே துன்பங்களுக்கான காரணியாய் உள்ளது என்பதே புத்தரின் மெய்யியல் கண்டுபிடிப்பாகும்.

எனவே. ஆசையின் பொருட்டே துன்பங்கள் விளைகின்றன என்பதை அறியாமையே துன்பங்கள் நீடிப்பதற்கான காரணியாய் உள்ளது என்பதும் புத்தரின் கண்டுப்பிடிப்பாகும்.

துன்பம் , துன்ப விடுதலை குறித்து வேதாத்திரிய சிந்தனைகள் இன்றைய வாழ்வியல் சிந்தனைகளின் ஊடாக வெளிப்படுகின்றன.

துன்பங்களுக்கான காரணங்களாக பின்வரும் நான்கு முடிவுகளை கூறுகிறது வேதாத்திரியம்.

1. “மனிதன் நான்கு விதக் குறைபாடுகளால் துன்பமடைகின்றனா. அமைதியிழந்து அல்லலுறுகிறான்.
2. கடவுளைத் தேடிக்கொண்டேயிரந்தும் காண முடியாத குறை.
3. வறுமை என்னும் பற்றாக்குறை.
4. விளைவறியாமலோ விளைவையறிந்தும் அலட்சியம் செய்தோ, அவமதித்ததோ செயலாற்றி அதன் பயனாக் துன்பம் அனுபவிக்கும் முறை.

மனிதனின் சிறப்பறியாமல் பிறர்மீது அச்சமும், பகையம் கொண்டு துன்புறுத்தியும், துன்புற்றும் அல்லலுறும் குறை.(ஞானமும் வாழ்வும் ப.3)

துன்பங்களிலிருந்து விடுதலை அடைவது எவ்வாறு? வேதாத்திரியம் வழிகாட்டுகிறது.

- இன்பதுன்பங்களாக இயங்கும் அறிவின் நிலை.
- இயற்கை விதி என்னும் ஊழ் அல்லது தெய்வநிலை.

சமுதாய அமைப்புமுறை நீதி என்னும் அறவாழ்வின் நெறி. அல்லது அரசாங்கம் ஆகிய முன்று துறைகளிலும் மனிதன் அடையும் தெளிவுதான் வாழ்வை உய்விக்க வல்லது. துன்பங்களை களைந்து இன்பத்தை காக்க வல்லது" (ஞானமும் வாழ்வும். பக்.6)

அறிவின் நிலையில் இன்பதுன்பங்களை அறிந்து ஊழ் அல்லது தெய்வநிலையில் அவை வருவதும் நீடிப்பதுமான இயல்பறிந்து, அறவாழ்வின் நெறிநின்றால் துன்ப விடுதலை சாத்தியமாகும் என்பது வேதாத்திரியத்தின் சிந்தனை.



# 29. தரிசனங்கள்

இந்தியாவின் தத்துவத்திற்கு பொதுவான பெயர் தர்சனம்.

இச்சொல் எப்போது வந்தது, இதன் பொருள் என்ன என்பது பற்றி சரியாக நமக்குத் தெரியவில்லை.

முதன் முதலாக இச்சொல்லை தனது வைசேசிக சூத்திரத்தில் பயன்படுத்தி இருப்பதாக தாஸ்குப்தா கூறுகிறார். இது புத்தர் காலத்திற்கு முந்தியது.

தத்துவங்களை கூறியவர்கள் இச்சொல்லை தத்துவங்களைக் குறிக்கப் பயன்படுத்தவில்லை என்று தர்க்கலங்காரர் கூறுகிறார்.

பின்னர் வந்த சங்கரர், உதயணர் போன்றோர்தான் இச்சொல்லை தத்துவம் என்ற பொருளில் பயன்பாடுத்தினர்.

## வேத தத்துவ தரிசனங்கள்

**வேத தத்துவ தரிசனங்கள்** எனப்படுபவை வேதங்களை அடிப்படையாகக் கொண்ட தத்துவ நோக்குகள் ஆகும்.

*விடயங்களை நோக்கும் வழிகள்* எனப் பொருள்படும் *தரிசனங்கள்* ஆறு வகைகளாக உள்ளன.

இவற்றை, உண்மைப் பொருள் பற்றிய ஆறு விதமான விளக்கங்கள் எனக் கூறலாம். இவை ஒவ்வொன்றும், பல்வேறு காலப்பகுதிகளிலும் எழுதப்பட்ட வேதப் பகுதிகளில் சிதறிக்கிடக்கும் கருத்துக்களை, தங்களுக்கேயுரிய முறைகளில் ஒழுங்கு படுத்தியும், ஒருமுகப்படுத்தியும் தருகின்றன.

இந்த ஒவ்வொரு பிரிவையும் நிறுவியவர்களாக அறியப்படும் ரிஷிகள், இவற்றுக்குரிய சூத்திர நூல்களையும் இயற்றியுள்ளார்கள். இவைகளை ஆத்திக அலலது வைதிக தர்சனங்கள் என்பர்.

## ஆறு ஆத்திக அல்லது வைதிக தரிசனங்கள்

ஆறு வேத தரிசனங்களும் அவற்றின் நிறுவனர்களும் பின்வருமாறு:

1. நியாயம் - கௌதமர்
2. வைசேடிகம் - கணாதர்
3. சாங்கியம் - கபிலர்
4. யோகம் - பதஞ்சலி
5. மீமாம்சை (பூர்வ மீமாம்சை) - ஜைமினி
6. வேதாந்தம் (உத்தர மீமாம்சை) - பாதராயணர்

இவற்றுக்கு இடையிலான ஒற்றுமைகளைக் கருத்திற்கொண்டு இந்த ஆறு தரிசனங்களும், இரண்டிரண்டாகச் சேர்த்து மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. நியாயம் - வைசேடிகம்
2. சாங்கியம் - யோகம்
3. மீமாம்சை - வேதாந்தம்

## நான்கு நாத்திக அல்லது அவைதிக தர்சனங்கள் (Non-Vedic or Heterogeneous System)

நான்கு நாத்திக அல்லது அவைதிக தரிசனங்களும் அவற்றை நிறுவியவர்களும் பின்வருமாறு:

- சார்வகம் எனும் உலகாயதம்
- ஆசீவகம்
- மூவகைச் சமணம் = 1 திகம்பரர், 2 சுவேதாம்பரர், 3 யாபனியம் -- மகாவீரர்
- நால்வகை பௌத்தம் = ஈனயான பௌத்தப் பிரிவுகள் 1 சௌத்திராந்திகம் 2 வைபாடிகம் ; மகாயான பௌத்த பிரிவுகள் 3 மாத்தியமிகம் 4 யோகசாரம் -- கௌதம புத்தர்

## தரிசனம் என்றால் என்ன?

இந்து மெய்ஞான மரபு என்பது இந்துத் தரிசங்களின் வரிசையே. அவற்றை அறிவதற்கு முன்பாக 'தரிசனம்' என்றால் என்ன என்று அறிந்தாகவேண்டிய அவசியம் உள்ளது.

'தரிசனம்' என்ற வார்தையானது சமஸ்கிருதத்திலே பலவாறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே அதற்கு பொருள்மயக்கம் அதிகம். சரியானபடி மொழிபெயர்த்தால் தரிசனம் என்பதற்குக் 'காட்சி' என்று மட்டும்தான் பொருள் வரும். அப்பொருளில் தான் அது சாதாரணமாக பயன்படுத்தப்படுகிறது.

பக்தி மரபில், இறைவனைக் காண்பதைத் தரிசனம் என்கிறார்கள். தன் அகத்தில் இறைவனைத் தரிசிப்பதையும் ஆலயத்திற்குப் போய் வணங்குவதையும் தரிசனம் என்றே கூறுவார்கள்.

மெய்ஞான மரபில் இச்சொல்லுக்கு இரு அர்த்தங்கள் உண்டு. அன்றாட வாழ்வில் நாம் புழங்கும்போது நமக்கு தேவைக்கு ஏற்பவும், நமது இயல்புக்கு ஏற்பவும்தான் ஒவ்வொன்றும் நமக்கு காட்சி

அளிக்கின்றன. இக்காட்சிகள் குறையுடையவை. முழுமை இல்லாதவை.

அன்றாட வாழ்வின் தளத்திலிருந்து விடுபட்டு நமது மனம் தன்னைத்தானே முழுமையாக காணும் நிலையில் இருப்பதை அகவிழிப்பு நிலை என்கிறோம்.

இதை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வகையில் விளக்குகிறது என்பதை நாம் அறிவோம். அத்துடன் விளக்கத்துக்கு அப்பாற்பட்ட ஓர் ஆழ்நிலை இது என்பதையும் நாம் அறிவோம்.

இந்த சூழ்நிலையில் நாம் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகவும், முழுமையாகவும் பார்ப்பதையும் ‘தரிசனம்’ என்று மெய்ஞான மரபு குறிப்பிடுகிறது.

அதாவது, தரிசனம் என்பது வேறு, பார்வை என்பது வேறு. பார்வை, சாதாரணமாகப் பார்த்து அறிவது. தரிசனம், அகவிழிப்பு நிலையில் பார்த்து அறிவது.

இவ்வாறு அகவிழிப்பு நிலையில் வாழ்க்கையும் பிரபஞ்சத்தையும் ஒட்டுமொத்தமாகவும் முழுமையாகவும் பார்த்து அறிந்த விஷயங்களைத் தர்க்கப்பூர்வமாகக் கூற முனையும் போதுதான் தத்துவ தரிசனங்கள் உருவாகின்றன.

ஆகவே தத்துவ ரீதியாகப் பார்த்தால் தரிசனம் என்பது வழ்க்கை மற்றும் பிரபஞ்சம் குறித்த ஒட்டு மொத்தமான ஒரு பார்வை ஆகும்.

இவ்வாறு மெய்ஞான மரபில் இருந்து பிறந்த தரிசனம் என்ற வார்தையானது பிற்பாடு தத்துவம் முதலிய அறிவுத்துறைகளிலும் இலக்கியத்திலும் சிற்சில மாறுதல்களுடன் பயன்படுத்தபடுவதைக் காணலாம். தரிசனம் என்ற வார்தைக்குச் சமானமன ஆங்கில வார்தை ‘விஷன்’(Vision) என்பதாகும்.

தத்துவத்துறையில் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைப் பார்வையை எல்லாத் துறைகளுக்கும் விரித்தெடுக்க முயன்றால் அதை தரிசனம் என்கிறார்கள்.

அந்த மூலதரிசனத்தை நடத்திய தத்துவ ஞானியே அந்த விரிவாக்கத்தை நடத்த வேண்டும் என்பது இல்லை. அவரது மாணவர்கள் செய்தால் கூடப் போதுமானது.

அதாவது ஒரு கருத்து தர்க்கப்பூர்வமாக விவாதிக்கப்படும்போது சித்தாந்தம் அல்லது கொள்கை ஆகிவிடுகிறது. அதை வாழ்கையின் எல்லாத் தளங்களுக்கும் விரித்தெடுக்கும் போது அது தரிசனம் ஆக மாறுகிறது.

பிராய்டியம் என்பது ஒரு கொள்கை மட்டுமே. மார்க்ஸியம் என்பது தரிசனம். காரணம், மாக்ஸியமானது அரசியல், பொருளாதாரம், ஒழுக்கவியல், இலக்கியம் என்று எல்லாத் தளங்களுக்கும் பொருத்திப் பார்க்கப்படுகிறது

ஒரு குறிப்பிட்ட அறிவுத் துறைக்குள் உருவான ஒரு கருத்து. பிறகு சித்தாந்தமாக விரிவடைந்து அத்துறைக்கு அப்பால் உள்ள எல்லாவற்றையும் விளக்க முற்படுவதாக ஆகும்போது அதையும் தரிசனம் என்று கூறுகிறார்கள்.

ஐன்ஸ்டீனின் சார்பு நிலைக் ( relativity ) கொள்கை இவ்வாறு குறிப்பிடப்படவேண்டிய ஒரு தரிசனம் ஆயிற்று.

இலக்கியத்திலே தரிசனம் என்பது சற்று வித்தியாசமான பொருளில் பயன்படுத்தப்படுகிறது. வாழ்கையின் ஒரு துறையுடன் ஒர் இலக்கியப் படைப்பு எப்போதும் நேரடியாகத் தொடர்புகொண்டுள்ளது. வாழ்கையில் ஒரு தருணத்தில் இருந்து கிடைத்த தூண்டுதலினாலேயே அது பிறக்கிறது.

அந்த இலக்கியப் படைப்பு மிகுந்த வீச்சுடன் ஆழமாக நகருமென்றால் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் தொட்டுக்காட்டக் கூடியதாக அது அமையும். இந்த ஆழமான முழுமையையே இலக்கியத்திலே தரிசனம் என்று கூறுகிறார்கள்.

உதாரணமாக ஒரு கவிதை பிரிவின் துக்கத்தை பற்றிப் பேச முற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். ஆழமாகப் போகும்போது அது மனித உறவினைப் பற்றி பேசுவதாக ஆகிவிடுகிறது. பிறகு

வாழ்க்கையின் அர்த்தம் குறித்து பேசுவதாக ஆகிவிடுகிறது. அதுவே தரிசனம் என்பது.

இந்த தரிசனம் கவிதையிலே ஒரு மின்னல்போல ஒரு வரியில் அல்லது ஒரு உவமையில் வெளிப்பட்டுவிடுகிறது. 'யாதும் ஊரே' என்பது அப்படிப்பட்ட ஒரு தரிசனம். காப்பியத்திலும் நாவிலும் அது அந்த ஆக்கத்தின் ஒட்டு மொத்தமாக வெளிப்படுகிறது.

இந்த அர்த்தங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதனை நாம் கவனிக்கலாம். தரிசனம் என்பது **மன ஆழத்திலிருந்து பெறப்பட்ட ஒட்டுமொத்தமான பார்வை** என்று பொதுவாக நாம் நிர்ணயிக்கலாம்.

.இந்திய தத்துவஞானிகளிடம் இரண்டு வகையான பார்வைகள் உள்ளன. இவை இரண்டுக்கும் இடையேயான குழப்பம் அறிஞர்கள் மத்தியில் கூட எப்போதும் இருந்தபடியே உள்ளது.

மெய்ஞான மரபில், அகவிழிப்பு நிலையில் ஞானிகளினால் அடையப்பெற்ற எல்லா ஒட்டுமொத்தப் பார்வைகளும் தரிசனங்கள் என்றே கூறப்படுகிறது.

வள்ளலாரின் ஜோதி தரிசனம் சமீபகாலத்தைய உதாரணமாகும். நடராஜ நிருத்யம் ஒரு பெரும் தரிசனம் என்று ஆனந்த குமாரசாமி கூறியிருக்கிறார்.



ஆனால் வழிபாட்டு முறைகளாக மாறிவிட்ட தரிசனங்களை மதங்கள் என்று குறிப்பிடப்படுவது மரபாக

உள்ளது. சைவம், வைணவம், சாக்தேயம் முதலியவை மதங்களாகவே அறியப்படுகின்றன.

மதங்களாக வளர்ச்சி அடையாத தரிசனங்களே இன்று தரிசனங்கள் என்று கூறப்படுகின்றன. மதம் என்பது ஒரு தரிசனமும் வழிபாட்டுமுறையும் இணைந்த ஒன்று.

இவ்வாறு மதமாக வளர்ச்சி அடையாத தரிசனங்களில் ஆறு தரிசனங்கள் காலத்தால் பழைமையானவையும் அடிப்படையானவையும். சாங்கியம், யோகம், வைசேஷிகம், நியாயம், பூர்வ மீமாம்சம், உத்தர மீமாம்சம் என்பவை அவை.

இவற்றையே மெய்ஞான மரபு குறித்த விவாதங்களில் பொதுவாக தரிசனங்கள் என்று குறிப்பிடுவது வழக்கம்.

இந்த ஆறு தரிசனங்களும் ஒன்றுக்கொன்று ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கொண்டுள்ளன.

அதே சமயம் ஏணிப் படிகள் போன்று மனிதனது அறிவை உயர்த்தி ஞானத்திற்கு இட்டுச் செல்கின்றன.

30. சாங்கியம்

**சாங்கியம்** இந்தியத் தத்துவங்களில் சிறப்பானதும் முன்னோடியானதும் காலத்தால் முற்பட்டதாகவும் கருதப்படுகிறது.

பண்டைய இந்தியாவின் தத்துவப் பள்ளிகளுள் ஆற்றல் மிக்கது சாங்கிய தத்துவம் ஆகும்.

சாங்கியம் இந்துஞான நதியின் முக்கியமான ஊற்று முகங்களில் ஒன்று என்கிறார் அறிஞர் ஜெயமோகன்.

சாங்கியத்திற்கு தமிழில் “ஆதி இயற்கை வாதம்” என்று பெயர் சூட்டலாம். சாங்கியத்தின் முதன்மையான மையக் கருத்து, முக்குணங்களும் பரிபுரணச் சமநிலையில் இருக்கும் ஆதி இயற்கையைப் பற்றிய அதன் கணிப்பும் ஆகும்.

## கடவுளுக்கு இடமில்லை.

சாங்கிய தத்துவம் கடவுள் இருப்பினை ஏற்றுக் கொள்ளாதது. கடவுளின் இருப்பை நிரூபிக்க முடியாது என்கிறது சாங்கிய பிரவசன சூத்திரம்.

மனிதன் செயல்களின் விளைவுகளை அனுபவிப்பது கடவுளின் விருப்பப்படியல்ல. செயலின் இன்றியமையாத நியதிகளின்படி மட்டுமே அனுபவிக்கப்படுகிறது.

அதாவது இயற்கை தன் விதகளின்படி பரிணாமம் அடைகிறதே ஒழிய, கடவுள் அருளால் அல்ல என்கிறது சாங்கியம்.

பிரகிருதி (இயற்கை), புருடன் (அறிவுள்ள பொருள்) ஆகிய இரு பொருட்கள் பற்றி மட்டுமே பேசுகின்ற சடவாத தரிசனமாகும்.

பரம்பொருள் (இறைவன்) குறித்து எதுவும் கூறப்படவில்லை. உலகத் தோற்றம் (படைப்பு) படைப்பு குறித்தான கருத்துக்களை மட்டும் அத்வைத வேதாந்திகள் ஏற்றுக்கொள்கின்றனர்.

புருடன் அறிவுள்ள பொருள் என்றும் பிரகிருதி அறிவற்ற சடப்பொருள் என்றும் கூறுகின்றது.

உலகமானது முக்குணங்களின் சேர்க்கையினால் உருவானது என்பது இதன் கருத்து. இந்நூலில் தத்துவ விசாரணை அதிகம் உண்டு.

நாம் ஆதியில் பிரகிருதி, பிறகு மகத்துவம், பிறகு அகங்காரம், ஐந்து தன் மாத்திரைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனம், ஐந்து ஸ்தூல பஞ்சபூதங்கள், ஐந்து சூக்கும பஞ்சபூதங்கள், இறுதியில் புருடன் எனும் 28 சாங்கியத் தத்துவத்தில் படைப்பு பற்றி விளக்கமாக கூறுகிறது.

மேலும் “மூலத்திற்கு மூலம் இல்லையாதலால், அதற்கு `அமூலம்` எனப்பெயர்” பஞ்ச அங்க யோகத்தால் ஞானம் தோன்றும். அது சுகத்தின் ஞானம்.

## சாங்கிய தத்துவத்தை நிறுவியவர்

சாங்கிய தத்துவத்தை நிறுவிய கபிலர் (சாங்கியம்) விஷ்ணுவின் அம்ச அவதாரமாக வைணவர்கள் போற்றுகின்றனர். இந்து மற்றும் பௌத்த மதத்தில் கபிலரின் சாங்கியச் சிந்தனைகள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

### சாங்கியம் கூறும் 28 (3+9+11+5) தத்துவங்கள்

சத்துவ குணம், இராட்சத குணம், தாமச குணம் எனும் முக்குணங்கள் சேர்ந்த மூன்று தத்துவங்கள்.

புருஷன் (அறிவுள்ள வஸ்து), பிரகிருதி (இயற்கை), மஹத் தத்துவம், அகங்காரம் மற்றும் பஞ்சபூதங்கள் எனும் ஆகாயம், காற்று, அக்னி, நீர், பூமி எனும் ஒன்பது தத்துவங்கள்.

ஐந்து ஞானேந்திரியங்களான, காது, தோல், கண், மூக்கு, நாக்கு, எனும் ஐந்துடன், ஐந்து கர்மேந்திரியங்களான, வாக்கு, கை, கால், மலத்துவாரம், சிறுநீர் குழாய் எனும் ஐந்து கர்மேந்திரியங்கள், இவற்றுடன் 'மனம்' (மனதை ஞானேந்திரியமாகவும் அல்லது கர்மேந்திரியமாகவும் கொள்ளலாம்) சேர்த்தால் பதினொரு தத்துவங்கள்.

சப்தம் (கேட்கும் சக்தி), ஸ்பர்சம் (தொடு உணர்வு), ரூபம் (பார்க்கும் திறன்), இரஸம் (சுவைக்கும் உணர்வு) , கந்தம் (வாசனை அறியும் சக்தி) எனும் ஞானேந்திரியங்களின் ஐந்து விசேஷ சேர்க்கைக் சேர்த்தால் ஐந்து தத்துவங்கள்.

### உபநிடதம் மற்றும் பகவத் கீதையில் சாங்கிய சிந்தனைகள்

உலக படைப்பு மற்றும் சீவராசிகளின் தோற்றம் குறித்தான சாங்கிய சிந்தனைகள் உபநிடதம் மற்றும் பகவத் கீதையில் அதிகமாக கையாளப்பட்டுள்ளன. பகவத் கீதையில் சாங்கியம் என்பதற்கு ஞான யோகம் என்று பொருள்.

சாங்கியத்தின் முக்தி நிலை

"சித்" மயமான ஆன்மா "சித்" அல்லாத "பிரகிருதி" யை முதன்மையாகக் கொண்ட தத்துவங்களால் கட்டுபட்டுக் கிடக்கிறது. தன்னைப் பிரகிருதியாக எண்ணி மயங்குகிறது.

பிரகிருதியில் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டு தன் இயல்பான சித்துத் தன்மையையும், வரம்பின்மையும் ஆன்மா உணரும்போதுரு விடுதல பெறுகிறது.

கடவுள் உண்டென்றும், அந்தக் கடவுளோடு ஆன்மா கலக்கிறது என்றும் கூறுவதைச் சாங்கியர்கள் ஏற்பதில்ல.

ஆன்ம விடுதலையோடு அவர்களுடைய தத்துவம் முற்றுப்பெறுகிறது.

"ஆன்மா" "பிரகிருதி" ஆகியவற்றுக்கு மேலாகக் கடவுள் உண்டென யோகத் தத்துவம் கூறுகிறது. தத்துவப் பிணைப்புகளில் இருந்து விடுபடும் ஆன்மா இறைவனை அடைந்து இறைவனோடு ஐக்கியப்பட்டு ஆனந்தமடையும் நிலையை முக்தி நிலை என்கிறது யோக தத்துவம்.

## புருஷ தத்துவம்

புருஷன் என்று சாங்கியமரபு கூறுவதை இப்படிப்புரிந்து கொள்ளலாம். பிரபஞ்சத்தை அறிவது யார்? நான்! நான்கள் கூடினால் நாம். நான் என்றால் 'அறியும் மனம்' இல்லையா?

பிரபஞ்சத்தில் உள்ள அத்தனை அறியும் மனங்களையும் ஒன்றாகச் சேர்த்தால் வரும் ஒற்றை மனம் எதுவோ அதுவே புருஷன். இதைப் 'பிரபஞ்ச மனம்' என்று கூறலாம்.

புருஷன் பிறப்பும் இறப்பும் இல்லாதவன். எல்லா இடத்திலும் இருப்பவன். வடிவம் இல்லாதவன். ஆதி இயற்கையைப் போலவே அவனும் முழுமுதல் பொருள் போன்றவன்.

ஆதி இயற்கையும் ஆதி புருஷனும்தான் முதலில் இருந்தார்கள். இயற்கையின் எல்லா மாற்றங்களும் இந்த புருஷனின் பார்வையின்தான் நிகழ்கின்றன.

இயற்கையின் இயல்புகள் எல்லாமே புருஷனின் இயல்புகளுடன் ஒப்பீட்டளவில் உருவாவதே. அதாவது சத்வகுணம் என்றால் அது புருஷனில் சத்வ விளைவுகளை உருவாக்குவது என்று பொருள்.

அதே சமயம் புருஷன் எந்த விதத்திலும் இயற்கையுடன் ஊடாடுவதில்லை. அவன் ஒரு பரிபூரண மௌன சாட்சி மட்டுமே.

இயற்கையின் எந்த செயலும் புருஷனில் விளைவுகள் எதையும் உருவாக்குவதில்லை. ஒவ்வொரு மனிதனும் புருஷனின் அம்சம் உடையவனே.

புருஷதத்துவம் சாங்கிய மரபில் ஏன் உருவாயிற்று என்று ஏற்கனவே கோடிகாட்டப்பட்டது. இயற்கையில் குணங்கள் உருவாயின என்று கூறப்பட்ட உடனேயே அக்குணங்கள் எதன் அடிப்படையில் தீர்மானிக்கபட்டன என்ற கேள்வி எழுந்து விடுகிறது.

உதாரணமாக ‘வெப்பம்’ என்றால் அதை உணர ஒர் உடல் தேவை. ஒளி என்றால் அதை உணர ஒரு விழி தேவை. எவராலும் உணரப்படாத, அறியப்படாத ஒன்று இருப்பதும் இல்லாததும் சமம்தானே.! இதன் விடையாக சாங்கியர் புருஷன் என்ற பார்வையாளனை உருவகித்துக்கொண்டனர்.

இரண்டாவது மனிதனுக்குள் உள்ள மனம், அதில் உள்ள ஞானம், ஞானத்தில் உள்ளடங்கிய்யுள்ள தேடல், இதெல்லாம் எங்கிருந்து வந்தன என்ற கேள்வி முக்கியமானதாகக் கூறப்பட்டது.

ஜடத்தில் முக்குணச் சமன் குலைந்தமையினால் இயக்கம் எற்பட்டது சரி. ஜடத்தை குணரீதியாக அறிந்து மதிப்பிடும் பிரக்ஞையும் ஆவலும் ஜடத்தில் எப்படி குடியேறின? இதற்கு விடையாகவும் புருஷ தத்துவம் கூறப்பட்டது.

ஜடத்தை அறிவதே புருஷனின் வேலை. அவனுடைய இருத்தலுக்கு அர்த்தமே இதுதான்.

படிப்படியாக புருஷ தத்துவம் ஆத்ம தத்துவத்துடன் இணைந்தது.

சதீஸ் சந்திர சட்டர்ஜி, நீரேந்திர நாத மோகன் தத் போன்ற வங்க சிந்தனையாளைர்கள் சாங்கிய தரிசனத்தைத் துவைதவாத மரபு சார்ந்த யதார்தச் சிந்தனை என்று வகுத்துக் கூறும்போது, ஆத்ம தத்துவமே பின்பு சாங்கிய மரபில் புருஷ தத்துவமாகப் புது வடிவம் பெற்றது என்று வாதிடுகிறார்கள்.

ஆத்மாவும் புருஷனும் ஒன்றுதான் என்று கூறப்பட்டது. இந்தபார்வையின் அடிப்படையில்தான் டாக்டர் ராதாகிருஷ்ணனைப் போன்ற அறிஞர்கள் சாங்கியத் தரிசனமும் ஆன்மிகவாதத் தரிசனமே என்று வாதிடுகிறார்கள்.

சாங்கியம் கூறும் புருஷன் வேதாந்தம் கூறும் ஆத்மனின் பெரும்பாலான இயல்புகளை அப்படியே பிரதிபலிக்கிறான் என்பது உண்மையே.

உதாரணமாக இயற்கையில் நிகழும் பரிணாம மாற்றங்களின் நோக்கம் என்ன என்ற கேள்விக்கு புருஷனின் முக்தியே என்று சாங்கிய காரிகை பதில் கூறுகிறது! (சா.காரிகை – 58)

சாங்கியத் தரிசனத்தின் அடிப்படைக் கோப்பில் புருஷ தத்துவத்துக்கு இடமில்லை என்றும் அது பிற்பாடு சேர்க்கப்பட்டது என்றும் கருத இடமுள்ளது.



வேதாந்த மரபின் ஒரு பகுதியாகச் சாங்கியத்தையும் சேர்க்க நடந்த முயற்சியின் விளைவாகவே புருஷதத்துவம் உருவாக்கப்பட்டது என்கிறார் ஷெர்பாட்ஸ்கி (Steherbatsky, Buddist Lagic Vol.I 47-78).

இதற்கு உதாரணமாக புருஷதத்துவம் சாங்கிய மரபின் பிற அடிப்படைகளும் மோதுவதைக் சுட்டிக்காட்டலாம். உதாரணமாக பருப்பிரபஞ்சத்திலிருந்து மகத் பிறக்கிறது.

அதிலிருந்து தன்மாத்திரைகள். பிறகு புலன்கள், பிறகு மனம். இங்கு புருஷன் எங்கே வருகிறான்? மனம் வேறு புருஷன் வேறா?

அதேபோல சாங்கிய காரிகையே கூட தனக்குள் முரண்படுகிறது. புருஷன் வெறும் சாட்சியே என ஒரு இடத்தில் கூறுகிறது.

பிறிதொரு இடத்தில் புருஷனும் இயற்கையும் முடவனும் குருடனும் போல இணைந்து இயங்கும் இரு சக்திகள், ஒன்றில்லையேல் பிறிதில்லை என்கிறது.

ஆனால் இறுதிவரை சாங்கியம் இறைவன், பிரம்மம் முதலிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவே இல்லை.

மிகப் பிற்கால நூலான சாங்கிய பிரவசன சூத்திரம் ‘ கடவுளின் இருப்பை நிரூபிக்க முடியாது’ என்கிறது.

‘ செயல்களின் விளைவுகளை நாம் அனுபவிப்பது கடவுளின் விருப்பப்படியல்ல.

செயலின் இன்றியமையாத நியதிகளின்படி மட்டுமே’ என்று கூறுகிறது அது. (சாங்கிய பிரவசன் சூத்திரம் 1, 93-95)

அதாவது இயற்கை தன் விதிகளின்படி பரிணாமம் அடைகிறதே ஒழிய இறையருளால் அல்ல என்கிறது.

ஆனால் சாங்கியம் கூறும் புருஷனின் குணங்கள் பெரும்பாலும் இறைவனின் குணங்களுடன் ஒத்து போகின்றன.

புருஷ சித்தாந்ததிலிருந்து இறை சித்தாந்தத்துக்கு ஒரு அடி தூரம்தான். ஏற்கனவே சமூகம், பிரபஞ்சம் முதலியவற்றை மாபெரும் மானுட வடிவமாகப் பார்க்கும் பார்வை (விராட புருஷன்) வழக்கத்தில் இருந்தது.

இந்த அணுகுமுறைகள் எல்லாமே இறைச் சித்தாந்தந்தில் சென்று முடிந்துள்ளன. நமது எல்லாக் கடவுள்களுக்கும் 'பரமபுருஷன்' என்ற அடைமொழி உண்டு.

விஷ்ணு 'புருஷோத்தமன்' என்று கூறப்படுகிறார். இந்தச் சிறு இடைவெளியை தர்க்கம் மூலம் தூர்த்து வேதாந்தம் சாங்கியத்தை விழுங்கிக்கொண்டது.

# 31. யோகம்

**இந்தியத் தத்துவ தரிசனங்களில் ஒன்று யோகா ஆகும். யோகம் என்றால் "சித்த விருத்தி நிரோதம் (சித்தத்தின் செயல்பர்டுகளைத் தடுத்தல்)" என்கிறது பதஞ்சலி யோக சூத்திரம்.**

**யோகா** என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும், சமன்பாட்டிற்கும் உதவிடும் ஒப்பற்ற கலை ஆகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலை ஆகும்.

இக்கலை இந்தியாவில் தோன்றி வளர்ந்து வழிவழியாய் வரும் ஓர் ஒழுக்க நெறியாகும். இது உடலையும் உள்ளத்தையும் நலத்துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறி.



பத்மாசன நிலையில் யோக தியானம் புரியும் சிவனின் சிலை.

யோகாவின் பல்வேறு மரபுகள் இந்து, புத்த மற்றும் சமண மதங்களில் காணப்படுகின்றன.மேலும் யோகா வஜ்ரயான மற்றும் திபெத்திய புத்த மத தத்துவங்களில் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

## வரலாறு

*யோகம்* என்ற சொல்லுக்கு இனைதல் அல்லது இணக்கமாக இருத்தல் என்று பொருள்..

யோகம் என்பது இந்தியாவில் உள்ள ஆறு தத்துவமுறைகளில் முக்கியமான ஒன்றாகும். யோகாத்தின் தோற்றம் விவாதத்திற்க்கு உட்பட்டு இருக்கின்றன.

இது வேத காலத்திற்கு முன்பே தோன்றி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சிந்து சமவெளி நாகரித்தின் தளங்களில் உள்ள சில முத்திரைகள் ஒரு பொதுவான யோகா அல்லது தியான நிலைகளை புள்ளிவிவரங்கள் காட்டி சித்தரிக்கின்றன.

" யோக சாஸ்திரத்தை முதன்முதலில்இயற்றியது பிரம்ம தேவனே. அவருக்கு முன் ஒருவரும் யோக சாஸ்திரத்தைச் செய்யவில்லை என்கிறது யோக யாக்ஞ வல்கிய ஸ்மிருதி

யோக வழியை மனித மனத்துக்குத் தந்தவர் "உறிரண்ய கர்பர்" . அதைச் சூத்திரங்களாக்கித் தொகுத்து ைவைத்தவர் பதஞ்சலி முனிவர்.

இந்து தத்துவத்தின் படி யோகம் என்பது ஜீவத்மாவுடன் பரமாத்மா இனைதலுக்கான வழி எனப்படுகிறது. யோகத்தின் பாதையில் செல்பவர் யோகி எனப்படுகிறார்.

## பதஞ்சலி யோக சூத்திரம்

பதஞ்சலி மகரிஷி யோகாவை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுத்தியுள்ளார். முறையான யோகசாஸ்திரத்தைக் கண்டுபிடித்த பெருமை பதஞ்சலியையே சாரும் என பெரும்பாலோர் கருதுகின்றனர்.



(பதஞ்சலி முனிவரும் வியாக்ரபாதமுனிவரும் நடராசரை வணங்கி நிற்கும் காட்சி)

இவர் வழங்கிய பதஞ்சலி யோகசூத்திரம் 185 சுருக்கமான சூத்திரங்களை கொண்டுள்ளது.

*அஷ்டாங்க யோகா* (எட்டு-அங்கங்கள் யோகா) என்ற முறைக்கு பதஞ்சலியின் எழுத்துக்கள் அடிப்படையாக இருந்தன. இந்த எட்டு-அங்க யோகா தத்துவம் 29வது சூத்திரம் 2வது புத்தகத்தின் சூத்திரம் தான் இன்று நடைமுறையில் இருந்து வரும் ஒவ்வொரு ராஜ யோகத்தின் ஆழ்ந்த குணாதிசயத்தைக் காட்டுகிறது.

## யோகத்தின் எட்டு அங்கங்கள்

1. இயமம் ( பின்பற்றவேண்டியவை /*எடுத்துக்கொள்ளத் தக்கவை*) மிதவாதம், சாராதிருத்தல், பேராசை அற்ற தன்மை ,விவேக மற்ற தன்மை மற்றும் உரிமை கொண்டாடாதிருத்தல் .
2. நியமம் (*கவனிக்கவேண்டியவை*) புனிதம், போதுமென்ற மனம் / திருப்தி, கண்டிப்பு/ எளிமை, கற்றல் மற்றும் கடவுளிடம் சரணாகதி.
3. ஆசனம், இதன் பொருள் *அமர்தல்* அல்லது *உடலின் நிலை*.
4. பிராணாயாமம் (மூச்சை அடக்குதல்)*ப்ராணா* , மூச்சு, *அயமா*, அடக்குதல் அல்லது நிறுத்துதல்.மேலும் வாழ்க்கை ஓட்டத்தைக் கட்டுபடுத்துதல் எனவும் பொருள்படும்.
5. ப்ரத்யாஹாரம்(தனியாக நீக்குதல்) புற உலக பொருள்களில் இருந்து ஐம்புலன்களையும் விலக்குதல்.
6. தாரானை( மன ஒருமைப்பாடு/மனதை ஒரு நிலைப் படுத்துதல்) ஒரே பொருளின் மீது கவனத்தை நிலைப் படுத்துதல்.
7. தியானம்(தியானம்) தியானதிற்கு எடுத்துக்கொண்ட பொருளின் உண்மைத்தன்மையை ஆழ்ந்து சிந்தித்தல்.
8. சமாதி (பதஞ்சலி) (*விட்டு விடுதலை ஆதல்*) உணர்வுகளை தியானிக்கும் பொருளுடன் இணைத்துவிடுதல்.



டெல்லியிலுள்ள பிர்லாமந்திரில் இருக்கும் ஹிந்து யோகியின் சிலை

## யோகாமும் பகவத் கீதையும்

பகவத் கீதை ( இறைவனின் பாடல் ) , *யோகா* என்ற பதத்தை விரிவாக பல் வேறு வழிகளில் பயன்படுத்துகிறது. இத்தோடு ஒரு பாகம் முழுவதும் (அத்தியாயம் 6)பாரம்பரிய யோகா பயிற்சிகளுக்காக அர்ப்பணித்துள்ளது. மேலும் இதில் மூன்று முக்கிய யோகா வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.[12]

- கர்ம யோகம் : செயல்களின் யோகம்.
- பக்தி யோகம்: அர்ப்பணித்தல் யோகம்
- ஞான யோகம்: அறிவு யோகம்

மதுசூதன சரஸ்வதி (b. circa 1490)கீதையை மூன்று பிரிவுகளாகப் பிரித்து , முதல் 6 பாகங்ககள் கர்ம யோகமாகவும், நடுவில் 6 பக்தி யோகமாகவும், மற்றும் கடைசி 6 ஞானமாகவும் வகைப்படுத்தியுள்ளார்.[1] பிற வர்ணனையாளர்கள் ஒவ்வொரு பாகத்திற்கும் வேறுபட்ட யோகாவைக் குறிப்பிட்டு ஆக மொத்தம் 18 மாறுபட்ட யோகாக்களாக வர்ணித்துள்ளனர்.[14]

ஆசனம் என்றால் உடலின் நிலை அல்லது தோரணை என்று பொருள். அஷ்டாங்க யோகாசனா செய்ய நான்கு வகையான நிலைகள் உள்ளன.

## யோகா வேறுபாடுகள்

### ஹத யோகா

15 ஆம் நூற்றாண்டு இந்தியாவில் வாழ்ந்த யோகி ஸ்வாத்மராமா, தன் ஹத யோக பிரதிபிகா தொகுப்பில், ஹத யோகா என்ற குறிப்பிட்ட வகை யோகாவைப் பற்றி விளக்கியுள்ளார்.

பதஞ்சலியின் ராஜ யோகத்தில் இருந்து, ஹத யோகா கருத்தில் மாறுபட்டுள்ளது, அது *சத்கர்மாவை* குறியாகக் கொண்டு, உடல் சுத்தம் மனத் தூய்மைக்கு *(ஹா)* மற்றும் *ப்ராண* அல்லது இன்றியமையாத சக்தி *(தா)* பெற வழி நடத்திச் செல்லும் என்கிறது.

மேலும் பதஞ்சலியின் ராஜ யோக முறையில், அமர்ந்து செய்யும் ஆசனத்தோடு அல்லது உட்கார்ந்து செய்யும் தியான நிலையை ஒப்பிடுகையில், இது இன்று பிரபலமாக வழக்கத்தில் இருக்கும் முழு உடல் *நிலைகளின் ஆசனங்களின்* வளர்ச்சியைக் குறிக்கிறது.

ஹத யோகா தன் நவீன மாற்றங்களைக் கொண்ட நடையில் பல வகைகளைத் தான் மக்கள் இன்று *யோகா* என்ற பதத்தோடு சம்பந்தப்படுத்துகிறார்கள்.[19]

### தந்திரம்

தனோதி, த்ராயதி என்ற இரண்டு சொற்களின் சேர்கையில் ஒருவான சொல் “தந்திரம்”. தனோதி என்றால் விரிவடைதல் என்றும், த்ராயதி என்றால் விடுவிக்கப்படுதல் என்றும் பொருள். அதாவது, உணர்வு எல்லைகளை விரிவடையச் செய்து சக்தியினை விடுவிக்கத் தேவையான அறிவியலாம்.

உடலில் உயிர் இருக்கும்போதே “இகமதில் சுகம்” பெற தளைகளில் இருந்து விடுபட்டு இருப்பதற்கான உக்தியாம். நமது சரீரம்

மற்றும் மனம் இரண்டிற்கும் சில வரம்புகள் அல்லது எல்லைகள் இருக்கின்றன.

இவற்றைப் பற்றி புரிந்து கொள்வதே இந்த அறிவியலின் முதற் படியாகும். அதற்கு அடுத்ததாக உணர்ச்சி கோர்வை மண்டலத்தை விரிவடையச் செய்து, சக்தியினை தளைகளில் இருந்து விடுவிக்கத் தோதுவான உக்திகளைச் சொல்கிறது.

இறுதியில் மனிதப் பிறவியின் எல்லைகளையும் வரம்புகளையும் தளைகளையும் கடந்தாற்பின், எல்லாமுமான பரம்பொருளோடு இரண்டற இணையும் அனுபவத்தினைத் தந்திடும் என்ற உறுதியினையும் தருகிறது.

உடல் மற்றும் மனம் இவற்றின் உபாதைகளைக் களைந்து அவற்றை பேரின்ப பெருங்களிப்பிற்கு தயார் செய்திடும் முறைகளாக யோக சாஸ்திரங்கள் உரைக்கும் ஆசனம், பிரணாயாமம், முத்திரைகள் மற்றும் பந்தங்கள் ஆகிய பயிற்சிகள் இதிலிருந்து இருந்து உற்பத்தியானவைதான்.

தாந்த்ரியம் என்பது ஒரு நடைமுறை இது, இதனைப் பயிற்சி செய்பவர்களின் சாதாரண சமூக, மத/ சமய, மற்றும் பிரதட்சியமான நிஜ வாழ்க்கையில் உள்ள தொடர்பை / உறவு முறையை மாற்றுவதாகக் கருதப்படுகிறது.

இந்த தாந்த்ரீகபயிற்சியால் ஒரு தனி நபர் இந்த நிஜ உலகம் ஒரு மாயை, ஒரு தோற்றம் என்ற கருத்தை அடைந்து மற்றும் தனிமனிதன் அதில் இருந்து முக்தியும் அடைகிறான்.

முக்தி அடைவதற்கான இந்த குறிப்பிட்ட பாதை இந்து சமயத்தில் அளிக்கப்பட்டுள்ள பல வகைகளில் தாந்த்ரீகத்தோடு தொடர்புடைய மற்ற இந்து சமயங்களின் பிற முறைகளான யோகா, தியானம் மற்றும் சமூக பரிச்சியம் அதாவது தற்காலிக அல்லது நிரந்தரமான ,சமூக உறவுகள் மற்றும் வாழ்வியலில் இருந்து விடுதலை அடையும் வழியைக் காட்டுகின்றன.

தாந்த்ரீகப் பயிற்சிகளையும் மற்றும் ஆய்வுகளையும் கற்கும்போது மாணவர் மேற்கொண்டு தியான முறைகள் ,குறிப்பாக சக்ரா தியானம் கற்க அறிவுறுத்தப்படுகிறது.

பிற யோகிகளை சீர்தூக்கி பார்க்கும்போது, தாந்த்ரீக பயிற்சியாளர்கள் கடைபிடிக்கும் பயிற்சி முந்தையதை விட மிக விரிவாக உள்ளது.தியானிப்பதற்கும், வணங்குவதற்கும் இதயத்திற்குள் உள்ள சக்கரத்துக்குள் கடவுளைக் கொண்டு வரும் நோக்குடன் செய்யப்படும் ஒரு வகை தான் குண்டலினி யோகா. யோக மதம் கடவுள் உண்டு என்ற கருத்துடையது.

## நால்வகை யோகம் பற்றி வேதாத்திரி மகரிசி

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் சமுதாயத்தோடு இணைந்து நடைபெறுவதால் ஒருவரது மயக்கநிலைச் செயல்கள் பலரையும் துன்பத்துக்கு உள்ளாக்குகின்றன.

இந்த நிலமையை ஆராய்ந்து சிநத்தித்து தெளிந்தவர்கள், மக்களனைவரும் அறிவில் மேம்பாடு அடைய வேண்டும் என்று கருதி யோக நெறிகளை வகுத்தார்கள்.

பக்தியோகம், கர்மயோகம், இராஜயேகாம், ஞானயோகம் என்ற நான்கும் மனிதனுக்கு அவசியமானவை.

“அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி

அறிவை அறிவால் அறியப் பழகுவது யோகம்

அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி,

அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்” (ஞா.க.1356)

பெரியவர்கள் அறிவில் தெளிந்தவர்கள், சொற்படி அவர்கள் வழியில் செயல் புரிந்து தன்னை ஆன்மிக வாழ்வுக்குத் தகுதியாக்கிக் கொள்வது பக்தியோகம்.

தனக்கு எல்லா வசதிகளையும் அளித்துக் காக்கும் சமுதாயத்திற்குத் தனது கடனையாற்ற அறிவாலே, உடலாலே உழைப்பதுதான் கர்மயோகம்.

"உடலுக்கும் பொருளுக்கும் தொடர்புணர்ந்து,

உழைத்துண்டு. உதவுதலே கர்ம யோகம்!

உயிருக்கும் பரத்திற்கும் தொடர்புணர்ந்து,

உயர்அறிவில் ஒழுகுவது, ஞானயோகம்" (ஞா.க.1357)

புலன் மயக்க நிலையிலிருந்து தெளிந்து புலன்களை அடக்கியாளும் ஆட்சி வல்லமை பெற அகத்தவம் பயிலும் பிரிவு இராஜயோகம் ஆகும்.

## மகரிசியின் மனவளகலையில் யோக தத்துவம்.

இந்திய தத்துவச் சிந்தனைகளின் சிகரமாக யோக தத்துவம் விளங்குகின்றது. யோக சூத்திரம் மற்றும் தந்திர சாஸ்திரங்கள் இத்தத்துவம் பற்றி மகிவும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றன.



அருள்தந்தை வேதாத்திரியத்தில் வகுத்துள்ள மனவளக்கலை என்னும் யோகமுறையில் ஆறு ஆதாரங்களையம் கடந்து வருகிறோம். ஐந்து அவஸ்தைகளையும் அடைகிறோம். அஷ்டாங்க யோகத்தையும் முழுமையாக கடைப்பிடிக்கின்றோம்.

ஆதலால் இந்த யோக முறை முழுமையானது. தெளிவானது. புராணமானது. பாதுகாப்பானது என்று உறுதியாக கூறலாம்.

அருள்தந்தை அவர்கள் யோகத்தில் குண்டலின் யோகத்தையும், தத்துவத்தில் மிக உயர்வானதும், விஞ்ஞான பூர்வமானதும் ஆன அத்வைத்க் கோட்பாட்டையும் எடுத்துக் கொண்டு மிகவும் எளிமைப்படுத்தி தனது அனுபவத்தையும் இணைத்து தந்துள்ளார்கள்.

மனவளக்கலை வெறும் யோகம் மட்டும் அல்ல. அது மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழக்கைக் கலைகள், வாழ்வியல் நெறிமுறைகள் , கோட்பாடுகள் என்று கூறலாம்.

வேதாத்திரி மகரிசியின் அடிப்படையான வாழ்வியல் தத்துவமாக குண்டலினி யோக தத்துவம் விளங்குகின்றது.

எவரும் குண்டலின் யோகத்தை மனவளக்லையாகப் பயின்று வாழ்வில் முன்னேறலாம் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

குண்டலினி யோக தத்துவத்தை வாழ்வியல் தத்துவமாக வளர்ந்தெடுத்துவரும் யோகியாக வேதாத்திரி மகரிசி விளங்குகிறார்.

## புத்த மதம்



ஜப்பான் நாட்டிள் காமகுராவிலுள்ள யோகநிலையில் அமர்ந்திருக்கும் புத்தர் சிலை

## சமணம்



கயோட்சர்க நிலையில் யோக தியானம் புரியும் திர்தங்கர பர்சவா



முலபந்தனா நிலையில் மஹாவீராவின் கேவல ஞானா

## யோகத்தின் பலன்கள்

யோகப்பயிற்சி மிகப்பழங்காலத்திலிருந்தே பாரதநாட்டில் யோகிகளால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட சில சக்திகளை கிடைக்கும் என்பது யோகம் எனும் தத்துவத்தின் கருத்து.

பதினெட்டு யோகஸித்திகளும் பலன்களும்



## குண்டலினி யோகா குறியீடு

- பஞ்ச மகாபூதங்களின் வடிவத்தை “தன்மாத்திரை” என்பர். இதையே சூட்சும வடிவாகக் கொண்டு பிரம்மத்தில், மனதை நிலைநிறுத்தி தியானிக்கும் யோகிக்கு ‘*அணிமா*’ என்ற சித்தி கிடைக்கிறது. இந்த சித்தி மூலம் தன் உடலை அணுவைபோல் மிகமிகச் சிறிய வடிவத்தை எடுக்கலாம்.

- ’மஹத்’ எனும் தத்துவரூபமாக விளங்கும் இறைவனிடம் மனதை நிலைநிறுத்தி தியானிக்கும் யோகிக்கு ‘*மஹிமா*’ எனும் சித்தி கிடைக்கிறது. இந்த சித்தி மூலம் தன் உடலை மலைப் போல் மிக மிகப் பெரிதாக்கிக் கொள்ள முடியும்.

- பகவானை ‘பரமாணுவாக’ தியானிக்கும் யோகிக்கு ‘*லகிமா*’ எனும் சித்தி கிட்டுகிறது. இந்த சித்தி மூலம் உடலை காற்றைப் போல் இலேசான எடையுடன் மாற்றிக் கொள்ள முடியும்.

- பரப்பிரம்மத்தின் அஹங்கார தத்துவத்தில் தன் மனதை நிலைநிறுத்தும் யோகிக்கு, ’*பிராப்தி*’ எனும் சித்தியால் ஐம்புலன்களைத் தன் ஆளுகைக்கீழ் கொண்டு வரும் ஆற்றல் பெறுகிறார்.

- பிறப்பு இறப்பு இல்லாத பகவானின் ’மஹத்’ எனும் தத்துவமே ‘சூராத்மா’. ஆகும். சூராத்மாவில் மனதை நிலைப்பெறச் செய்பவர்கள் ‘*பிராகாம்யம்*’ எனும் சித்தி பெற்ற யோகி பிரம்மாண்டம் முழுமைக்கும் தலைமை தாங்குகிறார்.

- முக்குணமயமான மாயைக்கு அதிபதியும், படைத்தல், காத்தல், அழித்தல் சக்தியும் கொண்ட பகவானிடத்தில் மனதை இலயிக்கும் யோகிக்கு ‘*ஈசித்வம்*’ எனும் சித்தி கிடைக்கிறது. இந்த சித்தியினால் நான்முகன் முதலான தேவர்களுக்கு ஆணையிடும் தகுதி பெறுகிறார்.

- பகவான் எனும் சொல்லிற்கு பொருளாக இருக்கும், விராட், ஹிரண்யகர்பன், அந்தக்கரணம் எனும் மூன்று நிலைகளை கடந்து, நாலாவது நிலையில் உள்ள பிரம்மத்தில் மனதை செலுத்தும் யோகிக்கு ‘*வசித்துவம்*’ எனும் சித்தி கிட்டுகிறது. இதன் மூலம் யோகிக்கு அனைத்தையும் வசப்படுத்தும் ஆற்றல் உண்டாகிறது.

- நிர்குணபிரம்மத்(அருவ நிலை)த்தில் மனதை நிலை நிறுத்தும் யோகிகள் மிக உயர்ந்த பேரானந்தத்துடன் விருப்பங்களின் இறுதி எல்லையை அடைந்து "*காமா வஸாயிதா*" என்ற சித்தி அடைந்த யோகி, இதனையே தன் விருப்பங்களின் இறுதி எல்லை (காமா வஸாயிதா) என்ற சித்தியாக கூறுகிறார்கள்.இதர யோகசித்திகள்



பதஞ்சலி முனிவர் சிலை, ஆதிசேஷனின் மறு அவதாரம்

## யோக தத்துவத்தின் சிறப்பு

யோகம் எனும் தத்துவம் கடவுள் இருப்பதை ஏற்றுக்கொண்டதை தவிர, இது பிற்கால சாங்கியம் போன்றதே. எனவே பதஞ்சலியின் யோக தத்துவம் கடவுளுடன் கூடிய சாங்கியம் எனப்படுகிறது.

- சமண சமய நிறுவனரான மகாவீரர் பன்னிரெண்டு ஆண்டுகள் யோகப்பயிற்சிகளைச் செய்தார். சமண சமயத்தில் யோகப்பயிற்சி யோகாசனம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

- பௌத்த சமயத்தை நிறுவிய கௌதம புத்தர் கூட, முழு ஞானோதயம் அடைவதற்கு முன்னாள் ஆறு ஆண்டு காலம் தொடந்து யோகப்பயிற்சிகள் செய்தார். பௌத்த நூல்களும் யோக பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளன. புத்தரால்

கூறப்பட்ட நான்கு உண்மைக்களை அறிய யோகம் பயன்படும் என்று பௌத்த அறிஞரும் தர்க்கவாதியும் தர்மோத்தரா கூறியுள்ளார்.

- பிற்கால தத்துவவாதிகள் குறிப்பாக அத்வைதிகளும் மற்றும் மகாயான பௌத்தர்களும் யோக சூத்திரத்தை தங்களது தத்துவங்களில் தாராளமாக சேர்த்துக் கொண்டனர்.

நியாய தத்துவத்திலும், வைசேடிகம் தத்துவத்திலும், வேதாந்த தத்துவத்திலும் யோகம் எனும் தத்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

பிரம்ம சூத்திரம் மூன்றாம் அத்தியாத்தில் சாதனைகள் எனும் தலைப்பில் யோகத்தின் முக்கிய பகுதிகளான தியானம், ஆசனம் ஆகியவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது. யோக சூத்திரத்தின் தொடர்புள்ள பல தத்துவங்களில் சாங்கியமும் ஒன்று என்று யோக சூத்திரமே குறிப்பிட்டுள்ளது.

# 32. வைசேடிக தத்துவம்.

இந்திய தத்துவ ஞானங்களுள் “அணு” பற்றிய விளக்கத்தை விளக்கமாகக் கூறும் புராதன தத்துவமாக வைசேடிகம் விளங்குகின்றது.

வைசேடிக தத்துவ ஞானியான கணாத முனிவர் அனைத்துப் பொருட்களும் உலகமும் அணுக்களால் ஆனது என்பார். இத்தகை வைசேடிக தத்துவக் கருத்தினை வேதாத்திரி மகரிசி,

“அணுவிலே பிரபஞ்சம் அடக்கம் பெற்றிருப்பதனை

அறிந்தோர் அறிவர்” (ஞானக்களஞ்சியம்)

என்றும்

“அணுவில் அண்ட பிண்டம் அனைத்தும் உண்டு” (ஞானக்களஞ்சியம்)

என்றும் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக வேதாத்திரி மகரிசியின் தத்துவச் சிந்தனைகளில் வைசேடிக தத்துவம் கூறும் அணுக்கோட்பாடு பற்றிய கருத்துகள் நன்கு எதிரொலிப்பதைக் காணலாம்.

**வைசேஷிகம்** (என்பது இந்திய மெய்யியலில் வேதத்தை ஏற்கும் ஆறு முக்கிய பிரிவுகளில் ஒன்றாகும்.

கணாதரர் எனப்படும் கானடா அல்லது கணபுஜா என்கின்ற குரு உருவாக்கிய சாத்திரம்.

ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்து அடையாளம் கண்டு கொள்வதற்கு அதன் சிறப்புத் தன்மையே இதன் அடிப்படை. அதன் சிறப்புத் தன்மையை ஆராய்வதால் இதற்கு வைசேடிகம் அல்லது வைசேஷிகம் என்று பெயர் பெற்றது.

இந்திய தத்துவவியலில் `தர்சனம்` எனும் சொல் முதனமுதலில் வைசேடிக தத்துவ நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய தத்துவ அறிஞர் தாஸ் குப்தா கூறுகிறார்.

## கணாதரர், கானடா அல்லது கணபுஜா பற்றிய செய்திகள்

கணபுஜா என்பதற்கு அணுக்களை உண்பவர் என்று பொருள். இப்பெயர் வரக்காரணம், அவரது எளிமையை விளக்குவதாகும். அறுவடை முடிந்த நிலங்களில் சிதறிக்கிடக்கும் நெல், கோதுமை மற்றும் இதர தாணியங்களை பொறுக்கி அதனை சமைத்து உண்பவராம்.

தற்கால இந்தியத் தத்துவவியல் அறிஞர்களான குப்புசாமி சாத்திரி மற்றும் கார்பே இருவரும், கணாதரர் அல்லது கணபுஜரை நாத்திகவாதி என்று கருதுகின்றனர்.

## வைசேடிக தத்துவம்

**வைசேடிக தத்துவம்** ஆறு ஆத்திகத் தர்சனங்கள் அல்லது வைதிக தர்சனங்களில் ஒன்று, (மற்றைய ஆத்திக தர்சனங்கள் அல்லது வைதிக தர்சனங்கள் 1 சாங்கியம், 2 யோகம், 3 நியாயம், 4 பூர்வ மீமாம்சை , 5 உத்தர மீமாம்சை. நீக்குக)

வைசேடிக தத்துவத்தில் ஒரு பொருளை நன்கு அறியும் அறிவுக்கு (பிரமா) பிரமாணம் எனப்பட்டது.

வைசேடிகம் ஒரு பொருளை நான்கு வழிகளில் அறிய முடியும் எனக்கூறுகிறது.

1 உணர்தல் (பிரத்தட்சியம்) (நேரில் பார்த்து உணர்தல்), 2 ஊகம் (அனுமானம்) 3. உவமை, 4 வாய்ச்சொல் (சப்தம்) ஆகிய நான்கு முறைகளில் ஒரு பொருளைப் பற்றி விளக்கம் முடியும் என்றனர்.

## வைசேடிகத்தின் காலம்

வைசேடிக சூத்திரத்தின் தொகுப்பு இன்று நம்மிடையே இல்லை. இருப்பினும் பௌத்த சமயம் மற்றும் சமண சமய நூல்களிலிருந்து மட்டுமே, வைசேடிக சூத்திரத்தின் சில விளக்கங்கள் அறிய இயலுகிறது.

கி. பி., 4 - 5 நூற்றாண்டுகளுக்கு முன்னரே வைசேடிக தத்துவார்த்த சிந்தனைகள் பாரத நாட்டில் விளங்கி வந்தது.

## வைசேடிகத்தின் உரைநூல்கள்

`இராவண பாஷ்யம்` எனும் உரைநூல் வைசேடிக தத்துவத்திற்கு இருப்பதாக தெரிகிறது. கி. பி. 5ஆம் நூற்றாண்டில், `பிரசஸ்பாதர்` என்பவர் எழுதிய `பதார்த்த-தர்ம-சங்கிரகம்` என்ற நூல் வைசேடிக தத்துவத்தை விளக்குவதாக உள்ளது.

இதனை `பிரசஸ்பாத பாஷ்யம்` என்பர். இந்த பிரசஸ்பாத பாஷ்ய நூலைப் பற்றி பின்னர் பலர் எழுதிய நூல்களில் விமர்சிக்கப்பட்டுள்ளது.

`வயோமசிவன்` என்பவர் எழுதிய (கி.பி.,8ஆம் நூற்றாண்டு) `வயோம சதி` , சீதரா எழுதிய கந்தலி என்ற நூல் (கி. பி. 10ஆம் நூற்றாண்டு), உதயணர் எழுதிய கிரணாவளி (கி. பி.,10ஆம் நூற்றாண்டு), ஆகிய நூல்களில் வைசேடிக தத்துவ விளக்க நூல்கள் பற்றிய விமர்சன குறிப்புகள் உள்ளது.

நியாயம் (இந்து தத்துவம்) சூத்திரத்திற்கு வாத்சாயனர் கி. பி.,4ஆம் நூற்றாண்டில் `வாத்ஸ்சாயன பாஷ்யம்` எனும் நூலில் விமர்சனம் எழுதியுள்ளார்.

## நியாயா - வைசேடிக கலப்புத் தத்துவம்

கி. பி., 200-ஆம் ஆண்டில் கோதமர் இயற்றிய நியாயம் (இந்து தத்துவம்), கணாதரர் இயற்றிய வைசேடிகமும் இணைந்து `நியாய - வைசேடிக தத்துவம்` உருவானது.

நியாய-வைசேசிகம் தத்துவத்தில் கிரேக்க தத்துவ அறிஞர்களின் தாக்கம் உள்ளதாக இந்திய தத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர்.

# 33. நியாயம்

**நியாயம்** என்பது தரிசனங்கள் எனப்படும் ஆறு இந்து தத்துவப் பிரிவுகளில் ஒன்று. இது ஏரணத்தையும் (அளவையியல், (logic)), அறிவாராய்ச்சியியலையும் (epistemology) முதன்மையாகக் கொள்கிறது. இந்தத் தத்துவப் பிரிவுக்கு அடிப்படையானது .

கௌதமர் அல்லது அட்சபாதர் என்பவர் எழுதிய நியாய சூத்திரம் என்னும் நூல் ஆகும். இது கி.மு ஆறாவது நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

நியாயம் தத்துவப் பிரிவு நவீன இந்து தத்துவச் சிந்தனைகளுக்கு வழங்கிய முக்கியமான பங்களிப்பு அதன் வழிமுறை (methodology) ஆகும்.

தருக்கம் அல்லது ஏரணம் (அளவையியலை) அடிப்படையாகக் கொண்ட இந்த வழிமுறையைப், பின்னர், பெரும்பாலான மற்ற இந்து தத்துவப் பிரிவுகளும் கைக்கொள்ளலாயின.

நியாயத்தைப் பின்பற்றுபவர்கள், எற்புடைய அறிவைப் (valid knowledge) பெறுவதன் மூலமே துன்பங்களிலிருந்து விடுதலை பெற முடியும் என நம்புகிறார்கள்.

இதனால் அவர்கள் ஏற்புடைய அறிவைப் பெறுவதற்கான வழிகளை (பிரமாணங்கள்) அடையாளம் காண்பதில் பெரும் அக்கறை செலுத்துகின்றனர். நியாயத் தத்துவப் பிரிவினர் இந்த ஏற்புடைய அறிவை அடையாளம் காண நான்கு பிரமாணங்கள் அல்லது வழிமுறைகளைக் கைக்கொள்கிறார்கள். அவை:

1. பிரத்தியட்சம் - நேரடிக்காட்சி
2. அனுமானம் - உய்த்துணர்வு
3. உபமானம் - ஒப்பீடு

4. சப்தம் - உரைச்சான்று

என்பனவாகும்.

நியாய தரிசனம் வைசேடிக தரிசனத்தின் துணை தரிசனம் ஆகும். அடிப்படையில் வைசேடிகத்தின் பெரும்பாலான கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, அதற்குத் தருக்க அடிப்படையினை உருவாக்கித் தரும் ஒரு தருக்க சாஸ்திரமாகவே தொடக்கத்தில் நியாய மதம் நிலவி வந்தது.

உண்மையை அறிவுப் புர்வமாக வகுத்துக் கொள்வதோடு தர்க்க முறையில்அறிதலைக் கொண்டது நியாய மதம்.

அறிவைப் பெறும் நெறிமுறைகளை விளக்குவதில் நியாய தரிசனம் முதலிடத்தை வகிக்கிறது.

## நியாயத்தில் நூல்கள்

நியாயத்தின் முதல் நூல் கௌதமரின் நியாய சூத்திரமேயாகும். நியாய சூத்திரம் ஐந்து அத்தியாயங்களில் 83 பிரகரணங்களில் 548 சூத்திரங்கள உள்ளன.

கௌதமரின் நியாய சூத்தரத்திற்கு ஏராளமான உரைகளும் விளக்கங்களும் வந்துள்ளன. வாத்ஸ்யாயனரின் நியாய பாஸ்யம் மிக முக்கியமானது.

உத்யோதரன், வாசஸ்பதி மிஸ்ரன், ஸ்ரீகண்டன், ஜயந்தர் ஆகியோர் நியாய சூத்திரத்திற்கு உரை எழுதிகயுள்ளனர்.

## நியாயத்தில் ஆன்மா

ஆன்மாக்கள் என்றும் உள்ளவை, எங்கும் நிறைந்தவை. ஆன்மாக்கள் எல்லாம் வல்லன அல்ல.

ஆன்மாவுக்கு அறிவு ஓர் குணம். ஆன்மாவுக்கு அறிவுடைமையாகிய இந்த இயல்பு எப்போதும் இருப்பது அல்ல.

ஆன்மா மனத்தோடும் உடலோடும் தொடர்புறும் போது மட்டமெ இந்த இயல்பு ஏற்படும்.

எனவே ஆன்மாவுக்கு அறிவோ உணர்வோ ஏற்படுவதற்கு உடலும் மனமும் இன்றியமையாத கருவிகளாகின்றன.

ஆன்மா, புலன்களை இயக்கும் கருத்தாவாக, அனுமானத்தின் மூலம் பெறப்படுகிறது என்கிறது நியாய மதம்.

மூலப் பொருட்கள் பல, உயிர்கள் பல. மூலப்பொருட்கள் பல எனக் கருதுவதால் நையாயகர் பன்மைவாதிகள் ஆவர்.

உலகம் மாயை அல்ல. அது மனோசிருட்டியல்ல. உலகம் உண்மையாகவே உள்ள பொருள். இதன் காரணமாக நையாயகர் மெய்மைவாதிகள் ஆவர்.

மூலப்பொருட்கள் அல்லது பதார்த்தங்கள் ஏழு ஆகும். பொருளும், குணமும் வெவ்வேறு பதார்த்தம். அப்பொருளையும் அதன் குணத்தையும் சம்மபந்தப்படுத்தும் சம்பந்தத்தையும் ஒரு பதார்த்தமாகவே கொள்கிறது நியாய மதம்.

அறிவை மறைக்கும் பொருட்களிலிருந்து தன்னை விடுவித்து, தன் சுயரூபத்தை ஆன்மா அடைவதே முக்தியாகும்.

எல்லாவற்றையும் சரியாக அறிவிக்கவல்ல முற்றறிவுப் பொருளைப் புரணமாகச் சார்ந்துவிடுவதே முக்தியாகும்.

உடலோடும் மனத்தோடும் சம்பந்தப்பட்டால் ஒழிய ஆன்மாவுக்கு உணர்வு ஏற்படாது. ஆன்மா தன் ஞானத்தால் உலகத் தொடர்பை நீக்குவதே முக்தி (வீடுபேறு) ஆகும்.

அதாவது மோட்சம் என்பது இன்பநிலையாகும். நையாயகர் கருத்துப்படி ஆன்மா உணர்வு கெட்டு நிற்கும் நிலையே முக்தியாகும்.

## நியாயத்தில் கடவுள்.

உலக சிருட்டிக்குக் காரணமான ஒரு அறிவுடைய பொருள் இருக்க வேண்டும். மனித ஆன்மா சிற்றிவுடையது. பிரபஞ்ச உற்பத்திக்கு அறிவற்ற சடம், மூல காரணம் ஆகாது.

ஆதலால் முற்றிவு உடைய ஒரு பரம்பொருள்தான் சிருட்டிக்கு மூலக் காரணமாகும்.

குடத்தைச் செய்ய ஒரு குயவன் வேண்டும். மண்ணே குடம் ஆக முடியாது. அதே போன்று பிரபஞ்சமும் படைப்போனாகிய கடவுள் ஒருவனால்தான் தோன்ற முடியும். அது முற்றறிவுடைய மாபெரும் சக்தியாகிய மூலப் பரம்பொருள் ஆகும்.

உடலை இயக்கும் ஆன்மா போல உலகை இயக்கும் ஆன்மாவே இறைவன் ஆகும். இதனைப் பரமாத்மா என்ற வழங்கப்படுகிறது. ஆன்மாவுக்கெல்லாம் தலையாய பரமான்மா அது.

கடவுள் என்பதும் ஓர் ஆன்மா. கடவுள் என்றும் உள்ளவர். எல்லாம் வல்லவர். கடவுள் உலகைப் படைத்தலும், காத்தலும், அழித்தலும் கடமையாகக் கொண்டுள்ளார்.

பதார்த்தங்களைக் கொண்டு அவர் உலகைப் படைக்கிறார். ஆனால் பதார்த்தங்களைப் படைப்பது அவரது தொழில் அன்று. உலகைப் படைத்தோடு மட்டுமின்றி உலகைத் தொடர்ந்து இயக்கிக் கொண்டிருப்பவனம் அவரே.

உலகில் நன்மை செய்வோரின் கன்ம பலனையும், தீமைசெய்வோரின் கன்ம பலனையும், மறுபிறப்பில் செய்த கன்பப் பலன்களையும் அவரவரைச் சென்றடையச் செய்யவல்ல அறிவாளன் இறைவன்.

உடல், மனம் ஆகியவற்றின் துணையில்லாமலேயே அறியவல்லவன் இறைவன்.

## நியாயத்தில் அணுக்கொள்கை

அணுக்கோட்பாட்டை ஏற்கும் நியாயம். "அணுக்களைக் கடவுள் படைக்கவில்லை. அவை என்றும் உள்ளவைதான், இந்த அணுக்கள் மரம், செடி, கொடி, விலங்கு, மனிதன், விண்மீன், சூரியன், சந்திரன், மலை., கடல் ஆகியவற்றில் உள்ளன.

இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்குவதுதான் கடவுளின் பணி. மேலும் கரும வினைக்கு ஈடாகப் பயன்பதருவதும் அந்தக் கடவுள்தான். கடவுள் இல்லை என்று யாரும் நிலை நாட்டவும் முடியாது. அதனாலேயே உண்டு" என்று நியாயம் தர்க்கத்தின மூலம் எடுத்துரைக்கிறது.

## நியாயத்தில் பிரபஞ்சவியல்

பிரபஞ்ச இயக்கத்தைப் பற்றித் தெளிவான அறிவு இல்லாமையால் மனிதனுக்குத் துக்கங்கள் ஏற்படுகின்றன. அறியாமையே துக்கத்தின் ஊற்றுக்கண் . அறிவு துகக்கத்தை அகற்றுகிறது.

சரியானபடி இந்தப் பிரபஞ்சத்தைப் புரிந்து கொள்ளும்போது அறிவு சமநிலையை அடைகிறது.

விளையாட்டுப் பொருட்களைக் கண்டு குழந்தைகள் பல வகையான உணர்ச்சிப் பாதிப்புகளை அமைகின்றனர்.

நியாய மதத்தைச் சேர்ந்தவர்கள் தர்க்கத் திறன் மூலமாக ஓர் உண்மையை நிறுத்துவதில் வல்லமை மிக்கவர்கள். தர்க்கத்தின் முடிவு சரியாக இருக்க வேண்டுமாயின், தர்க்கிக்கும் முறை சரியாக இருக்க வேண்டும்.

ஆனால் தர்க்கத்தின் முடிவைவிட, தர்க்க முறைக்கே நையாயகர்கள் முக்கியத்துவம் அளித்தனர். தர்க்க முறைக்கு வேறு எம்மதத்தினரும் செலுத்தாத அளவு கருத்தைச் செலுத்தி செம்மையாக நியாயிப்பது என்பதற்கு வரையறை செய்து, வரம்பு அமைக்க முற்பட்ட பெருமை நையாயகரைச் சாரும்.

# 34. மீமாச்சை

இந்திய தத்வத்தில் மிகவும் பழமையான தரிசனம் மீமாச்சையாகும். வேதத்தை மூல நூலாகக் கொண்டு , முதன்மையான மூலநூல் வாதத்தை முன் வைக்கும் தத்துவஞானம் புர்வமீமாம்சை ஆகும்.

வேதங்களிலிருந்து மீமாம்சை தோன்றியது. மீமாம்சை வேத மந்திரங்களை விளக்குகிறது. வேதங்களையும், வேதங்களில அடங்கியுள்ள சடங்குகளையும் அறிவின் அடிப்டையாகக் கருதியது.

வேதங்களை அடிப்படையாகக் கொண்டு வேள்விகளையும் பிற சடங்குகளையும் நிழ்த்துவதில் ஆழமாக ஈடுபட்டது. இது வேதங்களைச் சரியானபடி உச்சரித்தல், பொருள் கூறுதல் ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்தியது.

இதை பூர்வமீமாம்சம் (கர்ம காண்டம்) என்றும் உத்தரமீமாம்சம் (ஞான காண்டம்) என்று இரு காண்டங்களாக பிரித்துள்ளனர்.

பூர்வ மீமாம்சம் நான்கு வேதங்களுக்குப் பொருள் கூறும். இதனை தொகுத்தவர் ஜைமினி முனிவர்.

உத்தர மீமாம்சத்தை தொகுத்தவர் பாதராயனர். நான்கு வேதங்களின் இறுதியில் உள்ள வேதாந்தங்களான உபநிடதங்களை உத்தர மீமாம்சம் என்பர்.

## பூர்வ மீமாம்சம்

இந்நூலை பனிரெண்டு காண்டங்களாகவும், அறுபது அத்தியாயங்களாகவும் பிரிக்கப்பட்டுப் பல சூத்திரங்களாகச் செய்யப்பட்டுள்ளது.

பூர்வமீமாசைக்கு, சபரர், குமாரிலர் மற்றும் சாயனர் ஆகியவர்கள் விளக்க உரைநூல்கள் எழுதியுள்ளனர்.

பூர்வ மீமாம்சையில், பிரம்மம், படைப்பு, மோட்சம் குறித்த விசாரணைகள் இல்லை.

இதில் பல்வேறு யாகங்கள், யக்ஞங்கள் செய்வது குறித்தான விவரங்கள், விரதங்கள், மற்றும் பூசை புனஸ்காரங்கள் குறித்தான விவரங்கள் உண்டு.

## பூர்வ மீமாம்சையின் தன்மைகள்

- பூர்வ மீமாம்சையை கர்ம காண்டம் என்பர்.
- பிரமாணத்தால் (நான்கு வேதங்கள் எனும் கருவி மூலம்) உண்மை அறிவது
- பூர்வ மீமாம்சகர்கள் (நான்கு வேதங்களை மட்டும் பின்பற்றுபவர்கள்) [[வேதம்|வேதத்தில்] சொல்லப்பட்ட வேள்விகளுக்கும், சடங்குகளுக்கும் முதன்மைத் தன்மை வழங்குபவர்கள்.
- பூர்வ மீமாம்சகர்கள் கடவுளை வேண்டாமல், தாங்கள் செய்யும் கர்மமே (வேள்விகள்) பயனளிக்கும் என்ற கொள்கை உடையவர்கள்.
- சில பூர்வ மீமாம்சகர்கள் உருவமுடைய கடவுளை சடங்கு சம்பிரதாயமாக வணங்குபவர்கள்.
- கர்ம யோகத்தால் மட்டுமே இறைவனை எளிதாக அடையலாம் எனும் நம்பிக்கை கொண்டவர்கள்.
- இறைவனும் சீவனும் வேறு வேறு தன்மையுடைவர்கள் என்ற துவைதம் எனும் இருமைக் கொள்கை உடையவர்கள்

## உத்தரமீமாம்சையின் தன்மைகள்

- வேதங்களின் இறுதிப் பகுதியில் வரும் உத்தரமீமாம்சையை ஞான காண்டம் என்பர்.
- உத்தரமீமாம்சகர்கள் வேதங்களில் சொல்லிய வேள்விகளுக்கும், சடங்குகளுக்கு முக்கியத்தவம் தராமல் உபநிடதங்கள் மற்றும் பிரம்ம

சூத்திரம் போன்ற வேதாந்தங்களில் சொல்லியுள்ள கருத்துக்களின் கொள்கையுடன் வாழ்பவர்கள்.

- உத்தரமீமாம்சகர்கள்,உருவமற்ற இறைவனை மனதால் தியானிப்பவர்கள்.
- ஞானயோகத்தினால் மட்டுமே நிர்குணபிரம்மத்தை அடையமுடியும் என்ற நம்பிக்கையாளர்கள்.
- பராமாத்மாவும் (பிரம்மம்) சீவாத்மாவும் இரண்டல்ல; ஒன்றே எனும் கொள்கையுடைய அத்வைதிகள்

## மீமாம்சத்தில் கடவுள் நிலை

இறைவனுக்கு உடல் இல்லை. உடலை உடையவனுக்கே ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என்ற விருப்பம் உண்டாகும். இறைவனுக்கு உடல் இல்லை. ஆகையால் அவன் சிருஷ்டியைச் செய்ய இயலாது.

எனவே உலகு இறைவனால் படைக்கப்படவில்லை. துன்பத்துக்குக் காரணமான கன்மத்திற்கு முதலிடம் கொடுக்கிறது மீமாம்சை. பிறாகாலத்தில் மீமாம்சர்கள் கடவுளை தம் மதத்தில் இணைத்துக் கொண்டனர்.

கடவுள் மறுப்புக் கொள்கையுடைய மீமாம்சை, பிரபஞ்சம் இறைவனால் உருவாக்கபட்டதல்ல. அதற்குரிய செயல் விதிகளின்படி அது சுயமாக உருவானது. கடவுள் பிரபஞ்சத்தைப் படைக்கவோ அழிக்கவோ தேவையில்லை.

ஏனெனில் பிரபஞ்சம் படைக்கப்படுவதோ அழிக்கப்படுவதோ கிடையாது. அது எப்போதும் அழிவற்றதாகவே இருக்கிறது. உலகில் மனிதர்களும் மிருகங்களும் படைக்கப்படுவதில்லை. இருவரும் இனப்பெருக்க முறையால் பிறக்கின்றனர். மனிதன் ஆற்றும் நற்செயல்களையும், தீய செயல்களையும் கண்காணிக்கக் கடவுள் தேவையில்லை என்கிறது மீமாம்சம்.

பிரபஞ்சத்தில் உள்ள பௌதிகப் பொருட்கள் நிரந்தரமானவை. முடிவற்றவை. இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும் செயல்-விளைவு என்ற மாற்ற முடியாத விதிக்கு உட்பட்டவை.

அபோன்று செயல் விளைவுக்கு உட்பட்டதே . பிரபஞ்சமே கர்மா அடிப்படையில் இயங்குகிறது. பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய செயல் மற்றும் கடமை உள்ளது. அந்தக் கர்மத்திற்கேற்ப விளைவுகளும் உள்ளன.

மனிதர்களும் கர்மாவின் படியே செயல்படுகின்றனர். அக்கருமங்களின்அடிப்படைகளைத் தர்மம் எனும் செயலாக்கத்தின் அடிப்படையே தீர்மானிக்கிறது.

தர்மங்களை வேதங்களே கூறுகின்றன. வேள்வி செய்வது மனிதனின் கடமை. கடமைகளை வகுக்கும் வேதம், மனிதனுக்கும் கடவுளுக்கும் அப்பாற்பட்டதது.

கர்மத்தின் பயனாக விளைவு வரும் என்றிருந்போதும் வேள்வியின் பயனாக அபுர்வமாக இதற்கு முன் இல்லாத பயன் விளையும். பரமான்மா ஒன்று உண்டு என்பதை மீமாம்சகம் ஏற்றுக் கொள்வதில்லை.

## மீமாசத்தில் கன்மா

உலகில் காணப்படும் துன்பங்களுக்கு காரணம் படைத்தவனின் திறமைக் குறைவும், கருணையற்ற செயலும் காரணம் அல்ல.

ஆன்மாக்கள் செய்த கன்மங்களே, அவை அனுபவிக்கும் துன்பத்திற்குக் காரணம்.

தனிமனிதன் தனது செயல்களுக்கு ஏற்ப நல்லவை, கெட்டவை, சரியானது, தவறானது போன்ற பலரன்களை அனுபவிக்கிறான்.

நற்செய்கை நற்பலனையும், தீய செய்கை தீமையையும் அளிக்கிறது. இது அந்தச் செய்கை நடந்து முடிந்த பின்னரும் நீடிக்கிறது. இவ்வாறு ஒருவனைச் சேர்ந்த நன்மை, தீமை ஆகியவற்றின் ஒட்டு மொத்தமே “அதிருஷ்டம்” என்பது ஆகும்.

கடவுளும் கன்மப் பலன்களுக்கேற்பவே உலகினைப் படைக்கின்றார் எனில் கடவுளின் சக்தியைவிட கன்மத்தின் சக்தியே பெரிது என ஆகின்றது. அப்படியானால் அந்தக் கன்மத்தையே முழுமுதற் பொருளாகக் கொள்ளாமே?

கடவுள் என ஒன்று உண்டு எனக் கொள்ளத் தேவையில்லை என்கிறது மீமாம்சம். நன்மை தீமைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கவும், பலனளிக்கவும் வேண்டும் எனில் கடவுளுக்கு உடலும் உயிரும் அறிவும் மனமும் வேண்டும்.

கடவுளுக்கு உடல் இல்லை என்று கருதப்படுகிறது. மேலும் எல்லோருடைய கன்மச் செயல்களையும் மேற்பார்வையிட்டுக் கொண்டிருப்பது என்பது இயலாத காரியம்.

அவ்வாறு மேற்பார்வை செய்ய வேண்டும் எனில் இறைவனுக்கும் செயல்களுக்கும் உள்ளார்ந்த அல்லது நேரடி தொடர்பு இருக்க வேண்டும். அப்பொழுதும் அது இயலாத காரியம் என்கிறது மீமாம்சம். கன்பமதிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது மீமாம்சம்.

# 35. வேதாந்தம்.

ஆதிகாலத்தில் மனிதர்கள் தங்கள் வாழ்வில் எவ்வெற்றை இறைவன் என்று மதித்தார்களோ, அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து முடிவில் “வெட்டவெளியே” இறைவன் என முடிவு கண்டார்கள். அவ்வாறு கண்டுரைத்த தொகுப்பே வேதாந்தம்.

பிரம்மத்தை மையமாக வைத்துக் கொண்டு பிரபஞ்ச இயக்கத்தை விளக்க முயலும் ஒரு தரிசனம்வேதாந்தம் எனப்படுகிறது.

**வேதாந்தம்** வேதம் + அந்தம் என்ற சமஸ்கிருத சொற் பிணைப்பினால் வருவது. “அந்தம்” என்ற சொல்லுக்கு இறுதி அல்லது கடைசி எனப்பொருளாகும்.

எது “சத்தவெளி” என்று எதைச் சொல்கிறோமோ அதுவேதான் நுண்ணியக்கணமாக, பின்னப்பட்ட நிலையிலே அணுவாகவும் இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்தனர்.

இதுவரையிலே ஐந்து பௌதிக பரிவுகளாகப் பிரித்துத் தெளிவாக்கி உணர்த்தி வந்தவை வேநூல்கள், அந்த வேதத்திற்கு முடிவான பரம்பொருள் மெய்ப் பொருள் என்று கண்டுபிடித்த போது “வேதாந்தம்” (வேதம் - அந்தம்) என்ற பெயரைக் கொடுத்தனர்.

வேதாந்தம் என்பது தத்துவமாகவம், தனிச்சமயமாகவும் கருதப்படுகிறது.

வேதம் அல்லது வேதங்கள் நான்கு ஆரிய சமய தத்துவ நூல்களைக் குறிக்கும்.

அவை இருக்கு, யசூர், சாமம், அதர்வம் எனபனவாகும். அந்தம் என்றால் கடைசியில் வருவது அல்லது முடிவில் வருவது என்று பொருள் தரும்.

ஒவ்வொரு வேதத்துக்கும் நான்கு பாகங்கள் உண்டு. அவை மந்திரங்கள், பிராமணங்கள், அரண்யகங்கள், உபநிடதங்கள் ஆகும்.

வேதம் + அந்தம் வேதங்களின் கடைசி இரு பாகங்களான அரண்யகம் மற்றும் உபநிடதங்களை சிறப்பாக சுட்டும்.

வேதங்களின் கடைசி இரு பாகங்களும் பெரும்பாலும் தத்துவரீதியில் அமைந்தவை, அவற்றில் கூறப்பட்ட பல கருத்துக்கள் முதல் இரு பாகங்களில் கூறப்பட்ட கருத்துக்களுக்கு எதிர்ப்பாகவும், முரணாகவும் இருப்பதைக் காணமுடியும். ஆகையால் வேதாந்தத்தை வேதம் என்று நேரடியாக ஒப்பிடுவது பொருந்துமா என்பது கேள்விக்குரியதே.

## வேதாந்தம் என்றால் என்ன?



வேதாந்தம் என்றால் வேதத்தின் உட்கிடை என்று பொருள் . வேதத்தின் முடிவு வேதாந்தமானது. வேதத்தின் கடைசி பகதியான உபநிடதங்கள் வேதத்தின் முடிவை விளக்கமாகச் சொல்கின்றன.

தத்துவம், வேதாந்தம், விஞ்ஞானம் என்ற மூன்று பிரிவில் தத்துவம் இயற்கையின் உண்மைகளைப் பல்வேற தரமாக பிரித்துப்

பேசும். தத்துவத்தைத் தெளிவாக்குவதில் வேதாந்தம் முதலிடத்தை வகிக்கிறது.

"விண்ணாட்டம வரை ஆர்வம்மீறிக் கண்ட

விளக்கமே வேதாந்தம், சுக துக்கத்தை

உண்ணாட்டத்தால் ஆய்ந்தோன் ஒடுங்கி மோனம்

உணர்ந்தநிலை சித்தாந்தம்....." (மகரிசியின் ஞா.க.1144.)

இந்திய மதங்கள் எல்லாவற்றிலும் வேதாந்தத்தின் தாக்கம் மிக ஆழமாக உள்ளது.

சைவ சித்தாந்தத்தில் சில நுட்பங்களைத் தவிர்த்துவிட்டால் அது வேதாந்தமாகவே காணப்படும். எந்த வழிபாட்டு மரபையும் அதன் சடங்குமுறைகளையும், நம்பிக்கைகளையும் தாண்டி உட்புகுந்தால் வேதாந்தமே வெளிப்படும்.

வேதங்கள் இரு பெரும் பகுதிகளாக உள்ளன. ஒன்று கர்ம காண்டம், இன்னொன்று ஞான காண்டம்.

கர்ம காண்டத்தில் சடங்குகள், மந்திரங்கள் முதலானவை உள்ளன. ஞான காண்டத்தில் தத்துவத் தேடல் உள்ளது.

வேதத்தின் இறுதிப் பகுதியில் (அந்தம்) இந்தத் தத்துவத் தேடல்கள் அமைந்திருக்கின்றன. எனவே இவற்றைப் பொதுவாக வேத – அந்தம் அதாவது வேதாந்தம் என்று குறிப்பிடுவதுண்டு.

ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள் நான்கிலும் வேதாந்தப் பகுதிகள் உள்ளன. இவை உபநிஷதம் என்று சொல்லப்படுகின்றன. 108 உபநிஷதங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவற்றில் 14 உபநிஷதங்கள் முக்கியமானவை எனக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு வேதத்திலும் அமைந்துள்ள முக்கிய மான உபநிஷதங்கள் வருமாறு:

**ரிக் வேதம்:** ஐதரேயா, கௌசீதகி

**யஜூர் வேதம்**: ஈச, கட, தைத்திரீய, பிருஹதாரண்யக, சுவேதாஸ்வதர, மைத்ரேய, மகாநாராயண

**சாம வேதம்**: கேன, சாந்தோக்ய

**அதர்வண வேதம்:** ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய

## தத்துவத் தேடல்

உலகாயதமான (பொருள் சார்ந்த) நடைமுறை வாழ்வுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைத் தத்துவ நோக்கில் அலசுபவை உபநிஷதங்கள். பரம்பொருள், ஆத்மா, சிருஷ்டி முதலான விஷயங்களை இவை கையாள்கின்றன.

உலகாயதமான அம்சங்களைத் தாண்டிய சிந்தனைகள், உரையாடல்களைப் பொதுவாக வேதாந்தம் என்று குறிப்பிடும் வழக்கம் இந்த வேதாந்தப் பகுதியின் உள்ளடக்கத்திலிருந்துதான் வந்தது.

இந்த உபநிஷதங்கள் கூறும் தத்துவங்களை வேதாந்தத் தத்துவம் என்பது பொதுவாகச் சொல்வதுண்டு. இது குறிப்பிட்ட ஒரு தத்துவம் அல்ல. பல விதமான தத்துவங்களின் தொகுப்பு.

வாழ்க்கை நிலையாமை பற்றிப் பேசுவது வேதாந்தம் என்று சொல்லப்படுகிறது. வேதாந்தத் தத்துவங்கள் இந்த வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசுவதால் இப்படிக் கருதப்படுகிறது.

வேதாந்தப் பகுதிகள் அல்லது உபநிஷதங்கள் முன்வைக்கும் பார்வைகளைப் பல ஞானிகளும் சிந்தனையாளர்களும் பல விதமாகப் பொருள் கொள்கிறார்கள். பல விதமாக விளக்கம் அளிக்கிறார்கள்.

உபநிஷதங்கள் பெரும்பாலும் உரையாடல் வடிவில் இருக்கும். பூடகமான பொருள் கொண்டவையாக இருக்கும். கவித்துமான பாடல்களாக இருக்கும். பல விதமான பொருள் களைக் கொள்ளவும் விவாதிக்கவும் இவை வழி வகுக்கின்றன.

**ஒரு உதாரணம்:**

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே

பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே

ஓம். அது முழுமை (பூர்ணம்). இதுவும் முழுமை. முழுமையிருந்து முழுமை தோன்றியுள்ளது. முழுமை யிலிருந்து முழுமையை எடுத்தும் முழுமையே எஞ்சி நிற்கிறது.

## வேதாத்திரி பார்வையில் வேதாந்தம்.

இந்திய தத்துவ வரலாற்றில் ஆதிசங்கரருடைய அத்வைதம், இராமனுசருடைய விசிட்டாத்வைதம், மத்துவருடைய துவைதம் என்ற மூன்று வேதாந்த தத்துவங்கள் எனப்படும்.

தேங்காய்க்குள் தண்ணீர் இருக்கிறது. எலுமிச்சம் பழத்திற்குள்ளும் நீர் இருக்கிறது. அதைச் சாறு என்கிறோம்.

சில இலைகளில் கூட நீர் இருக்கிறது. ஒவ்வொன்றிலிருந்து கிடைக்கும் நீருக்கும், தனித்தனிப் பெயர்களை இட்டு உள்ளோம்.



நீரின் மூலம் என்ன? தேங்காய்க்குள் எப்படி தண்ணீர் வந்தது? பூமியிலிருந்து தானே? அப்படியானால்

பூமிக்கு எப்படி நீர் வந்தது? கடல்நீர் ஆவியாகி மேகமாக மாறி மழையாகப் பெய்ததால், நிலத்திற்கு நீர் வந்தது.

இதே தத்துவம்தான் எலுமிச்சம் பழத்திலுள்ள நீருக்கும். இளைகளில் உள்ள நீருக்கும் ஏற்றது.

தேங்காய்க்குள்ளும் எலுமிச்சம் பழத்திற்குள்ளும், இலைகளுக்குள்ளும், எல்லாவற்றிலும் கடல் நீரைத்தானே காண்கிறோம்,

அதுபோன்று அனைத்திற்கும் மூலம் ஒன்றே எனக் காண்பது அத்வைதம் ஆகும்.

பரிணாம வளர்ச்சியில்ஏற்படும் மாற்றகளையெல்லாம் மறந்துவிடாமல் மூலத்தை பார்க்க வேண்டும் என வேதாத்திரி மகரிசி குறிப்பிடடிருக்கிறார்.

ஆதி சங்கரரின் அத்வைதக் கோட்பாட்டினைக் கற்கண்டையும் கரும்பு ரசத்தையும் ஒன்றாகக் காட்டுவதன் மூலமும் புலப்படுத்தும் வேதாத்திரி மகரிசி, அவை இரண்டையும் வேறுவேறாகக் காண்பதன்மூலம் மத்துவரின் துவைத வேதாத்திரியத்தையும் எளிமையாக விளக்குகிறார்.

கற்கண்டையும் கரும்பு ரசத்தையும் இரண்டாகக் காட்டினாலும் அவரின் இந்த உதாரணம் துவைத வேதாந்தத்திற்குப் புதிய வரவாகும்.

கடவுளுக்கும் ஏனையவற்றுக்குமுள்ள உறவைக் கற்கண்டுக்கும் கரும்பு ரசத்திற்கும் உள்ள உறவுடன் தொடர்புபடுத்துவது அவர் அத்வைத வேதாந்த தத்துவத்தில் நிலைத்திருப்பதை உறுதி செய்கிறது.

கற்கண்டு என்ற ஒரு வார்த்தை சொன்னால்

கரும்பு ரசப்பக்குவத்தின் சரித்திரமாகும்

கற்கண்டைக் கரும்பு ரசம் என்றால் அஃது

கருத்துக்கு அத்துவித தத்துவம் போல்

கற்கண்டு கரும்புரசம் வேறு வேறாய்க்

காட்டுவது துவித நிலை விளக்கம் ஆகும்

கற்கண்டு கரும்பு ரசம் இரண்டும் போலாம்

கடவுளும் மற்றனைத்துருவும் கருத்துணர்ந்தால்"

ஞானக்களஞ்சியம்.

என்று கூறுவதாலறியலாம்.

மேலும், அவர் அத்வைத வேதாந்த தத்துவச் சிந்தனையைப் புலப்படுத்துவதற்குக் கடலினையும் அதன் அலையினையும் உதாரணம் காட்டி விளக்குவது அவர் அத்வைத தத்துவ ஞானியாகவும் விளங்குவதை வலுப்படுத்துகிறது.

மெய்பொருளுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள அத்வைத வேதாந்தத் தத்துவ உறவினையே அவர்.

"ஆழ்கடல் போல் மெய்ப்பொருளாம்

அலைகள் போல் உருவனைத்தும்"

- ஞானக்களஞ்சியம்

என்று குறிப்பிடுகின்றார்.

அத்வை வேதாந்த தத்துவத்தினை புலப்படுத்தும் தத்துவமஸி, அகம்பிராமஸ்மி, அயம் ஆத்மாபிரமம், பிரக்ஞானம் பிரமம் போன்ற உபநிடத தத்துவச் சிந்தனைகள் வேதாத்திரி மகரிசியின் தத்துவச் சிந்தனைகளில் பல இடங்களில் எதிரொலிப்பதைக் கண்டின்புற முடிகின்றன.

## வேதாந்த தத்துவம்

உலகம் பொய், அனைத்துக்கும் மூலப்பொருள் ஒன்றே. அதுவே பிரம்மம் என்ற கருத்துடையது வேதாந்தம். பிரம்மத்தை சத் என்றும், மற்ற அனைத்தையும்அசத் என்றும் கூறுகிறது.

வேதாந்தத்தில் உயிரற்றவை எனப்படுவது ஒரு தோற்றம் ஆகும். தோற்றம் மாத்தரமேயன்றி அதற்கு நித்தியத்ததுவம் எதுவும் கிடையாது. உண்மையில் நித்தியப்பொருள் சீவன் மட்டுமே என்கிறது.

ஒரே ஒரு ஆத்மாதான் உள்ளது. அது பரமாத்மா ஆகும். பரமாத்மாவே பல ஆத்மாக்களாகத் தோன்றுகிறது. இந்த ஒன்றைப் பலவாய்க் காண்பது அஞ்ஞானம். யாவும் ஒன்றெனக் காண்பது ஞானம் என்கிறது வேதாந்தம்.

அறிவு வேறு. ஆன்மா வேறு அல்ல. ஆன்மாவின் வடிவமே் அறிவு. அறிவே அன்மா. ஆன்மாவே அறிவு. அறிவுக்குப் புறம்பாக வேறொரு பொருள் கிடையாது.

வேதாந்திகள் படைப்பை உண்மை எனக் கருதுவதில்லை. வேதாந்ததம் உலகம் உண்மையல்ல. இது ஒரு தோற்றம். எல்லாம் மாயை என்ற கருத்தை உடையது.

வேதாந்திகள் ஞானத்திற்கே முக்கிய இடம் தருகின்றனர். வீடுபேற்றை அடைய கன்மைத்தைவிட ஞானமே மிக முக்கியமானது.

பிரம்மமமே உலகமாகத் தோன்றுகிறது. பிரம்மமமே சீவன்களாகவும் ஆனது.

இருந்தபோதிலும் சீவனுக்கு அறியாமை என்பது உண்டு. பிரம்மமே சிவன்களாக ஆனதற்குக் காரணம் மாயை ஆகும்.

ஏகமான பிரம்மத்தோடு சேர்வதே மோட்சம் ஆகும். ஞானமே அதற்கான வழியாகும். நல்லெழுக்கமும் கடவுள் வழிபாடும் ஞானத்திற்கு அவசியம் என்கிறது வேதாந்தம்.



# 36. சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்தம் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களிடையே மட்டும் வழங்கி வந்திருக்கின்றது.

“இந்தியாவிலுள்ள மதங்கள் அனைத்திலும் சைவ சித்தாந்தமே மிக மேம்பட்டது என்பதில் ஐயமில்லை” என்று ஜி.யு. போப் கூறுகிறார்.

கௌடி என்பவர், “சைவ சித்தாந்தம் இந்திய சிந்தனைகளிலும் உணர்வினதும் சிகரம்” என்கிறார்.

சைவ சித்தாந்தம் வேறெங்கும் வழங்காது தமிழகத்தில் மட்டுமே மிகுதியாக வழங்குவதால் இதனை ஆதி காலத் தொட்டுத் தமிழருக்கேயுரிய தத்துவம் எனச் சொல்லலாம்.

ஆனால், சைவ சிந்தாந்தக் கொள்கைகளைக் கூறும் முதனூல்கள் முழுதும் வடமொழியிலேயே இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

வேதங்களும் ஆகமங்களுமே சைவ சித்தாந்ததுக்குப் பிரமாண நூல்கள்.

**சைவ சித்தாந்தம்** என்னும் தத்துவப் பிரிவு சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சமய நெறி சைவ சமயத்துக்கு அடிப்படையாக விளங்குகிறது.

*சித்தாந்தம்* என்பது சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை எனப்பொருள்படும். (அந்தம் - முடிவு).

ஆன்மீகம் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து சிந்தித்து முடிந்த முடிவாகக் காணப்பட்டது சைவசித்தாந்தம்.

சைவ சித்தாத்தினை வேதாந்தம் எனும் மரத்தில் காய்த்த பழுத்த கனி என்கிறார் குமர குருபரர்.

## சிவ வணக்கம்

சிவ வணக்கம் ஆரியருக்கு முற்பட்ட இந்தியாவிலேயே தோன்றியதாகச் சில அறிஞர்கள் கருதுகிறார்கள்.

சிந்து வெளியில் கண்டெடுக்கபட்ட சிவலிங்க வடிவங்கள் இதற்குச் சான்றாக இருப்பதாகவும் அவர்கள் கருதுவர்.

இவ்வாறு சிவ வணக்கத்துக்குரிய சான்றுகள் ஆரியருக்கு முற்பட்ட காலங்களிலிருந்தே கிடைத்து வந்தாலும், சைவ சித்தாந்தம் ஒரு தத்துவப் பிரிவாக உருவானது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவிலேயே என்று கருதப்படுகின்றது.

இக்காலப் பகுதியில் வாழ்ந்த திருமூலரால் எழுதப்பட்டதும், சைவ சித்தாந்தத்தின் சாரம் என்றும் கருதப்படும் திருமந்திரம் என்னும் நூலிலேயே *சைவ சித்தாந்தம்* என்ற சொற்பயன்பாடு முதல் முதலில் காணப்படுகின்றது.

### சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூல்கள்

இந்தியாவில் இந்து சமயத்தின் பெரும்பாலான தத்துவப் பிரிவுகள் வேதங்களையும் அவற்றின் இறுதிப்பகுதியாகக் கொள்ளப்படும் உபநிடதங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்க,

சைவ சித்தாந்தம் வேதங்களையும், ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஆகமம் என்ற சொல்லுக்கு, “ஒன்றிலிருந்து வந்தது” என்பது பொருள்.

ஏராளமான ஆகமங்கள் உள்ளன. இவற்றுள் சில சைவ சமயத்துக்கும், வேறுசில வைணவ சமயத்துக்கும், மற்றவை சாக்த சமயத்துக்கும் உரியவை.

சைவ சித்தாந்தத்துக்கு அடிப்படையான சைவ ஆகமங்கள் 28 ஆகும். இவற்றுட் தலையாயவை காமிகாகமம், காரணாகமம் என்பன.

சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல்களில் சிறப்பானதாகக் கருதப்படுவது மெய்கண்டார் எழுதிய சிவஞான போதம் ஆகும். இதனுடன் சேர்த்து பல ஆசிரியர்களால் எழுதப்பட்ட 14 நூல்கள் சைவ சித்தாந்தத் தத்துவ விளக்க நூல்களாகும்.

இவற்றுடள் தலையாய சிவஞான போதத்தை இயற்றிய மெய்கண்டாரின் பெயரைத் தழுவி இவை மெய்கண்ட சாத்திரங்கள் என வழங்கப்படுகின்றன.

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப் பாடியார்.
3. சிவஞான போதம்.
4. சிவஞான சித்தியார்.
5. இருபா இருப.்.து.
6. உண்மை விளக்கம்.
7. சிவப்பிரகாசம்,
8. திருவருட்பயன்.
9. வினா வெண்பா.
10. போற்றிப் ப.்.றொடை.
11. கொடிக்கவி.
12. நெஞ்சுவிடு தூது.
13. உண்மை நெறி விளக்கம்.
14. சங்கற்ப நிராகரணம்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பற்றித் தமிழில் எழுந்த நூல்களைப் போன்றே வடமொழியிலும் சில நூல்கள் எழுந்துள்ளன.

கி.பி 8 -12 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்டதான அட்டப்பிரகரணம் எனும் தொகுப்பிலுள்ள எட்டு நூல்களை அவ்வகையுள் குறிப்பிடலாம். அவை,

1. தத்துவப் பிரகாசிகை
2. தத்துவ சங்கிரகம்
3. தத்துவத் திரய நிர்ணயம்
4. இரத்தினத் திரயம்
5. போக காரிகை
6. நாத காரிகை
7. மோட்ச காரிகை
8. பரமோட்ச நிராச காரிகை

என்பனவாகும்.

## சைவ சிந்ததாந்த தத்துவ அடிப்படைகள்

ஆன்மாவைப் பற்றியோ, கடவுள் பற்றியோ, முத்தியைப் பற்றியோ, ஆணவத்தைப் பற்றியோ அல்லது வேறு எந்த் தத்துவத்தைப் பற்றியோ சைவ சித்தாந்தகள் கூறுவன எவையும் மேம்போக்காக சொல்லப்படவில்லை.

ஒவ்வொரு தத்துவமும் சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய மூன்று பிரமாணங்கள் மூலமும் நிலைநாட்டப்பட்டள்ளது.

இதனை கற்க விழைபவர்களுக்குப் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும் அவற்றை ஒற்றி எழுத்த இலக்கியங்களும் சுவை மிக்கவையாகும்.

1. *பதி* (இறைவன்)
2. *பசு* (உயிர்)

3. *பாசம்* (மலங்கள்)

ஆகிய மூன்றையும் என்றென்றும் உள்ள நிலைத்த பொருள்களாக ஏற்றுக்கொள்வது சைவ சித்தாந்த தத்துவத்தின் அடிப்படையாகும்.

சைவ சித்தாந்தத்தின்படி இம் மூன்றுமே முதலும் முடிவும் இல்லாதவை. இதனால் இவை மூன்றையுமே யாரும் படைத்ததில்லை என்கிறது சைவ சித்தாந்தம்.

ஆயினும், என்றும் நிலைத்திருக்கும் இம் மூன்றும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டவை எனக்கூறும் இத் தத்துவம் இவை பற்றிப் பின்வருமாறு விளக்குகின்றது.

- **இறைவன்**: அறிவு வடிவாகவே இருக்கும் இறைவன் எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்திருப்பவன், அளவற்ற வல்லமை பெற்றவன்.
- **உயிர்**: உயிர்கள் இயல்பாகவே அறிவுள்ளவை ஆனால் மலங்களினால் பிணிக்கப்படும்போது அவற்றின் அறிவு மறைக்கப்படுகின்றது. மலங்களின் பிணிப்பிலிருந்து தாங்களாகவே விடுபடுவதற்கு உயிர்களால் முடியாது. இறைவன் துணையுடனேயே மலங்களின் பிணைப்பிலிருந்து உயிர்கள் விடுபட முடியும்.
- **மலங்கள்**: மலங்கள் சடப்பொருள்கள். அறிவற்றவை. உயிர்களைப் பிணித்து அவற்றின் அறிவை மறைக்கும் வல்லமை கொண்டவை. இவை இறைவனை அடைய முடியாது.
- **கடவுள் உண்டெனக் கொள்வதற்குச் சைவ சித்தாந்திகள் சுருதிப் பிராமாணத்தையே முக்கியமானதாகக் கொண்டாலும் அனுமானத்தையும் அவர்கள் பயன்படுத்தி உள்ளனர்**.
- **உலகைக் கொண்டு கடவுள் உண்டு என்பதை நிரூபிக்கும் பாங்கு**. அதையொட்டிய தடை விடைகள், கன்மைத்தைக் கொண்டு கடவுளுண்டு என்பதை நிரூபிக்கும் விதம் சைவசித்தாந்திகளது சிறப்பாகும்.

- **உலக உற்பத்திக்கு இவர்கள் மூன்று காரணங்கள் கூறுகின்றனர்.** முதற்காரணம் - துணைக் காரணம் - நிமித்தக் காரணம்.
- இறைவன் உலகைப் படைக்கும் விதத்தை ----- குயவன் பானையை மண்ணிலிருந்து வளைக்கிறான் மண், பானைக்கு முதற்காரணம். திரிகை முதலிய கருவிகளைத் துணை கொண்டே அவன் வளைக்கின்றான். எனவே. திரிகை முதலிய கருவிகள் பானைக்குத் துணைக் காரணம். குயவன் நிமித்தக் காரணம். உலக்கும் இம்மூன்று காரணங்களும் உண்டு. உலகுக்கு இறைவன் நிமித்த காரணம். அவனுடைய சக்தி துணைக் காரணம். மாயை முதற்காரணம்.
- மூலப் பொருளாக ஒரேயொரு பொருளே உள்ளதாகவும், அதிலிருந்து இவ்வுலகம் தோன்றியதாகவுமே வேதங்கள் கூறுகின்றன. ஆனால் சைவ சித்தாந்திகள் இறைவன், சக்தி, பாணை எனப் பலவற்றை மூலப் பொருள்களாகக் கொள்ளுகின்றனர்.
- இந்திரியங்களை ஆன்மா எனக் கூறும் இந்திரயியானமவாதி, அந்தக்காரணங்களை ஆன்மாவாகக் கருதும் அந்தக்காரணான்மவாதி, சூக்குமதேகத்தையே ஆன்மாகக் கருதும் சூக்குமதேகான்மவாதி, பிராணனை ஆன்மாவாகக் கருதும் பிராணான்மவாதி ஆகிய அனைவரையும் மறுத்து. இவற்றுள் எதுவும் ஆன்மா அல்ல. இவற்றுக்கு எல்லாம் வேறாக, இவற்றின் அடிப்படையாக உள்ளதும், இவை யாவும் தொழிபட உதவுவதும் எதுவோ அதுவே ஆன்மா எனச் சைவ சித்தாந்தம் வலியுறுத்துகிறது.
- ஆன்மாவுக்கு , ஆணவமலம், சகலாவத்தை, சுத்தாவத்தை ஆகிய மூன்று நிலைகள் உண்டு. இந்த அவத்தைகளிலிருந்து விடுவட சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிகள் உள்ளன.
- முக்தி என்பது, துன்பம் துளியும் இல்லாத எதிர்மறை நிலை மட்டுமன்றிப் பேரின்பமே மயமான உடன்பாட நிலையும் ஆகும் என்பது சைவ சிந்தாந்திகளின் நிலை.

## சைவசித்தாந்தமும் அதன் சமூக நிலைப்பாடுகளும்

சைவ சித்தாந்தம் சாதியமைப்பை பெரும்பாலும் ஏற்றுக்கொண்டு, அதனை வலியுறுத்துகின்றது.

இது அது தோற்றம் கண்ட காலத்தில் (சோழர் காலம்) இருந்தே இருந்து வருகின்றது.

பிராமணர் அல்லாதவர்கள் இந்தக் கட்டமைப்பில் அதிகாரமும், செல்வாக்கும் மிக்கவர்களாகவும், மதக்குருமார்களான பிராமணர்கள் சடங்கு ரீதியில் முக்கியத்துவம் பெறுவர்களாகவும் இருக்கின்றார்கள்.

## வேதாத்திரி மகரிசியின் பார்வையில் சைவசித்தாந்தம்.

சைவசித்தாந்தம் வினைக்கோட்பாட்டினை சஞ்சிதம், பிராப்தம், ஆகாமியம் எனப் பகுத்து நோக்குகின்றது. இதனை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்றும் அத்தத்துவம் கூறும், இம்மூவகை வினைகள் பற்றி வேதாத்திரி மகரிசி,

“கருவமைப்பின் வழிவந்த வினைப்பதிவு சஞ்சிதமாம்

உருவெடுத்த பின் கொண்ட வினைப்பதிவு பிராரப்தம்

இருவகையும் கூடி எழும் புகுவினையே ஆகாம்யம்

ஒரு வினையும் வீண்போகா உள்ளங்கிப் பின் விளைவாம்,”

(ஞானக்களஞ்சியம்.)

இன்று நாம் இருக்கும் நிலைக்கு நாமே முழுப்பொறுப்பு என்பது சைவசித்தாந்த கன்மக் கோட்பாட்டின் அடிப்படை. இதனை வேதாத்திரி மகரிசி மறுக்கின்றார்.

பிள்ளைகளுக்கு இன்பமும் துன்பமும் அவர்களுடைய கன்மத்தால் விளைவதல்ல என்றும், பெற்றோர்களின் வினைத்தொடரே பிள்ளைகளின் கருமையத்தில் தங்கி இன்பதுன்பம் ஏற்படுகின்றதென்பது மகரிசியின் கருத்தாகும்.



உடலும் உயிரும் வேறுவேறு என்பதும், உயிர்களுக்கு மறுபிறவி உண்டு என்பதும் சைவ சித்தாந்த தத்துவக் கருத்தாகும். இந்தக் கருத்தினையும் மகரிசி மறுக்கிறார்.

"உடல் என்பது அணுக்கள் பல சேர்ந்த கூட்டு

உயிர் என்பதோ அணுவின் நுண்துகள்கள் ஆகும்."

ஞானக்களஞ்சியம்.

என்று விளக்குவதோடு, உயிருக்கு மறுபிறவி இல்லை என்பதை

"உயிர் உடலை விட்ட பின்னர்

உயிருக்குப் பிறவித் தொடரே இல்லை."

ஞானக்களஞ்சியம்

என்று கூறுகின்றார். மேலும் ஒரு குழந்தை பிறந்து பன்னிரெண்டு வயதுக்குள் இறந்தால் அக்குழந்தையின் உயிர் பெற்றோரிடம் சேரும் என்ற புரட்சிகரமான சிந்தனையினையும் வேசதாத்திரி மகரிசி நம் முன் வைக்கிறார்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைப் பற்றி பேசுவது சைவசித்தாந்த தத்துவமாகும்.

இந்த தத்துவத்தின செல்வாக்கு வேதாத்திரி மகரிசியின் சிந்தனைகளில் காணமுடிகிறது.

மனம் ஒருமுகப்பட்டு பற்றற்ற நிலை ஏற்படும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் விளக்கம் பெற்று வாழ்வ வளம் பெறும் என்பதை மகரிசி.

"நிலையாது சுழலுமனம் உள்ளொடுங்கி

பற்றற்ற நிலைவரையில் பழக வேண்டும்

பதி பசு பாசம் நிலைகள் விளக்கமாகும்

நற்றவத்தால் வாழ்வு வளம் பெருகத் துய்த்து

நாட்டுக்கும் தொண்டாற்றி நலம் விளைவிப்போம்.."

- ஞானக்களஞ்சியம்.

என்று விளக்குகிறார்.

சைவசித்தாந்தம் ஆன்மாவைப் பந்தப்படுத்தும் மும்மலங்களாக ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றைக் குறிப்பிடுகின்றது.

மும்மலம் பற்றிய வேதாத்திரி மகரிசியின் நோக்கு இந்திய தத்துவஞானத்திற்கு புதிய வரவாக வந்துள்ளது. இதனை அவர்,

"மெய்ப் பொருளோ உயிரான முனைப்பு ஆணவம் ஆகும்

மெய் உயிராய் ஆற்றுங்கால் மிரண்ட மயக்கே மாயை

மெய் உயிராய் ஐயுணர்வில் மிகும் வேட்பே காமியமாம்.

மெய் உயிராய் உணர்ச்சிகளில் மும்மலமாய் விரிந்ததுவே."

ஞானக்களஞ்சியம்.

## சித்தாந்தமும் வேதாந்தமும் குறித்து மகரிசி.....

பிரபஞ்த்தில் ஓர் ஆணுவோ பொருளோ இயங்குவதற்கான இடத்தைக் குறிக்கும் போது அதைப் பருமன் என்று சொல்கிறறோம். இயக்த்தைக் குறிக்கும்போது வேகம் என்ற சொல்கிறோம்.

இயக்க் நீடிப்பைக் குறிக்கும்போ அதைக் காலம் என்று சொல்கிறோம். இரண்டு இயக்கங்களுக்கு இடையே உள்ள நீளத்தைக் குறிக்கும்போது அதைத்தூரம் என்கிறோம்.

காலம், தூரம், பரமன், வேகம் என்ற நான்கையும் கணிப்பதுதான் கணிதம். இந்நாகைத் தவிர்த்து ஒரு கணிப்பும் இல்லை.

கணிப்பதற்கொரு முறையும் இல்லை. இக்கணக்கீடுகள் ஒவ்வொன்றும் தனித்தனியானவை என்று சொ்லவது சித்தாந்தம்.

இறைநிலை (பதி). அதன் பின்னம் (பசு) இயக்கம் (பாசம்) என்று விளக்கி, ஆன்மாவின் சிறப்பைத்தான் மிக மதிப்புடைய சொல்லாக, கருத்தாக, இறைநிலையின் ஓர் தன்மாற்றமே சித்தம் எனக் கூறுப்படுகிறது.

சித்தம் என்ற மனத்திற்கு மூலமாக முடிவாக இருப்பது இறைநிலை என்பதால், மனத்தை உணர்ந்த தத்துவம் சித்தாந்தம் என்று வழங்கப்பட்டது. உயிருணர்வு பெற்ற பிரம்மத்தை அறிவது சித்தாந்தம். இது சாதனை மார்க்கம் ஆகும்.

காலம், தூரம், பருமன், வேகம் என்ற நான்கும் ஒன்றுதான் என்று சொல்கிறது வேதாந்தம்.

பிரபஞ்ச விரிவான இயக்க நியதமிகளை விளக்கும் கருத்துக்களையெல்லாம் இணைந்து வேதம் என்று கூறினார்கள்.

வேதத்திற்கு மூலப்பொருள் இறைநிலையாக இருப்பதால் வேதத்தின் முடிவு என்ற வார்த்தையைக் கொண்டு வேதாநததம் என்ற சொல் உருவாயிற்று.

உயிருணர்வு பெறாமல் பிரம்மத்தை உணர்வது வேதாந்தம். வேதாந்தம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபுதங்களை உணர்ந்து முடிவாக பிரம்மத்தை அறிவது. வேதாந்தம் போதனை மார்க்கம் ஆகும்.

வேதாந்தம் சித்தாந்தம் என்ற இரண்டைப் பற்றிய கருத்து தெரியாமலேயே அவற்றைப் பற்றிய விவாதங்கள் நடைபெறுகின்றன.

வேதாந்தம், சித்தாந்தம் இரண்டுமே உண்மையில் இறைநிலைத் தெளிவு, வாழக்கைத் தெளிவு இவற்றை வலியுறுத்துகின்றன.

உள்ளததை உணர்தல் என்பது இயற்கையை உணர்வது. நல்லதைச் செய்தல், அல்லதை விடுதல் என்பது வாழ்க்கை நிலைத் தெளிவு.

தத்துவஞானி வேதாத்திரி மகரிசி அவர்களிடம் “வேதாந்ததிற்கும் சித்தாந்ததிற்கும் உள்ள வேறுபாடு யாது?” என்ற கேள்வியை எழுப்பியபோது அவர் ஒரே வரியில் அளித்த பதில் . .

“சித்தாந்தம் உண்மையான பழம் என்றால், வேதாந்தம் மண்ணால் செய்யபட்ட பழம்.”

## 37. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிசி.

பாரதத்தில் தத்துவங்கள் பல விளைந்தாலும் தனக்கென்று தனி முத்திரைப் பதித்தவர் இருபதாம் நூற்றாண்டு தந்த பாமரமக்களின் தத்துவஞானி வேதாத்திரி மகரிசி.

இவர்தம் தத்துவம் தனிமனித வாழ்வை மையமாகக் கொண்டதாகும்.

வாழ்கின்ற காலங்களில் மனிதன் அமைதியாகவும், மகிழச்சியாகவும் வாழ வேண்டும் என்பதே இவர்தரம் வாழ்வியல் பாடமாகும்.

“வாழ்க வையகம்” , “வாழ்க வளமுடன்” என்பன மகரிசி கூறும் தத்துவ மகாவாக்கியங்களாகும்.



இவரின் தத்துவ சிந்தனைகள் இந்திய தத்துவஞானம் என்ற வழித்தடத்தில் பயணிக்கிறபோதும், இவரது பல சிந்தனைகள் இந்தியத் தத்துவ ஞானத்திற்குப் புதிய வரவாகவும். புத்தொளி ஊட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

இந்திய தத்துவங்களில் தேவையற்றதை வடிகட்டி, மனிதனுக்குத் தேவைப்படும் தத்துவங்களை எளிமையாக்கி பாமரனுக்கும் புரியும் வகையில் அமைந்துள்ளன.

இவரது சில சிந்தனைகள் இந்தியத் தத்துவ ஞானத்திற்குப் புரிய வரவாகவும், புத்தொளி ஊட்டுவனவாகவும் உள்ளன.

இவரது சில சிந்தனைகள் இந்திய தத்துவ ஞான வரலாற்றில் புரட்சிகரமானதாகவும் காணப்படுகின்றன.

கிழக்குத் தத்துவத்தையும் மேற்குலக தத்துவத்தையும் இணைத்து மனவளக்கலையாக மானுட தத்துவத்தை வழங்கியுள்ளார்.

பண்டைய மெய்ஞ்ஞானத்திற்கும் இன்றைய விஞ்ஞானத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறார்.

இவரது தத்துவங்களில் அறிவியல் நோக்கு மிளிர்கின்றது. அதனால் இவர் மெய்ஞ்ஞானத்தற்குக் கொடுக்கும் சொல் புதிதாகவும், பொருள் புதியதாகவும் காணப்படுகின்றது.

இவரது தத்துவங்களை “வேதாத்திரியம்” என்றழைக்கப்பட்டு, பல்கலைக்கழகங்கள் பல பட்டப் படிப்புகளை வழங்கி வருகின்றன.

## அடிப்படை தத்துவங்கள்.

இவர்தம் தத்துவ வரலாற்றில் சிறப்பிடம் பெறுவது சுத்தவெளித்துவம், விண், விரிவலை. காந்த தத்துவம், வான் காந்த தத்துவமும், சீவகாந்த தத்துவமும். இறைத் தத்துவம், செயல்விளைவுத் தத்துவமும் ஆகும்.

## உலக தத்துவ இரகசியம்.

மனம் என்ற ஒரு இயக்கம் உயிரினுடைய ஆற்றல் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறபோது அந்த அலை வந்து கொண்டே இருக்கிறது.

ஒரு இயக்கத்திலே இருந்து அலை பிறக்கிறது. அந்த அலையானது இடத்துக்குத் தகுந்தவாறு மோதி அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்தாகவும், அதை உணர்ந்து கொள்ளக்கூடிய மனமாகவும் இயங்கும் உண்மையைத் தெரிந்தும் கொண்டால், உலக தத்துவ இரசகசியம் - அத்தனையும் புரிந்து கொள்ளலாம்.

காரணம், மனத்தால் அன்றி வேறு எதனால் உலகத்தை அறிகின்றோம்? எந்தத் தத்துவத்தைத் தான் அறிகின்றோம்?

## சுத்தவெளித் தத்துவம்

பிரபஞ்சத்தை தாண்டியும், பிரபஞ்சத்தைச் சூழ்ந்தும் உள்ள தூய வெளியே சுத்தவெளி, இறைவெளி, வெட்டவெளி.

கண்ணுக்குத் தெரியாததாக் கருதப்படும் சுத்த வெளியானது காண்கின்ற காட்சியெல்லாம் அதுவாகவே விளங்குவதாகவம் உள்ளது.

சுத்தவெளி இல்லாத இடமே இல்லை. சுத்தவெளியே “கடவுள்” என்றும், “தெய்வம்” என்றும் அழைக்கப்படும்.

சுத்தவெளியானது அனைத்தூடுருவும் பாய்மப் பொருளே சுத்தவெளியாகும்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்ற நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே சத்தவெளி.

## விண் தத்துவம்

புலன்களால் உணரப்பெறும் பிரபஞ்சத்திற்கும், புலன்களுக்கெட்டாத சுத்தவெளிக்கும் இடையே உள்ளது விண் தத்துவமெனும் சுழல் அலையாகும். இதுவே பரமாணுவாகும்.

விண் என்பது நிலையான ஒரு பொருள் அல்ல. அது சுத்தவெளியின் நுண்பகுதி இயக்கம் பெறுவதால் ஏற்படும் சுழல் அலை ஆகும்.

"இறைவெளி தன்னிறுக்கத்தால் எழுந்த பொருள் விண்ணென்று

இருதுறைகளின்அறிஞர் விஞ்ஞானி தத்துவத்தார் உணர்ந்தார்,சொன்னார்

இறைநிலைக்கும் விணநிலைக்கும் இஃடயிலுள்ள தத்துவம்தான்,

ஈதர்எனும் பரமாணு நுண்துகளாம், இரண்டு மேலாம்

துறைகளிலும் ஆழ்ந்தவர்கள் ஆராய்வில் நழுவவிட்டார், இத்துகள்கள்

தொடர்ந்தழுந்தி உருவான தொகுப்பேதான் விண்ணாகும்.

சிறைப்பட்ட இத்துகள்கள் விண்ணிலிருந்தோடுவதே காந்தம் என்ற அனைத்து அலைகள்

சிறப்புடைய தன்மாத்திரைகளாய் முடிவில் பரமாகும். ஆதியந்தம்."

எல்லா இயக்கங்களுக்கும் அடிப்படையான இந்த விண் துகள்களின் கணிக்கும் வகையிலே தான் வேகம், பருமன், காலம், தூரம் எனும் அளவைகள் தோன்றின என்றும், சுத்த வெளியையும், விண்ணையும் தவிர வேறு எவையும் இப்பரபஞ்சத்தில் இல்லை.

## விரிவலைத் தத்துவம்

விண்ணின் சுழல் இயக்கத்தால் சுத்த வெளிக்கும் விண்ணுக்கும் இடையே உராய்தல் ஏற்பட்டு. அதன் காரணமாகப்

பிறிதொரு அலை தொடர்ந்து வெளிவரும். இதுவே விரிவு அலை அல்லது நிழலைத் தத்துவம். இது பிரபஞ்ச காந்தக் களத்தின் மூன்றாவது அடிப்படை உண்மையாகும்.

## வான் காந்த தத்துவம்

பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருள்களின் இடையிலேயும், ஒவ்வொரு பொருளிலுமுள்ள விண் துகள்களுக்கு இடையிலேயும், ஒவ்வொரு விண் துகளின் மையத்திலேயும் உள்ள சுத்த வெளியே வான் காந்தமாகும்.

இந்த வான்காந்தமானது இடத்திற்கேற்பவும், காந்தக்களத்தின் திணிவு நிலைக்கேற்பவும் அழுத்தமாகவும், ஒலியாகவும், ஒளியாகவும், சுவையாகவும், மணமாகவும் மற்றும் இவற்றை உணரும் மனமாகவும் தன்மாற்றம் பெறுகின்றது.

சுத்தவெளி, விண், விரிவலை, வான்காந்தம் என்ற நான்கு அடிப்படை உண்மைகளையும், உள்ளுணர்வாகப் பெற முடியுமே தவிரப் புலன்களால் அறிய முடியாதென்பது வேதாத்திரி மகரிசி கூறும் தத்துவ சிந்தனைகளாகும்.

சுத்தவெளி, விண், விரிவலை, வான்காந்தம் பற்றிய வேதாத்திரி மகரிசியின் மிக நுட்பமான தத்துவச் சிந்தனைகள் இந்திய தத்துவ ஞானத்திற்கும் புதிய வரவாகப் அமைந்திருக்கின்றது.

# காந்த தத்துவம்.

“உயிர்த் துகள்கள் மிக மிக நுண்ணியது. அவை தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கக்கூடிய சுழல் அலைகள். அப்படி சுழலவ்வதனால் ஏற்படும் விரிவலைகள் சுழலாத இருப்பு நிலையில் உராயந்து கரைந்து விடுகிறது.

“எந்தஒன்று அறிந்திடில் இறைவன் முதல் உயிர்வரை

எல்லவற்றையும் உணர்த்துமோ அதுவே காந்தமாம்.

முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்

மொழிவதற்கு உவமையின்றி முட்டி மோதி நின்றனர்.

இந்தநாள் விண்ஞானமோ ஏற்றம் பெற்ற தாலதை

இயங்கிடும் மின்சாரம்மூலம் எல்லார்க்கும் உணர்த்தலாம்.

அந்தமாமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரணடையும்

குறித்து உய்ய, பாலம்போன்ற ஆக்கஞானம் காந்தமே”

அப்போது தள்ளும் கொள்ளும் சக்தியான இரட்டை ஆற்றலாக காந்தம் என்ற பெயரில், ஜீவன்களில் ஜீவகாந்தம் என்றும், அதே இயக்கம் பிரபஞ்சத்தில் இருப்பதை வான் காந்தம் என்றும சொல்லப்படுகிறது.

## சீவகாந்த தத்துவம்.

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது “மகாகாசம்”. இதுதான் வான் காந்தக்களம் என்பது.

அதே ஆகாசத் துகள்கள் பொருட்களில் மடிந்தியங்கும்போது அதைப் “பூதாகாசம்” என்று சொல்கிறோம்.

அதுவே உயிர்களின் உடலில் எல்லைக் இயங்கும்போது அதைச் “சித்தாகாசம்” என்கிறோம்.

வான் காந்தத்தின் ஒருபகுதி ஜீவகாந்தம்.

## அறிவுத் தத்துவம்.

வேதத்திரி மகரசியின் தத்துவ சிந்தனைகள் அனைத்திற்கும் அறிவுத் தத்துவம் அடிப்படையாகக் காணப்படுகிறது.

அறிவு என்புது ஓர் இயக்க ஒழுங்கு என்றும், எங்கும் நிறைந்திருக்கின்ற ஒரு மகோன்னதமான சக்தி வேகத்தை ஒழுங்குபடுத்தி முறையாக இயங்கச் செய்யும் ஓர் அற்புதமான ஆற்றல்தான் அறிவு என்றும் குறிப்பிடுகின்றார்.

மனிதனுக்கு ஆறாவது அறிவு உண்டு என்பதும், இறைவெளியையும், அதன் உள்ளாற்றலான அறிவையும், அறிவின் புற இயக்கமான மனதையும் அறியத்தக்க அறிவுதான் ஆறாவது அறிவு என்பதும் மகரிசியின் கருத்தாகும்.

வேதாத்திரி மகரிசியின் தத்துவத்தின் குறியீடாக விளங்குவதே, பொள்ளாச்சி அறிவுத் தத்துவத்தின் குறியீடாக விளங்குவதே ஆழியாறு என்னும் இடத்தில் “ஓம்” என்னும் வடிவில் அவரால் வடிவமைக்கப்பட்டிருக்கும் அறிவுத் திருக்கோயில் ஆகும்.

இன்று உலகெங்கும் 135 க்கு மேல் அறிவுத் திருக்கோயில்கள் செயல்பட்டு வருகின்றன.

# செயல்விளைவுத் தத்துவமும்

ஒவ்வொரு செயலுக்கும் தக்க விளைவு உண்டு என்பது இறைநீதியாகும். எண்ணம், சொல், செயல் என்ற மூன்றாலும் மனிதன் செயல் புரிகிறான். அவற்றுக்கான விளைவு நான்கு வகைகளில் வெளிப்படும். அவை இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்பனவாகும்.

ஒருவர் தவறுசெய்யும் போது அதற்கேற்ற விளைவைத் தருவதற்கான அறிவுதான் கடவுளுக்கு உண்டே தவிர அந்தத் தவற்றை மன்னிக்கும் மனம் கடவுளுக்கு இல்லை.

# ஆத்திகம் நாத்திகம்

இயற்கை அமைப்பை, அதன் ஆதி நிலையிலிருந்து அறிவின் எல்லை வரை அிறந்து கொள்வதே தத்துவ விளக்கம் எனப்படும்.

தத்துவ விளக்கம் பெற்றவன், இயற்கையே எல்லாமாகவும், தானுமாகவும் இருக்கும் உண்மையை உணர்ந்து கொள்கிறான்.

அவன்வேறு, இயற்கை வேறு என்றில்லாத பேதமற்ற நிலையை உணர்ந்து கொண்டால் அவனுக்கு அப்பாலும் அவனுக்கு அன்னியமாகவும் ஏதுமில்லை என்று தெளிவடைகிறான். இந்தத் தெளிவே நாத்திகம் எனப்படும்.

இந்த நிலையை ஆறறிவு பெற்ற மனித இனத்தில் வயது வந்தோர் அனைவரும் அறிந்தால் அல்லாது, மனித மன வாழ்வில் அமைதியும் இன்பமும் நிலைப்பதற்கில்லை.

எனவே. பல்வேறு அறிவு நிலைகளில் வாழும் உலக மக்கள், இயற்கையின் புரண நிலையை அறிய வேண்டிய அவசியத்தையும், வழிகளையும் அறிந்தவன் சொல்லுகிறான்.

அறிந்து கொள்ள முடியாத அறிவின் நிலையில் உள்ளவர்களுக்கு ஆசையும், அச்சமும் ஊட்டும் பல கற்பனைகளின் மூலம் அந்நிலையை நாட வழி செய்கிறான்.

இவ்விதம் நம்பிக்கை மீது நல்வாழ்வு காண மக்கள் வகுக்கின்ற முறைகளே பக்தி மார்க்கம் அல்லது ஆத்திகம் ஆகும்.

ஆகவே, பூரண விளக்கம் பெற்றவனே நாத்திகன். அவன் பரப்புவதே ஆத்திகம் ஆகும்.

நாத்திகம் என்பது உண்மையை உணர்ந்த நிலை. ஆத்திகம் என்பது உண்மையை உணர மனிதனை நம்பிக்கை மூலம் பக்குவப்படுத்தும் வழி.

நாத்திகம் பரப்பக்கூடியது அல்ல, உணரக்கூடியது. ஆத்தகமே பரப்பக்கூடியது.

காயே தன் முடிவில் பழமாவது போல ஆத்திகமே நாத்திகமாக மாறிவிடும்.

அறிவின் மயக்கத்தாலும், வயிற்று பிழைப்பிற்காகவும் பேச்படுகின்ற ஆத்திகமும், நாத்திகமும் பயனற்றவை.

அதோடல்லாமல் பலவிதமான தீமைகளையும் விளைவிப்பனவாகும்.

## சொர்க்கமும் நரகமும்.

சொர்க்கம், நரகம் போன்ற கற்பனை எண்ணங்கள் மற்றும் கருத்துக்கள் மனிதனை நல்வழிப் படுத்தவே சொல்லப்பட்டு வந்தன.

சொர்க்கமும் நரகமும் எங்கோ இருக்கிற தனித்தனி இடமல்ல. பூமியில் வாழ்வாங்கு வாழ்கிறபோது வருகிற இன்பமே சொர்க்கம். அவ்வாறு வாழாதபோது வருகிற துன்பமே நரகம்.

## முன் பின் பிறவிகள்

ஒரு மனிதனுடைய முற்பிறவிகளை அறியவேண்டுமானால் அவன் உருவத்திற்கு மூலமான விந்துநாதத் தொடர்பை யூகத்தால் பற்றிக் முன்நோக்கிப் பார்த்தால், எல்லா ஜீவராசிகளும், தோற்றப் பொருட்களும் ஒரே மூலத்தை அடிப்படையாகக் கொண்டு விரிந்து, பிரிந்து, தொடர்ந்து இயங்கும் ஒரு அகண்ட பேரியக்கம் அறிவுக்கு காட்சியாகும்.

ஒரு மனிதன் பின் பிறவிகளை அறிய வேண்டுமானால் அவைகள் அவன் விந்துவின் மூலம் தோன்றும் மக்களும், அம்மக்களின் மூலம் தொடர்ந்து தோன்றும் மக்களுமேயாகும்.

ஆதி அல்லது அகண்ட சக்தி, அணு, அறிவு என்ற மூன்று நிலைகளைப் பற்றி அறிந்தவர்களுக்கு இந்த விளக்கம் மிகத்தெளிவாக இருக்கும். மற்றவர்கள் பொறுமையோடு பல தடவை சிந்தித்தே அறிய வேண்டும்.

# கடவுள்.

"இறை" என்பது தெய்வ நிலையைக் குறிக்கும் ஒரு சிறப்புச் சொல். "தெய்வம்" என்பது அரூபமான பேராதராச் சக்தி". மாபெரும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் மூலமானதும் புலன்களைக் கொண்டு வேகம், காலம், பருமன், தூரம் என்ற நான்கு அளவைகளாலும் கணிக்க முடியாததும், அறிவு புலன்கள் மூலமாகத் தேடும்போது இல்லையென்றும் தனது ஆறாவது நிலையின் உயர்விலே ஆராயும்போது உண்டு என்றும் உணரக் கூடியதுமான உண்மை நிலை எதுவோ அதுவே தெய்வம் என்று வழங்கப்படுகிறது.

இயற்கை என்பது எல்லா ஆற்றல்களுக்கும் அடிப்படையான மூல ஆற்றல் ஒருங்கிணைப்புப் பேராற்றல்.

இது விஞ்ஞானிகளின் வார்த்தை. இதையேதான் தத்துவ ஞானிகள் எல்லோரும் தெய்வம், கடவுள், பிரம்மம் என்கிறார்கள்.

# பாவம் புண்ணியம்.

எண்ணம், சொல், செயல் மூன்றாலும் தன்கோ பிறருக்கோ தற்காலத்திலே பிற்காலத்திலே, அறிவிற்கோ உணர்ச்சிக்கோ துன்பம் தருமேயானால் அது "பாவம்" எனப்படும்.

எண்ணம், சொல், செயல் மூன்றாலும் தனக்கோ பிறருக்கோ தற்காலத்திலே பிற்காலத்திலே, அறிவிற்கோ உணர்ச்சிக்கோ துன்பம் தரவில்லையானால் அது “புண்ணியம்” எனப்படும்

# தன்மாற்றச் சரித்திரம்.




எதோ ஒரு ஆற்றல் உலகைப் படைத்து பாதுகாப்பும் , பராமரிப்பும் அளித்து வருகிறது என்ற கருத்தை விட, இறைநிலையே தன்மாற்றம் பெற்று, பிரபஞ்சத்தில் காணும் பொருட்களாகவும், அண்டங்களாகவும் கோடிக்கணக்கான உருவங்களாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்ற பேருண்மையை உணர்த்துவதே மகரிசியின் தன்மாற்றச் சரித்திரம் எனும் தத்துவம்.

# முடிவுரை

இந்திய தத்துவஞானி வரலாற்றில் வேதாத்திரி மகரிசி ஒரு மைல் கல். இந்த நூற்றாண்டுக்கு மானுடத்திற்குத் தேவையான

அவசியமான அறிவில் பூர்வமான தத்துவங்கைளை பதிவு செய்துள்ளார்.



வேதாத்திரி மகரசியின் தத்துவச் சிந்தனைகள் தனித்துவமான சிறப்புகள் உடையதாக விளங்குவதுடன் , அவரின் சில சிந்தனைகள் இந்திய தத்துவ ஞானத்திற்குப் புதிய வரவாகவும், புத்தொளி ஊட்டுபனவாகவும் விளங்குகின்றன.

வேதாத்திரி மகரசி எழுதிய நூல்கள் யாவும் உலகச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கியதாகவும், மனிதகுலம் உணர்வதற்கான உயர்த் தத்துவங்களையும் உன்னத இலட்சியங்களையும் உணர்த்துவனவாகும் உள்ளன.

வேதாத்திரியம் எனக் கூறத்தக்க மகரிசியின் சிந்தனைகளை மேன்மேலும் ஆராய்ந்து, அவற்றை வளர்த்தெடுக்க வேண்டியது - தத்துவ அறிஞர்களின் கடமையாகவும் மனவளக்கலை பயிலும் அன்பர்களது கடமையாகவும் அமைகின்றது.



## துணைநின்ற நூல்கள்.


- இந்திய தத்துவ இயலின் சுருக்கம், எம் உறிரியண்ணா.
- இந்திய தத்துவ இயலின் வரலாறு, எஸ். தாஸ்குப்தா.
- இந்திய இலக்கியத்தின் ஒரு வரலாறு, எம்.விண்டநீட்ஸ்.
- இந்திய தத்துவார்த்த மாநாட்டின் நடவடிக்கைகள், ஜி. துக்கி.
- இந்திய தர்க்க இயல் மற்றும் பண்டைய இயற்கை சாஸ்திரத்தில் முன்னேறிய ஆய்வுகள், சங்கவி.
- தத்துவ இயலின் வரலாற பற்றிய கையேடு. ஏ. ஸ்வெக்லர்.
- இந்திய தர்க்க இயலின் ஆரம்ப பாடநூல், கே. சாஸ்திரி
- புராதன கிரேக்க சமுதாயம் பற்றிய ஆய்வுகள். ஜி. தாம்சன்.
- சமயம் மற்றும் தத்துவத்தில் ஆய்வுகள். எஸ்.கே.மித்ரா.
- சமயம் மற்றும் நீதி இயலின் கலைக்களஞ்சியம். ஆர். கார்பே.
- உலகாயுதம், தேவிபிரசாத் சட்டோபாத்யாய

- நியாய மஞ்சரி, (வாரணாசி சம்ஸ்கிருத தொடர்கள்.
- கிழக்கு மற்றும் மேற்கின் தத்துவ இயல் வரலாறு, எஸ். இராதகிருஷ்ணன்
- பிரம்ம சூத்திரம், சரீரக பாஷ்யா.
- உபநிஷத்துக்களின் தத்துவம், ஏ.ஊ. கா.ப.
- மாயையும் எதார்த்தமும் - வி.என். ராகவன்
- சமயம் மற்றும் நீதி இயலின் கலைக்ககளஞ்சியம், எச். ஐகோபி.
- ரிக் வேதம், ம. ரா. ஜம்புநாதன்.
- யஜீர் வேதம், ம. ரா. ஜம்புநாதன்
- சாம வேதம், ம. ரா. ஜம்புநாதன்
- அதர்வ வேதம், ம. ரா. ஜம்புநாதன்
- வைசேசிக சூத்திரம், கணாதர்
- புராதன இந்துக்களின் நேர்மறை அறிவியல் - பி.என்.சீல்.
- சாங்கிய சூத்திரங்கள் பற்றி வேதாந்தியான மகாதேவரின் விமரிசனம் - ஆர். கார்பே.
- இந்திய தத்துவ இயல் தமிழில் வி.என். ராகவன்.
- சமயம் மற்றும் நீதி இயலின் கலைக்களஞ்சியம் - ஜீ. ஏ. கீரீயர்சன்.
- சமயம் மற்றும் நீதி இயலின் கலைக்களஞ்சியம், ஏ.எஸ். காடன்.
- சமயம் மற்றும் நீதி இயலின் கலைக்களஞ்சியம், ஏ. பி. கீத்.
- இந்திய தொல்பொருள் திரட்டு, என். சாஸ்திரி.
- புராதன கிரேக்க சமுதாயம் பற்றிய ஆய்வுகள் - ஜி. தாம்சன்.
- பொருள் முதல்வாதமும் அனுபவவாத விமரிசனமும், வி.ஐ. லெனின்.
- வேதம் மற்றும் உபநிஷத்ததுக்களின் மதமும் தத்துவமும், ஏ.பி.கீத்.
- இந்திய தத்துவ இயல், எஸ். இராதகிருஷ்ணன்

- கிரேக்க அறிவியல், பி. பாரிங்டன்.
- உபநிஷத்துக்களின் தத்துவம் - பி. சான்.
- உபநிஷத்துக்கிள்ன தத்துவம் - பி. டாய்சன்.
- மதம், ஜி. தாம்சன்.
- வேதாத்திரி மகரிசியின் நூல்கள்.
- அன்பொளி மாத இதழ்கள்
- உலகாயதம்: **எஸ் தோதாத்ரி**
- இந்திய தத்துவக் களஞ்சியம், சோ.ந. கந்தசாமி
- கிழக்கின் புனித நூல்கள், ஜி. திபோ.
- மனுஸ்மிருதி.
- புத்தமத தர்க்க இயல், டி. ஷெர்பாட்ஸ்கி.
- புத்தமதக் கோட்பாடு, டி. ஷெர்பாட்ஸ்கி
- Internet - wickipedia
- The Problems of Philosophy – Russelle.
- Saiva Siddhanta – r. Ramanujachari.
- Saiva Siddhanta, Violet Paranjoti
- Kant"s Critique of Pure Reasom – Norman Kemp smith.
- Brahma Sutras with Translations – Swami Vireswarananda
- Sri aurobindo & Plato – R. K.S. Maitra.
- The six ways of Knowing – d.M. Datta.
- History of Modern Philosophy – Richard Falckenherg.
- A History of Philosophy - Dr. Windel Band
- Popular Essay in Indian Philosophy – M. Hiriyanna.

# உலக அமைதிக்கு வேதாத்திரியம்

